இராமதேவர் என்னும்

# யாகோபு

சுண்ணம்-300 லோகசெந்தூரம்-300
வாத வைத்தியம்-300



தாமரை நூலகம், சென்னை - 600 026.

இராமதேவர் என்னும்

# யாகோபு

## சுண்ணம்-300 லோகசெந்தூரம்-300 வாதவைத்தியம்-300

பதிப்பாசிரியர்
ஆர்.சி.மோகன்



**தாமரை நூலகம்**
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 78

முதல் பதிப்பு : ஆகஸ்டு 1992

இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 2002

மூன்றாம் பதிப்பு : ஜூலை 2013

நான்காம் பதிப்பு :அக்டோபர் 2020

பதிப்புரிமை பெற்றது

**நூலைப்பற்றி**

| | |
|---|---|
| நூலின் பெயர் | : யாகோபு - சுண்ணம்-300; லோக செந்தூரம்-300: வாத வைத்தியம் |
| பதிப்பாசிரியர் | : ஆர். சி. மோகன் |
| வெளியிட்டோர் | : தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26. |
| பதிப்பு ஆண்டு | : அக்டோபர் 2020 |
| உரிமை | : பதிப்பகத்திற்கு |
| நூல் வடிவம் | : டெமி |
| அச்சுத்தாள் | : 16 கி.வெள்ளைத்தாள் |
| எழுத்துக்கள் | : 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : 256 |
| பிரதிகள் | : 1000 |
| நூல் விலை | : ரு.120/ |
| அச்சிட்டோர் | : கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34 |

# பதிப்புரை

சித்தர்கள் நம்மிடையே வாழ்ந்தனர். இன்னும் அவர்கள் உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றனர். சித்தர்கள் தமிழ் நாட்டிற்கு விட்டுச் சென்ற தமிழ்ச் செல்வங்கள் கணக்கிடலங்கா. அச்செல்வங்களிலே யாகோபு முனிவர் இயற்றியுள்ள பாடல்களும் இடம் பெறும்.

சித்தர்கள் வரலாற்றைப் பற்றித் தெளிவாக அறியப்படாதது தமிழ்நாட்டிற்கு ஒரு பெரிய குறை என்றே சொல்ல வேண்டும். கைக்குக் கிடைத்துள்ள சித்தர் வரலாறுகளும் முரண்பட்டவையாக, சம்பந்தா சம்பந்தமில்லாத நிகழ்ச்சிக் கோர்வைகளாகவே இருக்கின்றன. சித்தர்களுடைய வரலாறுகள் இவ்வாறு தடம்புரண்டு போனதற்குக் காரணம் என்ன? யாராலும் சொல்ல முடியாது. இதைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டிருந்த போதிலும் அவை எல்லாம் அரைகுறையாகவும், எல்லோராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாதனவாகவும் உள்ளன.

சித்தர்கள் பதினெண்மர் என்று பெரும்பாலான நூல்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்தப் பதினெண்மர் பெயர்களிலேயே ஒருமைப்பாடு இல்லாதது எத்தனையோ சித்தர்கள் இருந்திருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமளிக்கின்றது.

"நந்தி அகத்தியர், மூலர், புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும், பூனைக் கண்ணர்
நந்திடைக்காடரும், போகர், புலிக்கையீசர்
கருவூரார், கொங்கணவர், காலாஞ்சி
சிந்தி அழுகண்ணர், அகப்பேயர் பாம்பாட்டி
தேரையரும், குதம்பையரும், சட்டை நாதர்
செந்தமிழ் சேர்சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்தி வாழ்வாம்"

பழைய நூல்களில் இடம்பெற்றுள்ள இந்தப் பாடலில், யாகோபுவின் பெயர் இடம் பெறவில்லை.

இராமதேவர் என்ற தமிழ்நாட்டுச் சித்தரே மேலும் தமது ஆராய்ச்சி அறிவை பெருக்கிக் கொள்ள வேண்டி மெக்கா வரை சென்று இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து பல துறைகளிலும் மேலும் மேலும் ஆராய்ந்து ஒரு துணிவு மேற்கொண்டு 'யாகோபு' என்ற பெயருடன் திரும்பி வந்ததாகவும் இராமதேவர் என்ற பெயரில் அவர் பாடிய வைத்திய நூலைவிட, யாகோபு என்ற பெயரில் அவர் பாடிய வைத்திய நூலில் புதிய எளிய வைத்திய முறைகள் கூறப்பட்டிருப்பதாகவும் கூறுவாருளர்.

இராமதேவர் என்ற பெயரில் அவர் தமிழ்நாட்டில் வசித்தபொழுது அடைந்த சித்திகளும், நிகழ்த்திய அற்புதங்களும் குறைந்து மதிப்பிடத்தக்கவை அல்ல. இவர் நாகப்பட்டினத்தில் வசித்ததாகவும் சிவபெருமானைப் பூசித்து அஷ்டமா சித்திகளும் பெற்றதாகவும் கூறுகின்றனர். இவர் நாகையில் இருந்தபடியே காசி விசுவநாதரைக் தமது தவ வலிமையால் நாகைக்கு எழுந்தருளச் செய்து அங்கே ஸ்தாபித்தார் எனவும் கூறுகின்றனர்.

அத்தகைய தவ வலிமை பெற்ற ஒருவர் அராபிய நாடுகளுக்குச் சென்று இஸ்லாம் மதத்தைத் தழுவி மேலும் சிறப்பான வலிமையோடு வைத்திய முறைகளைக் கூறி இருக்கிறார் என்பதனை நினைக்கும் போது உள்ளம் பெருமிதமடைகிறது.

சித்தர்கள் சாதி மதங்களைக் கடந்தவர்கள் என்பது உண்மையான போதிலும் மத ஐக்கியத்தை, மதங்களின் ஒருமைப்பாட்டை நிலைநாட்டுதற்கு இராமதேவர் இவ்வளவு தூரம் முனைந்து சென்றிருப்பது அவருடைய தனிப்பெருமை என்றே கூற வேண்டும்.

இராமதேவர் யாகோபு ஆன பின்னர் இயற்றிய மூன்று நூல்கள் இங்கே தொகுத்துக் கொடுக்கப்பபட்டுள்ளன. சுண்ணம், லோகசெந்தூரம், வாதவைத்தியம் என்ற மூன்று நூல்களும்

ஒன்றுக்கொன்று தொடர்புடையவையே. எல்லாமே மருத்துவம் பற்றியவைதாம். மற்ற சித்தர்கள் கூறிய முறைகளோடு இவற்றை ஒப்பு நோக்குவது மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கும், மருந்துகளைத் தயாரிப்பவர்களுக்கும் மிகுந்த பலன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டு மக்களுக்குக் கிடைக்காமல் மறைந்து போகும் நிலையில் இருந்த இந்த நூல்களை மீண்டும் அச்சேற்றி தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிப்பதில் மிகுந்த பெருமை அடைகின்றோம். யாரோவது இயற்றிய மற்றச் சுவடிகளை வைத்து இருப்பவர்களும் அவற்றை எங்களுக்குத் தந்து உதவ முன்வந்தால் நன்றியுடையவர்களாக இருப்போம்.

**ஆர். சி. மோகன்**
பதிப்பாசிரியர்

# யாகோபு சுண்ணம்-300

## பொருளடக்கம்

### சுண்ணம்-300

## லோக செந்தூரம்-300

## வாதவைத்தியம்-300

உ

பரமபதி துணை

இராமதேவரென்ற

## யாகோபு முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# சுண்ணம் 300

இரகுமானின் பாதமலர் துதியேசெய்து
நபிமாரை அனுதினமும் போற்றிசெய்து
கைதட்டி வணங்கியே சுண்ணக்காண்டம்
கனிந்துமே அறுநூறு முன்னேபாடி
வையகத்தி லறுநூறைத் தான்குறுக்கி
வகையாக யிந்நூல்முன் னூறுதன்னில்
மெய்யாகச் சுண்ணங்கள் வைக்கும்பாகம்
மேன்மைபெறப் பாடினேன் விருப்பாய்த்தானே. 1

விருப்பமாய் களங்கோடு செந்தூரங்கள்
விதமான காரீயச் செந்தூரங்கள்
உருப்பமாய்த் தாளகமுஞ் சேர்க்குமார்க்கம்
உறுதிபெற்ற துத்தத்தின் சுண்ணத்தோடு
திருப்பாகக் கைபாக வரிசையோடு
செகத்திலென் பேர்விளங்கச் செப்பினேன்யான்
பொருப்பதனில் வீற்றிருந்து சொன்னேனப்பா
பேர்பெரிய நபிமாரைப் பேசினேனே, 2

பேசினே னிந்தமுன்னூறு தனைக்குறுக்கிப்
பிரித்துமே நூற்றைம்பத் தஞ்சதாக
வாசினையாய்ப் பாடினே னதிலேதானே
வகையாகக் கருவித்தை களங்கஞ்சுண்ணம்
காசிபெற மெழுகோடு தயிலமெல்லாம்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டேன் சரியதாக
பாசிதனைத் தள்ளிவிட்டு நீரைத்தானும்
பகுத்தெடுத்துச் சமையல்செய் ககுபோற்பாரே. 3

பாரேதா னிந்தமுன்னூறு தன்னிலேதான்
பகுத்தறிந்து சீவனங்கள் செய்யவேண்டிக்
காரேநீ முன்னேதான் வங்கந்தன்னைக்
கருத்துடனே வைத்துமே செம்புதன்னில்
நீரேநீ பாய்ச்சிட்டு ஊதிப்போட்டு
நினைவாக வித்துமே செலவுசெய்து
கூரேது சீவனங்கள் பண்ணிக்கொண்டு
கோடிலெட்சம் வேலைபின்னே செய்துகொள்ளே. 4

பண்ணிட்டு நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பதிவாக வங்கமென்ற ராஜாதன்னை
நண்ணிடவே தொழுதுகொள்ளு பின்னேநன்றாய்
நலமான தாளகத்தைத் தொழுதுபோற்று
கன்றுவிட்டுப் பால்கறந்தாப் போலேதானும்
கடிதான கைபாக வரிசையாக
உன்னிடத்துப் போலேநீ செய்துகொண்டு
உணர்ந்தபடி யாகோபு வோதினேனே. 5

ஓதினேன் வடமொழியைப் பிரித்துப்பார்த்து
உறுதிபெறக் கைபாக வரிசையாக
நீதியாய்ப் புத்திதனிற் பதிந்துதேறி
நிலைக்கவே வாதமென்ற வெள்ளந்தன்னைச்
சோதிபெறக் கண்டுமே சொன்னேன்பாரு
தொல்லுலகில் ரசவாதி பிழைக்கவென்று
கோதிவிடுங் கிளிபோலே கண்டுகொள்ளு
கூறினேன் பேர்விளங்க யாகோபுதானே. 6

## வங்கச் சுன்னம்

விளங்கவே அயச்சட்டி அடுப்பிலேற்றி
வெற்றிபெற வங்கமது சேருஒன்று
தளம்பவே சட்டியிட்டு ஐந்தாங்காய்ச்சல்
தனியான பொற்றளையை யிடையேயிட்டு
உளங்குளிரக் கொஞ்சமதா யிட்டுநன்றாய்
உறுதிபெற யிடைக்கிடைதா னிட்டுநீயும்
துளம்பெறவே வைத்திடுநீ சாமமொன்று
துடியாக யெடுத்துப்பார் மஞ்சளாமே. 7

## வங்கச் சுன்ன ஜெயநீர்

மஞ்சளாம் வங்கமென்ற ராஜாதானும்
மயமாகக் கொஞ்சமெடு மஞ்சள் தன்னில்
அஞ்சாம லுரைத்துவிடு சிவந்துபோகும்
அடைவாகக் கடுஞ்சுண்ணம் வங்கச்சுண்ணம்
தஞ்சமாய்க் கல்வத்திற் பொடித்துநீயும்
தடையில்லாச் சாரமதை யிடையேயிட்டு
துஞ்சாமல் பொடிபண்ணிப் பீங்கானிட்டுத்
துடியாகப் பட்சமொன்று பனியில்வையே. 8

பனியில்வைக்கப் பளபளெனச் செயநீராகும்
பாங்காக யின்னிரீல் வீரமிட்டு
தனியாக நீரிருத்துச் சீசாதன்னில்
தாக்கியடை பின்புதான் சாற்றக்கேளு
வனியாக அடியில்நின்ற புட்டிதன்னை
வடிவாகக் கல்வமிட்டு வளமைகேளு
கனிபோலலே கற்றாழை நீரிலாட்டிக்
காரியமாய் வில்லைதட்டிக் கதிரில்வையே. 9

## வங்கத் துத்தச் சுன்னம்

கதிரில்வைத்துப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
காரணமாய்ப் பின்புதான் சொல்லக்கேளு
பதிவாகப் புடம்போட்ட காரீயத்தில்
பத்தியாய் மடையனைத்தான் யிடையேசேர்த்து
விதிபெறவே கல்வமிட்டுப் புகைநீர்கேளு
விதமான வெடியுப்புப் பலமும்பத்து
நதியாகச் சீனமது யிருபத்தைந்து
நாடியே கல்வமிட்டுப் பொடித்திடாயே. 10

பொடித்திட்டுக் கடத்திலரை வாசியிட்டுப்
போக்கோடே வாலையென்ற சட்டிமூடி
வடித்திட்ட முன்னீரைத் தள்ளிப்போடு
வகையான பின்னீரை வாங்கிநீயும்
தடித்திட்ட வங்கமென்ற துத்தந்தன்னில்
தானிட்டு அரைத்துமே வில்லைதட்டி
நடித்திட்ட கதிரில்வைத்துப் புடமுமிட்டு
நாடியெடு பின்புதான் நாடிக்கேளே. 11

## தாளகச் செந்தூரம்

நாடியே தாளகமுஞ் சேர்தானொன்று
நல்லசுண்ணந் தன்னிலிட்டுப் பாணிவிட்டுக்
கூடியெரி ஒருசாமஞ் சுத்தியாச்சு
குணமாக யெடுத்து அயச்சட்டியிட்டு
பாடியே முன்செயநீர் சுருக்குப்போடு
பதிவாக யிருசாமஞ் சென்றபின்பு
தேடியே நலமாகப் பிரிந்துநீயும்
திட்டமாய் முன்போலே வங்கம்வாங்கே. 12

வாங்கியே கல்வமிட்டுப் புகைநீராட்டி
வடிவாக ஒருபங்கு தாளகத்தில்
தேங்கியே புகைநீரிலிட் டரைத்தவங்கம்
திடமாக நாலுபங்கு கவசங்கட்டிப்
பாங்கியே காயவைத்துப் புடமுஞ்சேவல்
பதிவாக யிட்டுமே எடுத்துக்கல்வம்
தூங்கியே திரியாதே புகைநீராட்டித்
துடியாக யிருசாம மரைத்திடாயே. 13

அரைத்துமே பின்புதான் தாளகத்தில்
அடைவாகக் கவசமிட்டுக் கதிரில்வைத்து
பரைத்துமே முன்போலே புடமுமிட்டுப்
பதிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
தரைத்துமே புகைநீரை விட்டுச்சாமம்
தனையரைத்துப் பின்புதான் தாளகத்தில்
நரைத்துமே கட்டியே கதிரில்வைத்து
நலமாக முன்போலே புடத்தைப்போடே. 14

## துருசுரவி மேற்படி சுத்தி

புடம்போட்டு யிப்படிநால் தரமுமானால்
பேரான கருஞ்சிவப்பு மாகுங்கண்டீர்
நடம்போடு நபிமாரைத் தொழுதுபோற்றி
நலமாகக் குருவைத்தா னெடுத்துப்பின்பு
வடம்போடு துருசதுவும் பலமும்பத்து
வாகான யெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
உடம்போடு உலரவைத்து ஒட்டக்காய்ச்சிக்
...........................................ரவியுமாமே. 15

ஆமேதான் ரவிதன்னைத் தகடுதட்டி
அடைவாகக் கழுதையுட அமுரிதன்னில்
நாமேதான் வெடியுப்பைக் கரைத்துநீயும்
நலமாகப் பழுக்கவே காய்ச்சித்தோய்ப்பாய்
காமேதான் தோய்த்துமே உருக்கிக்கொண்டு
கனிவாகச் செம்பினிடை செந்தூரத்தைப்
பூமேதான் தாக்கிப்பார் பொடியாய்ப்போகும்
புகழ்ச்சியைப் பின்புதான் பேசக்கேளே. 16

பேசவே வெள்ளியது பலமுமூன்று
பேராக நொறுங்கினதோர் செம்புஒன்று
நாசவே கொடுத்துருக்கப் பொடியாய்போகும்
நலமாகத் தங்கமொன்று சேர்த்துஊத
பாசமாய் மாத்ததுதான் யெட்டுமாகும்
பதியவே உப்புக்குங் காவிக்குந்தான்
வாசமா யோடாது நல்லமார்க்கம்
வகையாக யாகோபு சொன்னவாறே. 17

சொன்னதொரு வாதத்தில் வங்கராஜன்
சுருதிபெற யில்லாது போனாற்கேளு
நன்னயமாய் வாதமென்ற சொல்லேயில்லை
நலமான சத்துமில்லை களங்குமில்லை
இன்னிலத்தில் வர்ணமில்லை யியல்புமில்லை
இதமான சொர்ணமில்லை யின்பமில்லை
கன்னல்போல் கொட்டாவி யிட்டுயிட்டுக்
கலங்கியே புலம்பியே அலைகுவாரே. 18

அலையாமல் வாதத்தின் கருவைக்கேளு
அடைவான வங்கமொன்ற தங்கமொன்று
நிலையான நாகமொன்று துருசியொன்று
நேரான அயமதுவும் இவைகள்சேரில்
கலையாமல் தங்கமது வாகுங்கண்டாய்
கணக்கதுபோல் சேர்ந்தாக்கல் கனிகளாகும்
விலையாகும் வெகுவித்தை யிதிலேயாச்சு
வித்தகராம் யாகோபு விளம்பினாரே. 19

விளம்பவே புகைநீரு யில்லாதுபோனால்
விதமான சத்துக்கள் பலிதமில்லை
துளம்பவே கைபாக வரிசைதப்பில்
தொல்லுலகில் ரசவாதம் பொய்க்குங்கண்டீர்
பழங்கதைபோல் பேசாதே பருவமாகப்
பார்த்துமே செய்திடவே பலனுமாகும்
உளங்குளிரும் ரசவாத மேவலாகும்
உற்றுணர்ந்து யாகோபு ஓதினாரே. 20

ஓதினார் சிலதுபேர் உலகந்தன்னில்
ஓதியதோர் சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்து
நீதியாய் விசாரித்துத் தெரியாதாலே
நிலையில்லை சாஸ்திரத்தைப் பொய்யேயென்று
கோதியே கிளிபோலே சாஸ்திரத்தைக்
குணமில்லை யென்றுமே சொல்லிப்பின்பு
நாதியா யாணுவத்தால் சரக்கைப்பார்த்து
நான்செய்வே னென்றுமே சொல்லுவாரே. 21

சொல்லியே ஆணுவத்தால் உலகத்திற்றான்
துயரமொடு வாதியைத்தான் கண்டுபேசி
வெல்லவே புல்லர்கள்தான் பத்துப்பேராய்
விதமாகக் கூடியே சுடுவார்கோடி
நல்லநூல் தன்னையே பாராமற்றான்
நாடியே பொய்சொல்லிப் புலம்புவார்கள்
வெல்லரிது வாதங்கள் வந்தாற்கேளு
வெளியிலே சொல்வார்கள் விருப்பமாமே. 22

விருப்பமாய் வாதங்கள் வந்தபேர்கள்
விதமாகப் பயித்தியமாய்த் திரிவாரப்பா
அருப்பமாய்ப் பேசார்க ளுலகத்திற்றான்
அடைவாக நபிமார்போ லிருப்பாரப்பா
பொருப்புக்கு ளொளிந்திடுவார் புலம்பார்பேசார்
பொறுமையது மிகவுண்டு பொய்பேசார்கள்
இருப்பாக யிருந்துமே செய்துவித்து
இதமாக உண்டுடுப்பார் உறுதிதானே. 23

உறுதியாம் அறியாத வாதிமார்கள்
ஒருத்தருடன் சொல்லியே புலம்பிப்பின்னும்
அருதியாய் நான்கண்டே னென்றுசொல்லி
அலைந்துமே வயிரவன்போற் சுத்திச்சுத்தி
கருதியே பணமெல்லாஞ் சுட்டுக்கெட்டுக்
கனிவாகப் பிச்சையெடுத் துண்டுவுண்டு
பருதிபோற் சுழன்றுமே மாளுவார்கள்
பத்தியில்லார் செய்கின்ற மார்க்கந்தானே. 24

மார்க்கமாய்ப் பொய்சொல்லார் நிலைத்தவாதி
மாயங்கள் சொல்லார்கள் மார்க்கமாக
ஏர்க்கவே யிந்தநூல் தன்னைப்பார்த்து
ஏழைமதி போகாமல் யியல்புசெய்வார்
பார்க்குள்ளே தங்கத்தைப் பண்ணிவித்து
பத்தியாய்ப் பாகமாய்ச் செய்வார்பாரு
தூர்க்குள்ளே நபிமார்கள் போலிருப்பார்
துயரமற்றுத் திரிவார்கள் சுருதியாமே. 25

## வங்கச் சுண்ணம்

சுருதியா யின்னமொரு வங்கமார்க்கம்
சொல்லுகிறேன் நபிமார்க ளாடும்நேர்மை
அருதியாய்க் காரீயம் பலமும்பத்து
அடைவான அயச்சட்டி தன்னிலிட்டு
கருதியே உருகையிலே வெடியைத்தாக்கு
கணக்காக யிடைசமனாய்ப் போட்டுக்கிண்டு
பகுதிபோற் சிவந்துநின்ற பருவம்பார்த்துப்
பத்தியொடு சுண்ணாம்பாம் பாரிலோர்க்கே. 26

பாரிலே வங்கமென்ற சுண்ணந்தன்னைப்
பதிவாக மஞ்சள்தனி லிட்டுப்பாரு
காரியமாய்க் குருவிரத்தம் போற்சிவக்கும்
கணக்காகச் சுண்ணமதை யெடுத்துக்கல்வம்
ஊரியே யிட்டுமே சொல்லக்கேளு
உறுதிபெறக் கடையில்விற்கும் ரசச்செந்தூரம்
வாரியே வாங்கிவந்து நிறையைக்கேளு
வண்மைபெற முன்சுண்ணத் திடையேசேரே. 27

## யாகோபு

இடையாகக் கல்வமிட்டுப் புகைநீர்விட்டு
இழுத்தரைத்து வில்லைதட்டிக் கதிரில்வைத்து
கடையாகச் சேவலென்ற புடத்தையிட்டு
நாடியே யெடுத்துமே கல்வத்திலிட்டு
படையாகப் புகைநீரை விட்டுச்சாமம்
பதியவரை வில்லைதட்டிக் கதிரில்வைத்து
விடையாக முன்போல புடமுமிட்டு
விதமாக யிப்படிக்குப் புடமும்நாலே. 28

நாலுபுடம் போட்டெடுக்க முருக்கம்பூப்போல்
நலமாகச் செந்தூர மாயிருக்கும்
காலுயெடு துருசினுட செம்புயெட்டில்
கணக்காக ஒன்றிட்டு உருக்கிப்பாரு
பாலுபோல்,வெளிறியே உடையுங்கண்டாய்
பக்குவமா யுடைத்துமே மதியிலெட்டு
சாலவே ஒன்றிட்டுத் தங்கமொன்று
சாரித்துச் சேர்த்துமே ஊதிடாயே. 29

ஊதியெடு மாத்துத்தான் சொல்லக்கேளு
உறுதியா யெட்டரைதா னாணிக்கொக்கும்
சாதிதன்னிற் சொல்லாதே தங்கந்தன்னைத்
தாட்டிகமாய் வித்துமே செலவுசெய்து
நீதியாய் நபிமாரைப் போலிருந்து
நிலைபெற்று உண்டுடுத்தி நினைவாய்நின்று
வேதியர்போல் நாளொன்றுக் கைந்துநேரம்
விதமாகத் தொழுதிடுநீ வேண்டிக்கொள்ளே. 30

வேண்டியே தன்னிலையில் நின்றுநீயும்
விதமாகச் செந்தூரம் தேனிற்றானும்
கண்டுமே பணவிடைதான் வீதம்நித்தியம்
கனிந்துமே மண்டலந்தா னுண்ணும்போது
தூண்டியே கடுகுநல் லெண்ணெய்கைப்பு
துடியான எள்ளுமொச்சை பயறுதள்ளே
காண்டியமாய்க் காயமது யிரும்புத்தூணாம்
கடிதாகுங் கற்போலாங் காயந்தானே. 31

காயந்தா னிப்படிக்கு யிருக்கிக்கொண்டு
கனகமது பண்ணியே உண்டுதேரு
நாயன்மார் சொன்னபடி நூலைப்பார்த்து
நலமாக அறிந்துமே சோதித்துத்தான்
மாயமாய்ச் செய்துமே கடையில்வித்து
வடிவாக வறுமைபோ லூண்டுதேரு
சாயமது ரசவாதந் தரணியோர்க்குச்
சரிவரவே சோதித்தாற் பலனுமாமே. 32

பலனாகச் சுண்ணமென்ற காண்டத்துள்ளே
பத்தியாய்ச் சோதித்து வங்கச்சுண்ணம்
பிலனாக வைத்துமே பாகமாகப்
பேதலித்துப் போகாமல் மனதைஊணி
நலமாக வைத்துமே செம்பிற்றாக்கி
நாட்டிலே வித்துமே செலவுசெய்து
கலனாக உண்டுடுத்தித் தொழுதுதேரு
காரியமா யாகோபு சொன்னவாறே. 33

சொன்னதொரு நூல்தனிலே வாதம்பொய்யோ
சுருதிதனை யறியாத மூடர்தானும்
நன்னயமாப் பேசுவா ருலகநீதி
நாட்டிலே சாஸ்திரத்தை அறியமாட்டார்
கன்னல்போல் ருசியாகப் பேசுவார்கள்
கணக்கரியார் காரியத்தைக் காணமாட்டார்
இன்னிலத்திற் புலம்பியே திரிவாரப்பா
இழுக்கான வாதிதான் சோதிக்காரே. 34

சோதிப்ப தெதுவென்றாற் சொல்லக்கேளு
சுயமான வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நீதியாய் ரவசாத மேவல்கேட்கும்
நிலைக்குமே செம்புதான் தங்கமாகும்
பாதியிலே ரசவாதம் பார்த்துவிட்டுப்
பதைத்துமே யில்லையென்பார் பாரிலோரும்
ஊதியே வெகுபாடு பட்டுப்பட்டு
உலுத்தரவர் சாஸ்திரத்தைப் பாரார்தானே. 35

சாஸ்திரத்தைப் பார்த்துமே கருவையெண்ணி
சரியாக எல்லாநூல் தன்னைப் பார்த்து
சேத்திரமா யெல்லாமும் ஒத்துச்சேர்த்துச்
செயமாகப் பாகமாய்ச் செய்தாற்பாரு
பாத்திரமாம் பொன்னாகும் பணமுமாகும்
பதிவாக உண்டுடுக்க வாகும்பாரு
சூஸ்திரமும் சாஸ்திரமும் ஒத்துப்பாரு
சுருக்காக வேதைவருந் தோய்வுமாமே. 36

ஆமேதான் ஆனந்தான் காய்ச்சும்போது
அடைவாகப் புளிமிஞ்சில் புளித்துப் போகும்
நாமேதான் உப்புவது மிஞ்சிற்றானால்
நாடியே நாவுக்குக் கைப்புமாகும்
வாமேதான் காரமிஞ்சில் காரமாகும்
வடிவாக நாவுக்கு ருசியிராது
பூமேதா னிப்படிக்குச் சரக்கைப்பார்த்தால்
பூலோக மெல்லாமும் வாதமாமே. 37

வாதந்தான் வருகவென்றாற் சொல்லக்கேளு
வகையாக வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நீதமாம் வாதவரு முடனேதானே
நிலையாகும் புடமிறங்கும் நேர்மைபாரு
காதமாம் நடந்தாலோ வழிகள்தோணும்
கடத்தேற வேணுமென்றாற் கருவாய்ப்பாரு
வேதத்திற் சொன்னதிந்த மார்க்கந்தன்னை
விருதுபட யாகோபு சொன்னவாறே. 38

### வங்கச்செந்தூரம்

சொன்னதோ ரின்னுமொரு வங்கங்கேளு
சுளுவாகு மிதுலெகுவு முன்னேபாரு
நன்னயமாய் வங்கமது பலமும்பத்து
நாடியே அயச்சட்டி தன்னிலிட்டு
கன்னல்போ லாவாரைப் பஞ்சாங்கந்தான்
கருத்துறவே பொடியாக்கி முகத்தில்தூவு
இன்னிலத்திற் குறுக்கியே சிவக்கும்பாரு
இதமாகக் கல்வமிட்டுப் பின்புகேளே. 39

பின்புதான் கற்றாழைப் பாலாலாட்டிப்
    பிலக்கவே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நன்மைபெறப் பெரியபுடம் போட்டெடுத்தால்
    நலமாகச் சிவப்பாகும் நாடிக்கேளு
அன்பாகத் தாளகமும் பலமும்பத்து
    அடைவாகப் புகைநீராற் சுருக்குத்தாக்கு
உன்பாகச் சாமமொன்று தாக்கிப்பாரு
    உண்மையாய்க் கட்டுவது உறுதிபாரே. 40

உருதியாய் வங்கத்தைக் கல்வமிட்டு
    உத்துமே கற்றாழை நீரினாலே
அருதியா யரைச்சாம மானபின்பு
    அடைவாகத் தாளகத்தின் மேலேகட்டு
தருதியாய்க் கதிரிலிட்டுக் காயப்போடு
    நலமாகக் கல்லுப்புப் படிதான்ரெண்டு
வருதியாய் மேனியென்ற சாற்றாலாட்டி
    வகையாகப் புடம்போடக் கட்டுந்தானே. 41

கட்டியதோ ருப்பெடுத்து முன்னுண்டைமேலே
    கனிவாகக் கட்டியே காயவைத்து
நட்டுவே உமிதனிலே நடுவேவைத்து
    நலமாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளு
பட்டுமே குருவாகும் குருவினாட்டு
    பதியவே நபிமார்கள் காண்பாரப்பா
தட்டுமே குருவெடுத்து வைத்துக்கேளு
    தரணிதனில் காகதுண்டி தன்னைவாங்கே. 42

## குடவன் செப்பு

வாங்கியே ஒருசேரு நொறுக்கிநீயும்
    வளமாகத் துணிதனிலே யிருக்கிக்கட்டி
தாங்கியே புடம்போட்டுப் பிரிந்துப்பாரு
    தப்பாமற் கரியாகும் பதத்தில்வாங்கி
தேங்கியே திரியாதே பீங்கானிட்டுத்
    திடமாகப் புகைநீரை அதிலேஊத்த
பாங்கியே பொங்கியது புகையும்பாரு
    பாதைக்கு வெகுபோக்கு பாருள்ளோர்க்கே. 43

பாரிலே வெங்காரம் கொஞ்சம்சேர்த்துப்
பதியவே குகையிலிட்டு உருக்குசெம்பு
ஊரியே வருகாது யிந்தச்செம்பு
உறுதிபெறக் களங்குவந்த யிடங்களெல்லாம்
காரியமாய்ச் சேர்த்துநீ சொல்லக்கேளு
கணக்காக நாகத்தின் செம்புரெண்டு
வாரியே முன்வங்கக் குருவும்ரெண்டு
வடிவாகச் சேர்த்துருக்கு வெட்டையாமே. 44

வெட்டையா மதியெட்டில் ரெண்டுசேரு
விதமாகத் தங்கமொன்று சேர்த்துருக்கி
கிட்டவே ஊதிப்பார் மாத்துயெட்டு
கிளறவே காலாகும் புடமிறங்கும்
தட்டையா யிவ்வேதை நிசமுமாகும்
சரியான மார்க்கமிது சார்புமெத்த
சிட்டரே யிதைவித்துச் செலவுசெய்து
சித்திபெற்று மேயிருந்து வாழலாமே. 45

வாழவே செந்தூரம் பண்ணக்கேளு
வடிவான பித்தளையின் செம்புதன்னில்
தாழவே யிடைக்கிடை தாக்கிநீறு
தடைபெறவே யெடுத்துப்பார் வெட்டையாகும்
ஏழைமதி போகாமல் தங்கத்தோடே
இடைக்கிடைதா னுருக்கியே தாக்கித்திரு
ஏழையாம் புகைநீரை விட்டரைத்து
இதமாகப் பீங்கானி லிட்டுக்கேளே. 46

இட்டுநீ வறுத்துமே காசிமேரு
இதமாக அடைத்துமே சீலைசெய்து
பட்டுமே மூடியதை யடுப்பிலேற்றிப்
பக்குவமாய்ப் பன்னிரண்டு சாமந்தீதான்
நாட்டுமே யெரியிட்டுக் கல்வமிட்டு
நலமாக முன்புகைநீர் தன்னாலாட்டி
வட்டுமே காசியென்ற மேருக்கிட்டு
வகையாக முன்போலே யெரித்திடாயே. 47

எரித்துமே அடுப்பேற்றி யிறக்கிப்பின்பு
இதமாக யிப்படிக்கு தரமுமஞ்சு
வருத்துமே யெரித்துயெடு முருக்கம்பூப்போல்
வடிவாக யிருந்திடுமே செந்தூரத்தை
எரித்துமே நவலோகந் தன்னிலூட்ட
நலமாகத் தனித்தனியே வேதையாகும்
பிரித்துமே மாத்தென்ன பதினாறாகும்
பெருமையாய்ப் பணவிடைதா னுண்டுதேரே. 48

உண்டிடவே செந்தூரம் பணமவ்வீதம்
உறுதிபெற அந்திசந்தி தேகந்தானும்
கண்டிடவே நோயெல்லாந் தவிடுபொடியாகும்.
கண்காணத் தேகமது கற்றூணாகும்
பண்டிடவே பழங்கதைகள் பேசாமற்றான்
பதிவான வங்கச்செந் தூரம்பாரு
தின்றிடவே புளியோடு நல்லெண்ணெய்விட்டுத்
திடமாக வுண்டுபார் சித்தியாமே. 49

சித்தியாம் நபிமார்க ளாடுமாட்டை
ஜெகத்திலே உறுதியுள்ள வாதிக்குத்தான்
நத்தியே சொல்லிவிட்டே னானுங்கண்டு
நலமாகப் பாகமதைப் பார்த்துத்தேறி
சத்தியமா யுங்களுக்குச் சொன்னநீதி
தாட்டிகவான் கண்டுமே பிடிப்பானப்பா
புத்தியாய்க் கண்டுநீ பிடித்துக்கொள்ள
பேர்பெரிய குருவாகும் பேணிப்பாரே. 50

பேணியே உலகத்தில் வாதிதானும்
பிரபலமாய் வாதத்தைக் கண்டேனென்று
ஊணியே சொல்லியுமே பணத்தைவாங்கி
யுத்தியோடு சரக்கதனை வாங்கிவந்து
கோணியே செய்திட்டுக் களங்குதன்னைக்
கூக்குரலாய்ச் செய்துமே செம்பிலிட்டு
நாணியே ஒன்றுமில்லை கெட்டுப்போச்சு
நலமாகத் திரிந்தலைந்து மாளுவானே. 51

மாளுவான் சிறிதுபேர் வாதிதானும்
வகையில்லாப் படிப்பதுதான் தெரியாதாலே
கூளுமே குடித்திட்டுப் பொய்கள்சொல்லிக்
குணமில்லா அபின்கஞ்சா கள்ளுதன்னை
பளுக்கவே குடித்துமே வாதஞ்செய்வோன்
பரப்பியே பணந்தன்னைப் பிடிங்கிக்கொண்டு
வாளுமே யென்றுசொல்லி யோடிப்போவான்
வகையறியான் மாடுதான் மேய்ப்பான்பாரே. 52

மாடுதான் மேய்க்கின்ற வாதிதானும்
வகையில்லாக் கிடாமாடு வரிசைகாணார்
காடுமே திரிந்தலைந்து மூலிதேடிக்
கருதியே யிலையைத்தான் பிடிங்கிவந்து
சாடுமே பாஷாணந் தன்னிலிட்டுச்
சரியாச்சு யென்றுமே லோகந்தன்னில்
பாடுபட்டுக் கொடுத்துமே ஒன்றுமில்லை.
பத்தியாய்ச் சொல்வார்கள் பாரிலோர்க்கே. 53

பாரிலே வாதமில்லை யென்றுசொன்ன
பதிவான மூடருடன் சேர்க்கையாகா
ஊரிலே அவர்க்குநல்ல கெதியுமில்லை
உழன்றுமே ஏழ்நரகில் வீழ்வாரப்பா
சாரியாய் நீயுமே அவர்களோடே
சரியாகப் பேசாதே தரணியோர்க்குக்
காரியமாச் சொல்லிவிட்டேன் கண்டுகொள்ள
கணக்கறிந்த யாகோபு சொன்னவாரே. 54

சொன்னதொரு வங்கத்தின் சுண்ணந்தன்னைச்
சொல்லிவிட்டே னதன்பெருமை துலக்கமாக
நன்னயமாய் வங்கத்தின் சுண்ணந்தன்னை
நலமாகக் கண்டாக்கால் நாட்டிலோர்க்கு
பின்னமில் லாமலே தங்கமாகும்
பிசகாது யென்வசனம் பொய்போகாது
தன்னகரில் சித்தனாய் வாழலாகும்
தடையற்ற நபிமார்க ளாடுமாட்டே. 55

ஆட்டான கேள்வியினால் வாதஞ்சுட்டு
அறியாமற் பொய்யென்றா லாரென்செய்வார்
நீட்டான குருவேணுஞ் சீடன்வேணும்
நிலையான சுண்ணமென்ற காண்டம்வேணும்
பாட்டான படிப்பைத்தா னறியவேணும்
பகலிரவாய்ச் சரக்குவகை காணவேணும்
மூட்டான உலகத்தில் திரியவேணும்
முற்றுணர்ந்து பார்த்தாக்கால் சித்தியாமே. 56

சித்தியா மின்னமொரு சுண்ணமார்க்கம்
செப்புகிறேன் அண்டரண்டந் துளைத்துஆட
முத்தியாய்ச் சீனமது பலமும்பத்து
முடிவான கரிநெருப்பி லூதிநீயும்
சத்தியமா யெடுத்துமே சொல்லக்கேளு
சரியாக இடைநேராய்த் துத்தந்தன்னை
நத்தியே சேர்த்துமெள்ளக் கல்வமிட்டு
நலமாக அரைக்கவே சொல்லக்கேளே. 57

சொல்லக்கேள் யெருக்கம்பால் படியுமொன்றில்
சுயமாக அண்டவெண் கருவுமிட்டு
நல்லவே மூன்றுநாள் வைத்துப்பாரு
நலமான தண்ணீர்போல் தெளிந்துநிற்கும்
வல்லமையா யிந்தநீர் தன்னைவிட்டு
வளமாக அரைச்சாமம் வில்லைதட்டிச்
செல்லவே கதிரிலிட்டுக் காயப்போடு
சிறப்பாக ஊதிடவே சுண்ணமாமே. 58

சுண்ணமாம் கடுஞ்சுண்ணந் துத்தச்சுண்ணம்
சுயம்பாகச் சரக்கெல்லாங் கரியிலாடும்
கன்னயமா யிச்சுண்ணம் நபிமார்க்கொப்பும்
நலமாகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
முன்னமே சுண்ணத்தில் வீரம்பாதி
முடிவாகச் சேர்த்தரைத்து முன்னீராலே
கன்னல்போற் கசடருந்தா ளகத்திலப்பி
கனிவாகக் காயவைத்துச் சொல்லக்கேளே. 59

## தாளகச் சுன்னம்

சொல்லவே குக்குடத்தில் நீறுமாகும்
சொல்லரிய தாளகத்தின் சுண்ணப்போக்கை
நல்லவே ஒருவருக்குஞ் சொல்லப்போகா
நலமான பாகமிது நாட்டிலோர்க்கு
வல்லமையாய்த் தாளகத்தின் சுண்ணம்நேரே
வடிவான நீரைவிட்டு அரைத்துநீயும்
செல்லவே துருசின்மே லப்பிப்போடு
ஜெயமான கதிரில்வைத்துச் செப்பக்கேளே. 60

## துரிசுச் சுன்னம்

செப்பவே கோழியென்ற புடத்தைப்போடச்
ஜெயமாகப் பிரித்துப்பார் துருசுச்சுண்ணம்
நப்பவே யிருந்துவிடும் யெடுத்துநீயும்
நலமாக முப்பொழுதுந் தொழுதுநன்றாய்
தப்பியே போகாமற் சொல்லக்கேளு
தடையற்ற வீரமது தானுமிட்டு
அப்பியே யரைத்துவிடு சாமம்நாலு
அடைவாக முன்னீரால் அரைத்திடாயே. 61

அரைத்துமே துருசின்மேற் கவசங்கட்டி
அடைவாகக் கதிரில்வைத்துப் புடமுமிட்டு
பரைத்துமே யெடுத்துப்பார் ரத்தம்போலாம்
பத்தியாய்த் துருசியது தொந்தமாச்சு
கரைத்துமே யித்துருசு காலனொக்கும்
கணக்காகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
விரைத்துமே யிச்சுண்ணம் விராலிக்கிட்டு
யிதமாகப் பிழிந்திடவே நீருமாமே. 62

நீரான சாறுவராத் தழைகளெல்லாம்
நிலைத்துமே நீராகும் வேதைகோடி
ஆராகுந் தங்கமது கோடாகோடி
அனைத்துமே சரக்கையெல்லாங் கரியிலாட்டும்
வேராகும் வாதமென்ற சொல்லுக்கெல்லாம்
விதமாக ராஜாவாம் துருசுச்சுண்ணம்
பாராகும் படுமுன்னே வேதையாகும்
பாதைக்குத் துருசதுவும் நேர்த்திதானே. 63

## ரசமணி

நேர்த்தியாஞ் சூதமது பலமும்பத்து
நேர்மையா யயக்கரண்டி தன்னிலிட்டு
சாத்தியே சுண்ணத்தி னால்முறிந்த
சரியான நீரைவிட்டுக் கொதிக்கவைத்தால்
பாத்தியே சூதமது கட்டிப்போகும்
பதிவான யிருபத்தோர் மணிகள்செய்து
வாத்தியே தமரிட்டு நூலில்கோர்த்து
வடிவாகக் கைதனிலே வைத்துக்கொள்ளே. 64

வைத்துமே பிசுமில்லா ரகுமானென்று
வகையான கலிமாவை ஓதித்தீரு
மைத்துமே நாளொன்றுக் கொன்றுதானும்
நாடியே முப்போதுத் தொழுதுபோற்று
பைத்துமே யிப்படிக்குத் தொழுதாயானால்
பதிவாக நபிமார்போ லிருக்கலாகும்
வைத்துமே களங்கோடு செந்தூரங்கள்
கனிவான பொருளாகுங் கண்டுகொள்ளே. 65

கண்டுகொள்ளு நினைத்ததெல்லாங் கையிற்கூடும்
கதியாகும் விதியாகுஞ் சித்தியாகும்
பண்டுமுன்னே யிருந்ததெல்லாம் பாகமாகும்
பத்தியதோர் காலனாம் பாரிலோர்க்குத்
தொண்டுபடுஞ் சகலமுந்தான் சித்தியாகும்
தொல்லுலகில் விந்திருகும் தொன்மைபாரு
உண்டுமே ஸ்திரீகளுந்தான் வசியமாகும்
உற்றுணர்ந்து பார்த்தாக்கால் சித்தியாமே. 66

சித்தியாகும் சூதத்தைக் கரியில்வைத்து
திட்டமா யுருக்கிப்பார் கரியிலாடும்
பத்தியாய் நாலுக்கு ஒன்றுதானும்
பதிவான தங்கமொன்று நாகமொன்று
நத்தியா யுருக்கிப்பார் களங்குமாகும்
நலமாகும் அதையுடைத்து நவலோகத்தில்
வெத்திபெற நூற்றுக்கு ஒன்றுயீய
விதமாகப் பத்தரையாம் விரும்பிப்பாரே. 67

விரும்பியே செந்தூரம் பண்ணக்கேளு
வித்தகமாஞ் சூதமென்ற களங்கந்தன்னை
அரும்பியே கல்வமிட்டு உடைத்துநீயும்
அடைவாகக் கெந்தியிட்டுத் தாரமிட்டு
வரும்பியே புகைநீரா லரைத்துக்கொண்டு
வாகாக உமிநெருப்பில் வறுத்துநீயும்
தரும்பியே காசியென்ற மேருக்கேற்றித்
தப்பாம லெரியிடவே தன்மையாமே. 68

தன்மையாய்ப் பன்னிரெண்டு சாமந்தானும்
தாக்கிடவே யெரித்துநீ கமலமாக
உண்மைகா டாக்கினியா யெரித்துநீயும்
உற்றுமே நபிமாரைத் தொழுதுபோற்று
வண்மையாய் அல்லாவை மனதிலெண்ணி
வடிவாக யெல்லாமுஞ் சித்தியாக
துண்மைபெறச் சொல்லியே நவலோகத்தில்
தூக்கிமெள்ள நூற்றுக்கு ஒன்றுதாக்கே. 69

ஒன்றுமே கொடுத்துநீ உருக்கிப்பாரு
உற்றுயெடு பத்தரைதா னாணிக்கொக்கும்
கன்றுமே போட்டதுபோற் சித்தியாகும்
கனிவான பொருளாகுங் கணக்குக்கேளு
நன்றுமே நாவினாற் சொல்லப்போகா
நானிலத்தில் நபிமார்க ளாடுமாட்டு
அன்றுமே பணவிடைதான் பாலிலுண்ணு
அருணணிற மாகுமிது அடைவுமாமே. 70

அடவான மண்டலந்தா னுண்டுதேரு
அதிகபெல னாகுமே தேகந்தானும்
முடமான தாதுவெல்லாம் நிமிர்ந்துபோகும்
முத்தியது வுண்டாகும் மோகமாகும்
நடவாகு முப்போடு எண்ணெய்விட்டு
நாடியே பத்தியமா யுண்டுதேரு
குடமாகும் பணமதுவும் அதிகமாகும்
குடிலமரும் யோகமாம் குணமுமாமே. 71

குணமான வாதத்தில் குற்றந்தானும்
கொடியதொரு வேகமாங் குற்றமில்லை
மனமாகும் வேதையாம் பொன்னுமுண்டு
மயங்காதே துருசதுவை நீற்றினாக்கால்
உணவாகுஞ் சகலமுந்தான் சித்தியாகும்
ஓகோகோ உறுதியுள்ள செந்தூரந்தான்
பணமாகும் பாதைக்கும் பெலக்கும்பாரு
பத்தியுள்ள நபிமார்க ளாடுமாட்டே. 72

ஆட்டான நபிமார்க ளாடுமாட்டை
அறிவுள்ளோ ரறிவார்கள் மூடர்தானும்
பாட்டான படிப்புகளைப் படித்துக்கொண்டு
பதிவாக உள்ளன்பில் வேறேயொன்று
நீட்டாகச் சொல்லுவார் வாதங்காணார்
நிலையான கைபாக வரிசையில்லார்
பூட்டாகச் சொல்லுவார்க் கொன்றும்மில்லை
புகலரிய நால்வேதம் பிரித்துப்பாரே. 73

பிரித்துமே ஒவ்வொன்றாய்ச் சரக்கைகண்டு
போக்கோடே செய்தாக்கால் பலனுமாகும்
விரித்துமே நூல்கண்டு வினையங்கண்டு
விதமாகச் செய்திடவே சித்தியாகும்
பரித்தஎலி வளைக்குள்ளே யிருந்தாப்போல
பதிவாகச் சொன்னதினாற் பலனுமில்லை
சிரித்தாக்கால் ஒன்றுமில்லை சீருமில்லை
செப்பமா யாராய்ந்தால் ஜெயமுமாமே. 74

ஜெயமாகுந் துருசினுட சுண்ணமல்லால்
செப்பமாய் வாதங்கள் மிகவுமில்லை
நயமாக வங்மில்லாச் செந்தூரமெல்லாம்
நாடியே தூரயெறி நன்மையாகா
பயமாகக் கைபாக மில்லாவேலை
பதியவே தூரயெறி பாரிலோர்க்கு
மயமாக நூலில்லா வாதமெல்லாம்
வகையில்லை தொகையில்லை வழக்கமாமே. 75

## நாகச்செந்தூரம்

வழக்காகத் தங்கமில்லா வாதமெல்லாம்
வடிவாகத் தூரயெறி வங்கையுமில்லை
தழக்காக மதியில்லாத் தங்கமெல்லாம்
தடையுறவே வாசல்தனில் தூரத்தள்ளு
உழக்கமாய் மாடில்லாக் கலப்பையெல்லாம்
உறுதியில்லை வுழுகாது உண்மைபாரு
துழக்கமா யறமில்லா வேதையெல்லாம்
துப்புரவாய்த் தள்ளிவிடு துயர்ந்துபாரே. 76

துயர்ந்துபா ரின்னுமொரு நாகந்தன்னைத்
துப்புரவாய்ச் செந்தூரஞ் செய்யக்கேளு
நைந்துமே நாகத்தி னோட்டம்போல
நாட்டிலே கிடையாது நாடிப்பாரு
பைந்துபார் நவலோகம் பழுக்குமப்பா
பதிவான நாகமென்ற ராஜாதானும்
வைத்துமே புகையெல்லாம் வேதையாகும்
வடிவான நாகந்தா னாடுமாட்டே. 77

ஆட்டான நாகமது பலமுமொன்று
அடைவான யிலுப்பெண்ணெய் தன்னிலேதான்
வாட்டமா யேழுதர முருக்கிச்சாய்க்க
வகையான கசடகலும் வண்மைபாரு
தேட்டாக நாகத்தை உருக்கியெட்டு
திடமான சூதமது ரெண்டுவிட்டு
பாட்டாகக் கல்வமிட்டு உடைத்துநீயும்
பதிவாகக் கற்றாழைப் பாலாலாட்டே. 78

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
பூட்டியே குக்குடமாம் புடமுமிட்டுப்
போக்கோடே யெடுத்துமெல்லச் சொல்லக்கேளு
நாட்டியே கசடறும் தாளகத்தில்
நலமாகக் கட்டியே கதிரில்வைத்து
கூட்டியே சேவலென்ற புடத்தைப்போடு
குணமாக யெடுத்துமே சொல்லக்கேளே. 79

சொல்லவே கல்வமிட்டுப் புகைநீராட்டி
சுயமாகத் தாளகத்தில் மேலேகட்டி
நல்லவே கதிரில்வைத்துக் காயப்போடு
நலமாகப் பயபக்தி யுடனேதானும்
வல்லமையா யிப்படிநால் தரமும்போட்டு
வகையாக யெடுத்துப்பார் களங்குமாகும்
வெல்லவே நபிமாரைத் தொழுதுபோற்றி
விதமாகச் சொல்லுகிறேன் விரும்பிக்கேளே. 80

விரும்பியே செம்புதனில் யெட்டிலொன்று
விதமாகக் கொடுத்துருக்கு அதைஉடைத்து
நரும்பியே வெள்ளியெட்டில் ரெண்டுமிட்டு
நலமாகத் தங்கமது ஒன்றுசேர்த்து
தரும்பியே ஊதியெடு தங்கமாகும்
தக்கான தங்கத்தை வித்துநீயும்
வரும்பியே உண்டுடுத்திக் கந்தரிக்கு
வகையாகக் கொடுத்துமே தொழுதிடாயே. 81

தொழுதுமே நாகத்தி னாட்டைப்போலே
தொல்லுலகிற் கிடையாது துடர்ந்துபாரு
அழுதுபார் வாமந்தான் வந்தபோது
அடைவாக ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
உழுதுமே பயிரதுவை யிட்டுப்பின்பு
உண்மையா யறுப்புகள்தா னறுத்துநீயும்
பழுதுமே உண்டபின்பு வாதமார்க்கம்
பதையாமற் செய்திடவே பலனுமாமே. 82

பலனாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
பாதையிது லெகுவாகும் பலிதமாகும்
பெலனாகக் கெந்தகமும் துருசுசேர்த்து
பிரியாமற் சத்தாகி யிருந்ததென்றால்
அலனாகச் சத்தைத்தான் கல்வத்திட்டு
அடைவான காரீயம் குமரிநீரால்
வலுவாக அரைத்துமே புடமூன்றிட்டு
வண்மையா யெடுத்திடவே மஞ்சளாமே. 83

மஞ்சளாம் வங்கமது சத்துக்குத்தான்
மார்க்கமாய் நாலிலொன்று சேர்த்தரைத்து
தஞ்சமாய்ப் புடம்போட்டு உருக்கிப்பாரு
தடையறவே கரிபோலே யுருகிநிற்கும்
பஞ்சமது தீர்ந்துவிடும் வாதிக்குத்தான்
பதிவாகப் பஞ்சமித்திரந் தன்னிற்சாய்த்து
துஞ்சமாக யெடுத்துமே வைத்துக்கொண்டு
தொடுகவே பாகமாய்ச் சொல்லக்கேளே. 84

சொல்லுவேன் சத்திலுள்ள செம்புதன்னைத்
துடியான யீயமது பிடித்திழுத்து
மல்லாக யிருந்திடுமே பின்புநீயும்
மார்க்கமாய் வங்கவெட்டை போலேயாகும்
கல்லவே வெள்ளிதனில் நாலில்ரெண்டு
கணக்காய்ச் சேர்த்துமே தங்கமொன்று
நல்லாகச் சேர்த்தூத மாதமேழு
நானறிந்தேன் யாகோபு நலஞ்சொன்னேனே. 85

சொன்னதொரு வங்கத்தைச் செந்தூரிக்கச்
சொற்பெரிய வங்கவெட்டை பலமும்நாலு
கன்னல்போல் தங்கமது பலமுமொன்று
காரியமாய் நாகமது பலமுமொன்று
நன்னயமா யுருக்கியெடு பட்டுப்போலே
நலமாக யிருக்குமது கல்வத்திட்டு
இந்நிலத்திற் கெந்தகமுஞ் சூதஞ்சேர்த்து
இதமாகப் புகைநீரா லரைத்திடாயே. 86

அரைத்துமே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடமிட்டு எடுத்துப்பாரு
தரைத்துமே கரிபோலே தூளாம்பாரு
தனையெடுத்துப் பலம்நாலு கல்வத்திட்டு
பரைத்துமே வங்கச்செந் தூரமொன்று
பதியவே கல்வத்தி லிட்டுநீயும்
வரைத்துமே குமரியன்னந் தன்னாலாட்டி
வகையாக வில்லைதட்டிக் கதிரில்வையே. 87

கதிர்தன்னிற் காயவைத்துப் புடமுமிட்டுக்
கனிவாக யெடுத்துப்பார் செந்தூரமாகும்
பதிவாக நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பண்பான செந்தூரம் நவலோகத்தில்
கெதியாக ஒன்றுகொடு மாத்துபத்துக்
கிருபையா யிருந்திடுங்காண் நல்லவித்தை
சதியாகச் செய்யாதே பாகமாகச்
சாஸ்திரத்தை யாராய்ந்தால் தன்மையாமே. 88

தன்மையாய்ச் சாஸ்திரமுஞ் சூஸ்திரமும்பாரு
தடையறவே நபிமாரைத் தொழுதுபோற்று
உண்மையா யறிவாகக் கண்டுகொண்டு
ஒருவேலை செய்துமே சீவனங்கள்
வண்மையாய்ச் செய்துமே உண்டுதேரு
வகையறிய வேணுமென்றா யின்னூல்தன்னைக்
கண்மையாய்ப் பார்த்துவிடு சகலசித்தும்
கண்டுநீ பிடிக்கலாங் கருதுவாயே. 89

கருதவே தளகர்த்தன் வங்கராஜன்
கனகமது தந்திடுவான் கண்டுகொள்ளு
பருகவே வங்கமில்லாக் களங்கமெல்லாம்
பதிவாக ஒன்றுக்கு மாகாதுதள்ளு
நருகவே தங்கமில்லாச் செந்தூரந்தான்
நலமில்லை முறைகடக்கத் தள்ளிப்போடு
உருகவே சத்துத்தா னில்லாவிட்டால்
உறுதியில்லை செம்புதான் களிம்பறாதே. 90

களிம்பான செம்பைத்தான் மட்டஞ்சேர்த்தால்
கதிபெருகப் புடமிறங்காக் கனகமில்லை
வளிம்பான பொன்னில்லை சேதம்ரெம்ப
வடிவான வருத்தங்கள் மிகவுமுண்டு
உளிம்பாகப் பச்சைமண் சுட்டால்நன்று
உறுதியொக்கும் செம்புதா னுறுதியாகும்
அளிம்பாகச் சொல்லாமல் நூலைத்தானும்
அறிந்துமே உழைத்தாக்கா லாபமாமே. 91

### நாகச்செம்பு

லாபமா மின்னமொரு நாகச்செம்பை
நலமாகச் சொல்லுகிறோம் நாட்டுள்ளோர்க்கு
காபமாய்த் திரியாதே நாகந்தானும்
கனமாகப் பலம்நாலு தாக்கிநீயும்
தாபமா யிலுப்பெண்ணெய் தனிலுருக்கித்
தாட்டிகமா யிருபத்து ஒன்றுதானும்
ஆபமாய்ச் சாய்த்துமே உருக்கிநீயும்
அடைவாகச் சூதத்தைப் பாதிசேரே. 92

பாதிதா னுருக்குமுகந் தனிலேவூட்டு
பதிவாகக் கல்வமிட்டு உடைத்துக்கொண்டு
சாதியாய் வீரமது பலமுங்கால்தான்
சரியாகச் சேர்த்துமே கல்வத்திட்டு
போதியாய்ப் புகைநீரி லரைத்துநீயும்
போக்கோடே யிருசாமம் வில்லைதட்டி
நாதியாய்க் கதிரில்வைத்துச் சீலைசெய்து
நலமாகக் குக்குடத்திற் போட்டுவாங்கே. 93

வாங்கியே பார்த்தாக்காற் சிவந்துநிற்கும்
வளமாகத் தாளகமும் பலமும்பத்து
தேங்கியே கற்சுண்ணங் கீழ்மேலிட்டுத்
திடமாகப் பாணிவிட்டு நீற்றிநீயும்
பாங்கியே கசடகற்றி எடுத்துமெள்ளப்
பதிவாகப் பலம்நாலு கல்வத்திட்டு
நீங்கியே நாகமஞ்சள் பலமும்நாலு
நேராக யிதுரெண்டுங் கல்வத்திட்டே. 94

இட்டுமே புகைநீராற் சாமமாட்டி
இதமாக உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
நட்டுமே காரீயம் பலமும்நாலு
நலமாகக் கரண்டியிட்டு உருக்குநீயும்
பட்டுமே வெடியுப்புப் பாதியிட்டுப்
பதிவாகக் கிண்டிடவே மஞ்சளாகும்
கட்டுமே மஞ்சளது பலமும்நாலு
காரியமாய்க் கல்வமிட்டுங் கணக்குக்கேளே. 95

கணக்காகக் கற்றாழம் பாலிலாட்டிக்
கதிபெருக மூன்றுபுட மிட்டுநீயும்
பிணக்காகக் கன்னிப்பால் தன்னாலாட்டிப்
பிரியமாய் மூன்றுநடை தனிலேகட்டி
துணக்கமாய்க் கதிரில்வைத்துப் புடமுமிட்டுத்
தூக்கியெடு நபிமாரைத் தொழுதுபோற்றி
குணக்கில்லாக் குருவாகும் செம்புநூறில்
கொடுத்துருக்க ஒன்றாகும் கூர்ந்துபாரே. 96

கூர்ந்துபார் செம்பதுவுந் தங்கமாகும்
கூகூகூ வாதமது கொள்ளையாகும்
தேர்ந்துபா ருப்புக்குங் காவிக்கப்பா
திடமாக நின்றிடுங்காண் செல்வமாகும்
வார்த்துமே திரியாதே புத்திகேளு
வகையாக வைத்துநீ செலவுசெய்து
பார்த்துமே கந்தரிகள் மிகவும்பண்ணு
பதிவாக நின்றிடவே பலனுமாமே. 97

## துருசுச் செம்பு

பலனாகச் சொல்லுகிறேன் துருசுச்செம்பு
பத்தியா யெடுத்திடவே பலமதாக
நலனாகத் துருசதுவும் பலமும்நாலு
நாடியே கட்டியா யெடுத்தக்கொண்டு
பிலனாக முடியதுவும் பலமுமெட்டுப்
பிசகாமல் துருசின்மேற் சுற்றிநீயும்
கலனாகக் கெந்தியது பலமுமுக்கால்
கனிந்துமே சூடனரை வீரங்காலாம். 98

காலாக யிதுவெல்லாங் கல்வத்திட்டுக்
கதிபெறவே கற்றாழை நீரிலாட்டி
சாலாக அதின்பேரி லரப்பொடியைத்தானும்
சாதகமா யரைத்துமெள்ளப் பழச்சாற்றாலே
ஏலாக அரைத்துமே கவசங்கட்டி
இதமாக மண்கவசம் மேலேகட்டி
பாலாகக் கதிரில்வைத்துக் காயப்போட்டுப்
பதிவாகப் பெரியபுடம் போட்டிடாயே. 99

போட்டுமே மேற்கவசந் தள்ளிப்போட்டுப்
போக்கோடே மருந்தெல்லா மெடுத்துக்கொண்டு
காட்டுமே வைத்துநீ மதியிலெட்டுக்
கனிவாக ரெண்டுகொடுத் துருக்கிப்பாரு
தீட்டுமே தங்கமது ஒன்றுசேர்த்துத்
திறமாக ஊதியெடு மாத்துயெட்டு
நாட்டுமே விற்றிடுநீ செலவுசெய்து
நலமாக உண்டிட்டுப் பின்புகேளே. 100

கேளுமே யிதுலெகுவு முன்னேசெய்து
கிருபைவைத்துப் பின்புதான் வங்கந்தன்னை
நாளுமே உழைத்துச்செந் தூரஞ்செய்து
நலமாக ரவிதனிலே யிடையேதாக்கு
பாளுமே போகாது புடமிறங்கும்
பத்தியொடு விற்றுமே செலவுசெய்து
தூளுமே நபிமாரை வணங்கச்சொன்னேன்
சுருதியுற்ற யாகோபு சொன்னவாரே. 101

வாரேது வென்றாக்கால் சொல்லக்கேளு
வரிசையாய்க் கைபாக வரிசைதன்னை
பாரேது பார்த்துநீ பாகமாகப்
பத்தியே செய்தாக்கால் பலனுமாகும்
தூரேதுஞ் சொல்லாதே துணையாய்ப்பற்றித்
துடியாக ரசவாதத் தொழிலைகண்டு
கூரேது கூக்குரலாய்ச் செய்யவேண்டாம்
குடிகேடு வந்துவிடும் குணமுமாமே. 102

குணமாகப் பலபேர்க ளிடத்தில்வாதம்
கூக்குரலாய்ச் சொன்னாக்காற் குடிகெடுக்கும்
பணம்போகு மாக்கினைதான் மிகவுண்டாகும்
பதிவான தலைபோகும் பாரிலேதான்
உணவாக உனைநம்பார் உலுத்தமாடு
உற்றுமே பொருளறியார் ஒழுங்குமில்லை
பிணம்போலே யிருந்துமே வேலைபாரு
புத்ததனில் வைத்திருக்கும் பிரிதிதானே. 103

பிரிதியாய் நாவடக்கிப் பேசிநீயும்
　　போக்கோடே கையடக்கம் பொருமைசாந்தம்
அரிதியாய் அடங்காம லிருந்தால்நீயும்
　　ஆண்மைவந்தால் தலைபோகு மறிவுள்ளோர்க்கு
கருதியே கருவுதனை யறியச்சொன்னேன்
　　கணக்காகச் சுண்ணம்நூற் றைம்பத்தைந்தும்
வருதியாய்ப் பார்த்துமே வணக்கம்பண்ணி
　　வழக்கமாய்ச் செய்திடவே வடிவுமாமே. 104

வடிவாகப் பஞ்சபூ தத்தைக்கண்டு
　　வலுமையாய்க் கைபாக வடிவுகண்டு
துடியான பொருள்கண்டு பேச்சுங்கண்டு
　　தொல்லுலகில் சரக்குகளைச் சோதித்தேறு
முடிவாகச் சகலமுந்தான் சித்தியாகும்
　　முனைகண்டு உறுதிபெற்ற மூலங்கண்டு
இடிவான சொல்லைத்தான் பிரித்துப்பார்த்து
　　இதமாகச் செய்தவனே சித்தனாமே. 105

## தாளகக்கட்டு

சித்தான தாளகத்தின் கட்டுக்கேளு
　　சீர்பெறவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
முத்தான சுண்ணாம்பு சட்டியிட்டு
　　மூவுலகு மெய்த்திடவே பாணிவிட்டு
நத்தான நெரியிட்டுக் கசடகற்றி
　　நலமாக எடுத்துவைத்து நாட்டக்கேளு
பத்தான அப்பிரேகம் பலமும்பத்து
　　பதிவான வீரமது பலமுங்காலே. 106

காலாக நிறுத்துமே கல்வத்திட்டுக்
　　கருதியே பாணிவிட்டு அரைநால்சாமம்
மேலாக வெண்ணெய்போற் றிரளும்பாரு
　　விதமாக வழித்துவில்லை கதிரில்வைத்து
சேலாகக் காடையென்ற புடமுமிட்டுச்
　　சிறப்பாக யெடுத்துப்பார் வெள்ளையாகும்
தாலாகக் கன்னியர்பால் விட்டரைத்துத்
　　தாளகத்தின் மேலங்கி கட்டிக்கொள்ளே. 107

கட்டியே ஒன்றுக்கு நாலதாகக்
கனிவாக உருண்டையாய்க் கட்டிநீயும்
பட்டியே கதிரில்வைத்துக் கிளிஞ்சிச்சுண்ணம்
பத்தியொடு சட்டிதனிற் பாதியிட்டு
புட்டியே உண்டைதனை மேலேவைத்துப்
புகலரிது அதின்பேரிற் சுண்ணாம்பிட்டு
நட்டியே அமுக்கியே அடுப்பிலேற்றி
நலமாகக் கமலம்போ லெரித்திடாயே. 108

எரித்துமே பிரித்துயெடு உண்டைதானும்
இதமாகக் கவசத்தைப் பிரித்துப்பாரு
வரித்துமே தாளகந்தா னுருகிநிற்கும்
வகையாகச் சிவந்தநிற மாகக்காணும்
கரித்துமே காரீயம் பலமும்பத்து
கனிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
சரித்துமே தகடதனைப் பிச்சுப்போட்டு
சாரித்துக் கற்றாழை நீரிலாட்டே. 109

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடங்கொஞ்சம் போட்டெடுத்து
நீட்டியே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
நேரான மஞ்சள்தனைக் கல்வத்திட்டு
தாட்டிகமாய் முன்னீரா லரைத்துநீயும்
தப்பாமற் புடம்போட்டு முன்போற்றானும்
கூட்டியே சிவந்துநிற்கும் பின்புநீயும்
குமுறவே புடம்போடக் குணமதாமே. 110

குணமாக இப்படிக்குப் புடமுமூன்று
குடிகேடு செய்யாமற் போட்டுப்பாரு
மணமாகச் செந்தூர மாகும்பாரு
மயங்காமற் கல்வமிட்டுப் புகைநீராட்டு
பணமாக முன்னெடுத்த தாரமேலே
பதியவிதைக் கட்டிநீ கணக்குக்கேளு
உணவாகத் தாரமொன்று வங்கம்தாலு
உற்றுமே கட்டிக்கதிர் காயவையே. 111

காயவைத்துக் கிளிஞ்சியென்ற சுண்ணந்தானும்
கனிவாகப் படிரெண்டு சட்டியிட்டு
மாயவைத்து அமுக்கியே யதின்மேற்கேளு
வகையாக வங்கவுண்டை அதில்மேலிட்டு
நாயன்மார் சொற்படிக்குக் கிளிஞ்சிச்சுண்ணம்
நன்றாக அமுக்கியே மூடிநீயும்
பாயவே அடுப்புதனி லேற்றிக்கேளு
பதிவாகக் காடாக்கினி யெரித்திடாயே. 112

எரித்துயெடு நால்சாமம் பிரித்துமெள்ள
இதமாக உண்டையெல்லாங் கல்வமிட்டு
வரித்துயெடு புகைநீரால் சாமமாட்டி
வகையாகத் தாளகத்தின் மேலேகட்டு
நரித்துமே கதிரில்வைத்துச் சட்டிதன்னில்
நலமாக நீரிட்டு உண்டைவைத்து
பரித்துமே முன்போலே கண்ணமிட்டுப்
பதியவெரி முன்சாமம் பண்புதானே. 113

தானேதா னிப்படிக்குத் தரமும்நாலு
தடையறவே யெரித்துயெடு குருவுமாகும்
மானேதான் நபிமாரைத் தொழுதுபோற்றி
வைகயத்தி லாண்டவரை மூன்றுகாலம்
பானேநீ தொழுதிட்டுச் செம்புருக்கிப்
பதிவாகக் குருவதனை யிடையேஈய
கோனருளாற் செம்பதுவும் நொறுங்கிப்போகும்
குணமாகும் யாகோபு கூறினாரே. 114

கூறினேன் வெள்ளிதா னாலுருக்கிக்
குணமாக நேரேகால் கொடுத்துப்பாரு
வாரியே யெடுத்துப்பார் வெட்டையாகும்
வடிவாகத் தங்கமொன்று சேர்த்துருக்கி
நாரியே ஊதியெடு பொன்போலாகும்
நாதாக்கள் நபிமார்க ளாடுமாட்டு
பாரிலே சொல்லாதே தகடுதட்டிப்
பண்பாகப் புடமாகும் பலமும்நாலே. 115

பலம்நாலு உப்பதுவும் பலமுமூன்று
பத்தியாய் மத்தித்துத் தகட்டுள்வைத்து
பிலமாகப் புடம்போட ரெண்டிடைதானிற்கும்
பேசாதே யெடுத்துவிற்றுச் செலவுசெய்து
அலனாகக் கந்தரிகள் சோறுமாக்கி
அடைவாகக் கொடுத்துமே பின்புநீயும்
வலனாகப் பள்ளிதனில் தொழுதுபோற்று
வையகத்தில் யாகோபு வரிசைதானே. 116

வரிசைதா னிவ்வேதை நிசமதாகும்
மயங்கிநீ திரியாதே அல்லாமேலே
துரிசையா யாணையாம் பாகந்தப்பில்
துணையான நபிமார்மே லாணையாகும்
பரிசையா யிப்பாகந் தப்பிற்றானால்
பதிவான பொன்பேரி லாணையாகும்
உரிசைதரும் நாவினாற் சொன்னசொல்லு
உற்றுணர்ந்து யாகோபு சொன்னவாரே. 117

சொன்னதொரு ஆணையிட்ட பொருளைக்கேளு
சொற்பெரிய முன்னால்நான் ராமதேவர்
நன்னயமாய் மக்காவின் தேசம்புக்கி
நலமாக வேதத்தில் நுழைந்தபோது
கன்னல்போற் சித்தரெல்லாம் பரியாசம்தான்
கண்டுமே சொன்னார்கள் காதலாலே
சின்னபின்ன மாகவேதான் வாதப்போக்கைச்
செப்பினார் சித்தரெல்லா மதற்குத்தானே. 118

தானேதான் வேதத்தின் மார்க்கத்தாலே
தடையறவே கைபாக வரிசைகண்டு
ஊணேதான் சொல்லிவிட்டே னென்னைப்போலே
உற்றுணர்ந்த ஏழையாம் வாதிமார்கள்
காணேதான் பிழைக்கவே சொல்லிப்போட்டேன்
கருணைரச வாதத்தைக் கண்டோர்தெய்வம்
மானேதான் காணாத பேர்கள்தானும்
மதித்துமே யறியார்கள் மார்க்கமாமே. 119

மார்க்கமாய் மடையருக்குச் சொல்லவேண்டாம்
மதிகெட்டுத் திரியாதே சுண்ணகாண்டம்
ஏர்க்கவே அறுநூறும் பார்த்தப்பின்பு
இதமாயிம் முன்னூறு தன்னைப்பார்த்து
பார்க்குளிதைக் குறுக்கிநூற் றைம்பத்தைந்து
பதிவாகப் பாத்திட்டுப் பலனைச்சோதி
கோர்க்கவே நிசமாகும் வாதந்தானும்
கொள்ளையோ கொள்ளையிதைக் கூறினேனே. 120

கூறினேன் குணமாக அரிப்புக்காரன்
குணத்தையுந் தானறியக் குறிப்பைக்கேளு
தேறியே களவுசெய்யுந் தட்டானிட்ட
திடமாக ஊதுகின்ற நிகடைதன்னை
மாறியே மனம்பிடித்துச் சேர்க்குந்தானே
மயமாகக் காற்பணமுந் தாரேனென்று
ஊறியே மனதுதனி லுரைத்தப்பின்பு
உறவாக நிகடைதனை வாங்குவாங்கே. 121

வாங்கியே நிகடையைத்தான் வாங்கிநீயும்
வளமாகச் சென்றுமே மனையிலேகி
தாங்கியே நிகடைதனைக் கல்வத்திட்டுத்
தாட்டிகமாய் மாவாக்கிப் பின்புகேளு
பாங்கியே காரீயம் சட்டியிட்டுப்
பதிவாகக் கருங்காலித் தடியைக்கொண்டு
ஏங்கியே தடியாலே கடைந்துநைய
இதமாக மாவாக்கிப் பின்புகேளே. 122

கேளுமே முன்னரைத்த நிகடையொன்று
கொடியாகக் காரீய மாவுநாலு
பாளுமே போகாமற் சேர்த்தரைத்துப்
பதிவாகச் சரஉலையில் மொத்தையிட்டு
கூளுமே நாளம்வைத்து ஊதும்போது
குணமாகச் செத்தசெம்பை யீயந்தானும்
நாளுமே பிடித்திழுத்து உருக்கிக்கீழே
நலமாகக் கிட்டம்போ லிறங்குந்தானே. 123

இறங்குகின்ற கிட்டமதைத் தூக்கிப்பின்பு
இன்பமா யரைத்துண்டை பண்ணிநீயும்
துறங்கவே மேலூத்தா யூதும்போது
துடியாக யீயமது உருகியோடும்
நிறங்குன்றா மேற்றானும் வடிந்துநல்ல
நிலையான பன்னடையின் செம்புவாச்சு
திறமாக விச்செம்பு செய்துபாரு
திட்டமா யிதுபோலே களங்குதானே. 124

களங்கமது பண்ணியே யெடுத்துருக்கு
கனிவாகக் காரமிட்டு உருக்கியாட்டி
உளங்குளிரக் கல்வமிட்டு யீயந்தன்னை
உணர்வாகத் தகடடித்துக் கன்னிநீரால்
பளங்கதைகள் பேசாம லரைத்துவில்லை
பதியவே சேவலென்ற புடமுமிட்டு
தளமாக யெடுத்துப்பார் சிவந்துநிற்குந்
தனையெடுத்துக் கல்வமிட்டுப் பின்புகேளே. 125

பின்புதான் முன்னரைத்த நீராலாட்டிப்
பேசரிய புடம்போட மஞ்சளாகும்
அன்பாக யிப்படிக்குப் புடமுமஞ்சு
அடைவாகப் போட்டுமே எடுத்துநீயும்
தென்பாக முன்சத்துப் பலமும்நாலு
திடமான யீயச்செந் தூரமெட்டு
தன்பார்வை யாகவே ரெண்டுஞ்சேர்த்துத்
தடையறவே கன்னியா லரைத்திடாயே. 126

அரைத்துமே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போட்டு யெடுத்துநீயும்
பரைத்துமே திரியாதே குகையிலிட்டுப்
பதிவாக உருக்கிடவே வெள்ளையாகும்
கரைத்துமே பஞ்சமித் திரத்திற்சாய்த்துக்
கனிவாக மதிதனிலே யெட்டுரெண்டு
தரைத்துமே தங்கமது சேர்த்துருக்கித்
தடையறவே ஊதியெடு தங்கமாமே. 127

தங்கமாம் புடமிறங்குத் தங்கந்தன்னைத்
தடையறவே விற்றுமே செலவுசெய்து
உங்கள்குல மீடேறத் தொழுதுபோற்று
உறதிபெறக் கந்தரிகள் மிகவும்பண்ணி
துங்கமயச் சோறாக்கிக் கொடுத்துப்பின்பு
துடியாகப் பிஸ்மில்லா ரகுமானென்று
பங்கயத்தில் தொட்டுமே நினைவுபூண்டு
பத்தியாய்ச் செய்திடவே முத்தியாமே. 128

முத்தியாய்த் தானரிப்புக் காரன்போலே
முடிவாகப் பாகமாய்க் கூட்டிவந்து
நத்தியே களங்குவைத்துச் சத்துப்பண்ணி
நலமாக வங்கச்செந் தூரம்பண்ணிச்
சித்திபெற யிதையெல்லாம் நீநிறுத்து
சிதறாம லரைத்துமே சொல்லக்கேளு
புத்திபெற அவனிடத்திற் கொடுத்துநீயும்
புகழாகச் செம்பெடுத்துச் சொல்லலாமே. 129

சொல்லுவாய் கைபாகம் கற்றுக்கொண்டு
சுகமாக அவனைத்தான் தள்ளிப்போடு
மல்லுவாய் பின்புநீ பாகமாக
மதிமயங்கிப் போகாமற் பாகம்பண்ணி
நல்லுவாய் செம்பெடுத்து மட்டஞ்சேர்த்து
நலமாக விற்றுயிதைச் சிலவுசெய்து
கல்லுவாய் செம்பைத்தான் செந்தூரித்துக்
கருத்தாக உண்டுடுத்தித் திரிந்திடாயே. 130

திரிந்திடவே யிப்படிக்குப் பாகமாகச்
ஜெயமாகச் செய்திட்டால் திட்டமாகும்
பிரிந்துமே போகாமல் நினைவிற்பூண்டு
பிசகாமல் ஜெயமாகக் கூட்டிவாமு
வரிந்துமே வாதங்கை பொத்திக்காட்டி
வடிவாக யேவலது மருவுங்காலை
சரிந்துமே பாகமது தப்பிற்றானாற்
சரியல்ல யெல்லாமும் பொய்யுமாமே. 131

பொய்யாகப் போகாமற் களங்குதன்னைப்
பிரித்துமே ஆட்டியே செய்துபாரு
வையகத்தி லுனக்கெதிரி சீமானுண்டோ
வடிவான சகலசித்து மாடலாகும்
மெய்யாக இக்காண்டந் தன்னிற்றானும்
மேன்மைபெறச் சகலசித்துஞ் சொல்லிவிட்டேன்
நய்யாக மாகவே தடையில்லாமல்
சாடியே யெல்லாமுஞ் சித்தியாமே. 132

சித்தியது வாகவென்றால் முன்னேநீயும்
ஜெயமாகக் களங்கம்வைத்துச் ஜீவனங்கள்
பத்தியாய்ப் பண்ணியே பின்புநீயும்
பதிவான செந்தூரம் பண்ணியுண்ண
முத்திபெற முன்காண்டச் சுண்ணத்தன்னில்
மூவுலக மெச்சவே சொல்லிப்போட்டேன்
நத்தியே பார்த்துநீ கண்டுகொள்ளு
நன்றாக யாகோபு நலஞ்சொன்னேனே. 133

நலமாக ஒருகளங்கிற் சொன்னமார்க்கம்
நாடியே யெல்லாமும் நடத்தையாக
புலமாகச் செய்துமே பாகமாகப்
புத்தியாய்க் கண்டுமே பிடித்துக்கொள்ளு
அலமாக அலையாதே நூலைப்பார்த்து
ஆடினார் சகலசித்தும் ஆடலாகும்
குலந்தனக்குக் கோடாலி வங்கந்தன்னைக்
கூட்டியெடு களங்கதுவுங் குருவுமாமே. 134

குருவாக ஒருசத்திற் சொன்னமார்க்கம்
கோடான கோடிக்குங் குறித்துக்கொள்ளு
பருவமாம் வேதையென்றால் வயதுகொஞ்சம்
பாதையிதில் வெகுபோக்குப் பற்றிப்பாரு
துருவமாம் நூலில்லா வாதமில்லை
துடியான வாயில்லாப் பானையில்லை
கெருவமாய்ப் போகாதே படித்துத்தேரு
கெடியான மாத்துத்தான் காணலாமே. 135

காணலா மென்றுமே சுட்டுச்சுட்டுக்
காரியத்தைப் பாராமற் றிரியவேண்டாம்
வாணாளை வதைத்துமே பேசவேண்டாம்
வடிவான மனந்தன்னை ஒக்கப்பண்ணு
சாணானச் சத்துசித்துச் செய்துநீயும்
சரியான பாகமதைத் தாக்கிப்பாரு
ஊணாகப் பயிர்விளைந்த கதையைப்போலே
உற்றுமே பார்த்துநீ செய்திடாயே. 136

## காரீயப் பதங்கம்

செய்திடவே பின்னுமொரு பதங்கமார்க்கம்
செப்புகிறேன் ஜெயமாகச் சுருக்குமெத்த
மைதிடவே காரீயம் பலமும்நாலு
மகிழ்வாக அயக்கரண்டி தன்னிலிட்டு
நைதிடவே உருக்கிச்சாய் குமரிநீரில்
நலமாக மூவேழு தரமுஞ்சாய்த்து
பைதிடவே அயச்சட்டி தன்னிலிட்டுப்
பதிவாக வெடியுப்புப் பாதிபோடே. 137

போட்டுமே வறுத்துநீ சாமம்ரெண்டு
பொன்னென்ற மஞ்சள்போற் சுண்ணமாகும்
காட்டுமே அதையெடுத்துத் தூரவைத்துக்
கனிவாகக் கல்லுப்புப் பலமும்நாலு
பூட்டுமே சீனமது பலமும்நாலு
புத்தியுடன் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
நாட்டவே சாமமரை வழித்துநீயும்
நலமாகச் சிறுசட்டி தன்னிற்போடே. 138

போட்டுமே உலையில்வைத்து உருக்கிப்பாரு
போக்கோடே மஞ்சள்போ லுருகியாடும்
காட்டுமே அதைவறுத்துப் புறம்பாய்வைத்துக்
கனமாக முன்வறுத்த வங்கத்தோடே
நாட்டுமே கல்லுப்பு உருகிநின்ற
நலமாக யிடைசேர்த்து நன்றாயாட்டி
நீட்டுமே வில்லைகட்டிக் கதிரில்வைத்துக்
நேராகப் புடமிட்டு எடுத்துவையே. 139

வையப்பா தாளகமுஞ் சேருஒன்று
வகையாகத் திராவகத்தா லரைத்துச்சாமம்
மெய்யப்பா வில்லைதட்டிக் கதிரில்வைத்து
மேன்மைபெறக் கலையமது ரெண்டுதேய்த்து
பொய்யப்பா போகாமல் உள்ளேயிட்டுப்
போக்கோடே மூடியே சீலைசெய்து
பையப்பா அடுப்புதனி லேற்றிநீயும்
பதிவாகச் சாமமெரி பருவமாமே. 140

பருவமாய்ச் சாமமெரி வழித்துநீயும்
பாங்காகக் கல்வமிட்டுக் கள்ளிப்பாலால்
உருவமா யரைத்துண்டை பண்ணிநீயும்
உறுதிபெற முன்வங்கம் கவசங்கட்டித்
துருவமா யொன்றுக்கு நாலுகட்டித்
துடியாகக் கதிரில்வைத்து யெடுத்துநீயும்
தருவமாய் சீலையது ஒன்றுசுத்தித்
தனிவாக அதின்பேரிற் கவசங்கட்டே. 141

கவசமாய்க் கரியுப்புச் சுண்ணம்நேரே
கடிதாக யிடித்துமே கவசங்கட்டி
பவசமாய்க் குக்குடமாய்ப் போட்டெடுக்கப்
பதிவாகத் தாளகமுங் கவசத்தோடே
நவசமாய் நுழைந்துமே யிருந்துபோகும்
நறமாக யிப்படிக்குத் தரமும்நாலு
திவசமாய் வைத்துயெடு குருவுமாகும்
திட்டமாய்ச் செய்திடவே செயலுமாமே. 142

செயலாக நபிமாரைத் தொழுதுபோற்றிச்
செம்புருக்கிப் பத்துக்கு ஒன்றுதானும்
பயமில்லா தேகொடுக்க மாத்துப்பத்து
பதிவான முறையாகும் பாருளோர்க்கு
நயமாகக் காவிக்கு மிறங்கும்பாரு
நன்னபிகள் செய்திடுவார் நாடிப்பாரு
தயவாக யேழைகட்கு யிறங்கிச்சொன்னேன்
தக்கபெரி யோர்புத்தி நல்லதாமே. 143

நல்லாகச் சாஸ்திரங்க ளெல்லாந்தன்னை
நாடியே யுழைத்துநீ நாடிப்பார்த்து
கல்லாக மனதுதனி லெண்ணிநீயும்
கருத்துறவே யூணிப்பார் கடினமில்லை
வில்லான ததுவளைந்தா லம்புதைக்கும்
வீணாக வளையாத மரமுங்கேளு
பொல்லாத சம்பத்துக் காகுமாப்போல்
புகலரிய யாகோபு புகன்றார்தானே. 144

தானென்ற நூலில்லா வாதிதானும்
தவித்துமே கேள்வியினாற் சுட்டுக்கெட்டு
ஊனென்ற சோத்துக்கு இடமில்லாமல்
உறுதியாய்த் தான்புலம்பித் திரிந்துகெட்டு
நானென்ற ஆணவத்தாற் கெட்டோமென்று
நாடியே பொய்சொல்லித் திரிவாரல்லால்
கானென்ற சவாணமது போலேசுற்றிக்
கருதியே யலைவார்கள் கணக்கிலாரே. 145

கணக்கில்லா வாதந்தான் ரெம்பவுண்டு
கைபாக வரிசையது அதிலும்ரெம்ப
தணக்கமாய்க் களங்குசத்து அதிலும்ரெம்ப
தடையற்ற கட்டுவகை கோடாகோடி
பிணக்கில்லாச் செந்தூர மெழுகுகோடி
பிரியமுள்ள சுண்ணங்கள் கோடாகோடி
துணக்கமாய் வாதங்கள் இதிலுங்கோடி
துடர்ந்துமே வாதம்வந்தால் சூட்சந்தானே. 146

சூட்சமாய்ப் புளிப்புக் கண்டுதேரு
சுருக்காகத் திரைபாகம் பார்த்துநீயும்
பாச்சவே பாதையது மிகவும்பார்த்துப்
பதிவாக ஞானங்கள் மிகவும்பாரு
நாச்சமாய் மனதுதனி லுறுதியுற்று
நலமாகத் தானுணர்ந்து நாடிப்பார்த்து
பீச்சிட்ட பாவணைதான் பாலுபோலே
பேதமில்லாப் போலவே செய்துபாரே. 147

## யாகோபு

பாரேநீ உலகத்தில் வாதிமார்கள்
பாதையிது தெரியாம லலைந்துசுத்தி
நாரேநீ உறுதிபெற்றுச் செய்யாமூடர்
நாடியே உறுதியற்றுச் சுட்டுக்கெட்டு
வாரேநீ திரைபாக மில்லாமற்றான்
வடிவான பொருளறியார் மார்க்கமில்லார்
தாரேநீ சொன்னபடி செய்யாமற்றான்
தாட்டிகமா யுறுதிமிக வேணுந்தானே. 148

வேணுமே ஏழையாம் வாதிக்குத்தான்
விதமாகப் புத்திதான் மிகவும்வேணும்
காணுமே நிறைபாக மறியவேணும்
கருதியே பொய்சொல்லா மார்க்கம்வேணும்
தாணுமே யலையாம லிருக்கவேணும்
தடையறவே சாஸ்திரங்கள் மார்க்கம்வேணும்
கோணுமே நிலையுடனே யிருக்கவேணும்
கோடிதான் யோகமெல்லாம் குறிப்புமாமே. 149

குறிப்பாகத் துருசுனுட சுண்ணத்தாலே
கோடிகவ ராடலாங் கோடிவேலை
முறிப்பாகக் கட்டுத்தான் கோடியாகும்
முதற்கோடி முத்தியது கோடியாகும்
வெரிப்பான சுண்ணங்க ளதிலுங்கோடி
வேதைரெம்பச் சித்தியாந் துருசினாலே
சரியான படிசொன்னேன் சார்ந்துபாரு
சஞ்சலத்தை விட்டுநீ தாக்கிப்பாரே. 150

## மக்காதேசப் பெருமை

தாக்கியே மக்காவின் தேசந்தன்னில்
சரியான நபிமார்கள் மெத்தவுண்டு
தூக்கியே வாய்பேசார் பொறுமைமெத்தத்
துணையாக அவர்களுக்குப் பணமும்ரெம்ப
நோக்கியே அலையாம லிருப்பார்பாரு
நொடிக்குள்ளே வாதங்கள் ரெம்பச்செய்வார்
பாக்கியவான் போலேதா னிருப்பாரப்பா
பதிவாகச் செந்தூரஞ் செய்வார்பாரே. 151

## சுண்ணம்

செய்யவே கைபாக வரிசைரெம்பத்
தேசத்திற் றங்கமது விளையும்பூமி
மெய்யாகச் சொல்லார்க ளூறுதிரெம்ப
மேதினியி லவர்பெருமை மெத்தவுண்டு
கைபாக வரிசைகள்தான் மெத்தவுண்டு
கலங்கார்கள் மந்திரத்தின் கருத்துளோர்கள்
சையோக நவரத்தினம் விளையும்பூமி
சஞ்சாரம் ரெம்பவுண்டு சாதிப்பாரே. 152

## ரசக் கிணறு

சாதிப்பார் மக்காவின் தேசத்தோர்கள்
சரியாக ஐந்நூறு யோசனைதான்தூரம்
வாதிக்கு மலையுண்டு நடுவிற்றானும்
வடிவான ரசக்கிணறு ஒன்றுஉண்டு
சோதித்த நபிமார்கள் மலையில்ரெம்பச்
சுருதியுற்றுக் குளிகையிட்டுச் சென்றுபோனேன்
பாதியே அவரைத்தான் கண்டுநானும்
பதிவாகத் தொண்டுகள்தான் பண்ணினேனே. 153

பண்ணியே சிறுதுநா ளங்கிருந்து
பதியான ரசக்கிணறு எங்கேயென்றேன்
துண்ணியே சொன்னார்கள் குளிகையிட்டுச்
சுருதிபெறப் பறந்துமே கிணறினோரம்
தன்னியே சுரக்குடுக்கை கையிற்கொண்டு
தாட்டிகமா யவ்விடத்திற் போயிறங்கிச்
சன்னியே கிணற்றினுள்ளே குடுக்கைதன்னைச்
சரியாக விட்டெடுக்கும் போதுதானே. 154

போதுமே சூதமது துரத்தும்போது
துடியாக மேலண்டம் பறந்துபோனேன்
வாதுமே செய்யாமல் சூதந்தன்னை
வகையாக யெடுத்துமே மக்காதேசம்
சாதுவாய் வந்துவிட்டேன் நபிமாரோடே
சரியான துருசுசுண்ணம் வைத்துநானும்
நீதியாய் சூதத்தைக் கட்டிநானும்
நிலையான குளிகைரெண்டு செய்திட்டேனே. 155

செய்துமே கையிலொன்று வாயிலொன்று
சிறப்பான இடுப்பிலொன்று கட்டிக்கொண்டேன்
பைதுமே லோகமெல்லாம் பறந்துசுற்றிப்
பதிவான மலைகளெல்லாம் பார்த்துநானும்
மெய்துமே வெகுகோடி முனிவர்சித்தர்
மேதினியில் ரசவாத மிகவுங்கண்டு
நைதுமே கைபாக வரிசையாக
நானறிந்து பாடினேன் நலமாய்த்தானே. 156

நலமாக நிகண்டதுதான் படித்துத்தேறி
நாடியே சுண்ணமறு நூறும்பாடிப்
பிலமாக அதைக்குறுக்கிச் சுண்ணந்தன்னைப்
பேதியா முன்னூறும் பாடித்தேர்ந்து
கலனில்லாச் சுண்ணமுன் னூறுதன்னைக்
கருத்தாகக் குருநூல்நூற் றைம்பத்தைந்தில்
விலகாமல் வாதத்தின் மறைப்பையெல்லாம்
விருப்பமாய்ப் பாடினேன் விளங்கத்தானே. 157

விளங்கவே ரசவாதங் கருணைகூர்ந்து
விரும்பினேன் செய்பாக வரிசையாக
உளங்குளிர மட்டங்கள் சேர்க்கும்பாகம்
உத்திநின்ற களங்கமெல்லாம் உறுதிகண்டு
தளங்காமல் வங்கமென்ற சுண்ணப்போக்கைத்
தாட்டிகமாய்ப் பாடினேன் தன்மையாக
பழங்கதைகள் பேசாமல் நூலைப்பார்த்துப்
படிப்படியாய்த் துறையெல்லாம் பாடினேனே. 158

பாடினேன் மதுரகவி யாகத்தானும்
பக்குவமாய்க் குறியறிந்து வாசித்தோர்கள்
கூடியே குணமறிந்தோர் செல்வமுத்தர்
கொடிதான நூலறிந்தோர் குணங்கள்கண்டோர்
வாடியே திரியாத பேர்கள்தானும்
வகையான துகையறிந்தோர் மார்க்கத்தோர்கள்
பாடியே பதமுற்றோர் பத்திபெற்றோர்
பகராரிய நூலறிந்தோர் பாகத்தோரே. 159

பாகத்தோர் நபிமார்கள் வாதங்கண்டோர்
பக்குவமாய்ச் சுண்ணமென்ற பதமுற்றோர்கள்
யோகத்தோர் கருவறிந்தோர் உறுதிபெற்றோர்
யுகங்கண்ட பேர்களுட பாதம்பெற்றோர்
வாகத்தோர் பேதங்கள் மிகவுங்கண்டோர்
வடிவான பதிகண்ட மார்க்கத்தோர்கள்
சாகத்தே நினைவில்வைத்துப் பணிந்தபேர்கள்
சாதகமாய் வாதம்வருந் தன்மைதானே. 160

## அயச்செம்பு

தன்மையாய் அயச்செம்பு சாற்றக்கேளு
தரியாம லிதுலெகுவு முன்னேபாரு
உண்மையாய் நாதாக்கள் தன்மேலாணை
உற்றுமே பாராட்டா லுனக்குமாணை
வண்மையா யரபொடிதான் பலமும்பத்து
வடிவாகத் துருசதுவும் பலமும்பத்து
கண்மையாய்க் கெந்தியது பலமும்யேழு
கருத்தாக கல்வமிட்டு அரைக்கக்கேளே. 161

அரைக்கவே பழச்சாறு தினமும்விட்டு
அடைவாக நாள்மூன்று அரைத்துநீயும்
பிரிக்கவே கதிர்தனிலே காயவைத்துப்
பின்புதான் நல்லெண்ணெய் சுவறவூற்று
கரைக்கவே கொதியிட்டு உருக்கித்திரு
கசடற்று வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
தரைக்கவே வெங்காரங் கொஞ்சமிட்டுத்
தானுருக்கு உருகியது மணியுமாமே. 162

மணியெடுத்து அடித்திடவே வெட்டையாகும்
மயங்காமல் தீக்கருந்த செம்புகாண
தனியாகச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
தடையறவே கள்ளமது போக்கித்தானும்
வனியாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வடிவாகக் கற்றாழை நீரிற்றானும்
துனிவாகத் தரம்பத்து உருக்கிச்சாய்த்துத்
துடியாகத் தகடடித்துக் கல்வத்திட்டே. 163

கல்வத் திலிட்டுமே சொல்லக்கேளு
கனிவாகக் கன்னியா குமரிக்கந்தம்
நல்லொத்து யிட்டுமே நேகவாட்டி
நலமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
செல்லுத்து ஓடுதனி லிட்டுமெள்ளச்
ஜெயமாகப் புடம்போட்டு எடுத்துக்கல்வம்
வில்வித்தை யதுபோலே முன்னீராட்டி
விதமாகப் புடம்போடு தரமுமஞ்சே. 164

அஞ்சுபுடம் போட்டுமே யெடுத்துப்பாரு
ஆதியா மஞ்சள்போல் சிவந்துநிற்கும்
கெஞ்சியே வாதமெல்லா. மேவல்கேட்கும்
கெடியான வங்கத்தின் பெருமைமெத்த
துஞ்சியே திரியாதே சொல்லக்கேளு
துடியாக முன்னுருக்கும் அயத்தினேரே
வஞ்சியே யிடைசமனாய்ச் சேர்த்துநீயும்
வடிவாக முன்கன்னி நீராலாட்டே. 165

ஆட்டியே புடம்போட்டுக் குகையிலிட்டு
அதட்டியே உருக்கிப்பா ரீயமாகும்
தேட்டிலே யிதுக்குப்பேர் அயயீயமாச்சு
திடமாகு மிதுவேலை சொல்லப்போகா
நாட்டிலே கிடையாது யிந்தயீயம்
நானறிந்து ஏழைக்கா யிரங்கிச்சொன்னேன்
கூட்டியே சகலமுந்தா னுள்ளேகொள்ளும்
குணமாகு மிதன்பெருமை கூறினேனே. 166

கூறினே னிதன்பெருமை நபிமாரெல்லாம்
கூறியது சித்தரெல்லாஞ் சொல்லமாட்டார்
பாரிலே சொல்லாதே போக்கைத்தானும்
பதிவாக நான்வேதம் புகுந்ததாலே
சாரியே நிசந்தன்னைச் சொல்லிவிட்டேன்
சரியாக யேழையாம் வாதிக்குத்தான்
ஊரியே உழைத்தோர்க்குக் கிட்டுங்கிட்டும்
உண்மையிது சத்தியமா யுறுதிதானே. 167

## பஞ்சமித்திரம்

உறுதியா யிப்படிக்கு வைத்துநீயும்
உண்மைபெறப் பஞ்சமித் திரத்தைக்கேளு
அருதியாய் நல்லெண்ணெய் தேங்காய்ப்பாலும்
அடைவான நெய்யோடு துப்பாக்கூட்டி
வருதியா யிலுப்பெண்ணெய் யிந்தஅஞ்சும்
வளமாக இடைசமனாய்க் கூட்டிக்கொண்டு
பருதிபெற முன்சத்து தனையுருக்கிப்
பாகமாய் மூன்றுதரஞ் சாய்த்திடாயே. 168

சாய்த்திடவே காரமஞ்சள் தானேபோகும்
சரியான வங்கமது குருவுமாகும்
ஏத்திடவே உடைத்துப்பா ருடையுங்கண்டாய்
இதமான வங்கமது வெட்டையாகும்
நாத்திடவே வெள்ளியெட்டில் ரெண்டுசேர்த்து
நலமாக உருக்கியே தங்கமொன்று
கோத்திடவே சேர்த்தூத மாத்துயெட்டு
குணமாகும் விற்றுமே செலவுசெய்யே 169

செய்துதான் பின்புமே சொல்லக்கேளு
ஜெயமான வங்கவெட்டை பலமும்நாலு
கைதுமே தங்கமொன்று நாகமொன்று
கருணைதரச் சேர்த்துருக்கிப் பின்புநீயும்
நைதுமே வெள்ளைபோல் வெட்டையாகும்
நாட்டிலே சொல்லாதே ரசமுங்கெந்தி
மைதுமே யிடைசமனாய்ச் சேர்த்துநீயும்
மகிழ்வாகக் கல்வத்தி லாட்டிடாயே. 170

ஆட்டியே யிருசாமங் கன்னிப்பாலால்
அதைவழித்து வில்லைபண்ணிக் கதிரில்வைத்து
தாட்டிகமாய்ப் புடம்போடு சிவப்புமாகும்
தனையெடுத்து அல்லாவைத் தொழுதுபோற்றிக்
காட்டியே நவலோகம் நூற்றுக்கொன்று
கர்த்தனுட பாதத்தைத் துதித்துப்போற்றித்
தேட்டுவரு மென்றுமே கொடுத்துருக்கு
திடமான மாத்துத்தான் பத்துமாமே. 171

## யாகோபு

பத்தான செந்தூரம் தேனிற்றானும்
பணவிடைதா னந்திசந்தி தினமுமுண்ண
வித்தார மாகவே தேகந்தானும்
விதமாக தங்கம்போல் மேனியாகும்
கத்தாவைப் போலவே தேகந்தானும்
கனிவாகக் கற்போலாம் நோய்களெல்லாம்
சித்திபெற்றுத் தவிடுபொடி யாகும்பாரு
செல்வன்யா கோபுசொன்ன திறமைதானே. 172

தானென்ற செந்தூரம் நபிமார்சொன்ன
தாட்டிகத்தை உள்ளுக்குச் சாற்றினேன்பார்
ஊனென்ற காயசித்தி உடனேயாகும்
உறுதிபெற நரம்புதான் பசுமையாகும்
வானென்ற கண்தானும் செவ்வலரிபோலாம்
வடிவான நபிமார்க ளாடுமாட்டு
கோனருளால் பத்தியமா யுண்டுதேரு
குணமாகு மணமாகும் கூர்ந்துபாரே. 173

கூர்ந்துபார் நபிமார் சொத்தைத்தானும்
குணமாக ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
வார்த்துமே பாகமாய்ச் செய்துகொள்ளு
வடிவான விந்ததுவும் வருகாதையா
தார்ந்துமே லேறுங்கீ ழோடிடாது
தாட்டிகமாய் மேனியது வச்ரகாயம்
நார்ந்துமே மேனியது யிப்படிக்கு
நலமாகும் பொருளைத்தா னாடிப்பாரே. 174

நாடியே யுலகத்தில் வாதம்பொய்யோ
நலமாகக் கைபாகம் பொய்யேயில்லை
கூடியே சீஷனுடன் மருவவேணும்
குணமாகப் பணிவிடைகள் கூறவேணும்
தேடியே மனமொத்த சீஷன்வேணும்
திடமான கைபாக வரிசைவேணும்
ஓடியே திரியாதே அயத்தின்செம்பை
உற்றுணர்ந்து பார்க்கவே உறுதியாமே. 175

உறுதியாய்ப் பத்துகிற பாகம்வேணும்
உண்மையாய்ச் சரக்கதுவும் நிறுக்கும்பாகம்
அறுதியாய்ச் செய்திடவே பலனுமாகும்
ஆடியே திரியாதே ஒன்றுமில்லை
நிருதியா யுன்னினைவிற் பூணவேணும்
நித்தமுந்தான் சரக்குகளைப் பார்க்கவேணும்
குருதிபோல் தேகத்தி லிருக்கவேணும்
கூகூகூ வாதமிதிற் கொள்ளையாமே. 176

## அப்பிரேகச்சத்து

கொள்ளையா மப்ரேகச் சத்துக்கேளு
கொடியான அப்பிரக முதற்றரந்தான்
துள்ளையாம் ரெத்தவர்ணம் இரண்டாம்பட்சம்
துடியான கிருஷ்ணவர்ணம் மூன்றாம்பட்சம்
வள்ளையாங் கொள்ளிலையின் சாறுதன்னில்
வடிவாக நாள்மூன்று டோளைக்கட்டி
பள்ளையாம் சட்டிதனி லெரித்துவாங்கு
பதிவாக அப்பிரேகஞ் சுத்தியாமே. 177

சுத்தியது வானஅப் ரேகம்நாலு
துடியான வெள்ளைப்பா சாணம்நாலு
முத்தியது ரெண்டுமொன்றா யரைத்துநீயும்
முக்கியமாய்க் குகையிலிட்டு உருக்கி
புத்தியா யப்பிரேகஞ் சத்துமாகும்
புகலரிய சத்துநிறஞ் சொல்லக்கேளு
நித்தியமாய் வெங்கலம்போற் றகர்ந்துநிற்கும்
நிலையான சத்துவித னேர்மைபாரே. 178

நேர்மைபா ரப்பிரேகச் சத்துதன்னை
நிலையாக உருக்கியே மெழுகுகட்டி
வார்மையா யுருக்கியே கிண்ணிவார்த்து
வளமாகக் கிண்ணியைத்தான் சீவிப்போட்டு
தார்மையாய்க் கிண்ணிக்குள் சரியாய்ச்சூதம்
தாக்கிட்டு ஊமத்த னிலையின்சாறு
கோர்மையாய் நிரையாக விட்டுநீயும்
கொதியிட்டு இருசாமஞ் சென்றுபாரே. 179

சென்றுபார் இட்டலிபோற் கட்டிப்போகும்
ஜெயமாகும் என்வசனம் பொய்போகாது
அன்றுமே உருட்டியே பாணிதன்னில்
அடைவாகப் போட்டுமே திரிநாள்வைத்து
கன்றுமே யெடுத்துநீ உண்டையாகக்
கணக்காக யிருபத்தோ ருண்டைபண்ணி
நன்றாகச் செய்துமே கதிரில்வைத்து
நலமாக அப்பிரேகக் கவசம்பண்ணே. 180

பண்ணியே கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
பதிவாகக் குக்குடத்தின் புடமுமிட்டால்
நண்ணியே சூதத்தை யெடுத்துப்பாரு
நலமாகக் கதிரினிலே நின்றுஆடும்
உண்ணியே உருகினதோர் சூதம்நாலு
உறவாகத் தங்கமொன்று நாகமொன்று
கன்னியே உருக்கியெல்லாங் கல்வத்திட்டுக்
காரணமா யின்னுமொன்று கருதிக்கேளே. 181

கருதியே கெந்தகமும் பாதிபோட்டுக்
கல்வத்தி லிட்டுஅரை நாலுசாமம்
பருதியே கன்னியா குமரிகந்தம்
பதிவாக யின்னீரி லரைத்துமெள்ள
நருதியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நலமாக ஒருபுடத்தில் செந்தூரந்தான்
உருதியதா யாகிவிடும் உண்மையாகும்
உற்றநவ லோகத்தில் நூற்றுக்கொன்றே. 182

ஒன்றாகச் செந்தூரந் தனைகொடுக்க
உற்றுமே நவலோகந் தங்கமாகும்
பன்றான நோயெல்லாந் தவுடுபொடியாகும்
பதிவான காயமது கற்போலாகும்
தின்றான தீனியுமோ ரெம்பவேணும்
திடமாகும் நரம்புகளு மிறுகியேறும்
கன்றான பசுப்போலே கறக்கும்பாரு
கனிவான பொருளறிந்தால் வாதிதானே. 183

வாதிதா னென்றுவாய்ப் பேச்சுப்பேசி
வகையாகச் சொல்லியே மாண்டுபோன
சாதிதான் மெத்தவுண்டு உலுத்தமாண்பர்
தன்னைத்தான் ரெம்பவே மெச்சிக்கொள்வார்
கோதியே கிளிப்பிள்ளை பேசுமாப்போல்
குறும்பாகப் பேசியே கூறிக்கூறி
நீதிதான் சொல்வார்போல் பொய்கள் சொல்லி
நீனிலத்திற் பேசியே உருளுவாரே. 184

உருளுவார் புரட்டுள்ள வாதிமார்கள்
உற்றுமே நூலெல்லாம் பொய்யேயென்பார்
அருளுவார் மதம்பிடித்துப் பேசுவார்கள்
ஆதியந்தந் தானறியா மட்டிவாதி
குருளுவார் பொய்சொல்லார் கொடியர்கண்டாய்
குணமில்லார் மணமில்லார் குருட்டுவாதி
வருளுவார் வகையறியார் வடிவமில்லார்
வண்மைகளைச் சொல்லாதே மார்க்கத்தோரே. 185

## நாகச்செம்பு

மார்க்கமா யின்னமொன்று நாகச்செம்பு
வடிவாகச் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளு
ஏர்க்கவே நாகமது பலமும்பத்து
இதமாக உருக்கிமெள்ள யிலுப்பைநெய்யில்
கார்க்கவே தரம்பத்து உருக்கிச்சாய்த்துக்
கனிவாகக் கசடற்றுக் கனிவாய்நன்றாய்ப்
பார்க்கவே குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
பதிவாக எட்டுக்கு ரெண்டுகேளே. 186

ரெண்டுமே சூதமது சேர்த்துருக்க
நிலையாகப் புட்டாகு மெடுத்துவைத்து
கண்டுமே துரிசியது பலமும்பத்து
கனிவாகச் சட்டிதனில் கிளிஞ்சில்நீறு
பண்டுபோல் பாதியிட்டு அதன்மேல்நீலன்
பதிவாக வைத்துமே கிளிஞ்சில்நீற்றை
விண்டுமே அதன்மேலே கொட்டிநீயும்
விதமாக அமுக்கியே சொல்லக்கேளே. 187

சொல்லவே அடுப்புதனில் வைத்துமூடிச்
சுகமாகத் தீயெரிப்பாய் நாலுசாமம்
கொல்லவே பிரித்துப்பார் துருசுநீறிக்
குணமாக யிருந்துவிடுங் காரமாக
நல்லவே முன்நாகந் தன்னிலிட்டு
நலமாகக் கற்றாழைச் சாறுவிட்டு
தல்லவே யிருசாம மரைத்துப்பின்பு
தடையறவே தாளகத்தை நிறுத்துக்கேளே. 188

நிறுத்துமே மூன்றுதான் நேரேசேர்த்து
நேராகக் கன்னிநீர் தன்னைவிட்டுப்
பருத்துமே யிருசாம மரைத்துவில்லை
பக்குவமாய்க் குக்குடத்தின் புடமுமிட்டு
தருத்துமே யெடுத்துநீ கல்வமிட்டுத்
தகைபெறவே காரீயம் பலமும்பத்து
வறுத்துமே தகடடித்துப் பிச்சுப்போடு
வடிவாகக் கன்னிநீர் தன்னாலாட்டே. 189

ஆட்டியே வில்லைக்கட்டிக் கதிரில்வைத்து
அடைவாகக் குக்குடத்தின் புடமுமிட்டு
நாட்டியே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
நலமாகக் கல்வமிட்டு முன்னீராலே
பாட்டியரை வில்லைகட்டிக் கதிரில்வைத்துப்
பதிவாக முன்போலே புடமுமிட்டு
நாட்டிலே சொல்லாதே யிப்படிக்கு
நலமாக அஞ்சுபுடம் போட்டிடாயே. 190

போட்டிடவே மஞ்சளா மெடுத்துநீயும்
போக்கோடே முன்நாகம் புடமுமிட்டு
ஆட்டியே வில்லைக்குப் பாதிகாரி
அடைவாகச் சேர்த்துமே கல்வமிட்டு
நாட்டியே கன்னிநீர் தன்னாலாட்டி
நலமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
காட்டியே புடமுமிட்டு யெடுத்துநீயும்
.................................................................. 191

பகரவே சரவுலையில் வைத்துஊது
பதிவாகத் தங்கம்போல் மணியுமாகும்
நகரவே பஞ்சமித்தி ரத்திற்சாய்த்து
நாடியே யெடுத்துஅடி உடைந்துபோகும்
தகரவே வங்கவெட்டை யிதற்குப்பேரு
தாட்டிகமாய் வெள்ளியெட்டில் ரெண்டுசேரு
உகரவே வூதியெடு தங்கமொன்று
உற்றுமே சேர்த்துயெடு மாத்துயெட்டே. 192

எட்டான மாத்ததுவை விற்றுநீயும்
இதமாகச் செலவுசெய்து வைத்துக்கொண்டு
கட்டாகச் செந்தூரஞ் செய்யக்கேளு
கலங்காமற் பலம்நாலு குகையிலிட்டு
திட்டமாய் நாகமது பலமுமொன்று
திடமான தங்கமது பலமுமொன்று
பட்டமாய்ச் சேர்த்துருக்கப் புட்டுமாகும்
பதிவாக ரசகெந்தி யிடையேசேரே. 193

இடைசேர்த்துக் கல்வமிட்டு முன்னீராட்டி
யிதமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நடைபெறவே புடமிட்டு யெடுத்துப்பாரு
நலமாக முருக்கம்பூப் போலேயாகும்
குடையாக நவரோகந் தன்னியலீயக்
குற்றமில்லா மாற்றுதான் பத்துமாகும்
சடையில்லா உப்புக்குங் காவிக்குந்தான்
சரியாக யிறங்கிவிடுந் தன்மைதானே. 194

தன்மையாய்ச் செந்தூரம் பணமவ்வீதம்
தாக்கிடவே மண்டலத்தி லந்திசந்தி
உண்மையா யுண்டுவர நோய்களெல்லாம்
உறுதிபெறத் தவிடுபொடி யாகும்பாரு
வண்மையாய்ச் சடலமெல்லா மிறுகியேறும்
வடிவாக வாய்பேசா திருந்துகொள்ளு
துண்மையல்ல இம்மொழிகள் நிசமதாகும்
துடியான சித்தியெல்லாம் வங்கந்தானே. 195

வங்கத்தைச் சத்தியென்ற மார்க்கங்கூட்டு
வடிவான பொருளறிந்து செத்தசெம்பை
பங்கம்வா ராமலே யெடுத்துநீயும்
....................................................................
சிங்கம்போ லெல்லாமுஞ் சித்தியாகும்
சிறப்பான பொருளெல்லாம் எளிதிலாகும்
உங்கள்குல மீடேற உறுதிபாரு
உற்றுணர்ந்த சித்தியெல்லா முறுதிகாணே. 196

### காந்தசத்து

சித்தியாங் காந்தமது பலமும்பத்து
சிறப்பாகக் குன்றிபோ லுடைத்துக்கொண்டு
முத்திபெறச் செம்மறிப்பால் படிதான்நாலில்
முனிவாகப் போட்டுமே யெரித்துத்தீரு
சத்தியமாய்ச் சுத்தியது ஆகுங்கண்டாய்
தனையெடுத்துக் கல்வத்தி லிட்டுநீயும்
பத்தியாய்க் கெந்தகமும் பலமுமூன்று
பதிவான வெங்காரம் பலமுமொன்றே. 197

ஒன்றாகத் துருசியது பலமுமைந்து
உறுதிபெற யிதுவெல்லாங் கல்வத்திட்டு
நன்றாகப் பழச்சாறு சாமமாட்டி
நலமாக வழித்துவில்லை காயவைத்து
பன்றாகப் புடம்போட்டு யெடுத்துநீயும்
பரிவாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
கன்றாக மணிபோலே சத்துமாகும்
காரியமா யிப்படிக்கு தரமுமஞ்சே. 198

திரமாக அஞ்சுதர முருக்கிப்பாரு
திட்டமாய் வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
அரமாகக் கசடகற்றி யெடுத்துநீயும்
அலையாமற் சொல்லுகிறே னதனைக்கேளு
பரமான காரீயம் பலமும்பத்து
பத்தியா யெடுத்துமெள்ளக் கன்னிநீரில்
வரமாக உருக்கிச்சாய் சுத்தியாச்சு
வடிவாகத் தகடடித்து மார்க்கங்கேளே. 199

கேளுமே கற்றாழைப் பாலினாலே
கெடியாக யிருசாம மரைத்துவில்லை
நாளுமே கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
நபிமார்கள் தானறியப் புடமுமிட்டு
பாளுமே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
பத்தியதா யிப்படிக்குத் தரமும்பத்து
காளுமே யேங்காமற் போட்டெடுத்துக்
காரணமாய்ப் பின்புதான் சொல்லக்கேளே. 200

சொல்லவே காந்தத்தின் சத்துநேரே
சுருதிபெறச் சமனிடைக்குச் சேர்த்துநீயும்
வெல்லவே ரெண்டுமொன்றாய்க் கல்வத்திட்டு
விருப்பமா யரைத்துவில்லை காயவைத்து
நல்லவே புடமிட்டு யெடுத்துப்பாரு
நபிமார்போ லிருக்குமது சத்துத்தானும்
வல்லமையாய்க் குகையிலிட்டுக் காரங்கூட்டி
வடிவாக உருக்கிடவே வெண்மையாமே. 201

வெண்மைதனைப் பஞ்சமித்திரத் திற்சாய்த்து
விருதுபடக் கசடகற்றிப் பின்புநீயும்
உண்மையா யுடைத்துப்பார் வெட்டையாகும்
உறுதிபெற வெட்டைதனை ஊதிப்போடத்
தன்மையாய்ச் செம்பாகும் செம்புதன்னைத்
தாமெடுத்து வெள்ளிதனி லெட்டிரண்டு
கண்மையாய்ச் சேர்த்துருக்கத் தங்கமாகும்
காரணமாய்த் தங்கமதைக் கூடச்சேரே. 202

சேருமே யெட்டுக்கு ரெண்டுதானும்
சித்தமாய் மாற்றததுவு மெட்டுமாகும்
பாருமே யிதைவித்துச் செலவுசெய்து
பகரவே செந்தூரம் பண்ணக்கேளு
வேருமே காந்தத்தின் செம்புநாலு
விதமாக நாகமொன்று தங்கமொன்று
சாருமே குகையிலிட்டு உருக்கிப்பாரு
தானுடைக்கக் களங்காகுந் தன்மையாமே. 203

தண்மையாய் ரசகெந்தி கூடச்சேர்த்துத்
தடையறவே கல்வமிட்டுக் கன்னிப்பாலால்
உண்மையா யரைத்துமெள்ள வில்லைதட்டி
உறுதிபெறக் கதிரில்வைத்துப் புடமும்போட
துண்மையாய்ச் சிவந்து செந்தூரமாகும்
தூரிதமிதை நவலோகந் தன்னிலீய
அண்மையாய்த் தசமாற்றா மறிந்துபாரு
ஆதியாம் நபிமார்கள் சொத்துமாமே. 204

சொத்தெடுத்துக் கந்திரிகள் மிகவும்பண்ணிச்
சுருதிபெறச் சோறாக்கி யேழைக்குத்தான்
சத்தெடுத்துக் கொடுத்ததுபோற் சோறுதன்னைச்
சரியாகக் கொடுத்துவிடச் சுகிர்தமாகும்
நித்தமுந்தான் செய்யாதே வருஷமொன்று
நிலையாகப் பண்ணியே உலகில்விற்றுப்
புத்தியாய் வைத்துமே உண்டுதேறப்
புகலரிய யிம்மார்க்கம் புத்தியாமே. 205

ஆமேதான் காந்தத்தின் செந்தூரந்தான்
அடைவாக மண்டலமு முண்டுதேறு
நாமேதான் தேகமது கற்றூணாகும்
நாதாந்த சாரமது நலுகாதையா
பூமேவு நிலந்தனிலே புத்தியுண்டாம்
புகலரிய நபிமார்க ளாடும்நேர்மை
காமேவு செந்தூரந் திறமுமெத்தக்
கனிவாக வுண்டுமே கண்டுகொள்ளே. 206

கண்டுகொண்ட பிற்பாடு மனதடக்கம்
கருத்தாலே பொய்களது சொல்லவேண்டாம்
தண்டுமுண்டாய்த் திரியாதே யிந்தநூலைச்
சரியாகப் புத்தியாய்ப் படித்துக்கொள்ளு
பண்டுபழங் கதைபேசாப் பருவஞ்செய்து
பதிவான பொருளைத்தான் பத்தியாக்கி
முண்டுபடாக் காந்தத்தின் செம்புவைத்து
முடித்துமே நபிசொத்தை முனிந்துபாரே. 207

முனிந்துமே அயச்செம்பு காந்தச்செம்பு
முனிவான கெந்தகத்தின் செம்புகூடக்
கனிந்துமே சத்தெல்லாஞ் செம்பெடுக்கக்
கருதியே வங்கத்தைப் பங்கம்பண்ணி
வனிந்துமே கூட்டியரை பின்புருக்கி
வடிவாக ஊதியெடு மார்க்கமாகும்
பணிந்துமே சொல்லாதே பொருள்களுண்டாம்
பாதையிது வெகுபாதை பத்தியாமே. 208

பத்தியாம் பொருளேது வென்றாற்கேளு
பதிவான கைபாக வரிசையாலே
முத்தியாய்ச் செய்துதான் மார்க்கங்கண்டால்
முடியாமற் கைபாகந் தப்பிற்றானால்
நித்தியமா யொன்றுதான் முடியாதாகும்
நினைவாகப் படித்திட்டாற் பலனுமாகும்
சித்திபெறச் சொன்னதொரு மார்க்கந்தன்னைத்
திட்டமாய்ச் செய்துமுடி திண்ணந்தானே. 209

## லோகத் திராவகம்

திண்ணமாம் லோகமென்ற புகைநீர்தன்னைச்
சிறப்பாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
தண்மையாய்ச் சகலசத்துக் கிதுவேஆதி
தடையறவே கட்டுகளுக் கிதுவேஆதி
உண்மையாய் லோகத்துக் கிதுவேஆதி
உறுதிபெறக் கட்டுதற்கு வரிசையாகும்
உண்மையாய்த் தாளகந்தான் லோகத்துக்கு
உறுதிபெற யிதனுண்மை உத்துப்பாரே. 210

உத்துமே வெடியுப்புப் பலந்தானூறு
உறுதிபெறச் சீனமது யெண்பத்தஞ்சு
பத்திபெறத் துருசதுவும் நாற்பதாகும்
பதிவான சாரமது இருபதாகும்
முத்தியே கல்லுப்புப் பலந்தான்பத்து
முனையான பூநீறு பலந்தானஞ்சு
நித்தியமாய்க் கெந்தியுப்பு பலந்தான்மூன்று
நிலையாக உருவியுப்பு பலந்தானொன்றே. 211

ஒன்றாகக் கழுதையுட கத்தத்தாட்டி
ஓகோகோ யிருசாம மரைத்தபின்பு
நன்றாகக் கடத்திலிட்டு வாலைமூடி
நலமாக உளுந்துமண் பெலக்கச்செய்து
நன்றாக அடுப்பேற்றித் தீயைமூட்டிக்
காரியமாய் முன்னீறு வெள்ளையாகும்
பன்றான வெள்ளையைத்தான் நீக்கிப்போடு
பதிவாக மஞ்சள்நீர் தன்னைவாங்கே. 212

வாங்கியே அரக்கென்ற குப்பிதன்னில்
வடிவாக அடைத்துமே சொல்லக்கேளு
ஏங்கியே திரியாதே சரக்கெல்லாந்தான்
இதில்நனைத்துச் சூடனுட தீயில்வாட்டு
பாங்கியே கட்டியது கரியிலாடும்
பாதையாம் வெடிகோடி பாதையாகும்
தூங்கியே திரியாதே யிந்தவித்தை
தொல்லுலகில் ரசவாத மேவலாமே. 213

மேவலாங் கட்டினதோர் சரக்கைத்தானும்
மிதமில்லா நவலோகந் தன்னிலீய்ந்தால்
காவலாந் தனித்தனியே வேதையாகும்
கைகண்ட வித்தையிது கருவாய்ப்பாரு
தாவலாஞ் சொன்னதெல்லாம் நிசமுமாகும்
சத்தியமாய்ப் புகைநீரை வைத்துநீயும்
தூவவே சரக்கெல்லாஞ் சொல்முன்கட்டும்
தொல்லுலகில் ரசவாதந் துஞ்சும்பாரே. 214

துஞ்சுமே மக்காவின் தேசந்தன்னில்
துடியாக நபிமார்க ளாடுமாட்டைப்
பஞ்சதுபோற் பறக்காமற் சொல்லிப்போட்டேன்
பதிவாக நாதாக்கள் செய்யுமார்க்கம்
கொஞ்சவே சொல்லிவிட்டே னின்னூல்தன்னில்
கொள்ளைகொள்ளை வாதமிது நேர்மையாகும்
தஞ்சமாய்ப் பார்த்தாக்கால் சகலசித்துந்
கடையறவே யாடலாந் தாக்கிப்பாரே.

தாக்கிட்டு ஒருயிடத்தி லிருந்துநீயும்
தாட்டிகமாய்ப் பொய்சொல்ல வேதைபாரு
நோக்கிட்டு யென்னேரம் நூலைப்பாரு
நொடிக்குள்ளே வாதமது யேவலாகும்
பாக்கிட்ட ததுபோலே செந்தூரங்கள்
பதிவாக வைத்துமே பலனைக்கண்டு
சாக்கிட்டுத் திரியாதே சூஸ்திரத்தைத்
தன்மையாய்ப் பார்த்தாக்கால் நிலைக்கும்பாரே. 216

நிலைக்கவே வங்கத்தை முன்னேபார்த்து
நேராக நிறுத்தியே சத்தினோடே
பலைக்கவே சேர்த்தரைக்கப் பலனுமாகும்
பதிவாக நிர்ணயமாய்ப் பாரிலோர்க்கு
கலைக்கவே பத்திமுத்தி வைராக்கியங்கள்
கனிவாகப் பொருளறிந்து கணக்குங்கண்டு
தலைக்கவே அறிந்துநீ செய்துகொண்டால்
தங்கரச வாதமது தாக்கும்பாரே. 217

## வாலைரசச் செந்தூரம்

தாக்குமே வாலைரசச் செந்தூரத்தைத்
தடையறவே சொல்லுகிறே னுற்றுக்கேளு
பாக்குமே வெடியுப்புப் பலமும்பத்து
பதிவான சீனமது பலமுங்கேளு
காக்குமே பலமதுதா னிருபத்தைந்து
கனிவாக ரெண்டுமொன்றா யிடித்துநீயும்
வாக்கினால் கலையத்தி லிட்டுவாலை
வைத்துமே அடுப்புதனில் வடிப்பாரே. 218

வடிவாகத் தீயெரிக்க வெள்ளைநீராம்
வண்மைபெற வெள்ளையைத்தா நீக்கிப்போடு
நொடிதனிலே மஞ்சள்நீர் பிடித்துநீயும்
நொடிக்குள்ளே அரக்கென்ற குப்பிதன்னில்
படிவாக அடைத்துமே பின்புநீயும்
பதிவாகச் சூதமது பலமும்பத்து
குடிவாகப் பீங்கானில் விட்டுநீயும்
குணமாகப் புகைநீரை விட்டுவையே. 219

விட்டுவைத்து மூடியபின் நாலுரெண்டு
    விதமாகப் பார்த்திடவே சூதந்தானும்
கட்டுமே காளான்போற் பூத்துநிற்கும்
    கனிவாகச் சூரியனால் பூத்தபூவை
நட்டுமே யெடுத்துடனே வேறேபீங்கான்
    நலமாக வைத்துமே புகைநீரூத்து
பட்டுமே பொருமியது பூக்கும்பாரு
    பதிவாக உமிநெருப்பில் வறுத்திடாயே. 220

வருத்துமே காசிமேர் தனிலேவைத்து
    வகையாகக் குப்பிக்கு அரையதாக
பருத்துமே பலப்பக்கல் மேலேயிட்டுப்
    பதிவாக மண்ணேழு சீலைசெய்து
குருத்துமே சட்டிதனிற் சலங்கைமண்ணைக்
    குணமாகப் பாதியிட்டுக் குப்பிவைத்து
தருத்துமே அதின்பேரில் மணலையிட்டுத்
    தடையறவே அடுப்புதனி லேத்திடாயே. 221

ஏத்தியே தீயதுமுன் நான்குசாமம்
    இதமாக யெரித்துமே பிரித்துப்பாரு
நாத்திசையு மெய்க்கவே மஞ்சள்போலாம்
    நல்லமஞ்சள் தனையெடுத்துப் பீங்கானிட்டு
பாத்திபனார் மெய்க்கவே திராவகத்தைப்
    பதியவிட்டு உமிநெருப்பில் வறுத்துநீயும்
காத்திடவே முன்போலே குப்பிதன்னிற்
    கனியவதை அடுப்பேற்றி யெரித்துக்கொள்ளே. 222

கொள்ளவே யிப்படிக்கு தரமுமஞ்சு
    கூக்குரலா யெடுத்துமெள்ளப் பிரித்துப்பாரு
தள்ளவே செந்தூர மருணன்போலாம்
    தானெடுத்துப் பலம்பத்து நிறுத்துக்கல்வம்
விள்ளாதே தங்கமது பலமுமொன்று
    விதமான நாகமொன்று சேர்த்துருக்கக்
கள்ளமாய்ப் புட்டுப்போல் நொறுங்கிப்போகும்
    கைகண்ட படிதானுங் கண்டுபாரே. 223

கண்டுமே கல்வத்தி லிட்டுத்தானும்
கனிவாக முன்புகைநீர் விட்டுஆட்டி
தொண்டுபட உமிநெருப்பில் வறுத்துப்போடு
தொல்லுலகிற் காசியென்ற மேருக்கிட்டு
பண்டுமே பனிரெண்டு சாமந்தீதான்
பக்குவமா யெரித்துமெள்ள வாங்கிநீயும்
கொண்டுமே நபிமாரைத் தொழுதுபோற்றிக்
குணமாகப் பிரித்துமே பார்த்திடாயே. 224

பார்த்திடவே முருக்கம்பூ போலாஞ்செம்பு
பதிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
ஏத்திடவே கொடுத்துருக்கிப் பார்க்கும்போது
இனமாக மாத்ததுவுஞ் சொல்லக்கேளு
சாத்திடவே மாத்ததுதான் பனிரெண்டாகும்
சஞ்சலங்க ளெல்லாமுந் தன்மையாகும்
கூத்திடவே குலமெல்லாம் வாழுங்கண்டீர்
குணமாக யாகோபு கூறினாரே. 225

கூறினார் சகலசித்தும் விளங்கத்தானே
குணமான சகலநூ லெல்லாம்பார்த்து
ஊரியே சோதித்துச் சரக்குங்கண்டு
உற்றுமே நபிபோலே பிறக்கவென்று
சாரியே வடநூலும் பார்த்துத்தேறி
சரீரமது காயசித்தி பண்ணிநீயும்
பாரிலே பார்த்துநீ பகுமையில்லாப்
பதிவாக யாகோபு பாலித்தாரே. 226

பாலித்த பொருளறிந்து வாதிமார்கள்
பக்குவமாய்ச் செய்துமே பாவித்துத்தான்
கோலித்த நூல்பார்த்து வர்மங்கண்டு
குறிப்பாகச் செய்துமே குணமும்பார்ப்பார்
சாலித்து உறுதியென்று யிருப்பாரய்யா
சரிவரவே ஞானங்கள் மிகவுஞ்சொல்வார்
ஆலித்து நபிபதத்தை வணங்குவார்கள்
அம்மம்மா நபியோகம் ஆண்மையாமே. 227

ஆண்மையாய்ப் புத்தியில்லா வாதிமார்கள்
அடைவான நூல்வர்மந் தெரியாதாலே
காண்மையாய்ச் சொல்லியே புலம்பிக்கத்திக்
கைமுறைகள் தெரியாமற் சுட்டுக்கெட்டு
தாண்மையாம் பணமிருந்தால் சோத்துக்காகும்
தாக்கமா யாணுவத்தாற் கெட்டோமென்று
வாண்மையாய்ச் சொல்லியே வூதுவார்கள்
வகைகாணார் துகைகாணார் வழக்கமாமே. 228

வழக்கமாய் ரசவாதி யோகவாதி
வடிவான நூல்வாதி மக்காதேசம்
கழக்கமாய்ப் பொருள்வாதி யேனவாதி
காட்டுமே வாதிதான் மூலிவாதி
பழக்கமாய் முட்டாளாய் வாதிதானும்
பதிவான குணங்கெட்ட வாதியோர்க்கு
துழக்கமாய் வாதந்தான் மிகவும்வேணும்
தொல்லுலகி லில்லாதாற் துன்பமாமே. 229

துன்பமாய்ப் பொய்வாதி பொய்கள்சொல்லிச்
சுருதிதா னறியாமற் சுட்டுக்கெட்டு
இன்பரச வாதந்தான் பொய்யாமென்று
இடும்பாகச் சொல்லியே மனதுநொந்து
அன்பாக உலகமிதிற் சஞ்சரித்து
அடைவாக வேலைசெய்து அலைவார்கோடி
தென்பாகக் கல்லார்கள் கோடிகோடி
தேசமெல்லா மிப்படிக்குக் கெட்டார்தானே. 230

தானென்ற நூலறியா ரசட்டுவாதி
தாட்டிகமாய் வெள்ளியொடு தங்கஞ்சேர்த்து
கானென்று உருகியே மட்டம்போட்டுக்
கனமாகக் கடைதனிலே காட்டிக்காட்டி
ஊனென்று போட்டபொன்போய் வீணாய்போச்சு
உதவாது யென்றுசொல்லி உறுதியற்று
பானென்ற சோத்துக்கு யிடமில்லாமற்
பத்தியா யலைந்துமே மாண்டார்தானே. 231

## சுண்ணம்

மாண்டுமே போகாமல் வங்கந்தன்னை
மாளமட்டு மரைத்துமே புடத்தைப்போட்டு
தாண்டுமே சேர்த்தரைப்பாய் சத்தினோடு
காதலா யுருக்கூது செம்புதன்னை
வேண்டுபடி செம்பெடுத்து வெள்ளிதன்னில்
விதமாகப் பாய்ச்சிடுநீ மேன்மையாக
தாண்டுமே நவலோகம் யெட்டியோடும்
தாக்கிடவே பணமாகும் தாக்கிப்பாரே. 232

## சிங்கித் தைலம்

தாக்கிப்பார் கொடுஞ்சிங்கித் தைலஞ்சொல்வேன்
தடையறவே வாலுளுவை புரசுயெட்டி
காக்கியே கஞ்சாவும் புங்குஅத்தி
கனமான அளுஞ்சிபுன்னை வாளமோடு
பாக்கியே வேம்புநீர் வெட்டிமுத்து
பதிவாகக் கழுதைமுள்ளி விரையையெல்லாம்
ஊக்கியே வகைவகைக்குப் படியேயொன்று
உண்மையா யளந்துமே பொடித்திடாயே. 233

பொடித்துமே கெருடனுட கிழங்குச்சாற்றில்
பேராக ஊறவதைத் திரிநாள்வைத்து
காட்டுமே கல்வத்தி லிட்டுஆட்டிக்
கனிவாக அதிற்போட விபரமாக
நாட்டுமே மருந்தினைத்தான் சொல்வேனப்பா
நலமான அரிதாரஞ் சிலையுங்கெந்தி
கூட்டுமே வெடியுப்புச் சீனஞ்கூடன்
குலமாகச் சாம்பிராணி சாரங்கூட்டே. 234

சாரமுடன் வீரமொடு பூநீர்தானும்
சரியான குங்கிலியம் துருசியோடு
பாரமொடு அன்னமென்ற பேதிதானும்
பதிவாக வகைக்கிரண்டு பலந்தான்ரெண்டு
காரமொடு முன்மருந்தோ டொக்கச்சேர்த்துக்
கனிவாகக் கலந்தரைக்கக் கணக்குக்கேளு
வாரமொடு கெருடனுட கிழங்குச்சாற்றால்
வார்த்தரைத்து யெட்டுநாள் மெழுகுபோலே
கோரமதாய்த் தட்டியே உலரப்போடு
கொடுமையாய்ப் பூப்புடத்திற் றயிலம்வாங்கே. 235

வாங்கியே பரணிதனி லடைத்துக்கொண்டு
வடிவாக யின்னமுமே மருந்துகேளு
தாங்கியே துருசுவெள்ளை பலமுமொன்று
தப்பாமல் நிறுத்துமே தயிலந்தன்னில்
ஏங்கியே பிசறியே வைத்துநீயும்
இதமாக லிங்கத்திற் சுருக்குத்தாக்கு
பாங்கியே மெழுகாகும் மெழுகெடுத்துப்
பதிவாக நவலோகந் தன்னிலீயே. 236

தன்னிலிட்டு யெடுத்துப்பார் மாத்துமங்கே
தளியான பத்தரைதா னாணியுண்டோ
உன்னியே திரியாதே தயிலந்தன்னை
உறுதிபெறத் தனித்ததொரு மட்டந்தன்னில்
கெண்ணியமாய்ப் பூசியே புடந்தான்போட
கெடியாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
பண்ணியே புடமிட்டுப் புடத்துக்குத்தான்
பரிவாக மாத்துதா னுயருந்தானே. 237

உயருமே யிப்படிக்கு மட்டந்தன்னை
உயர்த்தியே விற்றுத்தான் செலவுசெய்து
நயந்துமே கந்திரிக ளாக்கித்தானும்
நலமாகக் கொடுத்துமே பின்னுங்கேளு
பயமில்லா அயச்செம்பு வைத்துத்தேரு
பதியவே செந்தூரம் பண்ணியுண்ணு
தயருமே மேனியது யிரும்புத்தூணாம்
தாட்டிகமா யாகோபு பகர்ந்தார்தானே. 238

தானென்ற கொடுஞ்சிங்கித் தயிலத்தாலே
சகலமுந்தான் சித்தியாம் நபிமார்சொல்வார்
கோனென்ற சத்துவகை கோடாகோடி
கொடுப்பினமும் பழுப்பினமு மதிலுங்கோடி
வானென்ற கட்டினமோ அதிலுங்கோடி
வகைகோடி துகைகோடி வழக்கங்கோடி
பானென்ற பத்தியது கோடாகோடி
பாலித்தோ ரதிலும்வெகு கோடிதானே. 239

கோடிதா னென்றாக்காற் சொல்லக்கேளு
குணமான வாதத்தில் கருத்துப்பூண்டு
நீடியே செய்தாக்காற் பலனுமாகும்
நிலையாகும் அலைச்சலில்லா நேர்மையுண்டு
பாடியே திரிந்ததினாற் பலிதமில்லை
பக்குவமாய்ச் செய்தாக்காற் பத்திமுத்தி
மூடியே சொல்லாதே முடிவுபாரு
முத்திநூல் பார்த்தாக்கால் முதலுமாமே. 240

முதலாகச் சொல்லவென்றால் வங்கந்தன்னை
முடியவே உழைத்துமே பார்த்தால்நன்றாம்
வதலாகச் சுட்டபணங் கொடுக்கும்பாரு
வடிவான வங்கத்தைக் காணாமாந்தர்
விதமாகச் சுட்டலைந்து கெட்டுப்போவார்
வீரியமாய்ச் சொல்வார்கள் விதமுமில்லை
நதிதனிலே மூழ்கியே அலைவார்போல
நாடியே நூலறியார் வாதிதானே. 241

வாதிதா னென்றுசொல்லி வாய்ப்பேச்சாலே
வகையாகப் பசப்புவார் வங்கத்திற்றான்
நீதிபோற் சொல்வார்கள் அவனைநம்பி
நெட்டூரத் தனையெடுப்பார் நூலைச்சொல்வார்
பாதியாய் வாதந்தான் வந்ததென்பார்
படிப்படியா யேறுகின்ற துரையைக்காணார்
ஜாதிதான் கெட்டவன்போற் பேசுவார்கள்
சரியான பொருளறியார் சவுங்கல்தானே. 242

சவுங்கல்தான் மெத்தவுண்டு வுளுத்தமாண்டர்
சரியாகச் சொல்வார்கள் பொருளுங்காணார்
நவுங்கலா யுலகத்திற் பொய்கள்சொல்லி
நாட்டியே நான்வாதஞ் செய்வேனென்று
தவம்பெறவே யவன்வீட்டிற் சோத்தையுண்டு
தாகமாய்ப் பொருளெல்லாம் பிடுங்கிவிட்டில்
கவலைகொண்ட மனிதன்போற் கக்கிக்கக்கிக்
கவலையாய்ப் பேசியே கருதுவானே. 243

கருதுவா ருலகத்திற் படியாமாந்தர்
கவலையாய் மிகப்பேசிச் சண்டைகொண்டு
அருதலிபோல் நித்தம்நித்த மழுவான்பாரு
அருத்ததொரு பலாச்சுளையில் ஈயைத்தானும்
ஒருவனவன் விட்டதுண்டோ சொல்லிவிடுங்கள்
உலுத்தரச வாதியவன் சொல்வானப்பா
பருகுனது பாற்குடித்த வாரதொக்கும்
பத்திதா நிசமில்லார் பருவமாமே. 244

பருவமாஞ் சரக்குகளைச் சுட்டுக்கெட்டுப்
பாதைதெரி யாமலே பலதுஞ்சொல்வார்
உருவமாய் வகையறியார் பொன்னைக்காணார்
உலுத்தரச வாதிதா னாடுமாட்டு
கருவமா யென்னைப்போல் கெட்டாயென்று
கணக்காகச் சொல்லியே புலம்பியேங்கி
தருவமா யுலகத்திற் பேசுவார்கள்
சண்டாளர் பொய்சொல்லும் வாதிதானே. 245

தானென்ற பொய்சொல்லும் வாதிக்குத்தான்
தாட்டிகமாய்ப் படிமண்ணை வாயிற்போடு
கானென்ற கள்குடிக்கும் வாதிபேச்சைக்
கருத்திலே யெண்ணாதே கண்டுகொள்ளு
பானென்ற கஞ்சாவை யுண்டுபின்னும்
பத்தியாய்ச் சாராய மிகவேயுண்டு
நானென்ற ஆணுவங்கள் மிகவேபேசி
நாடினவர்க் கொன்றுமே பேசிடாதே. 246

பேசிட்டா லவர்களைத்தா னடிக்கவேண்டாம்
'புறம்பாக அப்பாலே தள்ளிப்போடு
வீசிட்டால் நபிமார்கள் குற்றம்சொல்வார்
விதமாகப் பாவம்வரும் வாதமில்லை
நேசித்து யெல்லோர்க்கும் நன்மையாக
நிலையாக யிருந்தாலோ ஒருவர்வந்து
வாசித்து நாட்டிலே யவர்தான்சொல்வார்
வடிவாக அப்போது அறிந்துகொள்ளே. 247

அறிந்துமே சாராயம் குடிக்கும்பேர்கள்
அடைவாக அபினியொடு கள்ளுதானும்
நெறிந்துமே யிவர்களுட யிஷ்டம்வேண்டாம்
நிலையாக வாய்ப்பேச்சுச் சொல்லிநீயும்
கறிந்துமே யவரவர்கள் மனதைச்சோதி
கனமாக வுன்மனதிற் கவனம்வைத்து
செறிந்துமே நீசெய்தாற் பலனுமாகும்
சிறப்பான பொருளாகுஞ் செல்வமாமே. 248

செல்வமாம் வங்கமென்ற சுண்ணம்வைத்தால்
செழிப்பாகும் உலகத்தில் நீதிமார்க்கம்
மல்கவே வங்கத்தை யார்தான்காண்பார்.
வையகத்தில் நபிமார்கள் தானுங்காண்பார்
உல்கவே வங்கத்தைக் காணாமூடர்
உலுத்தருக்கு ஒப்பாகும் உறுதிமெத்த
துல்கவே பொருளறியார் பொருளிருந்தால்
துடியாகச் செலவுசெய்வார் சூட்சந்தானே. 249

சூட்சமாய் புளியுப்பு மார்க்கங்கண்டால்
சுகமாகச் சொர்ணமாம் சத்தோயில்லை
வாய்ச்சபடி அவரவர்கள் நினைத்துத்தானும்
வகையாகக் கோடான கோடிசுட்டு
தாட்சியாய்ச் சொன்னாக்கா லென்னசெய்வோம்
தாட்டிகமாய்க் கைபாக வரிசையாலே
பாய்ச்சினால் நவலோகம் பழுத்துப்போகும்
பாடுபட்டாற் பெலனாகும் பரிவுதானே. 250

பரிவாகப் பொருளறிந்தோன் சித்தன்சித்தன்
பலனறிந்தோ னதிலும்வெகு நிபுணனாகும்
விரிவாக யெல்லோர்க்கும் சொன்னார்கர்த்தன்
வித்தியாச மறியாதான் மாடுமேய்க்கி
கரிபோலக் கண்டதுதான் ஆனையாகும்
கணக்கிட்டோன் பிள்ளையாம் கண்டுகொள்ளு
பிரிவாகப் பிரிமுறுக்கும் பேர்கள்கூலி
பேசரிது யெளியோர்கள் பேசலாமே. 251

பேசவே மிகவுந்தான் ஆசையில்லார்
    பேசரிய நூல்பார்த்தோர் கைபாகங்கள்
நாசவே அறிந்தவர்க்கு வாதமெய்தும்
    நானிலத்திற் திமிராகச் சொல்வோர்க்கு
கூசவே வாதமில்லை யென்போர்தானும்
    குணமாக நினைத்துமே கொள்ளுநீயும்
பாசமற ஆசைதனைப் போக்கித்தானும்
    பக்தியாம் வாதமுண்டு பரிவுதானே. 252

பரிவாக அயத்தினுட செம்பைக்கேளு
    பகரறிய ரோமத்தை எண்ணெய்தேய்த்து
விரிவாக அயச்சட்டிக் குள்ளேயிட்டு
    விதமாக மூன்றுபத்துப் பலத்தையிட்டு
கரியான துருசதுவும் பலமோபத்து
    கைமுறையாய்த் துரிசுதனைப் பிரட்டிவாங்கித்
திரிவாக நாற்றமது பலமும்யேழு
    திறமான அரபொடியும் பலமும்ரெண்டே. 253

## அயச்செம்பு

ரெண்டோடு யிதுவெல்லாங் கரண்டியிட்டு
    நேரான யெள்ளெண்ணெய் கொஞ்சங்குத்தி
பண்டோடு கொதிக்கவைத்துக் குகையிலிட்டுப்
    பதிவாக உருக்கிடவே சத்துமாகும்
முண்டோடு வெங்காரம் கொஞ்சமிட்டு
    முடிவாகச் சத்ததனை உருக்கித்திரு
தண்டோடு வெள்ளிவெங் கலம்போலாகும்
    தடையறவே பலம்பத்து நிறுத்துக்கொள்ளே 254

வைத்துமே பின்புதான் வங்கம்நன்றாய்
    வளமாக உருக்கியே கன்னிப்பாலில்
சித்துமே தாமேழு சாய்த்துக்கொண்டு
    சிறப்பாகக் கரண்டிதனில் வைத்துருக்கி
முத்திபெற விஷ்ணுவின் கரந்தைதானும்
    முடிவான யிடைசமன்தூள் பண்ணிக்கொண்டு
நித்தியமாய் வங்கமதின் மேலேயிட்டு
    நிலையாகச் சாமம்நால் வறுத்திடாயே. 255

வருத்திடவே மாப்போலே யாகும்பாரு
வளமாகக் கன்னிப்பால் தன்னாலாட்டி
மருத்துமே கரியில்வைத்துக் காயப்போடு
மயமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
சிருத்துமே முன்சத்து விடையேசேர்த்துச்
ஜெயமாக யிருசாம மரைத்துப்பின்பு
பருத்துமே பெரியபுடம் போட்டெடுத்துப்
பதிவாகக் குகையிலிட்டு உருக்கிடாயே. 256

உருக்கிடவே யீயம்போ லுருகிநிற்கும்
உத்துமே யெடுத்துபஞ்ச மித்திரத்தில்
பருக்கிடவே யுருக்கிச்சாய் கசடுபோகும்
பதிவாக யெடுத்தடிக்க வெட்டையாகும்
நருக்கிடவே மதியெட்டில் வெட்டைரெண்டு
நலமாகச் சேர்த்தூதி பொன்னைச்சேர்த்துப்
பெருக்கவே ஊதியெடு மாத்துயேழு
பெலமான நபிமார்க ளாடுமாட்டே. 257

ஆட்டான நபிமாரைத் தொழுதுபோற்றி
ஆதியோ டந்தமாய் நூலைப்பார்த்து
வாட்டான சரக்கெல்லாம் வகைகள்கண்டு
வடிவான பொருளறிந்து மார்க்கமாகத்
தேட்டான தேட்டதுபோல் வாதமார்க்கம்
திடமாகச் செய்தாக்காற் பலனுமாகும்
மூட்டான மூட்டிதைத்தா னறிந்தஞானி
முனிவான செம்பெடுப்பார் முனிந்துகாணே. 258

## சாஸ்திர விபரம்

முனிந்துபார் யென்னுடைய சாஸ்திரந்தான்
முடிவான அட்டவணை வரிசைகேளு
கனிந்துபார் வைத்தியந்தான் யெழுநூறுசொச்சம்
கனிவாகப் பஞ்சமித் திரமுன்னூறு
நனிந்துபார் களங்கம்ரெண்டு காண்டந்தானும்
நலமாக அறுநூறும் நாடிச்சொன்னேன்
பணிந்துமே சுருக்கம்நூற் றன்பத்தைந்து
பதிவாக அதைக்குறுக்கிச் சூத்திரந்தானே. 259

சூத்திரந்தான் பதினாறு அதைக்குறுக்கிச்
சுருதிபெற யெட்டொன்று சொன்னேன்
பத்திரமாய்ச் சுண்ணமென்ற காண்டந்தானும்
பதிவான அறுநூறு அதைக்குறுக்கிக்
காத்திரமாய்ச் சுண்ணமுன் னூறுபாடிக்
கனிவாக யிதைக்குறுக்கி நூற்றன்பத்தைந்தாய்
ஏத்தியே பாடினேன் தண்டகந்தான்
இதமாக நூற்றுப்பத்தாய்ப் பாடினேனே. 260

பாடினேன் யேழையாம் வாதிக்குத்தான்
பதிவாக யென்னூலை யெல்லாம்பார்த்துக்
கூடியே கருத்துவைத்துப் படித்துப்பார்த்துக்
குணமாக ஒருமனதாய் ஒக்கப்பண்ணி
நீடியே முன்னேதான் வங்கஞ்செய்து
நிலைத்துமே சத்துதனிற் செம்பெடுத்து
வாட்டியே மதிதனிலே தாக்கிப்பின்பு
வகையாக உண்டுநீ மார்க்கங்கேளே. 261

மார்க்கமாய்ப் பின்னேதான் செந்தூரத்தை
வடிவாகச் செய்துமே விற்றுநீயும்
ஏர்க்கவே செலவுக்கு வைத்துக்கொண்டு
இனிதான செந்தூரந் தானுமுண்ணு
பார்க்குள்ளே காயசித்தி பண்ணிநீயும்
பதிவான யேழைக்குக் கொஞ்சமீய்ந்து
மூர்க்கமாய்த் திரியாதே முடிவுகண்டு
முத்திபெற நபிமாரை வணங்குவாயே. 262

வணங்கவே தன்னைத்தான் வணங்கிநீயும்
வகையாக மேற்கேநீ மனதுவைத்து
இணங்கியே கால்மடித்துத் தொழுதுகையை
இனிதாகக் கண்தனிலே ஒத்திநீயும்
குணக்காமற் குப்புறத்தான் படுத்தெழுந்து
கூறியே சேவித்துக் குணமதாக
கனமாக ஓதிடுநீ ஆண்டவன்தான்
கருத்துறவே வாதங்கள் சொல்லுவாரே. 263

சொல்லுவா ரவரவர்க்குத் தக்கதாகச்
சுருதிமுறை தெரியவே செய்துவைப்பார்
மெல்லுவார் சகலசம் பத்துதானும்
மென்மேலுங் கொடுத்திடுவார் மேகம்போலே
நல்லுவார் மகமதுதான் முன்னேவந்து
நாடியே சொல்லிடுவார் நாட்டிலோர்க்கு
வெல்லுவார் தொட்டதெல்லாஞ் சித்தியாக
வேடிக்கை யாகவே திரியலாமே. 264

திரியவே அண்டரண்ட பதங்களெல்லாஞ்
சித்திக்க வேணுமென்று சத்துப்பாரு
அரியவே வங்கத்தை அணைத்தும்பாரு
அதின்பின்பு செந்தூரஞ் செய்துபாரு
பிரியமா யதின்பின்பு சுண்ணம்பாரு
பிரட்டில்லை வாதசித்தி வந்துகூடும்
விரிவாகப் பேசாதே சூஸ்திரத்தை
வினையமாய்ப் பார்த்திடவே சித்தியாமே. 265

சித்தியாம் யாருக்கு நபிமாருக்குச்
ஜெகமெய்க்கும் புத்தியுள்ளோர் தீர்க்கவானாம்
பத்தியாய் வாதத்தைப் பார்த்தவர்க்குப்
பதிவான உறுதியுள்ளோர் தங்களுக்கு
நித்தியமாய் நூல்பார்த்த வாதிக்குத்தான்
நேரான செம்பறிந்து நிலைத்தபேர்க்கு
முத்திவரு மென்றுசொன்னார் யாகோபுதானும்
மூர்க்கமாய் வாதசித்தி யெய்துந்தானே. 266

## திராச் செந்தூரம்

தானென்ற யின்னமொரு திராவின்மார்க்கம்
தடையறவே சொல்லுகிறேன் தன்மையாக
ஊனென்ற திராவதுதான் பலமும்பத்து
உருதிபெறக் கரண்டிதனில் வைத்துருக்கி
கானென்ற யிடைக்குமனோ சிலையைத்தாக்கு
கணக்காக உடையுமது கருதக்கேளு
நானென்று திரியாதே கல்வத்திட்டு
நலமர்ன புகைநீராற் சாமமாட்டே. 267

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் பெரியபுடம் போட்டுவாங்கி
நீட்டியே கல்வமிட்டுப் பின்புநீயும்
நிலையாக ரசப்பதங்கம் பாதிசேர்த்து
கூட்டியே புகைநீரா லரைநால்சாமம்
குணமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
தாட்டிகமாய் மேற்கவசம் சொல்லக்கேளு
தடையில்லா வுப்போடு சுண்ணந்தானே. 268

தானேதான் ரெண்டுமுறை வில்லைமேலே
தாட்டிகமாய்க் கட்டியே உலரவைத்து
வானேதான் குக்குடமாய்ப். போட்டெடுக்க
வடிவாகப் பார்த்திடவே செந்தூரமாகும்
ஊனேதான் மதிதனிலே பத்துரெண்டு
உறுதியாய்ச் சேர்த்துருக்கித் தங்கமொன்று
கானேதா னூதிடவே மாத்துக்கேளு
கனிவான வயதேழு காணுந்தானே. 269

காணுமே செந்தூரங் குன்றியுண்ணக்
கருதியே நரம்பிறுகு மேனிதானும்
வேணுமே விந்திருகும் தேகந்தானும்
விதமாகக் கற்போலே யிருகும்பாரு
வாணுமே போர்ப்பெலனு மதிகமாகும்
வடிவான செவ்வலரி போலேகண்கள்
தோணுமே யிருட்டரையில் கண்துலங்கும்
சுருதிபெற யாகோபு சோதித்தேனே. 270

சோதித்தேன் நரைதிரைக ளற்றுப்போகும்
சுருக்காக வாலைபோல் தேகமாகும்
வாதித்த பெண்ணோடே சேரலாகா
வடிவான காயமது உருகிப்போகும்
நீதியாய்க் குதிரைபோல் வேகமுண்டு
நிலைத்தாயி மார்போலே யிருக்கலாகும்
ஜாதிபல பேதத்தைத் தள்ளிப்போடு
சதாநித்தம் ஆண்டவரைத் தொழுதிடாயே. 271

தொழுதிடவே வாதசித்தி உடனேயாகும்
 தெல்லுலகில் ரசவாத மேவல்கேட்கும்
பழுதில்லா நோயெல்லாந் தவிடுபொடியாகும்
 பாதையிதில் ரெம்பவுண்டு பத்தியாகும்
உழுதுபயி ரிட்டதுபோல் பலன்கொடுக்கும்
 உற்றுமே செல்வம்வரு முலகத்தோர்க்கு
அழுதுமே திரிந்தாலே யென்னலாபம்
 ஆதியாம் வெடியுப்பை யண்டிப்பாரே. 272

## பித்தளைச் செந்தூரம்

அண்டவே ஆர்கூட மார்க்கஞ்சொல்வேன்
 ஆண்மையாய்ச் சொல்லுகிறே னறிந்துபாரு
பண்டிடவே பித்தளைதான் பலமுமெட்டு
 பதிவாக யிலுப்பைநெய்யி லுருக்கிச்சாய்த்து
கண்டிடவே பத்துதரம் சாய்த்துக்கொண்டு (யேழு)
 கசடகற்றி யெடுத்துமே குகையிலிட்டு
தொண்டுசெய்வார் போலவே தாளகத்தைச்
 சுண்ணாம்பில் வைத்தெரிக்கச் சூட்சமாமே. 273

எரித்துமே யிருசாமங் கடந்தபின்பு
 ஏழைமதி போகமா லெடுத்துநீயும்
வரித்துமே முன்சுத்தி செய்துவைத்த
 வடிவான பித்தளையைக் குகையிலிட்டு
பரித்துமே உருக்குமுகந் தன்னிலேதான்
 பலமாக யிடைசமனாய்த் தாளகத்தை
பிரித்துக்கொடு உள்வாங்கி உடையும்நன்றாய்ப்
 பேர்பெருக யெடுத்துநீ பின்புகேளே. 274

பின்புதா னெடுத்துமே சொல்லக்கேளு
 பேசரிய கல்வத்தி லிட்டுநீயும்
தென்பாக ரசபதங்க மிடையேசேர்த்துத்
 திறமான புகைநீரால் சாமமாட்டித்
தன்பாக வில்லைதட்டிக் கதிரில்வைத்துத்
 தடையறவே கவசமதைச் சாற்றக்கேளு
வன்பாக அரைபொடிதான் பலமும்பத்து
 வகையான வெண்காரம் பலமும்பத்தே. 275

பத்தாக யிதுரெண்டுங் கல்வத்திட்டுப்
பழச்சாற்றால் சாமந்தா னரைத்துநீயும்
முத்தாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
முனிவான கரிபோலே உருகிநிற்கும்
சித்தாக வதையரைத்துப் பழச்சாற்றாலே
சிறப்பாக வில்லைதட்டிக் கவசமிட்டு
நத்தியே காயவைத்துச் சேவலென்ற
நாடியே புடமிடவே நன்மையாமே. 276

நன்மையாய்ப் புடமிட்டு யெடுத்துப்பாரு
நலமாகச் செந்தூர முருக்கம்பூவாம்
வண்மையாய் மதியெட்டில் ரெண்டுசேரு
வளமாகத் தங்கமொன்று சேர்த்துருக்கி
பண்மையா யூதியெடு பச்சையாகும்
பரிவாகத் தங்கமாம் பரிவுமெத்த
உண்மையா யிருக்குமந்தத் தங்கந்தன்னை
உலகறிய விற்றுமே செலவுசெய்யே. 277

செய்யவே யிச்சொத்தை வறுமையாகச்
சிறப்பாக உண்டிட்டுச் செந்தூரத்தைப்
பய்யவே வைத்துமே உண்டுதேரு
பத்தியமாய்ப் பாகமாய் உண்டுதேரு
நய்யவே நபிமாரை வணங்கியேத்தி
நானிலத்தி லிருந்துமே தருமஞ்செய்து
கைபாக மாகவே செய்துகொள்ளு
கனிவாக விதியாளி காணுவானே. 278

காணுவான் புத்தியுள்ள வாதிதானும்
கடைகெட்ட வாதிதான் காணமாட்டான்
பேணுவான் பொய்சொல்லா னிலைத்தவாதி
போக்கோடே பொய்சொல்வோர்க் கில்லையில்லை
தாணுவா யலைவோர்க்கு யில்லையில்லை
தடையின்றிச் சொல்வோர்க்கு மெய்திடாது
பூணுவார் ஆசையுள்ள வாதிக்குத்தான்
புகலரிய வாதமில்லை பேசினேனே. 279

பேசினேன் கடைசிதனில், செந்தூரத்தைப்
பிரியமாகப் போக்கோடே வைத்துநல்ல
வாசினையாய்க் கைபாக வரிசையாக
வைத்துமே செய்தாக்கால் சித்தியுண்டு
காசினையாய் அவசரத்தில் செய்வாயாகில்
கணக்கான சித்தியில்லை கண்டுகொள்ளு
பாசிதான் நீர்தனிலே மூடினாப்போல்
பாவிக்கும் அவசரத்தின் பதிவுதானே. 280

## சாரக் கட்டு

பதிவாக யின்னமொரு சாரக்கட்டு
பதியவே சொல்லுகிறேன் பத்தியாக
நிதியான சாரமது பலமும்நாலு
நிலையாக அண்டம்போற் சீவிக்கொள்ளு
முதியான வெள்ளீயம் சட்டியிட்டு
முளிந்துமே அண்டோடு யிடையேயிட்டு
விதியாகக் கிண்டிடவே கரிபோல்நிற்கும்
வினையமாய்க் கல்வத்தி லிட்டுக்கேளே. 281

இட்டுமே வெண்கருவாற் சாமமாட்டி
இதமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நட்டுமே உலையில்வைத்து ஊதித்திரு
நலமான கடுஞ்சுண்ண மாகும்பாரு
பட்டுமே கல்வத்தி லிட்டுநீயும்
பதியவே வெண்கருவா லரைத்துவில்லை
கட்டுமே கதிரில்வைத்து ஊதித்திரு
கடுவங்கச் சுண்ணமது வாகும்பாரே. 282

ஆகுமே முன்சாரக் கட்டிமேலே
அடைவாக அரைத்துமே கருவாற்பூச
நாகுமே பெரும்பூச்சாய்ப் பூசிநல்ல
நலமாகக் கதிரில்வைத்துப் பின்புகேளு
ஏகுமே ஒருசட்டி தன்னிலேதான்
இதமாகக் கிளிஞ்சிலென்ற சுண்ணந்தானும்
பாகுபெறப் படிரெண்டு அளந்துவிட்டுப்
பக்குவமா யதன்மேலே உண்டைவையே. 283

உண்டைவைத்து அதன்மேலே கிளிஞ்சில்நீறு
உறுதிபெறப் பரப்பியே அமுழ்த்திநீயும்
பண்டைமுன்போல் அடுப்புதனி லேத்திமூடிப்
பதிவாகச் சிறுகயெரி தீமட்டாக
கண்டைபோ லிருசாம மெரித்துவாங்கு
கனிவாக யெரிபிரித்துப் பார்த்துநீயும்
வண்டமாய்க் கவசமது பிரித்துப்பாரு
வடிவாக உருகியது கட்டுந்தானே. 284

## நாகக்கட்டுச்செந்தூரம்

கட்டுமே ஆனையுட தந்தம்போலே
கனிவாக யெடுத்துமே அப்பால்வைத்து
நட்டுமே நாகமது பலந்தானொன்று
நாடியே இலுப்பெண்ணெய் தனிலுருக்கி
முட்டுமே மூவேழு தரமுஞ்சாய்க்க
முடிவாகக் கசடகலும் முனிந்துபாரு
செட்டுமே குகையிலிட்டு உருக்கிநீயும்
சீரான சாரத்தை முகத்தில்தூவே. 285

தூவவே நாகமது கண்விட்டாடும்
துடியான புகைதானு மடங்கிநிற்கும்
காவவே நாகமது கரியில்நின்று
கண்விட்டு ஆடிவிடும் நாகந்தானும்
பாவவே கட்டினதோர் நாகந்தானும்
பதிவாகப் பலம்நாலு குகையிலிட்டு
தாவவே உருக்குமுகந் தன்னிற்கேளு
தாட்டிகமாய்த் தங்கமது பலமும்நாலே. 286

பலம்நாலு ரெண்டுமொன்றா யுருக்கிநீயும்
பாகுபெறக் கல்வத்தி லுடைத்துக்கேளு
கலநாகக் கெந்தியது பலமும்நாலு
கணக்காகச் சூதமது பலமும்நாலு
தலமாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
தான்வழித்துக் காசியென்ற மேருக்கிட்டு
உலமாகப் பனிரெண்டு சாமந்தீதான்
உறுதியா யெரியிட்டுப் பின்புவாங்கே. 287

வாங்கியே புகைநீரைப் பின்புவிட்டு
வடிவாக அதைவறுத்துச் சொல்லக்கேளு
தூங்கியே திரியாமல் மேருக்கிட்டுத்
துடியாகப் பன்னிரண்டு சாமந்தீதான்
பாங்கியே யெரியிட்டு உடைத்துப்பாரு
பதிவாகச் செந்தூர முருக்கம்பூவாம்
தாங்கியே நபிமாரைத் தொழுதுபோற்றித்
தாக்கிடவே நவலோகம் நூற்றுக்கொன்றே. 288

ஒன்றாகத் தொழுதிடவே மாத்துக்கேளு
உறுதியாய்ப் பதினாறு மாற்றுக்காணும்
கன்றாக விற்றுமே செலவுசெய்து
கந்திரிக ளாக்கியே சோறுதன்னைப்
பன்றாக எல்லோர்க்குங் கொடுத்துப்பின்பு
பதிவாகத் தொழுதுநீ பாரிலேதான்
நன்றாகப் பள்ளிவா சலைத்தான்கட்டி
நாடியே நபிமார்போ லிருந்துவாழே. 289

இருந்துமே செந்தூரங் குன்றியுண்ண
இதமாக மண்டலத்திற் காயசித்தி
மருந்துமே லோகசித்தி சணத்தில்சித்தி
பதிவாக நரைதிரைக ளற்றுப்போகும்
வருந்தியே திரியாமற் சித்திமெத்த
வடிவான நாகச்செந் தூரந்தன்னை
நருந்துமே நாடியே வைத்துநீயும்
நலமாக வுண்டுபார் நாட்டிலோரே. 290

நாட்டிலே உண்டிடவே நரைகள்போகும்
நாடியே விந்திறுகும் மேனிதங்கம்
பாட்டிலே சொன்னதுபோல் வைத்துநீயும்
பதிவாக உண்டிடவே பலனுமாகும்
ஏட்டிலே யெழுதிவைத்த படியேசெய்து
இதமாகப் பாகமது உறுதியாகக்
கூட்டியே செய்துபார் குணமதாகும்
கூடியொரு காரியத்தைச் செய்துபாரே. 291

செய்திடவே நாகத்தின் வர்ணம்போலச்
சிறப்பாகக் கண்டதொரு கனியுமாகும்
மெய்திடவே சனபேதி சத்தபேதி
வெற்றிபெறப் பொருளாகுஞ் செய்துபாரு
வைதிடவே வர்ணங்கள் ரெம்பவுண்டு
வாதாடிச் சண்டைகொண்டு வழக்குச்செய்து
நைதிடவே பாகமாய்ச் செய்துநீயும்
நாடியே யிருந்துநீ வாழ்வாய்காணே. 292

வாழவே நாகச்செந் தூரந்தன்னை
வைத்துமே ஜீவனங்கள் மிகவேசெய்து
நாழவே கன்னியா குமரிக்குத்தான்
நாடியே ஒத்தாசை மிகவுஞ்செய்து
பாழவே சுண்ணங்கள் மிகவுஞ்செய்து
பதிபாக மாகவே யிருந்துநீயும்
காழவே உலகத்திற் கனிந்துவாழு
கனிவாகப் பொருளறிந்தால் கணக்குமாமே. 293

கணக்காக மெய்யறிந்த வாதிதானும்
கருதியே பொருளறிவான் கண்டுகொள்வான்
தனக்காகத் துயரமில்லை பொருளைக்காண்பான்
தாட்டிகவான் வாதங்கள் பண்ணிப்பார்ப்பான்
உனக்காக ஒருவரிடஞ் சொல்லமாட்டார்
உறுதியாய்ப் பேசுவார் உற்றுப்பாரார்
குணக்குத்தான் வாராமற் பேசுவார்கள்
குடிகெடுப்பு யில்லார்கள் குணமுமாமே. 294

குணமாக நபிமாரைத் தொழுதுபோற்றிக்
குண்டலியைத் தானசைத்துத் தொழுவாரப்பா
பணமாக ரெம்பவுந்தான் செய்வாரப்பா
பத்திமுத்தி வயிரமா யிருப்பாரப்பா
துணமாகச் சைதன்ய யோகஞ்செய்வார்
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுஞ்செய்வார்
உணவாக நம்பியே செய்வாரப்பா
உத்துமெள்ளச் செம்பைத்தா னெடுப்பார்பாரே. 295

எடுப்பார்க ளறிவுள்ள நாயன்மார்கள்
இதமாகப் பொய்சொல்வார் நிலைத்தவாதி
அடுப்பார்கள் கெவுனசித்தி ஆடுவார்கள்
ஆண்மைதிமிர் ரெம்பவுண்டு அன்புபெற்று
படிப்பார்கள் பலகலைநூல் பக்திமிக்க
பரிவுடனே நிலையாக பக்திசெய்வார்
கொடுப்பார்கள் ரசவாதத் தொழிலைச்செய்வார்
குற்றமற விருப்பார்கள் கூடுவாரே. 296

கூடுவார் வெகுபேர்கள் நபிமார்தானும்
கூக்குரலாய்ப் பேசார்கள் வாதந்தன்னைத்
தேடுவார் மவுனமா யிருந்துகொண்டு
திடமாக நூலைத்தான் வசனிப்பார்கள்
பாடுவார் வசனத்தைக் கேட்டுக்கேட்டுப்
பத்தியுடன் சரக்கைத்தான் சோதிப்பார்கள்
நாடுவார் செந்தூர மிகவுஞ்செய்வார்
நானிலத்தி லவர்பேரு விளங்கத்தானே. 297

விளங்கவே மக்காவின் தேசந்தன்னில்
விடுபட்ட நபிமார்கள் கோடாகோடி
அளம்பவே பொன்செய்வார் வெள்ளிசெய்வார்
அடைவாக அயச்செம்பை யெடுப்பாரப்பா
களம்புவார் பூனீறு மிகவெடுப்பார்
காரியமாய்ச் சவுக்காரஞ் செய்வார்பாரு
தளம்பவே துருசதுவை நீற்றுவார்கள்
தாளகத்தை நீத்தியே தாக்குவாரே. 298

தாக்கியே வெடியுப்புச் சுண்ணஞ்செய்வார்
சரியாகச் சரக்கெல்லாங் கட்டிநீற்றிப்
பாக்கியமாய் நவலோகந் தன்னையெல்லாம்
பதிவாகப் பழுக்கைவைப்பார் பக்திமுக்தி
நோக்கியே தொழுவார்கள் நுணுக்கம்பார்ப்பார்
நொடிக்குள்ளே சகலமெல்லாஞ் சித்திசெய்வார்
தூக்கியே கெவுனமதில் பறப்பாரப்பா
துடியான நபிமாரை வணங்குவாரே. 299

வணங்குவார் பொருளறிவார் மார்க்கமாக
வடிவாக அயச்செம்பு செய்வார்பாரு
இணங்குவார் ரசக்குளிகை கட்டுவார்பார்
இதமாகச் சுரபிமணி செய்வாரப்பா
கணங்குவார் தர்மங்கள் மிகவுஞ்செய்வார்
காரியமாடத் தாம்பூரச் சுண்ணஞ்செய்வார்
குணங்காமல் மலைகளிலே சஞ்சரிப்பார்
கூரறிவர் பிருந்திடுவார் கொள்கைதானே. 300

கொள்கையாய் நபிமாரைத் தொழுதுபோற்றிக்
குண்டலியைத் தானசைத்துத் தீன்தீனென்பார்
வள்கையாய் ரொட்டிதின்பார் சத்தோஷிப்பார்
வாதங்கள் மிகச்செய்வார் வருத்தமில்லார்
உள்கையாய் செய்துமே கடையில்விற்பார்
உற்றுணர்வார் நூல்மர்மங் கண்டுதேறி
அள்கையாய் சந்தோஷ மிகவேசெய்வார்
ஆடுவார் பாடுவார் நபிமார்தானே. 301

தானென்ற சகலநூ லெல்லாம்பாடிச்
சமுசயங்க ளில்லாமற் சுண்ணகாண்டம்
வானென்று பாயவே வாதமெல்லாம்
வகைகண்டு துகைகண்டு வருத்தமில்லா
நானென்று கைபாக வரிசைசொன்னேன்
நாதாக்கள் நபியினுட வழக்கம்பாடி
சானென்ற அறுநூறைச் சுருக்கிநானும்
சரியாகப் பாடுமின்னூல் முந்நூறுமுற்றே. 302

**யாகோபு சுண்ணம் 300**

**-முற்றிற்று-**

## சுண்ணம்-300

# அரும் சொற் பொருள் விளக்கம்

1. நபிமாரை - நபிநாயகத்தை.

2. களங்கு - ஒரு வகை மருந்து, உலோகத்துடன் தாளகம், மனோசிலை, வீரம், பூரம் போன்றவற்றை சேர்த்து செய்யும் ஒரு மருந்து. தாளகம் - ஒரு வகை சரக்கு, பாஷாணங்களில் ஒன்று.

3. கருவித்தை - மைவித்தை, தாட்டிகமாய் - எல்லோரும் நம்பத்தக்க வகையில், பாசி - நீரின் மேல் வளரும் ஒரு வகை தாவரம்.

4. சீவனங்கள் - உயிர்வாழ்வதற்கான, சீவிக்கவேண்டி; வித்துமே செலவு செய்து - விற்று, செலவு செய்தல், (தங்கம் செய்து விற்று உனக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொள்ள செலவு என்று பொருள்).

5. கைபாகம் - செய்முறை, சரக்குகள் கூட்டவேண்டிய அளவு முறை.

6. வாதமென்ற வெள்ளந்தன்னை - இரசவாதம் என்ற வெள்ளபெருக்கு; தொல்லுலகில் - பழம்பெரும் உலகில், இந்த உலகத்தில்; கோதிவிடுங் கிளிபோல - சொன்னதை சொல்லும் கிளிப்பிள்ளை போன்று.

7. ஐந்தாங்காய்ச்சல் - வெடிஉப்பு; பொற்றலை - ஒரு வகை மூலிகை.

8. சாரம் - ஒரு வகை வைப்பு சரக்கு; பட்சமொன்று - பதினைந்து நாள்; பனியில் - மார்கழி மாதப் பனியில் (மார்கழி தை மாதங்களில் இரவில் ஏற்படும் பனியில்)

9. கல்வம் - குழியம்மி, குழிக்கல், உரல்.

10. மடையன் - துத்தம், புகைநீர் - திராவகம்.

11. கடத்திலரை வாசியிட்டு - குடத்தின் பாதிவரை போட்டு; வாலை - ஒரு வகை சட்டி; முன்னீரைத் தள்ளிப்போடு - முதலில் வரும் நீரை, முதன்மையான நீரை; பின்னீரை வாங்கி - பிறகு

வரும்நீரை பிடித்துக்கொள், (அதாவது வாலலையை மூடி காய்ச்சும் போதும் முதலில் நீர்சொட்டும் அந்த நீரை எதுவும் செய்யாமல் ஐந்து நிமிடத்திற்கு பிறகு வரும் நீரை பிடிக்க வேண்டும்) நாடியெடு - கண்டுஎடுத்துக்கொள்.

12. பாணி - சாதாரண நீர்; முன்போல வங்கம் வாங்கே - முன்செய்தது போல் வங்கத்தை எடுத்து.

13. கவசம் - சரக்கின் மீது மருந்தை அரைத்து (அல்லது) மூலிகையை அரைத்துப் பூசும் முறைக்கு கவசம் என்று பெயர். புடமுற்சேவல் - சேவல் புடம், புடம் போடும் வகைகளில் ஒன்று.

14. கட்டியே - கவசம் செய்து, மேலே பூசியே.

16. ரவி - செம்பு, கழுதையுட அமுரி - கழுதையின் சிறுநீர், தாக்கிப்பார் - யெடுத்துப்பார், போட்டுப்பார்.

17. மாத்துதான் - மாற்றுதான், பொன் மாற்று

18. வங்கராஜன் - வங்கஜெயநீர்; வாதமென்றசொல்லேயில்லை - வாதம் என்றபெயருக்கே இடம் இல்லை, சத்துமில்லை - சத்து எடுக்க முடியாது. களங்குமில்லை - களங்கு செய்ய முடியாது. சொர்ணமில்லை - தங்கம் செய்ய முடியாது. யின்பமில்லை - இன்பம் அடையமுடியாது.

19. கருவை - சூட்சம், செய்முறை, நாகமொன்று - நாகம் என்ற சரக்கு ஒரு பங்கு; சேர்த்தாக்கால் கனிகளாகும். சேர்ந்தால் கல்லும் தங்கமாகும்.

20. சத்துக்கள் பலிதமில்லை - சத்துகள் எடுக்க முடியாது.

21. நீதியாய் விசாரித்து - முறையாக பெரியவர்களை சென்று அறிதல், முறையாக அறிதல். (இவ்விடத்தில் முறையாக பெரியவர்களை கேட்டு தெரிந்து கொள்ளாததால், என்று பொருள் கொள்ள வேண்டும் ஏனெனில் இந்த வரியின் கடைசியில் தெரியாதாலே என்று வருகிறது) யாணுவத்தால் - ஆணுவத்தால், ஆணவம் கொண்டு.

22. உலகத்திற்றான் - இந்த உலகத்தில்தான், வாதியை - இரசவாதம் செய்பவரை, புல்லர்கள் துர்நடத்தை உள்ளவர்கள் பத்துபேராய் - பத்து நபர்களாக, சுடுவார்கள் - வார்த்தையால் சுடுவார்கள், கெட்ட சொற்களால் வைவது.

23. அருப்பமாய் - அற்பகுணம் கொண்டவர் போல்.

24. வயிரவன்போல் - நாயைப் போல், சுட்டுக் கெட்டு - சரக்கை உருக்கியும் புடம் போட்டும் கெட்டு அலைவார்கள்.

25. நிலைத்தவாதி - இரசவாதம் சித்தியானவர்; மாயங்கள் - மயக்கும் பேச்சு.

26. வெடியைத்தாக்கு - வெடி உப்பைப் போடு, யிடைசமனாய் - சரிஎடையாய்; சுண்ணாம்பாம் - சுண்ணமாகும்.

27. கடையில் விற்கும் - கடைகளில் விற்கும், நிறையைக் கேளு - எடையைக்கேள், எடையின் அளவைக் கேள்.

28. பதியவரை - நன்றாக அரைத்து, செம்புஎட்டில் - எட்டு பங்கு செம்பில், மதியிலெட்டு - எட்டு பங்கு வெள்ளியில்.

30. வித்துமே - விற்று

31. காயம் - உடல்.

32. கனகம் - தங்கம், கடையில் வித்து - கடையில் விற்று, தரணியோர்க்கு - உலகத்தோர்க்கு, சுண்ணமென்ற காண்டத்துள்ளே - சுண்ண காண்டம் என்ற நூலிற்குள்ளே, பத்தியாய்ச் சோதித்து - முறையாக ஆராய்ந்து, மனதைஊணி - மனதை ஒரு நிலைபடுத்தி.

34. வாதம் பொய்யோ - இரசவாதம் பொய்யாக இருக்குமோ! சுருதிதனை அறியாத - வேதத்தை அறியாத (இந்நூலை அறியாதவர்) கன்னல்போல் - திருடரைப் போல், கபடதாரியைப்போல், இழுக்கானவாதி - இழிவான குணம் கொண்ட இரசவாதி.

35. மேவல் கேட்கும் - சொன்னபடி கேட்கும்.

37. ஆனந்தான் - எதை கூறுகிறார் என்று புரியவில்லை. புளிமிஞ்சில் - புளி அதிகமானால், உப்புவது மிஞ்சிற் - உப்பு அதிகமானால், கைப்பு - கரிப்பு, காரமிஞ்சில் - காரம் அதிகமானால், னிப்படிக்கு - இதுபோன்ற, இதுபோலவே, வாதமே - வாதமாகும்.

38. வருகவென்றாற் - வரவேண்டுமானால், புடமிறங்கும் - புடம்போட பலிதமாகும். கடத்தேற வேணுமென்றாற் - முன்னேற வேண்டுமானால்.

39. செலவு - சுருக்கான, சுலபமான. யாவாரைப் பஞ்சாங்கம் - இது ஒரு வகையான சரக்கு. முகத்தில் தூவ - உருக்கு முகத்தில், உருகும் பொழுது தூவினால்; குருக்கியே - உருகியே.

40. பிலக்கவே - பலக்கவே, சாமமொன்று - ஒருசாமம், தாக்கிப்பாரு - சுருக்கு தாக்கி, சுறுக்கு போட்டு.

41. மேனி - குப்பைமேனி.

42. முன்னுண்டை மேலே - முன் உருண்டை மேலே, குருவாகும் - குருமருந்தாகும், காகதுண்டி - குடவன். பித்தளை.

43. நொறுக்கி - பொடியாக்கி, தேங்கியே திரியாதே - ஏங்கி அலையாதே.

44. பாரிலே - நாட்டிலேயே, உலகத்திலேயே, உருக்குசெம்பு - உருக்கினால் செம்பாகும். களங்குவந்த யிடங்களெல்லாம்-களங்கு என்று சொன்ன இடத்தில் எல்லாம். வெட்டையாமே - நொறுங்கி நிற்கும், மடிந்து நிற்கும்.

46. மதியெட்டில்-வெள்ளி எட்டில் இவ்வேதை-இந்த வேதை இடைக்கிடை-எடைக்கு எடை. நீறு-சுண்ணம்.

47. காசிமேரு-காசி என்ற கூம்புக் குடுவை.

48. தன்னிலூட்ட-அதில் போட அதில் கொடுக்க வேதையாகும். தங்கமாகும் - பொன்னாகும். உண்டு தேறே-உட்கொண்டு உடலை தேற்றிக் கொள்.

49. பணமவ்வீதம்-பணஎடை அளவு '. ஆடுமாட்டை செய்யும் - வித்தை செய்யும் முறை உறுதியுள்ளவாதிக்கு உறுதியுள்ள நெஞ்சம் படைத்த இரசவாதம் செய்பவர், பாகமதை-கைபாகத்தை செய்முறை. தாட்டிகவான்-புத்திமான்.

51. கூக்குரலாய் செய்துமே-கூச்சலிட்டுக் கொண்டு ஆரவாரம் செய்து கொண்டு, கெட்டுப்போச்சு. - பலன் இன்றிப்போகும், சிதைந்து போகுதல்.

53. மூலிதேடி-பொன் செய்யும் மூலிகையைத் தேடி.

55. துவக்கமாக-புரியும்படி, வெளிப்படையாக, கண்டாக்கால்-செய்தாக்கால், பின்னமில்லாமலே-குற்றம் வராமலே, குறைகள் இல்லாமல்.

56. கேள்வியினால்-வாய் பேச்சினால், வாயின்மூலம், காண்டம் வேணும்-சுண்ண காண்டம் என்ற நூல் வேண்டும்.

57. அண்டரண்டம்-பிரபஞ்சம், இடை நேராய்-எடை சரியாய்.

63. கரியிலாட்டும் - சரக்கையெல்லாம் உருக்கி வேதையாக்கும். படுமுன்னே -சேர்க்கும் முன்னே, கொடுக்கும் முன்னே.

64. தமரிட்டு-துளைகள் செய்து

67. ஒன்றுயீய-ஒரு பங்கு கொடுக்க, ஒரு பங்கு போட

68. கெந்தியிட்டுத் தாரமிட்டு-கெந்தியும் அரிதாரமும்போட்டு. வாகாக-முறையாக.

71. முப்போடு-உப்போடு,

72. நீற்றினாக்கால்-சுண்ணம் செய்தாக்கால்

73. நால்வேதம் பிரித்துப்பாரே-நான்கு வகையான வேதத்தைக் கண்டு பார், தெரிந்துகொள்.

74. வினையக்கண்டு-செய்முறையாகக் கண்டு.

75. தூரயெறி-தூக்கி எரிந்துவிடு. நன்மையாகா-நன்மை பயக்காது.

74. பஞ்சமித்திரம்-சுத்தி செய்யும் மருந்து, இது நீர்ம நிலையில் இருக்கும்.

86. வங்கவெட்டை-மடிந்த வங்கம்.

87. குமரியன்னம்-கற்றாழைச் சோறு

90. தளகர்த்தன்-இரசவாதம் முடிக்க உதவியாய் இருப்பவன், (இருக்கும்) களிம்பறாதே-மாசு அகலாது, குற்றம் நீங்காது.

81. மட்டஞ்சேர்த்தால்-மட்டமானதைச் சேர்த்தால்,' பொன்னில்லை-தங்கமில்லை. வருத்தங்கள்-மனவருத்தம், மனதில் சங்கடம், மனக்கஷ்டம்.

94. கீழ்மேலிட்டு-கீழும் மேலும் போட்டு, சரக்குக்கு மேலும் கீழும் போட்டு.

95. கரண்டியிட்டு-அயக்கரண்டியில் போட்டு

96. கன்னிப்பால்-கற்றாழைப்பால் (கன்னிப்பாலைப் பற்றி கோரக்கர் நூலில் காண்க.)

98. முடியதுவும்-ரோமம் என்று வைத்து கொண்டால் அகஸ்தியர் தன்னுடைய நூலில் முடியை என்று கூறுகிறார். பலமுமுக்கால்-முக்கால் பலம், சூடனரை-அரைப்பங்கு சூடன், சூடன்-ஒரு வைப்பு சரக்கு.

99. பழச்சாற்றால்-எலுமிச்சம் பழச்சாற்றால்

101. வங்கம்-ஈயம், யீயம்

103. ஆக்கினை - சாபம்

106. நெரியிட்டு-எரித்து

107. காடை-புடம் போடும் வகைகளில் ஒன்று,' மேலங்கி-கவசம்.

108. அமுக்கியே-சுமத்தி

111. முன்னெடுத்த தாரமேலே-முன் எடுத்துக்கொண்ட அரிதாரத்தின் மேல்,

113. உண்டையெல்லாம்-உருண்டை எல்லாம். பதியவெரி-நன்றாக எரி.

115. நேரேகால்-கால்பங்கு. ஊதிபோடு-உலையில் வைத்துஊது.

118. தேசம்புக்கி-தேசம் சென்று. சின்ன பின்னமாகவே-தப்புத்தப்பாக, முறையில்லாமல்.

122. கருங்காலித்தடி-கருங்காலிக் கட்டை,

123. கிட்டம்-துண்டு துண்டாக, சட்டம் போல் தூள்தூளாக.

131. வாதங்கை பொத்திக்காட்டி-ரசவாதமானது கைபொத்திக் கொண்டு.

136. றிரிய வேண்டாம்-திரிய வேண்டாம், அலையவேண்டாம், ஒக்கப்பண்ணு-மனதைக் குவி, ஒரு நிலைப்படுத்து, சித்து-ஜாலம் செய்தல், சித்து விளையாடல் - வேடிக்கை காண்பித்தல்.

140. கலையம்-பாத்திரம் பானை, சாமமெரி-ஒரு சாமம் எரித்து

142. யிப்படிக்கு-இது போன்றே

159. மதுரகவி-இனிமையாகப் பாடும் கவிஞன். (பாடுபவன்)

169. பேதங்கள்-பிரிவினை, பிரித்துக் கூறுதல்.

161. அரப்பொடி-அயப்பொடி

162. கதிர்தனில்-சூரியனில்

163. கள்ளம்-குற்றம், கல்வத்திட்டே - குழியம்மியில் இட்டு.

164. ஜெயமாக-வெற்றிபெற, காரியம் முடிக்க, தரமஞ்சே-ஐந்து முறை.

165. மேவல் கேட்கும்-சொன்னபடி கேட்கும், சொன்னபடி செய்யும், வங்கம்-ஈயம், அயம்-இரும்பு.

166. அயயீயமாச்சு-அயம் ஈயமாக மாறியது.

171. வில்லைப்பண்ணி-பில்லைகளாகச் செய்து

173. காயசித்தி-காயம் அழியாமல் இருக்கும் சித்திக்கே காயசித்தி என்று பெயர்.

174. மேலேறும் கீழோடிடா - மேல் நோக்கிச் செல்லும் கீழ்நோக்கிப் பாயாது.

175. சீஷன்-சீடன்

177. அப்ரேகம்-ஒரு வகை பாஷாணம், ரெத்தவர்ணம்-சிவப்பு வர்ணம், கிருஷ்ணவர்ணம்-கரிய நிறம், கொற்றிலை-கொள்ளு என்ற மூலிகைகளின் இலை.

179. சூதம்-ரசம்.

180. என் வசனம்-என்னுடைய சொல்.

181. குக்குடத்தின் - கோழியின் (ஒரு வகையான புடமுறை)

183. நவலோகம்-ஒன்பது வகையான லோகங்கள்.

184. மெத்தவுண்டு - அதிகம் உண்டு.

186 கசடற்று-மாசு நீங்கி.

187. கிளிஞ்சில்நீர்-ஓர் வகை நீர். (இதைப் பற்றி கோரக்கர் நூலில் விரிவாய்க் காணலாம்.)

195. சடலமெல்லாம் - உடல் எல்லாம், உடல்முழுவதும்.

197. காந்தம்-ஒரு வகை உலோகம், இவற்றை சிலபேர்கள் கற்களாகவும் கூறுகின்றனர். (அதாவது சூரிய காந்தம், சந்திரகாந்தம்.)

206. மண்டலம்-48 நாட்கள்

211. வெடிஉப்பு-ஓர் வகை உப்பு, சீனம்-வைப்பு உப்பு, சாரம்-வைப்புச் சரக்கு, கல்லுப்பு-கடலுக்கடியில் இருக்கும் உப்புக்கல், பூநீறு-பூமிநாதம், கெந்தியுப்பு-கல்லுப்பும் கெந்தகமும் சேர்த்துச் செய்யும் மருந்து.

213. சூடனுட தீயில்-கற்பூர தீபத்தில்.

217. பத்தி முத்தி வைராக்கியங்கள்-பக்தி, முத்தியின் மேல் ஆசை, வைராக்கியம்-வைராக்கியம் என்றால் வெறுத்து ஒதுக்குதல்.

226. சகல நூலெல்லாம் பார்த்து-எல்லா சித்தர்களாலும் எழுதப்பட்ட நூல்கள் அனைத்தும் பார்த்து. வடநூல்-சமஸ்கிருத நூல்.

227. வர்மங்கண்டு-மர்மத்தைக் கண்டு.

234. கெருடனுட கிழங்குச் சாறு-ஓர் வகை மூலிகையின் கிழங்குச் சாறு. சாம்பிராணி-வைப்புச் சரக்குகளில் ஒன்று.

235. குங்கிலியம்-வைப்புச் சரக்குகளில் ஒன்று, அன்னமென்ற பேதி-அன்னபேதி உபரசத்தில் ஒன்று.

236. லிங்கம்-இயற்கையில் கிடைக்கும் பாஷாணம். இதைச் செயற்கையாக வைப்புச் சரக்குகளிலும் கூறப்படுகிறது.

254. யெள்ளெண்ணெய்-நல்லெண்ணெய்.

255. விஷ்ணுவின் கரந்தை-விஷ்ணு கரந்தை ஓர் வகை மூலிகை.

259. யாகோபு நூலின் விவரம்.

| | | |
|---|---|---|
| வைத்தியம் | - | 700 |
| பஞ்சமித்திரம் | - | 300 |
| களங்கு | - | இரண்டு காண்டம் |
| களங்கு | - | 600 |
| களங்கு | - | 155 |
| சூஸ்திரம் | - | 16 |
| சூஸ்திரம் | - | 9 |

| | | |
|---|---|---|
| சுண்ணம் | - | 600 |
| சுண்ணம் | - | 300 |
| சுண்ணம் | - | 155 |
| தண்டகம் | - | 110 |

266. திரா-நவலோகங்களில் ஒன்று.

271. நரை திரைகள் - கண் மறைப்பும், முடி நரைத்தலும் அகலும்.

225. ரசப்பதங்கம் இதைப் பற்றி எமதுவெளியீடான போகர் 7000த்தின் முதல் காண்டத்தில் காண்க.

282. கொடிய சுண்ணம்-மிகுந்த காரமுள்ள சுண்ணம்.

298. சவுக்காரம்-இது ஒரு வைப்பு மருந்து.

உ

யாகோபு முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# லோக செந்தூரம் 300

## காப்பு

கயிலாசக் கணபதிதன் றாள்பணிந்து
கனகமயி லேறுமுரு கனையும்போற்றி
அயிலமெல்லாம் நிறைந்திருந்த அம்மன்பாதம்
அடுத்துநின்ற பரமசிவன் பாதந்தன்னை
ஒயிலாகத் துதிசெய்து மனதுள்வைத்து
ஒழுங்காக எழுநூற்றைச் சுருக்கியானும்
குயில்போலே பாடினேன் முன்னூறுதன்னில்
கொட்டினேன் வாதவயித் தியமுந்தானே. 1

ஆகுவா கனமேறுஞ் செல்வன்றன்னை
அடுத்துநெஞ்சி லுறுதிசெய்து முனிநூல்பார்த்து
பாகுவாய்ச் சோதித்துப் பாகந்தன்னைப்
பார்த்துமே ஆயிரமும் பாடினேன்யான்
வாகுபெற அதைச்சுருக்கி எழுநூறுபாடி
வகையாக அதைச்சுருக்கி முன்னூறாக
யாகோபெனப் பேராகிப் பாடினேன்யான்
அடுத்துமே பெரியோர்க ளருளாற்றானே. 2

### சுக்கான் கல்லுச் சுண்ணம்

சுக்கான் கல்லெடுத்துப் பாண்டத்திட்டுச்
சுத்திசெய்யப் பூநீரு மரக்காலாறு
மிக்கான கற்சுண்ணம் பூநீறுநேரே
மிகவளந்து விட்டுடனே பாணிரெட்டி
தக்கவிட்டு அடுப்பேற்றி யெரித்துநன்றாய்த்
தனையெடுக்கக் கல்லெல்லாங் கட்டிப்போகும்
சொக்கயெடு புறம்பாக வைக்கச்சொன்னார்
சுத்தியுள்ள முறையாகும் பாகந்தானே. 3

நல்லாகக் கட்டினதோர் சுக்கான்றன்னை
நாடியே பத்தைந்து கரியில்வைத்து
மெல்லவதை நாள்மட்டும் உரைக்கஊது
மீறியது கடுஞ்சுண்ண மாயிருக்கும்
வல்லமையாய்க் கல்லெல்லா மூதித்தானே
வகைபெறவே யெடுத்துமண் பாண்டத்திட்டு
சொல்லரிய சவுக்கார நீருதன்னைச்
சுருதிதனில் யாகோபு சொன்னவாறே. 4

## உப்பு

புண்டரிக யிலைகொய்து மேஷத்தோலிற்
போட்டுவைக்கச் சந்திரன் முன்சலமும்ரெம்பும்
கண்டவுட னெடுத்துசவுக் காரநீரில்
காட்டியிடு ஒட்டிரெட்டி பனிநீர்ரெம்ப
கொண்டுஅதை மண்டலத்தில் மூடிவைத்துக்
குற்றமறப் பார்க்கஉப்பு மேலேவந்து
நின்றவுடன் வழித்தெடுத்துப் பீங்கானிலிட்டு
நிர்ணயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. 5

## வழலை உப்புச் சுண்ணம்

படர்ந்ததொரு உப்பைவழி கல்வத்திட்டுப்
பதியவரை வெண்கருவால் வில்லைதட்டி
அடர்ந்தகதிர் முன்வைத்து ஊதிப்போடு
அதுகடுமை யாகிவிடும் வழலைச்சுண்ணம்
துடர்ந்துயெடு புறம்வைத்துச் சீனந்தன்னைத்
தூக்கியெடு சேரிரண்டு சட்டிதன்னில்
வடர்ந்தபிண்டச் சுண்ணநீர் பாதியிட்டு
வண்மைபெறப் படிகார மதின்மேல்வையே. 6

## சீனச்சுண்ணம்

காரம்வைத்துக் கிளிஞ்சிநீர் பாதியிட்டுக்
கணக்குடனே யதையமுழ்த்தி மேலேதானும்
பாரம்வைத்து அடுப்பிலிட்டுக் கடுமையாகப்
பத்திரண்டு சாமம்நீ யெரித்தெடுக்க
கோரமதாய்ப் பொங்கியது உண்டைபோலாங்
குறித்துயெடு கல்வமிட்டுப் பின்புநீயும்
நேரமதாய் வெண்கருவு மெருக்கன்பாலும்
நேராக விட்டுநிழல் வைத்துக்கேளே. 7

திரிநாள்வைத் தெடுத்திருந்துச் சீனந்தன்னில்
திட்டமதாய் விட்டரைத்து வில்லைதட்டிக்
குறியான கதிர்முன்னே வைத்தெடுத்துக்
குணமாக அணலில்வைத் தூதநீறும்
அறிவாலே யெடுத்துக்கல்வ மிட்டுநேரே
ஆதிசவுக் காரமிட்டு அரைமுன்னீரால்
சரியாக அரைத்துவில்லை கதிரில்வைத்துச்
சத்தியமா யஞ்சுசுண்ணம் மேலேகட்டே. 8

### சவுக்காரச் சுன்னம்

கட்டியங்கி தன்னிலிட்டுக் கவசந்தள்ளிக்
கணக்காகப் பிரித்திடவே தந்தம்போலாம்
கொட்டியதேள் போலாகுஞ் சவுக்காரந்தான்
கொங்கணரு முனிவோருஞ் சித்தர்தானும்
கெட்டியாம் மறைத்துவைத்த புதுமைதன்னைக்
கீர்த்திபெற இந்நூலிற் சொன்னேன்யானும்
நட்டியாய்ப் போகாது வழலைச்சுண்ணம்
நாடியே யாகோபு நலஞ்சொன்னாரே. 9

### அரிதாரச் சுன்னம்

பொய்யாது சவுக்காரச் சுண்ணந்தன்னைப்
புகலரிய பலம்நிறுத்து வீரங்காலாம்
மெய்யாக அரைக்கருவுந் தெளிந்தநீரில்
மேன்மைபெற மடலினிய அரிதாரத்தை
வையகத்தி லாட்டமுரி சுருக்குத்தாக்கு
வகையாகச் சுத்திசெய்து பின்புநீயும்
கையாகச் சவுக்கார மேலேகட்டிக்
காடையிட அரிதாரம் நீறுமாமே. 10

### துருசுச்சுன்னம்

மடலினிய அரிதாரஞ் சுண்ணமாகும்
மாட்டியெடு கல்வமிட்டு வீரங்காலாம்
திடமினிய கல்வமிட்டு அரைமுன்னீரால்
தெளிவரைத்து துருசின்மேற் கட்டியங்கி
புடமிட்டு நீலனையே யெடுத்துப்பாரு
போக்கோடே பசுப்பில்லை பொன்போலாகும்
கடகடென நடந்துவிடுஞ் சூதந்தன்னைக்
கட்டிக்கரி தனிலாடுஞ் சூதந்தானே. 11

## ஏமவித்தை

சூதத்தைக் கட்டிக்கரி தன்னிலாடுஞ்
சுயம்பான வாதமொடு வயித்தியமாகும்
வேதத்திற் சொன்னதுதா னிந்தமார்க்கம்
வெற்றிதருந் தாளகத்தை நீற்றுமார்க்கம்
பாதமது நடத்தாமற் பண்ணிவிக்கும்
பலிப்பாகும் யெல்லாமுஞ் சித்தியாகும்
காதமது நிமைக்குமுன்னே ஓடலாகும்
கருத்தாக யாகோபு சொன்னவாறே. 12

கட்டியதோர் சூதத்தைக் குகையிலிட்டுக்
கனிந்துநின்று உருகையிலே நாலிலொன்று
விட்டிடுநீ யேமமது நாலிலொன்று
வீதமிடை நாகமிடு உருகுமெல்லாம்
எட்டியே எட்டுரெண்டில் நூற்றொன்றிட்டால்
இனிதான யேமமாம் நல்லவித்தை
செட்டிகையி லேறுமிது வித்துநீயும்
சித்துபெறச் செலவுசெய்து ஞானம்பாரே. 13

தொனியான ஞானமது விளங்கச்சொன்னேன்
சூட்சமதை யறிந்துநீ செய்துகொள்ளு
முனிவோர்க ளிப்படியே யிருந்துநல்ல
முறைகண்டார் புத்தியில்லார் கருத்தினுள்ளே
இனிதான பொருளாசை யதனாற்றர்மம்
ஏழைகளுக் கீயாம லீனமான
அனியாயஞ் செய்தாக்கால் வருமோவாதம்
அமடுபடு வாரென்றார் யாகோப்தானே. 14

## தாம்பூரச் சுண்ணம்

சுத்தியுள்ள தாம்பூரத் தகடதாக்கிச்
சுருதியுள்ள சூடனிடை கண்டதிப்பிலி
நத்தியரை அருக்கன்பால் முரிந்தநீரால்
நாடியிடு செம்பின்மேற் கவசங்கட்டி
சத்தியதாய்ப் புடம்போட்டுக் கவசம்நீக்கிச்
சொகுசாக யெடுத்துப்பார் வெட்டையாகும்
சத்தியமா யெடுத்துகுழிக் கல்வமிட்டுச்
சலுதிபட வரையெனயா கோப்சொன்னாரே. 15

கடுமையுள்ள தாம்பூர வெட்டைதன்னைக்
 கல்வமிட்டு யிடைசேரு சீனச்சுண்ணம்
அடுமைபெற வெண்கருவா லரைத்துச்சாமம்
 அதையெடுத்துக் கதிர்முன்னே காயவைத்து
நடுமையம் வைத்துச்சர உலையிலூது
 நலமாக மூவேழு தரத்தில்நன்றாய்
தடுமாறத் தந்தம்போற் சுண்ணமாகும்
 தாட்டிகவான் யாகோபு சொன்னவாறே. 16

நல்லசெம்புச் சுண்ணமதை நாவிலிட்டால்
 நல்கிடுமே குன்மமெட்டும் வாங்கிப்போகும்
கொல்லவந்த கூத்தனுமே அஞ்சிநிற்பான்
 குணமறிய வாதமெல்லாங் குடிவிட்டோடும்
சொல்லரிய பற்பத்தால் வெகுநோய்போகும்
 சூட்சமுள்ள தாம்பூர பற்பந்தன்னை
வல்லமையா யுண்டவர்க்கு மகத்தாஞ்சித்தி
 வையகத்தில் யாகோபு வகைசொன்னாரே. 17

## அயச் சுண்ணம்

நல்லிரும்பு ஓரிடையாங் காந்தம்நேராய்
 நாடியரை வாழையுட கிழங்குச்சாற்றால்
மெல்லவே வில்லைகதிர் முன்னேவைத்து
 மேன்மைபெறச் சரவுலையில் வைத்துஊது
முல்லைமலர் போலாகும் நிறமுந்தானும்
 மூவாறு தரந்தனிலே முத்துப்போலாம்
வல்லமையாய்ப் பொன்பணம்போ லுண்டுபாரு
 வையகத்தில் யாகோபு வகைசொன்னாரே. 18

இரும்புவெள்ளை திரிகடுகி லிருநேரங்கொள்
 எடுத்தபிணி தசவாய்வு யேங்கியோடும்
துரும்புபோ லிருந்தவுடல் தூணதாகும்
 துப்புரவாய் விந்துகட்டுந் தாதுவெல்லாம்
விரும்பியந்த யிருகண்ணுஞ் சிவப்பாய்க்காணும்
 வெற்றிதரு முடல்முத்த மிகவுண்டாகும்
நரம்புகளு மலர்வாச மேனியாகும்
 நாதாந்த யாகோபு நாட்டினாரே. 19

செம்புருக்கி அயப்பற்பம் நூற்றிலொன்று
சேர்த்திடவே காஞ்சனமாம் செய்கைமெத்த
தெம்புடனே ஞானத்தை மிகவும்பார்த்துத்
திடமாக உறுதியாய் இருந்துநன்றாய்
தும்பமறச் சுருதிநூ லறிந்துதேரு
துப்புறவாய்க் காயசித்தி துலங்கப்பண்ணும்
வம்புபடா திருவென்று யாகோபுசொன்னார்
வகையாக அயப்பற்ப முண்டுதேறே. 20

## திரிவங்க செந்தூரம்

திரிவங்கம் பலம்நேராய்க் கரண்டியிட்டுத்
திட்டமதா யுருக்கியன்ன மீதிற்சாய்த்து
அரிவாகக் குகையிலிட்டு நாலத்தொன்று
அரன்பீஷ மிட்டுநல் லெண்ணெய்யூற்று
பிரிவாகப் பார்த்தெடுத்து ஆறவைத்துப்
பிசகாமல் கல்வமிட் டுடைத்துநீயும்
சிரியவய துள்ளபிள்ளை போடும்பாக்குச்
சிறக்கயிடி வெற்றிலைநேர் சேர்த்துக்கொள்ளே. 21

சேர்த்துயிடி சுண்ணமிட்டு யிடித்துநையச்
சிவப்பாகும் பிழிந்தெடுத்துச் சீசாதன்னில்
பார்த்துவிட்டு அரைவில்லை கதிரில்வைத்துப்
பக்குவமாய் மூன்றுபுடம் போடச்செம்பாம்
நேர்த்தியாய்ப் புரம்வைத்துத் தாரம்தன்னை
நிர்ணயமா யெடுத்துக்கச டகற்றிநன்றாய்
சார்த்திடுவீர் திரிவங்கம் நாலுக்கொன்று
சாரித்துச் சேர்த்துமுன் னீராலாட்டே. 22

ஆட்டிவில்லை கதிரில்வைத்துப் புடமுமொன்று
அடைவாகப் போட்டுயெடு சிவக்கும்நன்றாய்
தாட்டிகமா யெடுத்துரவி நாற்பதுக்கொன்று
தாக்கிடவே காஞ்சனமாம் பணம்வீதம்
கூட்டியுண்ணச் சயகாசம் வெட்டைமேகங்
குணமாகும் வாதமுதல் மூலமெல்லாம்
நாட்டினிலே யில்லாமற் கடலேபுக்கும்
நாதாந்த யாகோபு நவின்றார்தாமே. 23

## யாகோபு

சூதமுதற் பதினெட்டுஞ் சேர்ந்துபோகும்
சொற்பெரிய மகோதரங்கள் சொல்லாதோடும்
ஆலைதனில் முரிந்தரசம் போலேயாகும்
அமடுபடு மனதையெல்லாம் பற்றுநீங்கும்
காலைதனி லிருள்கண்ட கலைபோலாகும்
கனிந்துநின்ற பவுத்திரங்க ளகன்றுபோகும்
வேலைகடல் நீர்தனிலே ஒழிந்துநிற்கும்
வேதாந்த யாகோபு விளம்பினாரே. 24

## திராவகம்

படைதுரத்து மரசனது பலமும்பத்து
படிகாரம் பலம்பத்து யிருபத்தஞ்சுமாகும்
கடையான கல்லுரலி லிட்டுமெள்ள
கலந்துயிடி தூளாகும் கலையத்திட்டு
நடைபெறவே வாலையொடு மூடிச்சீலை
நன்றாகச் செய்துகதிர் முன்னேவைத்து
விடையேரி நிலைபோலே யெரிக்கவெண்ணீர்
வீழ்ந்துவரும் பிடித்துஅதை வீசிடாயே. 25

வெள்ளைநீர் தள்ளியே நடுநீர்தன்னை
விரும்பியெடு சீசாவி லடைத்துநீயும்
துள்ளவே கடைநீரை பிடித்துவைத்துத்
துடியாக யிந்நீரின் மகிமைதன்னை
கொள்ளவே நடுநீரி லிங்கமிட்டுக்
குறியாக விட்டுஅரை ரசமடங்கும்
தள்ளாதே கடைநீரு யிரதம்பூக்கும்
தாட்டிகவான் யாகோபு சொன்னவாறே. 26

## வாலைரசம்

சாதிலிங்கஞ் சேரிரண்டு கல்வத்திட்டுச்
சாதித்து நடுநீராற் சாமமாட்டு
வாதியெடு மண்பீங்கான் தன்னிலிட்டு
வறுத்ததையும் உமிநெருப்பில் நீர்சுண்டத்தான்
சோதினையாம் கலசமிட்டு அதற்குமேலே
சுகமாக மேற்கலச மூடிச்சீலை
பாதிநடு வரையிலிடு சீலைமண்ணைப்
பக்குவமா யெரிரசமாம் பகர்ந்தேன்யானே. 27

## வாலை ரசப்பதங்கம்

எரியிட்ட லிங்கரசம் பலமும்நாலு
எடுத்துநிறு புறம்பாக வைத்துநீயும்
கூரியெடு கல்லுப்புப் படியும்நாலு
கொட்டியே சட்டியிட்டு வறுத்தெடுத்து
வாரியிடி செங்கல்மா படியுமொன்று
வகையாக யிரண்டுமொன்றாய்க் கலந்துநன்றாய்ப்
பரப்பியே சட்டியிட்டு அமுழ்த்திநன்றாய்ப்
பதியநடு வரைதனிலே குழியாய்ப்பண்ணே. 28

பண்ணியிடு குழியதனில் ரசமுமிட்டுப்
பதியவதின் மேல்மூடி யுளுந்துச்சீலை
நண்ணியிடு கெட்டியாய்ச் சீலைசெய்து
நாட்டிடுநீ அடுப்பதனில் யேற்றிமெள்ள
தன்னிழல்போ லெரித்துயெடு நாழிநூறு
தடையறவே யேறியது பற்பமாகும்
கண்ணிமைப்போல் மயிர்க்குச்சி தன்னாற்றானே
கருதிவழி யாகோபு சொன்னவாறே. 29

## நாகரசப் பஸ்பம்

சீறுகண்ணு நாகத்தைக் கரண்டியிட்டுச்
சிறுகயெரி உருகுமது யெட்டில்ரெண்டு
வேறுவினை வாராமல் ரசத்தையூற்று
வீரிடுமே யெடுகல்வ மிட்டுக்கேளு
பாருலகிற் படைராஜ னிடையேசேர்த்துப்
பதியவரைப் பொடியாக்கிச் சாமமொன்று
காருலவ நாகவல்லிச் சாற்றாலாட்டிக்
கதிர்முன்னே வில்லைதட்டிக் காயப்போடே. 30

காயவைத்துப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
கனகமுள்ள பற்பத்தைக் கல்வதிட்டு
மாயவே முன்சாற்றா லரைத்துநீயும்
வளமாக முன்போலே புடமுமிட்டு
சாயவே யெடுத்துவிடு வன்னிபற்பம்
சரியாகச் சேர்த்துஅன்ன மிட்டுஆட்டி
ஞாயமாய் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாட்டியிடு கடந்தனிலே வைத்துமூடே. 31

மூடியதைச் சீலைசெய்து சாமம்ரெண்டு
முக்கியமா யெரித்துயெடு பிரித்துநன்றாய்
ஓடியே மேலேறும் வழித்துநீயும்
உண்மைபெற அடிதனிலே நின்றநாகம்
தேரியே பற்பத்தோ டரைத்துவில்லை
செங்கதிரிற் காயவைத்துத் திறமாய்நன்றாய்
சாரியே முன்போல யெரித்துவாங்கு
சரியாக யாகோபு சாற்றினாரே. 32

இப்படிக்கு ஐந்துதர மெரிக்கநன்றாம்
ஏறாமல் அடியில்நிற்குந் துருசிற்செம்பு
முப்படிக்குக் கொடுத்துவிடு நூற்றுக்கொன்று
முனைபெருகிக் காஞ்சனமாம் பணமவ்வீதம்
தப்பறவே கொடுத்துவிடு வெல்லந்தன்னில்
தக்கவிஷ பேதியெல்லாந் தகர்ந்துநன்றாய்
துப்பரவாய்த் தீர்ந்துவிடும் நபியாம்யாகோப்
சொல்லியதோர் நாகபற்பச் செயலுமாமே. 33

உதிரத்திற் சூசிகா சோகைமாலை
உற்றுநின்ற பாண்டுவொடு மகோதரங்கள்
சூதந்தன்னி லிருந்துவிடு மூலமெல்லாம்
குடிபோகுங் குன்மங்க ளெட்டுந்தானும்
நிதமுண்ணு முதிரவலி நாபிச்சூலை
நிர்ணமாய் நின்றுவிடும் நீர்ச்சுரப்பு
பதகரத்தி லெலும்புகளு முறுக்குமேறும்
பாலித்தார் யாகோபு பரிவாய்த்தானே. 34

முத்திதரும் நாகபற்பம் வைத்துக்கொண்டு
முனிந்துகுரு பத்திரமாய்ப் புளிப்புத்தள்ளி
பத்தியதாய் நாளேழு உண்டபின்பு
பதிவான முத்தெண்ணெய் ஸ்நானம்பண்ணி
புத்தியினால் நசைதீர்ந்து போகும்பாரு
போக்கோடே பிழைப்புகள்தான் மிகவுண்டாகும்
சத்தியமா யிம்மருந்து செய்துகொள்ளு
சரியாகும் யாகோபு சொன்னார்தாமே. 35

### கருவங்கச் செந்தூரம்

காரீயம் கரண்டியிட்டு உருக்கிநன்றாய்க்
களக்கஅன்னந் தன்னிலிடு மூவேழ்தானும்
பாரியா யெடுத்துஅதை நையத்தட்டிப்
பதிவான கல்வமிட்டுச் சேர்தானொன்று
வீரியமா யரைத்துஅன்னந் தன்னாலாட்டி
விருதுபெற வில்லைதட்டிக் கதிரில்வைத்து
மூரியிரு பெரியபுடம் போட்டெடுத்து
முத்திபெறக் கல்வமிட்டு அரைத்துக்கொள்ளே. 36

### வீர ரசம்

அன்னத்தா லரைத்துவில்லை கதிரில்வைத்து
அடைவாக யிப்படிக்குப் புடமுமாறு
தன்னொத்துச் சத்தில்லா திருக்கும்நன்றாய்
தருகயெடு புடம்வைத்து யின்னங்கேளு
நன்னயமாய் வீரமது சேர்தானொன்று
நாட்டியே நல்லிரும்புப் பொடியும்ரெண்டு
கன்னலது கல்வமிட்டு அரைமுந்நீரால்
கருதரிய ரசமாகுங் கருத்துள்ளோரே. 37

மிகக்கருத்து வைத்துயிதைப் பாகமாக
மேதினியில் மனிதருண்ணு முப்புநாலு
செகம்படைப்புச் சட்டியிட்டு வறுத்துநன்றாய்ச்
செயமான செங்கல்மா வொன்றுகூட்டி
துவைபடவே உரலிலிட்டு யிடித்துநையத்
துடியான சட்டிநிறை யிட்டமுத்தி
அகப்படவே குழிநடுவாய்ப் பண்ணிவீரம்
அன்பான ரசமிட்டு மேலேமூடே. 38

### வீர ரசப் பதங்கம்

மூடிசட்டி வரையிட்டுச் சீலைமண்ணை
முடியவிட்டுக் கெட்டிபண்ணி அடுப்பிலேற்றி
வாடிவிற கதுபோடு கமலத்தீயாய்
வகைபெறவே யெரித்திடுநீ நாழிநூறு
ஓடியது மேலேறும் பதங்கபற்பம்
ஒழுங்காகு மெடுகரண்டி வைத்துநீயும்
கோடியிதின் முன்வைத்த வங்கம்நாலு
குணமான வீரபற்பம் பலமும்நாலே. 39

உலகெல்லாஞ் செயிக்குமுன் செந்தூரத்தில்
உடனேதான் சரியன்னத் தாலேயாட்டி
குலமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
குடியான கடமிட்டு மேலேமூடி
நலமாகச் சீலைசெய்து அடுப்பிலேற்றி
நாடியே யிருசாமம் கடந்தபின்பு
பிலமாக யெடுத்துயிந்தப் படியதாகப்
பிசகாம லெரித்திடவே பவளமாமே. 40

காரீயச் செந்தூரந் தனையெடுத்துக்
கணக்காக ரவிநூற்றி லொன்றுதாக்க
மீரியது காஞ்சனமாம் பணமவ்வீதம்
மிகஅந்தி சந்திமண் டலமேகொள்ள
பாரிலது பலபிணிக ளற்றுப்போகும்
பகராரிது யிந்தமுறை பரிவுமெத்த
மாரிபோ லாகுமிந்தச் செந்தூரத்தை
மதிபெருக உண்டவர்க்கு மகிமையாமே. 41

கரும்புரச முரித்தகட்டி தன்னிலுண்ணக்
கருத்தில்லா வாதமெல்லாங் கடலேபுக்கும்
இரும்புபோ லாகுமது சலமேகங்கள்
ஏங்கிநிற்கு மேகவெட்டை மூவேழ்போகும்
துரும்புபோ லேயிருந்த மேனிதானும்
தூணாகுஞ் சூலைபதி னெட்டும்போகும்
விரும்பினா லெல்லாமுஞ் சித்தியாகும்
வெற்றிபெற யாகோபு விளம்பினாரே. 42

நல்லினிய செந்தூரம் வைக்கநல்ல
நாடியிதில் ரசபதங்கம் சேர்ந்தாலப்போ
வல்லமையா யவிழ்தமது வலுத்துநிற்கும்
வடிவாகும் வர்ணங்கள் மிகவுமாகும்
சொல்லினிய காயசித்தி சுருக்கிலாகும்
தொன்மைதரும் ஞானங்கள் மிகவுமுண்டாம்
கல்லினிய தேகமது கற்றூணாகும்
கருத்துணர்ந்து யாகோபு கருதினாரே. 43

## அயச்செந்தூரம்

நல்லிரும்பு புளியிலைபோல் நையத்தட்டி
நாடியதைக் குகையிலிட்டு நெருப்பாயூதி
மெல்லவிரும் பிடைநாதங் கிராசமிட்டால்
மிகநிறைந்து வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
வல்லமையா யாரவிட்டுக் கல்வமிட்டு
வகையாக யிந்திடைக்குப் பாதிவீரம்
கொல்லஅதை விட்டரைத்துப் புகைநீராலே
கூட்டிஅங்கி புடமூன்று போட்டுக்கொள்ளே. 44

போட்டுயெடு செவ்வல்லி நிறமதாகும்
பூட்டிவிடு குழிக்கல்வந் தனிலேயிட்டு
நாட்டியெடு செந்தூர மிடையேவன்னி
நலமான பதங்கமதை நிறுத்துச்சேர்த்து
மூட்டுபுகை நீர்தன்னா லரைத்துச்சாமம்
முக்கியமாய் வில்லைதனைக் கதிரிலிட்டு
கூட்டுகட மீதடைத்து யெரிநால்சாமம்
குணமாக யிப்படிக்குத் தரமுமஞ்சே. 45

அஞ்சுதரம் யெரியிடவே அடியில்நிற்கும்
அடுத்துமெள்ள யெடுத்துரவி பத்துக்கொன்று
தஞ்சமுரக் கொடுத்திடவே யேமமாகும்
தனையெடுத்துப் பணவிடைதான் தேனிலுண்ண
கெஞ்சுமது நசலெல்லாங் கடலேபுக்கும்
கீர்த்திஅயச் செந்தூரங் கொள்ளச்சித்தி
பிஞ்சாகிக் காயாகிப் பழுத்தாப்போலே
பிரித்துரைத்து யாகோபு பேசினாரே. 46

கசடில்லா யிரும்புச்செந் தூரமுண்ண
கடல்புக்கும் நசையெல்லாங் காணாதோடும்
தசனாளிற் பித்தவெட்டை மேகம்போகும்
தக்கவலி குன்மமொடு சூலைவெட்டை
பிசகிவிடும் நீராம்பல் கவுசைபித்தம்
பேசரிய சிலேற்பனங்கள் மூலவாய்வு
நசையான பிணிபலவும் விக்கல்போகும்
நாட்டமுடன் யாகோபு நலஞ்சொன்னாரே. 47

இளைத்தவனு மிரும்பையுண்ண வலுமையுண்டு
இருந்திட்ட இரணியாக் கதனைப்போலாம்
தழைத்திட்ட மரம்போலா மேனிதானும்
சந்திரன்போற் குளிர்ச்சியுண்டாந் தேகந்தானும்
களைக்கவொட்டா நரம்பிருகும் போகமுண்டாம்
கரும்பாகும் சுவாசமது யிறுகியேறும்
சளைக்காது மாந்தளிர்போல் மேனியென்று
சாற்றினார் யாகோபு சரியாய்த்தானே. 48

## திரிகடுகுத் திராவகம்

திரிகடுகு மூவகையாம் படியளந்து
திறமாக உரலிலிட்டு யிடிக்கத்தூளாம்
அறிவுடனே பாணிரெட்டி அளந்துவிட்டு
அதைக்காய்ச்சிப் பாதியதா யிருந்தபின்பு
குறியாகக் கிசாயத்திற் பாதிஓமம்
கொட்டியிடு பொற்றலையும் பலமொன்றிட்டு
சிறிதான கலையமிட்டு மூன்றுநாள்வை
சித்திபெற யாகோபு செப்பினாரே. 49

கலையமதின் மேல்மூடும் வாலைதன்னைக்
கருதியிடு சீலைமண்தா னேழுசெய்து
சிலைபோலே அடுப்பிலிடு அங்கியிட்டுச்
சிறப்பாக நிழல்போலே யெரித்துப்பாரு
மலையருவி போல்வருங்காண் புகைநீர்தன்னை
வாங்கியடை சீசாவிற் பின்புநீயும்
விலைகொடுக்கும் பிணியாளர் தன்னைப்பார்த்து
விதமாகத் துட்டிடைதா னுண்ணச்சொல்லே. 50

நன்மைபடும் பிரமைமுதல் வாயுவெல்லாம்
நாடியே படுமிருமல் நலமதாகும்
குன்மவலி யெட்டுமெடு படுமேநன்றாய்
குணமாகு மசீரணமுந் தாகசோபம்
துன்பமுடன் செரியாமை பிடிப்புயெல்லாம்
தொல்லுலகி லோடிவிடும் புளிப்புத்தள்ளு
கன்மவினை தீருமென்று யாகோபுசொன்னார்
கருமானத் திராவகத்தை வைத்துக்கொள்ளே. 51

## காந்தச் செந்தூரம்

தகடினிய காந்தமது பலமும்நாலு
தாக்கியெடு குழிக்கல்வ மிட்டுவைத்து
நிகரான காணமது சட்டியிட்டு
நீரைவிடு ஒன்றுக்கு ரெண்டுதானும்
புகலரிய நாலிலொன்றாய்க் காய்ச்சிக்கொண்டு
பூட்டியரை காந்தத்திற் சாமம்நாலு
உகமாக வில்லைகதிர் காயவைத்து
உண்மையுடன் யாகோபு உரைத்திட்டாரே. 52

மூனுதர மரைத்துமுன்னீர் புடமுமிட்டால்
முனிவாகுஞ் செம்பத்தம் பூப்போலாகும்
தானுவன்னி பற்பமது யிடையேசேர்த்துத்
தாக்கிடுநீ முன்னீரா லரைத்துவில்லை
நானுவது கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
நாட்டியெடு கடமடைத்து மூடிச்சீலை
வானுதலா யெரியிட்டுச் சாமமொன்று
வகையாக மேலேதும் வண்மைதானே. 53

ஏறிநின்ற பதங்கத்தை அடியில்நின்ற
இதமான காந்தத்திற் சேர்த்தரைத்து
கூறிடுநீ முன்சாற்றா லரைத்துவில்லை
குணமாகத் தட்டிக்கதிர் காயவைத்து
பாரிவிடு கடந்தனிலே யடைத்துமூடி
பதிவாகச் சீலைமண்தா னேழுசெய்து
மூரியெரி யிப்படிக்குத் தரமுமஞ்சு
முயன்றுஅடி தனிலிருக்கு முன்புதானே. 54

செம்பரத்தம் பூநிறமாஞ் செந்தூரத்தைத்
தேனிலிட்டுப் பணவிடைதா னிருநேரங்கொள்
துன்பமறும் ஆவின்பா லூண்டால்மேனி
துலங்குமது செவ்வலரி நிறமேயாகும்
தம்பமறும் வாயுவெல்லாங் கீழேசாடும்
தடையறவே சிலேற்பனங்க ளொழிந்துபோகும்
அம்புவியிற் பேர்விளங்க யாகோபுசொன்னார்
அறிந்துரைத்த காந்தச்செந் தூரந்தானே. 55

தேனிலிடு குன்மவலி யெட்டுந்தீரும்
தீரமுள்ள சூலைபதி னெட்டுந்தீரும்
கூனிடுங்காண் வாதமுத லெல்லாம்நன்றாய்
குணமுள்ள மகோதரமும் பித்தவெட்டை
யோனிகுத்து புத்துகளு மொழிந்துபோகும்
உடல்பெருகும் விந்திருகும் உறுதிமெத்த
மேனியது பெருகுமது ரத்தமூறும்
மேன்மையுள்ள யாகோபு உரைத்திட்டாரே. 56

## கெந்தக பஸ்பம்

கல்கெந்தி தனையெடுத்துப் பலம்நிறுத்து
கருத்துகந்த அருக்கம்பால் தன்னிற்தோய்த்து
நல்லாக யெட்டுநாள் ரவியிலிட்டு
நாட்டியே யெருக்கிலையின் பழுப்பரைத்து
மல்கவிடு கவசமதைக் காயவைத்து
மயமாகக் குக்கிடத்தில் நீறுமாகும்
செல்லயெடு யாகோபு சொன்னாரிந்தச்
செயகெந்தி பற்பமதை வைத்துக்கொள்ளே. 57

பணவிடைதான் மதுவிலிடு மண்டலந்தான்
பகராரிய குஷ்டமொடு மூலவாய்வு
செணந்தனிலே ஒழிந்தோடும் ரத்தமூலம்
சிரசில்நின்ற பீனிசமுஞ் சொல்லாதோடும்
குணமாகுந் தமரகமாம் வாயுபோகும்
கொடும்பெரிய தோலதனிற் படரும்சட்டை
உணர்வாகுஞ் சொரிசிரங்கு போகுமென்று
உத்தமனார் யாகோபு உரைத்திட்டாரே. 58

## தாளக பஸ்பம்

மடலினிய அரிதாரம் பலமும்நாலு
மதிக்கயெடு சுண்ணநீர் தனிலேயிட்டு
திடமாக யெரித்துயெடு சுத்தியாகும்
தீர்க்கமா யெடுத்துஅப்பாற் சொல்லக்கேளு
விடமினிய தில்லைப்பால் தன்னிற்றோய்த்து
விட்டுயெட்டு நாள்கதிரிற் போட்டுநன்றாய்
கடமாக யெடுத்துப்பார் கட்டிப்போகும்
கருவில்பெரு யாகோபு கருதினாரே. 59

### படிகாரச் சுன்னம்

படிகாரம் கரியில்வைத்து ஊதச்சுண்ணம்
பார்த்தெடுத்துத் தில்லைப்பால் தனிலரைத்து
துடியான தாரத்தின் மேலேகட்டு
தூக்கிக்கதிர் காயவைத்துப் பின்புநீயும்
வடிவான வாரணத்தின் புடமுமிட்டு
வகையாக யெடுத்திடவே பற்பமாகும்
முடியவெடு தாளகத்தின் பற்பந்தன்னை
முக்கியமா யாகோபு முறைசொன்னாரே. 60

இடைபோகா அரிதார பற்பந்தன்னை
இதமான தேனிலிடு காசம்வாய்வும்
தடைபடுமே சயம்போகும் வாய்வுமாறும்
தப்பறவே மாறிவிடும் தரியாதங்கே
படைமுகத்தி லொப்பாரி யில்லாப்போல
பரிதான நகைக்கு அரிதாரபஸ்பம்
திடமாக முன்னோர்க ளுரைக்கக்கண்டு
தீர்க்கமா யாகோபு செப்பினாரே. 61

### சிங்கிச் செந்தூரம்

சிங்கியது பலம்நாலு கல்வத்திட்டுச்
சிறக்கவரை வச்சிரத்தின் பாலினாலே
முங்கவரை இருசாமம் வில்லைதட்டி
முத்திபெறக் கதிரில்வைத்துப் புடமுமிட்டு
தங்கயெடு யிப்படிக்கு அரைத்தரைத்துத்
தடையில்லாப் புடமூன்று போட்டுக்கொண்டு
மங்களமாய்ப் புரம்பில்வைத்து மார்க்கங்கேளு
மயமான யாகோபு வகைசொன்னாரே. 62

### அரிதார பஸ்பம்

சுத்தித்த அரிதாரங் கல்வத்திட்டுச்
சுருதிபெறச் சப்பாத்திக் கள்ளிவித்து
நத்தியெடு பழச்சாறு விட்டரைத்து
நால்சாம மரைத்துவில்லை கதிரில்வைத்து
புத்தியினால் கிளிஞ்சிநீர் தன்னிலிட்டுப்
புதிதாக யெரித்திடவே சிவந்துநன்றாய்
சத்தியமா யிருந்திடும் யாகோபுசொன்னார்
சரியாகச் சாதித்தால் தன்மைதானே. 63

மிருதார சிங்கிபற்பம் பலமுமொன்று
மேன்மைபெற்ற தாளகச் செந்தூரமொன்று
உறுதியாய்ப் பழச்சாறு விட்டுஆட்டி
உத்தமனே யிதையுமே வில்லைதட்டி
கெருவமுடன் கதிரில்வைத்துக் காய்ந்துநன்றாய்க்
கீர்த்திபெறப் பெரியபுடம் போட்டுவாங்கு
பரிதிநிறச் செந்தூர மாகும்பாரு
பகுத்துரைத்தார் யாகோபு பரிவாய்த்தானே. 64

துருசினுட செம்பதிலே இருபதொன்று
சேர்த்திடவே காஞ்சனமாம் பணமவ்வீதம்
வருசையா யுண்டிடவே. வெட்டைமேகம்
வகையான நீரழிவு யெரிவுகாந்தல்
பிரியமுள்ள சயரோகம் காசமெல்லாம்
பேர்சொல்ல நாடாது பிரண்டுஓடும்
சரியான பாகமிது செய்துகொள்ளு
சாற்றினார் யாகோபு சரியாய்த்தானே. 65

## வெள்ளைப் பாஷாணச் சுண்ணம்

எலிகொல்லி தனைநிறுத்துப் பலமும்நாலு
இதமான கல்வமிட்டு அரைதில்லம்பால்
வலியவரை இருசாமம் உண்டைபண்ணி
வளமாகக் கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து
சலியாம லடுப்பேற்றி எரிமுச்சாமம்
தாக்கியே முன்போலே யரைத்துஉண்டை
மலியயிடு முன்போலே வைத்துஐந்து
மதியாக யெரித்திடவே கட்டிப்போமே. 66

கனலிலிட வோடாது நிறங்குன்றாது
கட்டியிடை போகாது கரியிலாடும்
நினலிலிடு வெடியுப்புச் சுண்ணநீரால்
நிர்ணயமாய் அரைத்துவில்லை கதிரில்வைத்து
தனமுடனே கிளிஞ்சிநீ ரிதனினுள்ளே
தாக்கியிட்டு யெரிசாமம் யெடுத்துப்பாரு
உனதுபொருள் பாஷாணச் சுண்ணமாகும்
உண்மையுள்ள யாகோபு சொன்னவாரே. 67

## பாஷாணச் சூதபற்பம்

வெள்ளைப் பாஷாணபற்ப மிடையேசூதம்
விட்டுமே மேற்பதங்க மிடையேசேர்த்து
துள்ளவரை முன்பாலால் சாமமாட்டித்
துடியாக வில்லைபண்ணிக் கதிரில்வைத்து
மெள்ளவதைப் புடமுமிட்டு யெடுத்துக்கொள்ள
வெண்ணீராய்ப் பொருமியது சுண்ணமாகும்
கொள்ளையா வெள்ளிவித்தை வெள்ளீயத்தில்
கொடுத்திடுவாய் நூற்றுக்கு ஒன்றுதானே. 68

வெள்ளீயம் நூற்றுக்கு ஒன்றுதாக்க
விருதுபெற்ற ஓசையா நீரைவாங்கும்
துள்ளியெடு வெள்ளியது பத்துமாத்து
துதித்துநின்று விற்றுவதைச் செலவுசெய்து
தள்ளிவிடு காலமதைப் பின்புநீதான்
தடையறவே ஞானத்தைத் தாக்கிப்பாரு
கொள்ளிசுடும் வாதிக்கும் வெள்ளியாகும்
குணமாகும் யாகோபு குறித்தார்தானே. 69

பணவிடைதான் பாஷாண பற்பந்தன்னைப்
பார்த்தருந்த முடக்குகின்ற வாதந்தீரும்
சிணந்தனிலே பதினெட்டுச் சூலைபோகும்
சித்திபெரு மகோதரமும் ஆம்பற்கட்டி
குணமாகு மேகமுதல் வாயுவெல்லாம்
கொடுஞ்சுருக்கு குன்மமொடு படுமேகண்டீர்
மணமான பரிமளமாந் தேகந்தானும்
மதிபெருகும் யாகோபு வண்மையாமே. 70

## வெடியுப்புச் சுண்ணம்

அஞ்சான காய்ச்சல்வெடி யுப்புப்பத்து
அடுத்துநிறு சீனமது நேராய்க்கூட்டி
மிஞ்சாலே கல்லுரலி லிட்டிடித்து
மிரளாம லெலுமிச்சந் தோல்காலிட்டு
நஞ்சாகும் நய்யயிடி பழத்தோல்தானும்
நாடியே உப்போடு மெழுகாய்நிற்கும்
தஞ்சமுட னெடுத்துவில்லை தட்டிநீயும்
சாத்தியதோர் புதுச்சட்டி யடுப்பிலேற்றே. 71

## யாகோபு

ஏத்தியிடு பங்கியிட்டுக் கடுமையாக
    எரித்திடுநீ யொருசாமம் சென்றபின்பு
பார்த்தெடுநீ மல்லிகைப்பூப் போலேசுண்ணம்
    பாகமா யெடுத்துவைத்துப் பீங்கான்தன்னில்
சாத்திடுநீ சுடர்க்கொடியோன் றன்னைத்தானும்
    சரிசேர்த்து வெண்கருவாற் தாக்கியாட்டி
ஏத்திடுநீ பொடியாக்கிக் கரியில்வைத்து
    இனிதாக வறுத்துஅதை வில்லைதட்டே. 72

## செயநீர்

கட்டிகதிர் காயவைத்து ஊதிப்போடு
    கருவுற்ற சுண்ணாம்பாங் கருத்துள்ளோர்க்கு
கொட்டியிடு கல்வமிட்டுப் பொடியதாக்கிக்
    கூசாமற் காரசாரம் பொடித்துப்பின்பு
தட்டியெடு சீசாவி லிட்டுமூடித்
    தரமாகப் பூமிக்குள் புதைத்துவைத்து
கெட்டியாய்ப் பதினைந்து நாளைக்குள்ளே
    கிருபையுள்ள நீராகும் முறையைக்கேளே. 73

## பாஷாணக் கட்டு

செயநீரில் வீரமொடு பச்சைப்பூரம்
    சிறுகயிடு புனுகிட்டு வைத்துக்கொள்ளு
நயமாக லிங்கவெள்ளைப் பாஷாணத்தை
    நாட்டியிடு தாளகத்தைக் கவுரிதானும்
பயமாகச் சுத்திசெய்து முன்பாலாலே
    பதியவதைச் சுருக்கிட்டுப் பின்புநீயும்
அயமான கொறட்டாலே பிடித்துமெள்ள
    அதட்டியே செயநீரிற் தோய்த்திடாயே. 74

நனைத்துகரி யங்கிதனிற் குமுறவாட்டி
    நலமாகச் சாமமொன்று வாட்டிப்பின்பு
கனைத்துமே கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்துக்
    காட்டமா யெரியிடுநீ சாமம்நாலு
அனைத்துயெடு மறுபடியுஞ் செயனீர்க்குள்ளே
    அடைவாகத் தோய்த்துமெள்ள கரியில்வாட்டு
நினைத்தபடி மறுபடியும் சுண்ணநீரால்
    நிலைக்கயெரியென்று சொன்னார் யாகோபுதானே. 75

அடுத்துளடு எரித்தபின்பு கட்டுமாகும்
ஆண்மையிதைக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
தடுத்துநின்று உருகுமது வெள்ளிபோலாந்
தானெடுத்து நிறுக்கவது யிடைபோகாது
கொடுத்துவிடு லோகமெல்லா முருக்குவிக்கும்
கொள்ளையிது வாதமிது கவரோகோடி
தொடுத்துயிந்த வேதைமுகந் தெரியப்பார்த்தால்
தூயதொரு யாகோபு சொன்னார்தானே. 76

உப்பதனைச் சுண்ணமது செய்துபின்பு
உறவான பாஷாண மெல்லாங்கட்டும்
தப்பில்லை யிப்படிக்குக் கட்டிநீயும்
தனையெடுத்துக் கொடுத்துவிட யேமமாகும்
எப்படியும் வாதமாம் வெள்ளியாகும்
இதையறிந்து பாகத்தை விட்டுநீயும்
முப்படியும் நூல்பொய்யே வென்றுசொன்னால்
முத்தியுண்டோ உங்களுக்கு முனைந்துபாரே. 77

முடிவாகுஞ் சரக்கெல்லாங் கட்டியாடும்
முக்கியமாம் வாதம்வரும் கசையும்போகும்
அடியான மரந்தனிலே யேறிப்பாரு
அடுத்துநீ நுனிமட்டும் யேறலாகும்
பிடியான கொம்புண்டாம் பிடித்துயேற
பிலக்குமே யிப்படிக்குப் பெருமையாகும்
குடிகாரன் போலவே சொன்னாலென்னா
கூட்டுயிந்த நூலெல்லா முடியப்பாரே. 78

பார்த்துநீ நூலினுட மர்மங்கண்டு
பதித்துவைத்த கண்ணாடி நிழலைப்போலே
சாத்துநீ யிணங்கண்டு சேர்வைகண்டு
சரியான பாகமது பார்த்துநன்றாய்
கோர்த்திடுநீ ஊசிதனிற் சரடுபோலே
குணம்பெரிய பாகமதைக் கண்டுநன்றாய்
சோத்துக்கு யிடந்தேடச் சொன்னாரய்யா
கருதியின்னூ லுணர்ந்தாக்கா லெல்லாமாமே. 79

## கல்லுப்புச்சாரக்கட்டு

கல்லுப்புச் சேர்நாலு கல்வத்திட்டுக்
கனியவதைப் பொடியாக்கிப் பாண்டத்துள்ளே
மெல்லவே யிட்டுஅதின் மேலேதானும்
வெடியுப்பு சேர்நாலு இடித்துக்கொண்டு
மெல்லவதைப் பரதிவைத்து அதின்மேலாக
மேதினியிற் சீனத்தைப் பொடிசேர்நாலு
சொல்லவதைப் பாத்திடுநீ யென்றுசொன்னார்
சூக்ஷமதா யாகோபு திறமைதானே. 80

சாரமது சேரிரண்டு அதின்மேலிட்டுத்
தக்கபொடி சீனமுன்போல் அதிலேபோட்டு
ஊறலற்ற வெடியுப்புப் பொடிதானிட்டு
உயர்வான கல்லுப்புப் பொடிதானிட்டு
சேரவதை யமிழ்த்திநன்றா யடுப்பிலேற்றிச்
செப்பரிய பாண்டத்திற் சொல்லக்கேளு
பாரமிகு மணல்நிறையப் பின்புநன்றாய்ப்
பதியவிட்டு அங்கியெரி பண்புள்ளோரே. 81

எரித்திடவே முச்சாமங் கமலவன்னி
இதமாக எரித்தபின்பு யெடுத்துமண்ணை
பிரித்திட்டுக் கொட்டியே உப்பகற்றிப்
பிரியமாய்ப் பார்த்திடவே சாரந்தானும்
சரியாகக் கட்டியா யுருகிநிற்கும்
சாரமது தந்தம்போ லிருக்கும்பாரு
துரிதமாய் நின்றதொரு சாரந்தன்னைச்
சுண்ணமது பண்ணவென்றால் சொல்லக்கேளே. 82

## சாரச்சுண்ணம்

மதிநிறமாஞ் சீனத்தைக் கரியில்வைத்து
மயம்பெறவே நூறுதர மூதித்திரு
பதியாகக் கரையாது சுண்ணமாகும்
பதியவே சாரமிடை கல்வத்திட்டு
விதியுயரும் அண்டவெள்ளை தெளிந்தநீரால்
விடுபடவே அரைத்துவில்லை கதிரில்வைத்து
நிதியாகப் புடம்போடப் பூப்போல்நீறும்
நேர்த்தியா யாகோபு நிசஞ்சொன்னாரே. 83

## நாகக்கட்டு

மெச்சுநவச் சாரசுண்ணம் பீங்கானிட்டு
    மேன்மையாய்ப் பனியில்வைக்க ஆறுநாளில்
மிச்சமாய்ச் செயநீராம் வீரமிட்டு
    மேன்மைபெற மண்கலசந் தன்னில்வைத்து
தற்செயலாய் நாகத்தை யுருக்கிமூவேழ்
    தனைச்சாய்க்க நாகமது கட்டும்நன்றாய்
முச்சுடரா யிருக்குமென்று யாகோபுசொன்னார்
    முனிந்ததெல்லாம் யேமமாய் மொழிவார்தானே. 84

## நாகச்செம்பு வேதை

கட்டியதோர் நாகமது பலமுமொன்று
    கனகமது செம்புயெட்டு ஒன்றிலீய
எட்டியதோர் பசும்பொன்னாய் யிடையேயேமம்
    இனிதாகச் சேர்த்துருக்க யெல்லாந்தங்கம்
செட்டிகையி லேறுமது புடமிறங்கும்
    சீரான வாதமெல்லாம் நாகத்தாலே
பெட்டிதனில் வைத்தெடுத்த பணமுமாகும்
    பேரான யாகோபு சொன்னவாறே. 85

## அரிதாரசுத்தி

உருக்குமட லரிதாரஞ் சுத்திபண்ண
    உறுதிபெறச் சுக்கான்கல் நூறெடுத்து
பிரித்தெடுத்துப் பெருங்கல்லாய் ஒருநாள்மட்டும்
    பெருக்கவே கரியிலிட்டு ஊதுநன்றாய்
தரித்திரம்வா ராதுஊ தினதோர்கல்லைத்
    தடையறவே அப்பிஅதின் .மேலேதாரம்
பிரித்துவைத்து அதின்மேலே ஐந்துகல்லைப்
    பிரியமுடன் வைத்ததற்கு வெண்ணீரூற்றே. 86

ஊத்திடவே சுண்ணாம்பு பொங்கிநன்றாய்
    உறுதிபெறத் தகதகவென் றடங்கிப்போகும்
ஏத்தபடி அரிதாரம் எண்ணெய்க்கக்கும்
    இனிதாக யிப்படிக்குத் தரமும்பத்து
நாத்திசையு மெய்க்கவே கசடுநீங்கி
    நலமாக வாதவயித் தியத்திற்காகும்
கூத்தனுரை செய்துதா னிந்தவித்தை
    கூறினார் யாகோபு குறிப்பாய்த்தானே. 87

## அரிதார பற்பம்

கசடற்ற அரிதாரம் பலமும்பத்து
 கனிந்தவரை பொடிதானும் பலமும்நேரே
நிசமாக ரெண்டுமொன்றா யரைத்துப்பின்பு
 நேரான சாரமது பலங்காலிட்டு
பிசகறவே அரைத்துகுகை தன்னில்வைத்து
 பிறகுவதை யுருக்கிடவே மணியாய்நிற்கும்
வசமாகக் கல்வமிட்டு உடைத்துச்சாரம்
 வண்மையுள்ள பச்சையா யரைத்துக்கொள்ளே. 88

## வங்கச் சுன்னம்

அரைத்துகுகை தன்னிலிட்டு உருக்கிநன்றாய்
 அடைவாகக் கசடகற்றிப் புறம்பாய்வைத்து
பரையினுட கருநாகம் பலமுமைந்து
 பதியவெடு அயக்கரண்டி தன்னிலிட்டு
கரையவதை யுருக்கியதின் மேலேதானும்
 கடுமையுள்ள வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
முரையவிடு கருநாக முருகும்போது
 முனிவாக உருக்கிமெள்ளக் கிண்டுகிண்டே. 89

கிண்டிவிடு கரண்டியினாற் தேய்க்கதேய்க்க
 கிருபைதரு மஞ்சளாம் மஞ்சள்தன்னை
முண்டியெடு பசப்புதனி லிட்டுப்பாரு
 முனைந்துஅது சுண்ணாம்பு போலேயாகும்
கண்டிதனைக் கல்வமிட்டு அரையன்னத்தால்
 கருத்துறவே முச்சாமம் வில்லைதட்டி
மிண்டாகப் புடமிட்டு யெடுத்துக்கல்வ
 மிட்டுஅரை அன்னத்தால் வில்லைதட்டே. 90

தட்டிக்கதிர் காயவைத்துப் புடமுமிட்டுத்
 தனிவாக யிப்படிக்குப் புடமும்நான்கு
இட்டுயெடு மாதளம்பூ நிறமுமாகும்
 இதையெடுத்துக் கல்வமிட்டுப் பின்புமுன்னே
தட்டியுருக் கினஅயத்தைப் பாதிசேர்த்துத்
 தடையறவே அன்னமென்ற நீராலாட்டி
கட்டியதை வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
 கருத்தாக புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. 91

எடுத்துமே யிப்படிக்குச் சிவக்கமட்டும்
இன்பமாய்ப் போட்டெடுக்க அலரிப்பூப்போல்
அடுத்துமே துருசினுட செம்புநூற்றில்
அணைத்திடவே காஞ்சனமாம் செயமுமாகும்
கொடுத்துநீ பணவிடைதான் தேனிலுண்ணக்
கொடுஞ்சுருக்கு நசயெல்லாங் கடலேபுக்கும்
விடுத்திடுமே சூலைபதி னெட்டுவாதம்
விரைந்தோடும் யாகோபு விளம்பினாரே. 92

பக்கமாஞ் சூலையெல்லாம் பதறியோடும்
பதிவான மேகரணம் கன்னச்சூலை
மிக்கவலி குன்மமெட்டும் தாகசோபம்
விந்துபடு மெய்யெல்லாம் அலரிப்பூப்போல்
சொக்குமது சயகாசம் பவுத்திரங்கள்
சொற்பெரிய தமரகமாம் வாய்வுபோகும்
துக்கமறு மென்றுசொன்னார் யாகோபுதானும்
துலையாத பெருநோவுந் தீருந்தானே. 93

## அயமுருக்கத் தாரமீயம்

நல்லிரும்பு அரப்பொடியு மரிதாரம்ரெட்டி
நாட்டியரை சாரமிட்டு அரைத்துநன்றாய்
சொல்லினிய குகையிலிட்டு உருக்கித்தீரு
சத்தமணி யாயிருக்கும் அயமுந்தானும்
மெல்லவதிற் சாரமது காலுஞ்சேர்த்து
மெதுவாக உருக்கியெடு தாரமீயம்
மெல்லவதி லிருக்குமென்று யாகோபு சொன்னார்
வித்தகர்தா னறிவாளர் விரும்புவாரே. 94

## கருநாகச் செந்தூரம்

கருநாகங் கரண்டியிட்டு உருக்கிநன்றாய்
கனக்கஅசம் நீரினிற்சாய் பத்துயெட்டு
உருகஅதை உருக்கிநன்றாய் அயமுஞ்சேர்த்து
உண்மையொடு கல்வமிட்டு நய்யத்தட்டு
தரகாம லரைத்திடுநீ அன்னத்தாலே
தாக்கவே வில்லைதட்டிக் கதிர்முன்வைத்து
குருவாகப் புடமிட்டுக் கல்வத்திட்டுக்
கூட்டியரை யாகோபு குணஞ்சொன்னாரே. 95

கூட்டியன்ன மிட்டுநன்றாய் நாலுசாமம்
குமுறவரை வில்லைதட்டிக் கதிரில்வைத்து
மாட்டிவிடு யிப்படிக்குப் புடமுமஞ்சு
மயமாகப் புடம்போடச் சிவந்துபோகும்
சாட்டிநீ முன்னுருக்கு அயமும்பாதி
சாத்திடுநீ யன்னத்தா லரைத்துவில்லை
கோட்டிசெய்யாப் புடம்போடு சிவக்கமட்டும்
குணமாக யெடுத்திடுநீ குருவுமாமே. 96

குருவெடுத்துச் செம்புநூற் றொன்றிலிட்டால்
குணமாகக் காஞ்சனமாம் வாதவித்தை
திருவாக யிருந்திடுங்காண் செலவுசெய்து
திடமான சுழிமுனையில் ஞானம்பாரு
பருவமுடன் பணவிடைதான் தேனிலுண்ணப்
பருதியைப்போல் தேகமுமாம் பரிவுமெத்த
உருவாக நான்குயுக மிருக்கலாகும்
உறுதியா யாகோபு உரைத்திட்டாரே. 97

உண்ணபண விடைதானுஞ் சயங்களெல்லாம்
ஊரைவிட்டு ஓடுமது உருவாந்தேகம்
நண்ணஉயிர் வந்திடுங்காண் சூலையெல்லாம்
நாணிவிடு மிதின்பெருமை நவிலொண்ணாது
சண்ணுமடா உலகத்தில் நகைகளெல்லாம்
தரையதனி லிதுவறிந்து தன்மையாக
கண்ணிமைக்குள் சகலதுன்பம் நீங்குமென்று
கருதினார் யாகோபு கருத்தாய்த்தானே. 98

வங்கமதின் செந்தூரம் உடலிற் சேர்ந்தால்
வலுமைமெத்த மேனியது தங்கம்போலாம்
பங்கமது வாராம லுருக்கிப்பாரு
பதிவான சத்திருந்தால் மலமுங்கட்டும்
சிங்கம்போ லுற்றஉடல் யிளைத்துப்போகும்
சித்தியில்லை அன்னமுன்னே இறங்கிடாது
அங்கமெல்லாங் குறைந்துவிடு மென்றுசொன்னார்
ஆண்மையுள்ள வங்கத்தின் பெருமைதானே. 99

சத்திருந்த வங்கமதை யுண்டபேர்க்குத்
தடையறவே பேதிக்கத் தான்கொடுத்து
முத்தினதோர் தேங்காயைத் திருகிப்பாலை
முக்கியமாய்ப் பிழிந்துஅன்ன மிட்டுஉண்ண
நத்தியது முறிந்துவிடுந் தோஷம்போகும்
நாடிவங்க தோசமறும் நலமதாக
புத்தியினால் கண்டுபிடி காரீயந்தன்னைப்
போக்கோடே யாகோபு புகன்றிட்டாரே. 100

கையறியாப் பேர்களவர் வங்கந்தன்னைக்
கருதியே செந்தூர பற்பஞ்செய்தால்
மெய்யாக அதைவாங்கிப் பொசிக்கவேண்டாம்
மெய்மறந்து போகாமல் வாங்கிநீயும்
வையகத்தில் சீனநேர் செந்தூரத்தை
வகையாகப் போட்டரைத்துக் கரியிலிட்டு
பய்யவே உருக்கிடவே உருகிப்போகும்
பரிவாகச் சோதித்து உண்டுதேறே. 101

மந்திரத்துக் கெட்டாத முதலோன்றன்னை
வணங்கியே நமஸ்கரித்து மகிமையான
செந்தூரந் தன்னைவைத்துச் சீஷாதன்னில்
சித்திபெற வைத்துநீ ஜெயமாய்ப்பேசி
முந்தவனை அனுப்பிவைத்துக் கதைகள்சொல்லு
முகந்தன்னைப் பாராதே யிருந்துநீயும்
சிந்தையிலே பெருமைவைத்துச் சிரித்துக்கொள்ளு
செப்பினார் வயிற்பிழைக்க யாகோபுதானே. 102

நசையாளி தன்னுடைய வருத்தமெல்லாம்
நன்மைபெறச் சொல்லியபின் நாட்டங்கண்டு
பிசகாமல் அவன்முகத்தைப் பார்த்திடாதே
பெருமைபெறச் செவியாலே கேட்டுக்கொண்டு
நிசமாகச் செந்தூரக் கிரயங்கேளு
நிச்சயமாய் ரெண்டுகே ளொன்றுயீவான்
வசமாறாப் பிணிபலவுந் தீர்ந்துதென்றால்
வகையென்ன வென்றுறுதி பேசிக்கொள்ளே. 103

பேசியபின் செந்தூரங் கொடுத்துவாநீ
பிணிகொஞ்சம் லெகுவானாற் பாதிவாங்கி
வாசனையாய்ப் பேசியிரு பங்குதீர்ந்தால்
வகையாகப் பின்பாதி வாங்கிக்கொள்ளு
தோசியர்க லுலகத்தோ ரிருப்பாரப்பா
துன்பமது தீர்ந்தாக்கால் பேசமாட்டார்
ஊசிகொடா ரின்பமாய்ப் பேசுவார்கள்
உலுத்தருக்கு உலுத்தர்போ லுறுதிசொல்லே. 104

வேடமதை வயித்தியர்போல் பூண்டுகொள்ளு
விருத்தரைப்போல் பேசிவிடு மிகவும்நன்றாய்
பாடமதாய் நூலதனைப் படித்துக்கொள்ளு
பத்தியுடன் நசையாளன் கையைப்பாரு
மூடனைப்போ லிருக்காதே நோயைச்சொல்லு
முக்கியபணம் வாங்காமல் மருந்தையீந்தால்
ஓடமதின் மேலேறிக் கரையேபோன
உறுதியொக்கும் பணடிதர்கள் செய்கைதானே. 105

மனிதருக்குப் பிணிபலவும் வந்துதென்றால்
மதித்துஅவன் முகம்நோக்கி மருவிப்பார்த்து
இனிதான கடவுள்பதந் தெண்டனிட்டு
ஏற்கையுட னவிழ்தமது கொடுக்கநோய்கள்
பனியதுபோல் விலகிவிடும் உறுதிபார்த்துப்
பதிவாகத் தீருமென்றா லவனைநாடி
கனிவாகப் பழம்போலே பேசிக்கொண்டு
காரீயமாஞ் செந்தூரங் கருதித்தாக்கே. 106

உறுதியுடன் பிணியாளன் வந்துவுன்னை
உண்மைசொல்லி அடிபணிந்து கேட்டுக்கொண்டால்
அறுதியாய்ப் பின்னாலே போகவேண்டாம்
அடுத்துரெண்டு தரமலைந்தால் மனைக்குயேகு
பிருதியுள்ள தாம்பூலந் தனையெடுத்துப்
பேசியே கதைசொல்லி யிருந்துகொண்டு
உறுதிபட வெளியேறி வாவென்றேதான்
உரைத்தாரே யாகோபு உண்மைதானே. 107

அடுத்துமுன்னே யெழுநூற்றிற் சொன்னமையை
அடைவாகத் தானெடுத்து யிலையிற்பூசிக்
கொடுத்துவிடு நசலெல்லாந் தீர்ந்துபோகும்
குறியாகப் பேசிடுவார் குறியாய்ப்பார்த்து
கெடுகாமல் பிழைத்திடுவார் பணங்களீவார்
கிருபையுடன் தாராள மாகத்தானும்
விடுகாதே செய்துவிடு யென்றுசொல்லி
விதமாக யாகோபு விளம்பினாரே. 108

சொன்னபடி தீர்க்குமந்தச் செந்தூரத்தைச்
சொல்லுகிறேன் கைபாக வரிசைதன்னை
நன்னயமா யாதியிலே முனிவர்தானும்
நாடியெனக் கருள்புரிந்த நடக்கைதானும்
இன்னிலத்தில் பண்டிதர்கள் பார்த்துத்தேறி
இனிதாகப் பிழையென்று சொன்னாரென்னை
கன்னல்போல் செந்தூரஞ் செய்துநாளுங்
கருத்தறியப் பிணிபலவுந் தீர்த்திட்டேனே. 109

## உருக்குளிச்செந்தூரம்

கடுமையுள்ள உளியதனை நையத்தட்டிக்
கணக்காகத் தகடடித்துப் பொடியாய்ராவி
அடுமைபடுந் தன்னுடைய சடலநீரில்
ஆறுநாள் வைத்திடவே சிவந்துநிற்கும்
தடுமாறா ததையெடுத்துக் கல்வமிட்டுத்
தாக்கியரை வில்லைசெய்து கதிரில்வைத்து
படுகுமதைப் புடமிடவே பவளமாகும்
பார்த்தறிய யாகோபு பாலித்தாரே. 110

புடம்நாலு யிட்டிடவே முருக்கம்பூவாம்
புத்தியுட னெடுத்துவைத்துப் பின்புகேளு
திடமாகக் காந்தமது பலமும்நாலு
திட்டமாய்ப் பாண்டமிட்டுக் காணந்தன்னை
இடைநாலு படியளந்து போட்டுப்பாணி
எட்டுவிட்டுப் படியளந்து அடுப்பிலேற்று
திடமாக அங்கியிட்டு யெட்டொன்றாக்கித்
திறமையுட னிறுத்துஅதை வைத்துக்கொள்ளே. 111

இருத்துப்பின் காந்தமதைக் கல்வமிட்டு
இழுத்தரைநீ கிஷாயத்தால் நாலுசாமம்
உருத்துயெடு வில்லைதட்டிக் கதிரில்வைத்து
உறுதிபெறக் காய்ந்தபின்பு புடமுமிட்டு
நிறுத்துயெடு யிப்படிக்கு ஐந்துநேரம்
நிரையான புடமிடவே பவளம்போலாம்
செருத்துயெடு புடம்வைத்துச் சொல்வமென்றால்
சித்திபெற்ற யாகோபு செப்பினாரே. 112

## இலிங்கக் கட்டி

சாதிலிங்கம் பலம்ரெண்டு கரண்டியிட்டுத்
தருகவதைப் பழச்சாறு மதுவுநேராய்
பேதிக்கு விடுசுருக்கு சாமம்ரெண்டு
பிறட்டிஎடு பின்புதான் புறம்பாய்வைத்து
வாதிக்குக் கெந்தகமும் சீனம்நேராய்
வகையாகப் பலம்ரெண்டு கல்வத்திட்டு
நீதிக்கப் பொடியாக்கிக் கொஞ்சந்தானே
நிலைக்கயெடு கரியோட்டில் போட்டுக்கொள்ளே. 113

போட்டுமே கரிநெப்பி லுருக்கிமெள்ளப்
பிரியமுடன் வன்னியைத்தான் பிறட்டித்திரு
நாட்டிநீ கொஞ்சங்கொஞ்ச மாகப்போட்டு
நலமாகப் பிறட்டிமெள்ள யெடுத்துப்பாரு
கூட்டிடுமே கம்பியெல்லா மிறுகிக்கட்டும்
குணமாக முன்செய்த செந்தூரத்தில்
மூட்டிடுநீ நாலுக்கு ஒன்றுலிங்கம்
முத்திபெறத் தானரைக்கக் கிஷாயங்கேளே. 114

## அரக்குக் கிஷாயம்

கொம்பரக்குக் குருணியொன்று பாண்டத்திட்டுக்
குருக்குயிரு குருணிஜலம் விட்டுக்காய்ச்சு
நம்பியெரி யெட்டிலொன்றா யிருத்துக்கொள்ளு
நல்லசிவ பாக்கியமாங் கிஷாயந்தானும்
தம்பமுற யெடுத்துவைத்த செந்தூரத்தைத்
தாக்கியரை நாள்மூன்று கிஷாயமெல்லாம்
வம்பில்லா வில்லைதட்டிக் கதிரில்வைத்து
வாகுபெற யாகோபு விளம்பினாரே. 115

வில்லையொடு பூமிதனில் வைத்துமூடி
விருப்பமுள்ள செம்பின்மேல் மண்ணுமிட்டு
மெள்ளவே அதன்பேரில் புடமுமிட்டு
மேவியெடு செந்தூரங் கண்கள்கூசும்
நல்லறிவா யெடுத்துசிமிழ் தனிலேவைத்து
நாட்டிலே நசைகொண்ட மனிதருக்கு
சொல்லவே பணவிடைதா னுண்ணச்சொல்லு
ஜெயமாகும் நோய்பிணியுந் தீருந்தானே. 116

தீருமே சூலைபதி னெட்டுந்தானும்
செப்புமுன்னே சோகையுங்கா மாலையெல்லாம்
பாருலகி லில்லாமல் பறந்துபோகும்
பம்பரம்போ லாட்டிவைக்கு மேகவாய்வை
சாருகுடல் குன்மவலி யெட்டுந்தீரும்
தாகமெட்டும் வறட்சிகளுந் தானேபோகும்
காருநீ பத்தியமே புளியைத்தள்ளு
கருத்துகந்து சொல்லிவிட்டார் யாகோப்தானே. 117

தெம்புண்டாம் ஒழுகரையைத் தின்றுவிட்டால்
தேறிவிடுந் தேகமின்னுஞ் சிவன்முந்நாளில்
வம்புசெய்து திரிபுரத்தை எரித்தாப்போல
வயிறுபசி மெத்தவுண்டு நரம்புதானும்
கொம்புகிளை போற்றளைக்கும் வாயுவெல்லாம்
குணமாகும் கோதையர்கள் மிகவும்வேண்டும்
கம்பமத யானையைப்போ லாகுமென்றார்
கருத்துணர்ந்து யாகோபு கருதினாரே. 118

மேகமுடன் பித்தவெட்டை பிணிகளெல்லாம்
மேதினியில் நில்லாது விட்டுநீங்கும்
சூகமுடன் விக்கல்பல சத்தியெல்லாம்
துப்பரவா யதிசாரஞ் சாந்தமாகும்
சோகமுடன் சோறுசெரி யாததெல்லாம்
சொக்கிவிடு மானபசி மிகவுண்டாகும்
யோகமுடன் வந்திடுங்காண் யாகோபுசொன்னார்
உத்தமர்கள் பாகமதை யறிகுவாரே. 119

## யாகோபு

ஒருயிடத்தி லிருப்பாக யிருந்துகொண்டு
ஒழுகரையைச் செந்தூரம் பண்ணிநீயும்
குருவாக வைத்துநீ ஒருபதத்தைக்
குணமாக விற்றுநீ செலவுசெய்து
பொருளாக ஒருவருடஞ் செலவுசெய்து
பின்புதான் மனமடங்கி வாதம்பாரு
உருவாகக் களங்கமதைப் பார்த்துத்தேறி
உலகத்தில் யாகோபு உரைத்திட்டாரே. 120

## வெள்ளைப் பாஷாணச் சுன்னம்

எலிகொல்லி தனையெடுத்துப் புகையடக்கி
இருந்துஅரை கல்வமிட்டு எருக்கன்பாலால்
வலியயெடு பலமதைத்தான் மேலிற்கட்டி
வகையாக ஒட்டிரெட்டி யங்கியிட்டு
பலியகதிர் தனில்வைத்துக் கன்னச்சீலை
பத்துகட்டு குக்குடமாம் புடமுமிட்டு
தொலியயெடு துருசதுவும் நீறுமாகும்
துடியாக யிருக்குமது சூட்சந்தானே. 121

## துருசுச் சுன்னம்

சட்டியிலிட்டுக் கிழிஞ்சிநீர் பாதியிட்டுத்
தனையமுழ்த்தி நடுவேயிட்டுத் துருசுச்சுண்ணம்
கொட்டியிடு பொடியாக்கிச் சதுரமாகக்
கூறாக விரற்கடையு மூன்றேயாகும்
கட்டியதை யமுழ்த்தியரி தாரந்தன்னைக்
கசடகற்றி மேலிட்டுத் துருசுநீற்றை
தட்டியிடு அதின்பேரில் முன்போலிட்டுத்
தடையறவே யமுழ்த்திமேற் சொல்லக்கேளே. 122

மேலையிடு கிளிஞ்சிநீர் நிறையவிட்டு
வெற்றிபெற யமுழ்த்திநன்றா யடுப்பிலேற்றி
ஞாலமிடு கமலம்போ லெரிமுச்சாமம்
நாடியெடு பிரித்துப்பா ரரிதாரத்தைக்
கோலமது யிட்டாப்போல் வெள்ளையாகும்
குணமாக நீறிவிடுங் கொடியவேகம்
ஆலமுண்ட கண்டர்தா னெனக்குச்சொன்னார்
அருள்பெருகி யாகோபு அரைந்திட்டாரே. 123

துருசினுட செம்பெடுத்து நூற்றுக்கொன்று
துடியாகத் தாரபற்ப மீய்ந்தாயானால்
வருசையுடன் காஞ்சனமாம் பணமவ்வீதம்
வாரியிடக் காசசய முடனேமாறும்
சரியாக வாயுவெல்லா மோடுங்கண்டீர்
சாதகமாஞ் சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறும்
பரிபோன மேனியதைப் பாருமென்றார்
பாலித்தார் யாகோபு பாக்யவானே. 124

ஈளையெலி கடிவாய்வு குஷ்டரோகம்
இயல்பாகு மடைப்புமறும் வலியும்வாய்வும்
கோளையறும் வலிப்புதிர வாய்வுபோகும்
குணமாகும் சயகாச முகவலிப்பு
பீளைகுஷ்ட ரோகமெல்லாங் கடலேபுக்கும்
பேரான கரப்பனுமே பயந்துநீங்கும்
வேளைநல்ல அரிதார பற்பந்தன்னை
விசையாகச் செய்துவர வேகந்தானே. 125

## கெந்தி யீயச் செந்தூரம்

சவளையுள்ள யிரும்பதனைத் தகடாய்த்தட்டி
தக்கபுளி யிலைபோலே நறுக்கிக்கொண்டு
கவனமுடன் குகைதனிலே பரப்பிப்பின்பு
கனியஉலை மீதிலே கரியைவிட்டு
தவமாகக் கடினமா யூதிப்பின்பு
தக்கவிடு நெல்லிக்காய்க் கெந்திரெட்டி
பவமாகக் கிராசமிடு உருகிநிற்கும்
பார்த்துயெடு யாகோபு பகர்ந்திட்டாரே. 126

உருகுமயம் ராவினது பலமும்நாலு
உற்றுயெடு வெங்காரங் காலதாகும்
வருகவரை பாணியினால் சதிரில்வைத்து
வண்மைபெறப் பொடித்துக்குகை தன்னிலிட்டு
கருகவதை யுருக்கியெடு பீதரோடு
கணக்கவே கிளப்பிவிடு மிப்படிக்கு
முருகவதை வெங்காரஞ் சேர்த்தரைத்து
முத்திபெற உருக்கிடவே ஜெயமுமாமே. 127

செயமாகு மிரும்பெல்லா மற்றுப்போகும்
செப்பரிய கெந்திதா னீயமாகும்
நயமாக ஈயத்தைக் கல்வமிட்டு
நாட்டியே வீரமது நாலத்தொன்று
மயமாகும் பொற்றலையின் சாற்றாலாட்டி
மகிமைபெறப் புடமூன்று போட்டெடுக்க
வியனாகுஞ் செந்தூரம் ரவியில்நூறு
விட்டுருக்கி ஒன்றுகொடு விதியாம்பாரே. 128

உருக்கிடவே காஞ்சனமாம் எடுத்துவிற்று
உறுதிபெற வாசியோ கத்தைப்பாரு
பெருக்கிடவே பணவிடைதான் தேனிலுண்ண
பிதற்றுகின்ற வாதபித்தம் ஒழிந்துபோகும்
சருக்கிடையாஞ் சூலைபதி னெட்டும்போகும்
சார்பான குஷ்டரண மேகம்போகும்
பருகிடுநீ யென்றுசொன்னார் யாகோபுதானும்
பாரிலுள்ளோர் தனக்கிடுகப் பாடினேனே. 129

நெஞ்சாரப் பொய்யதனை மறந்துவிட்டு
நிதானித்துக் கெந்தியுட யீயந்தன்னை
அஞ்சாமல் வைத்துவிடு யெடுசெந்தூரம்
அடுத்துமெள்ள உண்டுவிட நசையுந்தீரும்
கொஞ்சமாய் வைக்காதே அதிகம்வைத்துக்
கொடுத்துவிடு மகிமையது மெத்தவுண்டு
தஞ்சம்வரு மாசையெல்லாங் கடலேபுக்கும்
தாபரித்தார் யாகோபு தன்மைதானே. 130

நல்லாக ஒருபற்ப செந்தூரங்கள்
நயமானா லுலகமெல்லா முன்னைநாடும்
எல்லாமுஞ் சித்தியாம் லோகந்தன்னில்
இன்பமாங் குருவென்று நம்புவார்கள்
சொல்லாகப் பெரியோர்கள் சொன்னசொல்லைச்
சுருதிதனி லாராய்ந்து பார்த்துத்தேரு
பல்லாக்கி லேறலாம் பாகம்வந்தால்
பரிவான யாகோபு பகர்ந்தவாறே. 131

எண்ணிறந்த ரிஷிசித்தர் முனிவர்தானும்
இதமாகப் பாடினது தலையில்லாமல்
கண்ணினாற் கண்டாலுந் தெரியப்போகா
கருத்துணர்ந்தா லிந்நூலிற் றெரியும்பாரு
புண்ணியற்குப் பாகம்வரும் புத்தியுள்ளோர்
பொருந்தவே செய்வார்கள் பொறுமையாக
எண்ணமற்றோர்க் கில்லையிந்தப் பாகந்தானும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. 132

சயகாசங் கொண்டார்க்கு மண்டூரத்தைச்
சாற்றுகிறே னிதுலெகுவு சார்ந்துபாரு
நயமாக யிதைவைத்துக் கொடுக்கவேதான்
நாடாம லோடிவிடும் சிலேற்பனங்கள்
மயமாகு மென்றுசொன்னார் யாகோபுதானும்
மகிழ்ந்துரைத்த போகத்தை மனதாற்கண்டால்
பயமாகி யோடிப்போம் சகலநோயும்
பார்த்துநீ பாகமாய்ச் செய்துகொள்ளே. 133

## அயக்காந்தச் செந்தூரம்

தகடினிய காந்தமதைச் சுத்திசெய்து
தக்கியிடை யரபொடியுங் கல்வத்திட்டு
பகடுபோற் கையானை உரலிலிட்டுப்
பக்குவமா யிடித்துச்சார் பிழிந்துநன்றாய்
நிகடுபட வேயரைத்து வாகாய்வைத்து
நிச்சயமாய் நாளவங்கத் தாலேயூது
முகப்படவே யெடுத்துமே கல்வத்திட்டு
முன்னுரைத்த சாற்றினா லரைத்துக்கட்டே. 134

கட்டியே கதிரில்வைத்து வங்கநாளங்
கரியோட்டி லூதுஅது சிவந்துநிற்கும்
எட்டியெடு யிப்படிக்கு ஐந்துபாகம்
இதையரைத்து ஊதிவைத்துப் பின்புதானும்
சட்டியிடு கிளிஞ்சிநீர் படியும்ரெண்டு
சரியாக வமுழ்த்தியதின் மேலேதாரம்
கொட்டியிடு வதின்பேரிற் கிளிஞ்சிநீற்றைக்
குருமுறையாய் முன்போலே பதித்துக்கொள்ளே. 135

கிளிஞ்சிநீ ரதின்பேரில் அமுழ்த்திவைத்துக்
    கெடிபடவே யதின்பேரி லம்மிதன்னை
வளிஞ்சிடவே தூக்கிவைத்து அடுப்பிலேற்றி
    வண்மைபெறக் கடுந்தீயாய் முச்சாமந்தான்
தெளிந்திடவே யெரித்திடுநீ பிரித்துப்பாரு
    திட்டமாந் தாளகமும் உருகிமஞ்சள்
பிளந்திடவே குங்குமம்போல் நிறமதாகும்
    பேசரிது யிதின்பெருமை பேருள்ளோரே. 136

அடுத்துமுன்னே ஊதினதோ ரயக்காந்தந்தான்
    அதையெடுத்துப் பலமெட்டு கல்வமிட்டுத்
தொடுத்திடவே கிளிஞ்சிநீ ராலெரித்துத்
    துப்பரவாந் தாரமது பலந்தான்ரெண்டு
விடுத்தரசம் பலம்ரெண்டு தாரத்தோடு
    விம்மியரை பொடியாக்கிச் சாமமொன்று
கொடுத்திநீ யயக்காந்த மதனிலிட்டுக்
    குணமாகப் பொடியாக்கிப் பின்புகேளே. 137

தந்திவிரை தோல்போக்கி வறுத்துக்கொண்டு
    தனைநிறுத்துப் பலம்ரெண்டு கல்வத்திட்டு
முந்தியரை மருந்தோடே சாமம்ரெண்டு
    முகர்ந்தபொடி வைத்தபின்பு மார்க்கங்கேளு
சிந்தனையும் விடத்தலைவேர்க் கொம்புதானும்
    சிறக்கவே பலம்ரெண்டு சொல்லக்கேளு
பந்தமுரு மிளகுபலம் ரெண்டுதானும்
    பதியவுடை கடுக்காயும் பலமும்போடே. 138

போடதனை நிறுத்துவைத்து நெல்லிமுள்ளி
    புசபெலமாய்ப் பலமெட்டு சட்டியிட்டுக்
காடதனை யிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு
    கல்வமதில் முன்மருந்தோ டொக்கவிட்டு
ஈடமுடன் கையாநீர் தன்னாலாட்டி
    இதமாக யெடுத்துகதிர் காயவைத்து
சாடமதாய்க் கல்வமிட்டுப் பொடியதாக்கிச்
    சரியான குடுக்கைதனி லடைத்துக்கொள்ளே. 139

முக்கண்ணுக் குடுக்கைதனி லடைத்துநீயும்
முனிந்துஅதை வைத்துமே சொல்லக்கேளு
திக்கிலுள்ள மனிதருக்குச் சயங்கள்காசம்
தீராத மூச்சுக்கள்தான் கண்டபோது
பக்கம்வந்த நசையாள னிடத்தில்நீயும்
பதிவாகக் கண்டிப்பாய்ப் பேசிநன்றாய்
தக்கமிட்டுப் பணமெத்த வாங்கிக்கொண்டு
தாட்டிகமாய்க் கொடுத்துவிடு மருந்துதானே. 140

வெருகடிதா னொருபொழுது தேனிற்கொள்ள
வேகமுடன் வெகுளியது கண்டுதானால்
பருவமுடன் மருந்துதனை நிறுத்திக்கொள்ளு
பால்முரித்த பசுமோரில் அன்னமிட்டு
சருகடுத்து விடுகாத தாகசேர்பந்
தனையகற்றுஞ் சத்தியமாய் மூன்றுநாளும்
குருவாகக் கொடுத்துவிடு மலபேதத்தைக்
கூட்டுரவு யில்லாம லடிக்குந்தானே. 141

வைகரையில் வெருகடிதூள் தேனிற்கொண்டால்
வகையாக வெகுளியதில் லாதேபோனால்
பையவெடு மாலைதனில் கொஞ்சந்தாக்கு
பதிவாக யிப்படிக்கு ஆறுநேரம்
கையினா லெடுத்துசடம் பருவம்பாரு
கண்குறையும் அவிழ்தங்கள் யேத்திமெத்த
மெய்யாகச் சொல்லிவிட்டேன் யிந்நூல்தன்னில்
மேதினியில் யாகோபு விளம்பினாரே. 142

காசமது வந்தவர்க்கு மருந்துதன்னை
கைகொடுக்கும் புளியுப்புத் தள்ளிப்போடு
பாசமது சயத்துக்கு உப்பைக்கூட்டு
பதிவாக புளிதள்ளு பாகமாகும்
நேசமதாய் மந்தார காசத்துக்கு
நிலைத்திடுமே புளியகற்றி வெந்நீர்கூட்டு
மோசங்கள் வாராது நசையுந்தீரும்
முத்திபெற யாகோபு மொழிந்தவாறே. 143

## மண்டூரச் சூரணம்

மண்டூரம் வெருகடிதூள் தேனிற்கொள்ள
மகாரோகங் காசநோய் மாண்டுபோகும்
தொண்டுபடு மந்தார காசம்போகும்
தொல்லுலகில் பீனிசமுங் காசம்போகும்
பண்டுமுன்னே பெரியோர்கள் பகர்ந்தநூலைப்
பரிவாக யான்பார்த்துப் பாகமாகக்
கண்டுஅதைக் கொடுத்துநோ யெல்லாந்தீர்த்தேன்
கருத்துகந்து யாகோபு கரைகண்டேனே. 144

நசையாகு மகோதரங்க ளாம்பற்கட்டி
நாட்டியிடு சிலேட்மசுரம் நலமதாகும்
பிசகாகு குன்மவலி பித்தவாய்வு
பேசுமுன்னே ஓடிவிடும் வாதமெல்லாம்
விசையான சூலைபதி னெட்டும்போகும்
விருப்பமுள்ள சன்னியது விலகும்நன்றாய்
கசடில்லை யிப்பணிகள் தீருமென்று
கருத்துவைத்து யாகோபு கருதினாரே. 145

பத்தியங்கள் தவறாமற் காக்கச்சொல்லு
பதியைவிட்டு யேகுமப்பா பாரிலேதான்
சித்தியா மேனியது கற்றூணாகும்
செத்திடுமே வாதமெல்லாம் சூட்சமெத்த
புத்தியினாற் கண்டிடுநீ வியாதிதன்னைப்
புலன்தெரியாப் பத்தியங்கள் தவறிப்போனால்
நித்தியமு மவதிகள்தான் படுவானப்பா
நிச்சயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. 146

இந்தநூல் தனிற்சொன்ன பற்பலேகியம்
இருந்துரைத்த செந்தூரம் மண்டூரங்கள்
சிந்தையிலே நினைத்துணர்ந்த பாகம்பார்த்து
சீர்பெறவே செய்திட்டுப் பொருளைத்தேடி
முந்தியே சொன்னதிந்த வாதப்போக்கு
முத்திபெறச் செய்துவைத்து ஞானம்பாரு
விந்தையதா மதுவுண்ண மேலதாச்சு
வீணாகத் திரிந்தாக்கால் யில்லைதானே. 157

புத்தியில்லா வாதியற்கு யென்சொன்னாலும்
புத்திவரா திருந்தாக்கா லென்னசெய்வேன்
நித்தமய மென்பனவே புத்திசொல்லி
நிலைமைபன்னம் பண்ணிவித்து வஸ்திரமீய்ந்து
சித்தமதா யிருக்குமென்ற அய்யந்தன்னைச்
சீர்கெடவே யெடுக்காதே யென்றுசொன்னேன்
நத்தியே யிருப்பானோ யிருக்கமாட்டான்
நானிலத்திற் புத்திகெட்ட வாதிதானே. 148

கடுமையா மண்டூரஞ் செய்துகொண்டு
கருத்தறியப் பிணியர்களைக் கண்டுநீயும்
அடிமையாய்க் காத்தாப்போல் பேசிக்கொள்ளு
அடுத்துஉடன் போகிறது போலேகண்டு
கொடுமையாம் பிணியனுட பருவம்பார்த்துக்
குணங்கண்டு யெதிர்நோக்கிக் குறிப்புக்கண்டு
படுமுன்னே கையினுட வரிசைகண்டு
பகுத்தறிந்து விதிமுறையாய்ச் செய்துகொள்ளே. 149

## திப்பிலி ரசாயனம்

அரிசித்திப் பிலிபத்து கடுகுஐந்து
அடுத்துயெடு மிளகைந்து ஓமம்ரெண்டு
வரிசையுடன் சீரகமும் பலமும்ரெண்டு
வகைபெறவே சித்தரத்தை பலமும்ரெண்டு
பெரிதான லவங்கம்ரெண்டு பலம்நிறுத்துப்
பேர்பெரிய லவங்கப்பட்டை பலமும்ரெண்டு .
வரிசையாய்த் திரிபலையும் பலமும்ரெண்டு
வடிவான கிராம்பேலம் வகைக்குரெண்டே. 150

ரெண்டோடு கொடிவேலி பலமும்ரெண்டு
நிலையாகக் கதிரில்வைத்து உரலிலிட்டு
பண்டுமுன்போ லிடித்துஅதை தெள்ளிப்பின்பு
பதிவான சட்டிதனில் தூவித்தன்னை
கண்டுபொடி தனையிட்டு மேலேகேளு
கனிவாகச் சூரணித்து முன்தூலிட்டு
தொண்டுபட மூடியதை யடுப்பிலேற்றித்
தொக்கவெரி நிழல்போலத் தொன்மைதானே. 151

எரித்திடுநீ தானுமது புகையுமேறி
இதமாகச் சூரணத்திற் சொக்கிப்போகும்
பிரித்துயெடு சக்கரையுஞ் சமனாய்க்கூட்டிப்
பெருகவது மிதக்கவிட்டுக் கிண்டிநீயும்
குரித்துவெரு க்ஷவீத மந்திசந்தி
குணமாக வுண்டுவிடு குடிலமெல்லாம்
வரித்துவிட மென்றுசொன்னார் யாகோப்தானும்
வகைகண்டு போகத்தைத் தள்ளிக்கொள்ளே. 152

## விஷந்தீர

புளிதள்ளி உண்டிடவே பத்துநாளிற்
புகழான அரணையெலி கடிகள்காசம்
களிவான உதிரவலி சூதவாய்வு
கழிந்துவிடு மந்தார காசம்போகும்
துளியான சிலேட்டுமமுந் துலையும்பாரு
துன்பமுறு முதிரவலி வாய்வுயாவும்
பளியாகப் போகுமென்று யாகோப்சொன்னார்
பலித்திடுங்கா ணிப்பாகம் பாருள்ளோர்க்கே. 153

பாகமது ஒருபாகம் வந்துதென்றால்
பதிவான பொருளெல்லா முன்னதாச்சு
தாகமது போய்விடுங்காண் வாதவித்தை
தப்பாது வந்ததென்றால் தளங்களோடே
யோகமது ஞானவழி யடுக்கும்பாரு
உண்மையிது நிசமாகும் உற்றுப்பார்த்து
ஆகமத்திற் சொன்னபடி யறிவுகண்டு
அறிந்துணர்ந்து யாகோபு சொன்னவாரே. 154

## இரசமெழுகு

சேம்பினிலை குறுக்கறிந்து பாண்டத்திட்டு
விரும்பியிடு பாணிரெட்டி விட்டுக்கேளு
தாம்புபட அடுப்பேற்றி யெட்டிலொன்றாய்
தனைக்காய்ச்சி சட்டியிட்டுச் சூதங்காலாம்
சோம்புபடக் குழம்பாகக் காய்ச்சிக்கல்வஞ்
சுருக்காக யிட்டுமெல்ல அரைக்கச்சாமம்
வீம்புடனே மெழுகாகும் யெடுத்துவைத்து
விதமாகச் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளே. 155

## சுண்ணம்

முக்கண்ணன் பால்வடியும் நாலளந்து
முற்றினவெங் காயச்சார் படியுமொன்று
திக்கினிய கழற்சியிலைச் சாருமொன்று
திடமாகக் காய்ச்சிக்கொஞ்சம் வத்தமட்டும்
பக்குவமாய்த் தந்திவிரை பலமுங்கால்தான்
பரிவான ரசமெழுகு பலமுங்கால்தான்
சிக்கெனவே மெழுகுபத மாய்வடித்துச்
சிறப்பாக உண்டபின்பு சொல்லக்கேளு. 156

உண்டபின்பு சூலைமுதல் வாதமெல்லாம்
உறுதிபெற மேகமெல்லா மோடிப்போகும்
கண்டவுடன் சயகாச பித்தமெல்லாம்
கடல்புக்கும் பெரும்பாடுங் காணாதோடும்
தொண்டுபடும் வலிகுன்மம் பிளவைவாய்வு
தோசமொடு சோகையரி கிரந்தியெல்லாம்
பண்டுசெய்த பழவினைக ளெல்லாந்தீரும்
பரிவான யாகோபு பலன்சொன்னாரே. 157

## அறுவகைச்செயநீர்

கம்பியுப்புப் பலம்பத்து சீனம்நேராய்
கல்வத்தி லிட்டுபொடி யாக்கிநன்றாய்
வெம்பினதோர் பழம்பிழிந்து தோலெடுத்து
விரும்புமுன் னிடைபாதி யுரலிலிட்டு
தம்பமற முன்பொடியைக் கூடப்போட்டுத்
தாக்கியிடி மெழுகாகும் வில்லைதட்டி
உம்பர்கோன் புதுச்சட்டி யடிப்பிலேற்றி
உற்றுவில்லை வைத்துயெரி யுருதிதானே. 158

உருதியா யெரித்தபின்பு வெண்ணீராகும்
உற்றுயெடு மஞ்சளிலே யிட்டுப்பாரு
பிருதியாய்ச் சிவந்துவிடும் பாகமாகும்
பேணியே கண்டெடுத்துப் பூநீர்தன்னை
அருதியா யிடைசேர்த்துக் கல்வமிட்டு
அதையரைத்துப் பழச்சாற்றில் வில்லைதட்டி
கருதியே கதிர்முன்னே காயவைத்துக்
கணக்கவே புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. 159

எடுத்துமே புரம்பாக வைத்துக்கொண்டு
இனிதான அண்டோடு பலந்தான்பத்து
கடுத்துமே பழச்சாற்றால் நேகரைத்துக்
கனியவதைத் தொல்லுப்போல் வில்லைபண்ணிப்
படுத்திடுநீ கதிர்முன்னே காயவைத்துப்
பதிவான நாளத்தி லிட்டுவூது
தொடுத்துமே சுண்ணாம்பா மண்டந்தானும்
தொக்கவரை முன்சுண்ணத் தோடேதானே. 160

அரைத்துமே பழச்சாற்றால் சாமமாட்டி
அதன்பின்பு கதிரில்வைத்துப் புடமும்போடு
வரைத்துமே கடுஞ்சுண்ண மாகும்பாரு
வகையாக யிந்துப்புப் பலமும்பத்து
திரைத்துமே முன்சுண்ணத் தோடேசேர்த்துத்
திறமாகப் பழச்சாற்றை விட்டரைத்து
குரைத்துமே விலலைதட்டிப் புடத்திற்போடு
கொடுஞ்சுருக்காஞ் சுண்ணமாம் கூர்ந்துபாரே. 161

கூர்ந்துபார் சுண்ணமதைப் புரம்பாய்வைத்துக்
குணமான கல்லுப்புப் பலந்தான்பத்து
தேர்ந்துபார் கடலினுரை கரியிலிட்டுத்
திறமாக ஊதிக்கல் லுப்புச்சேர்த்து
வேந்தேபார் பழச்சாறு விட்டரைத்து
விதமாக அதைஊதச் சுண்ணமாகும்
ஊர்ந்துபார் முன்சுண்ணத் தோடரைத்து
உறுதிபெறப் புடம்போடக் கடுமைதானே. 162

சுண்ணமெல்லாம் நிறுத்துமே கல்வத்திட்டு
தொக்கசுடர்க் கொடியோனும் பலமும்ரெண்டு
நன்னயமாய் நவச்சாரம் பலமும்ரெண்டு
நாடியரை முன்சுண்ணத் தோடேநன்றாய்
சொன்னபடி பழச்சாறு விட்டரைத்துச்
சுருதிபெறக் கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
சின்னதொரு புடம்போட்டு யெடுத்துக்கல்வஞ்
சிறக்கவிடு வென்றுசொன்னார் யாகோப்தானே. 163

## பாஷாணச் சுன்னம்

எலிகொல்லி பலமைந்து யெடுத்துக்கொண்டு
இதமான சுக்கான்கல் பத்தெடுத்து
நலியவதை நாளத்தி லிட்டுஊது
நலமாக நீறியபின் னாட்டங்கேளு
வலியவெடு கல்லைந்து பரப்பிமேலே
வகையான பாஷாண மதின்மேலிட்டு
பலியாக நீரியகல் மூடிநன்றாய்ப்
பாகமா யாட்டமுரி யாலேநீற்றே. 164

ஆட்டமுரி விட்டிடவே பொங்கிநன்றாய்
அடைவான வெள்ளைப்பா ஷாணமெண்ணெய்
கூட்டோடே கக்கிவிடும் எடுத்துநன்றாய்க்
குணமாக யிப்படிக்குப் பத்துபாகம்
தேட்டமாய்ச் செய்திடவே சுத்தியாச்சு
திடமாகும் யெடுத்துவைப்பாய் திறமைகேளு
பாட்டோடே முன்வைத்த சுண்ணந்தன்னில்
பாதியிடை நவச்சாரம் பண்புமாமே. 165

இட்டுபனி பீங்கானிற் பரப்பிவைக்க
இதமாகச் செயநீரு ஆறுபோலாம்
பட்டுமே சீஷாவி லடைத்துநீயும்
பதியஒரு துட்டிடைதான் வீரம்லிங்கம்
கட்டுமே பூரமது பொடித்துப்போட்டு
கணக்கவைத்துப் பின்புநீ பாகங்கேளு
விட்டிடுநீ வெள்ளைப்பா ஷாணந்தன்னை
விரும்புகரி யோட்டிலிட்டுச் சுருக்குப்போடே. 166

## பாஷாண மெழுகு வேதை

சுருக்கிட்டு ஒருசாம மெடுத்துக்கல்வஞ்
சுத்தமுடன் மெள்ளைமந் தாரைச்சாறு
பெருக்கவிட்டு அரைச்சாம மெழுகுமாகும்
பேசாதே மெழுகுதனை யெடுத்துவைத்து
உருவாக ரவியுறுக்கி நூற்றுக்கொண்டு
உறுதிபெற யிட்டிடவே வெள்ளியாகும்
கருவாக வெள்ளீயம் நூற்றுக்கொன்று
கருணைபெற விட்டிவே ரசிதமாமே. 167

ஆகுமே லவணமது யிருபத்தைந்தும்
அடைவாய்ப்பா ஷாணமறு பத்தினாலும்
பாகுமே யுபரசங்கள் நூற்றிரண்டு
பதிவாக உருகுமது கட்டுமாகும்
ஏகுமே சுண்ணமுமாம் எழில்வேதை
இன்பமாய் வெடியுப்புச் சுண்ணத்தாட்டு
வாகுபெற முன்னோர்கள் சொன்னநீதி
வகைபார்த்து யாகோபு சொன்னவாறே. 168

## கம்பி உப்பின் பெருமை

கம்பியுப்புச் சுண்ணத்தால் சித்தர்தானும்
கனிவாகச் சரக்குகளைக் கட்டிநன்றாய்த்
தெம்புடனே வாதவித்தை பார்த்தாரப்போ
தேவியர்க்குச் சிவன்றானு முபதேசித்தார்
நம்புதலாய்ச் சொன்னாராம் நானிலத்தில்
நடக்கைகளைப் பார்த்துமே யெனக்குச்சொன்னார்
செம்புதனைக் காஞ்சனமாய்ச் செய்தார்யாகோப்
செயம்பெற்ற ஞானங்கள் பார்த்திட்டாரே. 169

நல்லகுண மாயிருந்து செய்கைகண்டு
நாடிவெடி யுப்பதுவைப் புகைநீர்பண்ணி
வெல்லவொரு சரக்குகளைக் கட்டியாட்டி
விரும்பியே ரவிபழுக்க வைத்தாரப்பா
கல்லப்பட உலகத்தில் வாதிதானும்
கருவான புத்தியுரை யாமற்றானும்
சொல்லறிவைக் கேட்டுமே சுட்டுக்கெட்டார்
சோதனைக ளில்லாமற் றுஞ்சுவாரே. 170

துஞ்சுவார் நூல்கள்பொய் யென்றுசொல்வார்
சூட்சமில்லை வாதந்தான் வந்துதென்பார்
கெஞ்சுவார் பிரட்டுரச வாதமென்பார்
கேள்வியினில் மாளாது மூலிதன்னை
மிஞ்சியே பரித்திடுவார் சுருக்குப்போடு
மீறியே போச்சுதென்பார் உலகவாதி
பஞ்சிட்டுப் பாரமதை யேற்றமாட்டார்
பாரிங்க அவசரமாம் வாதிபோக்கே. 171

அவசரத்தில் மருந்தரைத்து அரைபடாமல்
அலுத்துமே புடம்போட்டு உருக்கிப்பார்த்து
கவசமது கட்டவில்லை யதினாற்போச்சு
கணக்கதுவுந் தவறிவிட்டதென்றுஞ் சொல்வார்
நலமான ஒன்பதாம் லோகந்தன்னை
நாட்டாமல் விட்டமென்றும் பின்னுஞ்சொல்வார்
சவம்போலே பிதற்றுவார் புத்தியில்லாந்
தகுமான பொருளெல்லாம் போச்சென்பாரே. 172

## வெடிசீனத் திராவகம்

கம்பியுப்புப் பலம்பத்து கல்வத்திட்டுக்
கருத்துடனே பொடிபண்ணிச் சீனந்தன்னை
நம்பியே நீநிறுத்து யிருபத்தைந்தாம்
நாட்டமா யிரண்டுமொன்றாய்க் கலந்திடித்து
வெம்பியிடி கடமரையாம் வாலைமூடி
விரும்பியிடு சீலைமண்தான் பிலக்கச்செய்து
தும்பிதனில் நீர்வருகும் வெள்ளைநீராய்
துப்பரவாய்த் தள்ளிவிடு நடுநீர்வாங்கே. 173

நடுநீரா மஞ்சள்நிற மானநீரை
நாட்டியெடு குப்பிதனி லடைத்துக்கொண்டு
கடுமையுள்ள சாதிலிங்கஞ் சேரிரண்டு
கல்வமதி லிட்டுபொடி மையதாக்கி
அடுமைபெற நடுநீரை விட்டுஆட்டி
அரைச்சாமம் வைத்துமண் பீங்கானிட்டு
படுஉமியி னெருப்பதனிற் பாகமாகப்
பதறாதே வறுத்துயெடு பின்புகேளே. 174

## வாலை ரசம்

படிரெண்டு வடிக்கின்ற பானைதன்னில்
பதியவிடு வன்னியைத்தான் பதமாய்க்கேளு
வடிவான முன்பானை போலேமேலே
வைத்தெடுநீ மூடியபின் சீலைசெய்து
முடிவான அடுப்புதனில் வைத்துவாங்கி
முனிந்துவிடு சாமமொன்று யெரித்துஆற்றி
குடியாக யெடுத்துஅதைப் படுக்கவைத்துக்
குணமாகச் சீலைதனைப் பிரித்துப்பாரே. 175

பிரித்தெடுக்க மேலேறி ரசமும்நிற்கும்
பின்புநீ மயிர்க்குச்சி யால்வழித்து
குரித்துஅதைப் பீங்கானி லிருத்துநன்றாய்க்
குடிலமறத் துணியிலிட்டுப் பிழிந்துபாரு
சிரித்தபல்போல் நிசமாகும் ரசமுந்தானும்
சித்தியா யதையெடுத்துப் புரம்பாய்வைத்து
வரித்தயிந்த ரசப்பேரு வாலையாகும்
வண்மையுள்ள யாகோபு வசனித்தாரே. 176

கல்லுப்புப் படிநாலு உரலிலிட்டுக்
கடுமைபெற யிடித்தெடுத்துச் சட்டிதன்னில்
மெல்லவிட்டு வருத்துப்பார் நீர்கள்வத்தும்
மேன்மைபெற நாலுபடிக் கொன்றுசெங்கல்
செல்லரெண்டுஞ் சேர்த்துமேல் சட்டியிட்டுச்
சிறக்கநீர் விட்டமுழ்த்தி நடுவிலேதான்
நெல்லுகுழி தனிவாலை ரசமும்நாலு
கெடிபடவே பலம்விட்டு மேலேமூடே. 177

மூடியபின் வரைதனிலே பழுத்துசீலை
முக்கியமாச் செய்திடுநீ யடுப்பிலேற்றி
நாடியதோ ரிருவிறகால் நாழிநூறு
நலமாக அங்கியிடு கமலமாகும்
கூடியதோ ரெரிப்பதிக மானால்நீயும்
குறைந்துதென்றால் வேகாது வாந்திபண்ணும்
சூடியே பாகமதாய் எடுத்துஆற்று
சூட்சமா யாகோபு சொன்னவாறே. 178

சரியாக யெரித்துசட்டி தனைப்பிரித்துச்
சாதகமாய்ப் பார்த்திடவே உயரயேறி
முரிபோலே யிருந்திடுங்காண் தங்கம்போலாம்
முனையான மயிர்க்குச்சி தன்னால்வாங்கி
குரியான நாவுதனிற் கொஞ்சம்போடு
குணமாக வாந்திபண்ணா திருந்துதானால்
பரிவான பாகமிது வென்றுசொல்லி
பாலித்தார் யாகோபு பரிவாய்த்தானே. 179

## தங்கம் வீரம் வைப்பு

ஏறினதோர் ரசமொருசேர் நிறுத்துக்கொண்டு
இனிதான கரியுப்பு வறுத்துக்கேளு
கூறினதோர் பலமாறு தூளாய்ப்பண்ணிக்
கொடுஞ்சுருக்கு துருசுவது கூட்டுநீயும்
பாரில்நிறு பலம்நாலு பூநீர்ரெண்டு
பரிவான கம்பியுப்பொன் றரையாங்கேளு
சீறிவருஞ் சீனந்தான் பலமுமொன்று
சிறந்தஅன்ன பேதியது பலமுமொன்றே. 180

சாரமது பொடியரையாந் தாரங்காலாம்
சரியான வெள்ளையது பலமுங்காலாம்
கோரமது வாராமற் பச்சையாகக்
குணமாகப் பொடித்துவிடு காசிக்குப்பி
நேரமடைச் சீலைசெய்து அடிப்பிலேற்றி
நிலவரமாய்ச் சாமம்நா லெரித்துஆற்று
பாரமது ராக்கால மாறப்போட்டுப்
பரிவாகப் பதினாறு சாமம்தாக்கே. 181

தாக்கியெரி சாமந்தான் கழித்தபின்பு
தனலாற்றிப் பற்பக்கல் திறந்துபார்த்து
பாக்கியமாய்க் கருதினார் குத்திப்பாரு
பதியவது யிறங்காதே போனால்நன்றாய்
சாக்கியமாம் பருவமது ஆகும்பாரு
சலுதியாய் குப்பியெடு வெளியில்வாங்கித்
தூக்கியதைத் துணிநனைத்து யெடுத்துநன்றாய்த்
தொக்கவுடை நடுப்பாதி தொண்மைதானே. 182

தேங்காயைப் போலிருக்கும் வீரந்தன்னைச்
சீறியெடு விராகனிடை யுமிழ்நீர்விட்டுப்
பாங்காகக் குழைத்துத்தங்க மேலேயிட்டுப்
பதியவொரு புடம்போடத் தங்கம்நீறும்
ஏங்காணும் வாதிமார் யிழந்துபோறார்
எடுத்துரவி நூற்றுக்கு ஒன்றுதாக்கு
சாங்கமா_யேமந்தா னிந்தவீரம்
சரியான லோகமெல்லாம் பழுக்கும்பாரே. 183

## யாகோபு

பழுக்குகின்ற வீரமதை வைத்துக்கொண்டு
பதியநவ லோகத்திற் பழுக்கச்செய்து
தழைத்தகதிர் ஞானவழி யடுத்துக்கூடி
தாட்டிகமா யாறுதல மேறிப்பாரு
இழக்கில்லா திருகாய சித்திபண்ணு
எத்தேச காலமெல்லா ரவியிலேற்றித்
தொழுப்புகுந்த ஆடுபோல் வாசியோகச்
சுருதியைநீ ஆராய்ந்து பார்த்துத்தேறே. 184

தோய்ந்திடவே யிவ்வீரந் தன்னைவைத்துத்
துன்பமறக் காஞ்சனத்தைச் செலவுசெய்து
மாய்ந்திடவே போகாமல் வீரந்தன்னை
வகையாகப் பணவிடைதான் தேனிலுண்ண
சாய்ந்திடவே நோயெல்லாம் தவிடதாகச்
சரியான வேதையிதைத் தாக்கிநன்றாய்
காய்ந்துமே போகாது காயந்தானும்
கருத்தினிலே உறுதியாக் கோப்சொன்னாரே. 185

## லிங்கரசகற்பூரம்

வன்னிரச கற்பூர மொன்றுகேளு
வழுத்துகிறேன் லோகமெல்லாம் பொன்னதாக
உன்னியெடு சாதிலிங்கப் பதங்கந்தன்னை
ஒருசேரு நிறுத்துமே காசிமேரு
தன்னிலிடு பலபக்கல் லாலேமூடித்
தக்கத்துணி செய்துமே கதிரில்வைத்து
நன்மையாய்ச் சட்டிதனில் மணலையிட்டு
நன்மையதாய்க் குப்பிதனைப் புதைத்துக்கொள்ளே. 186

பதித்துக்குப்பி வாய்தெரிய மணலையிட்டுப்
பக்குவமா யடுப்பேற்றிப் பன்னிரெண்டு
விதித்தபடி சாமமெரி உயரயேறி
விடுபட்டு முக்கண்ணன்போ லிருகிநிற்கும்
பதித்துயெடு குப்பியுடை கட்டியாகப்
பாங்காக யிருந்திடுங்காண் கற்பூரந்தான்
கெதிவேறு மில்லாதே நோய்களெல்லாங்
கீழ்க்கடலிற் புக்குமது கீர்த்திதானே. 187

## சுண்ணம்

கட்டியாகக் கற்பூரம் பலமுமொன்று
கருதியெடு கடைநீரிற் றோய்த்துநன்றாய்
சட்டியிடு கால்வாதி சூடந்தன்னைச்
சரியாகப் பொடிசெய்து பூரம்போலே
கொட்டிவிடு சூடத்தைக் கொளுத்திவிட்டு
குணமாக யெரியவிட்டு குறியாய்ப்பார்த்து
தட்டிவிடு யிப்படிக்குச் சிவக்கமட்டும்
தாக்கியெடு வதன்பின்பு சார்புகேளே. 188

## சிறுகன் நாகம்

காரீயம் பலமொன்று ரசமும்நேராய்
கட்டிசிறு நாகமொன்று உருக்கிநீயும்
பாரியாய்க் கரண்டிதனிற் தெளியவைத்து
பால்துத்தம் பலமொன்று பொடித்துத்தூவு
வாரியாய்த் தூளாகும் நாகந்தன்னை
வகையாகத் துத்தமிடை போட்டுக்கிண்டு
சாரியாய்க் கரிபோலே தூளுமாகும்
சரியாகச் சுரண்டிகல்வந் தன்னிற்போடே. 189

போட்டுமே பழச்சாறு விட்டுச்சாமம்
பொருத்தரைத்து மெழுகாக யெடுத்துப்பின்பு
நாட்டுமே கற்பூரம் மேலேரெட்டி
நன்றாகக் கவசமிட்டுக் கதிரில்வைத்து
மூட்டுமே உமிப்புடமாய்ப் போட்டுவாங்கு
முடியவது ஆறியபின் கவசந்தன்னைக்
காட்டுமே பிரித்துயெடு கட்டிநிற்கும்
கனமான யாகோபு சொன்னவாறே. 190

## குடவன்சுத்தி

காகதூண்டிப் பித்தளையும் பலமும்நூறு
கருதியெடு சாரம்பல மொன்றுதூக்கி
பாகமாய்ப் பொடித்துத்துணி தன்னிற்கட்டி
பந்துபோற் சுருட்டிபுடம் வைத்தெடுத்து
யோகம்வரக் குகையிலிட்டு உருக்கித்தீரு
உறுதிபெறத் தங்கம்போ லுருகிநிற்கும்
ஆகமதா யெடுத்துமறு குகையிலிட்டு
அறிவாக நூற்றுக்கு ஒன்றுதாக்கே. 191

தாக்கிடுநீ கற்பூரமொன்று தானும்
தடையறவே காஞ்சனமா மெடுத்துவித்து
தூக்கிடுநீ செலவுக்கு வைத்துக்கொள்ளு
தொக்கவே ஞானவழி யெடுத்துப்பாரு
பாக்கியமும் வந்திடுகாண் பூரந்தன்னில்
பரிவாகக் காயசித்தி பண்ணிநீயும்
நோக்கியே சமாதியிலே நின்றுதேறு
கொடியதாய்க் கெவுனவழி யடுத்துப்பாரே. 192

அடுத்துப்பார் பணவிடைதா னந்திசந்தி
அதையுண்ண மண்டலத்திற் காயசித்தி
கொடுத்திடவே பேதியொடு சூலையெல்லாம்
குணமாகுஞ் சூசிகா வாய்வுபோகும்
கொடுத்தசடம் விந்திருகும் மேனிதானும்
தொல்லுலகில் சொகுசாவின் நிறமதாகும்
விடுத்தநசை யோடிவிடுங் கற்பூரத்தில்
வேதாந்த யாகோபு விதஞ்சொன்னாரே. 193

சொல்லிடவே குஷ்டம்பதி னெட்டுந்தீரும்
சொற்பெரிய மேகமுதல் சொல்லாதோடும்
நல்லவழி யுண்டாகு மகோதரத்தை
நாசமுறப் பண்ணிவைக்குஞ் சலரோகத்தை
கொல்லவழி தேடிவிடுங் கற்பூரந்தான்
குணமாகுங் கிராணியெல்லாங் குடிவிட்டோடும்
மெல்லவொரு நீராம்பல் பவுத்திரத்தை
மெலிவாக்கும் யாகோபு விளம்பினாரே. 194

சன்னிசுரம் வாயுவெல்லாந் தணிக்கும்நன்றாய்ச்
சரியாகுங் கடிவிஷங்கள் புண்கள்போகும்
உன்னிதமாம் லிங்கரணம் வெட்டைபோகும்
உறுதிபெறப் பண்ணிவைக்கும் ஒருநேரத்தில்
சென்னியிலே கெங்கைவைத்த நாதன்சொன்னார்
சிறுவன்யான் பாகமது பார்த்துத்தேறி
நன்னயமாய் மானிடர்க்குச் சொல்லிப்போட்டேன்
நலமாகும் யாகோபு நாதன்றானே. 195

பத்தியங்கார் புளியுப்புத் தள்ளிப்போடு
பரிவான நல்லெண்ணெய் பெண்ணாகாது
சத்தியமா யிப்பூரந் தன்னைவைத்துச்
சாதித்து நவலோகம் பழுக்கச்செய்து
முத்திபெற வேகாய சித்திபண்ணு
மூவுலகும் யேறுதற்குக் கெவுனம்பண்ணு
புத்தியுடன் வாழ்வீர்க ளிந்நூல்தன்னிற்
புகுந்துநன்றாய்க் கடைதலையும் பார்த்துக்கொள்ளே.196

அளும்பான மனத்தோர்க்கு வாதமில்லை
அறிவில்லா திருந்தவர்க்கு விவேகமில்லை
களும்பான மனதுதனிற் கலக்கமுண்டு
காரணத்தைக் கண்டவர்க்கு எல்லாஞ்சித்தி
தளும்பான மேனிக்கு தாச்சியுண்டு
தக்கவே பொசிப்பில்லாக் கெவுனமுண்டு
விழும்பாவி நரகத்தில் வீழ்கமாட்டான்
வேதாந்த யாகோபு விளம்பினாரே. 197

## சீனரசக் கற்பூரம்

மதிபெருகுஞ் சீனரசக் கற்பூரந்தான்
வண்மையாய் வைப்பதற்கு வகையைக்கேளு
கெதியுள்ள சிவன்விந்து பலமுமெட்டு
கெந்தகமும் பலமொன்று ஓட்டிலிட்டு
பதியஉமி நெருப்பதிலே உருக்கிக்கிண்டு
பதமான கத்தியினாற் கிண்டிவாநீ
சதியாகக் கரிபோலே தூளாய்ப்போகும்
தனித்துயெடு யாகோபு சொன்னவாறே. 198

கடம்ரெண்டு வாயுரசிச் சரியாய்செய்து
கருணையொடு அடிக்கடத்தில் ரசமுமிட்டு
திடமாக மேல்மூடிச் சீலைசெய்து
திட்டமா யடுப்புதனில் வைத்தெரிக்க
குடமீதி லுயரவே யேறிநிற்கும்
குணமாகப் பிரித்தெடுத்து வைத்துக்கொள்ளு
மடமாகக் கரிபோலே தூளாய்நின்றால்
பதிவாக முன்போலே மூடிப்போடே. 199

மூடியே சீலைசெய்து பின்புதானும்
முக்கியமா யெரித்துயெடு ரசத்தைநீயும்
வாடியே கல்லுப்புப் படியும்நாலு
வடிவான செங்கல்லுப் படியுமொன்று
தேடியே கல்லுரலி லிடித்துநையத்
தெரிப்படங்க வருத்திடுநீ சொல்லக்கேளு
பாடியெடு கனமுள்ள சட்டிதன்னில்
பாதியிட்டு அமுழ்த்திநன்றாய்ப் பாகங்கேளே. 200

நல்லவதை யமுழ்த்திநடுப் பள்ளம்பண்ணி
நாடியெடு சாரமரைப் பலமுங்கல்வம்
சொல்லஒரு பொடியாக்கிப் பள்ளந்தன்னில்
சிறக்கவிடு பொடிபரப்பி மேலேதானும்
மெல்லரசம் விட்டுசட்டி மேலேமூடி
மிருதுவா யுளுந்துமண் சீலைசெய்து
வல்லமையா யடுப்பேற்றி யங்கியிட்டு
வடிவுபெறக் கமலம்போ லெரித்துக்கொள்ளே. 201

எரித்திடவே நாழிகையும் நூறுதன்னில்
இதமாக அடுப்பேற்றி யெரித்துவாங்கு
பிரித்திட்டுப் பாருநீ உயரயேறி
பிசகாமற் பதங்கபற்ப மாயிருக்கும்
சரித்துயெடு மயிர்க்குச்சி தன்னாற்றானே
சரிவரவே யெடுத்துப்பின் சாற்றக்கேளு
பிரித்துயெடு குழிக்கல்வ மிட்டுநன்றாய்ப்
பிசகின்றிச் சொல்லுகிற வரிசைகேளே. 202

## வெடியுப்புச் சுண்ணம்

கம்பியுப்புப் பலம்பத்து கல்வத்திட்டுக்
கதிபெருகுஞ் சீனம்நேர் பொடியதாக்கி
நிம்பமது பழம்பிழிந்து நீரைப்போக்கி
நிலைமையாய்க் குருகறிந்து உப்பிலிட்டு
நம்பிநீ யிடித்துவிடு மெழுகுபோலாம்
நலமாக யெடுத்துப்புது சட்டியிட்டுத்
தம்பிரான் செயலாலே யெரிக்கச்சுண்ணம்
தடையறவே மஞ்சளிலே போட்டுப்பாரே. 203

போட்டிடவே சுண்ணமது ரத்தம்போலாம்
புகழான சுண்ணமிதைப் பதங்கஞ்சேர்த்து
ஆட்டுநீ பழச்சாறு தன்னினாலே
அருள்பெருக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாட்டிடவே பொடியாக்கிக் குப்பிக்கிட்டு
நலமாக அரைவாசி போட்டுச்சீலை
தீட்டிடவே செய்துகதிர் காயவைத்துத்
தீரமுள்ள சட்டியெடு செப்பத்தானே. 204

சட்டிதனில் நாலுவிரல் மணலையிட்டுச்
சரியாகக் குப்பிவைத்து மேலேதானும்
கொட்டிடுநீ குப்பிவாய் தெரியமண்ணைக்
கூருகொண்டு கல்மூடி யடுப்பிலேற்றிச்
சட்டமதாய்ப் பன்னிரண்டு சாமமட்டும்
சரியாக வெரித்தெடுக்கத் தவராவண்ணம்
இட்டிதமாய்ச் சீனவெடிச் சுண்ணமாச்சு
இப்படியே யாகோபு யியம்பினாரே. 205

தப்பாது யெரித்துவிடு உயரவேறித்
தலத்தில்நிற்கும் உடைத்துத்தான் கல்வத்திட்டு
செப்பாம யடியில்நின்ற புஷ்டியோடே
செலுத்தியரை பழச்சாற்றிற் றிறமதாக
துப்பரவா யரைத்துலர்த்திக் குப்பிக்கிட்டு
தூக்கிவைத்து முன்போலே யெரிக்கநன்றாய்
முப்படியா யிருந்துவிடும் யாகோப்சொன்னார்
முடிவான சீனரச பூரந்தானே. 206

இந்தமுறை பொய்யாது சிவனுக்கொப்பாம்
இந்நீரைச் சிவனறிய யியம்பினோம்நாம்
முந்தநசை யுண்டாகு மீசன்றானும்
முடிவாக மருந்தினாற் றீருமென்றார்
சுந்தரமாய்ப் பாகமதைக் கண்டானானால்
தொல்லுலகில் மன்னவனா யிருப்பான்பாரு
நந்திமே லாணையாஞ் செந்தூரந்தான்
நாடிமிகச் செய்திடவே பலிக்குந்தானே. 207

அடுத்துமே சீவனங்கள் செய்யவேண்டி
அன்பாக முன்சொன்ன அயச்செம்பைத்தான்
தொடுத்துமே பாகமாய்ச் செய்துகொண்டால்
தொல்லுலகி லிருந்துமே சீவனங்கள்
தடுத்துமே செய்துகொண்டு ஒருவரோடே
தர்கமிட்டுப் பேசாம லிருந்துகொண்டு
கொடுத்துமே விடுத்திடுநீ செலவுசெய்து
குன்றாமல் வாழ்வீர்கள் குணமுள்ளோரே. 208

உழுதுபயி ரிட்டாலே விளைவதாகும்
உழுகாட்டால் விளையுமோ வீணர்க்காக
அழுதுமே நின்றதினா லாபமென்ன
அதைச்சுட்டேன் பொருள்போச்சு பொய்யென்றாக்கால்
நழுகவே சொன்னதினா லாபமென்ன
நாய்கடிக்கும் வெள்ளெலும்பாம் வீணர்சொல்லு
பழுதுமே பேச்சுக்கு நரகமெய்தும்
பரனடியார் தன்னோடே பாலியாதே. 209

## அயச்செம்பு

காகதூண்டிப் பித்தளையுஞ் சேருவொன்று
கதிக்கவெடு சுருட்டிப்பந்து போலேகட்டி
பாகமுடன் புடம்போடக் கரியதாகும்
பார்த்திடுநீ கல்வத்தி லிட்டுநன்றாய்
வேகமுட னிரும்புஅர பொடியும்ரெண்டு
விதமாகச் சேர்த்தரைத்துக் குகையிலிட்டு
தாகமதா யுருக்கியிடை பீங்கானிலிட்டு
தாட்டிகமாய்க் கடைநீரை ஊற்றுவாயே. 210

ஊற்றிவிடு பொங்குமது கதிரில்வைத்து
ஒழுங்காகச் சாமமது சென்றபின்பு
பார்த்துவிடு பிற்பாடு கடைநீரூத்து
பதியவிடு இப்படிக்கு ஊத்தஊத்த
நேர்த்தியாய்க் கரைத்துவிடும் பீங்கான்றன்னில்
நிலையாகத் தானெடுத்து உமியில்வைத்து
சேர்த்துவரு கல்வமிட்டு அரைக்கும்போது
சீராகக் கெந்திபலம் ரெண்டுபோடே. 211

## சுண்ணம்

ரெண்டுமே யிட்டபின்பு வீரங்காலாம்
நிலையான சுடர்க்கொடியோன் பலமுங்கேளு
கண்டுநீ யரைப்பலமா யெல்லாஞ்சேர்த்துக்
கல்வமிட்டு அரைபாணி வில்லைதட்டி
தொண்டுபடக் கதிரில்வைத்துப் புடமுமிட்டு
தொக்கவதை யெடுத்துமெள்ள உருக்கித்தீரு
பண்டுபோல் ரவியாகும் வெங்காரத்தைப்
பார்த்துயெடு பலமொன்று பரிவாய்த்தானே. 212

பார்த்துருக்கு முகந்தனிலே கிராசமிட்டால்
பதியவயச் சத்தெல்லாம் நீங்கிப்போகும்
சேர்த்துயெடு குத்தமற அயத்தின்செம்பு
செல்வம்வரு மயச்செம்பு யிடையேவெள்ளி
சாத்திடுவீர் வெள்ளியிடை தங்கம்சேர்த்துச்
சாரித்து மூன்றையுந்தா னுருக்கிநன்றாய்
காத்துவடி புடத்தகடாய்ச் செங்கல்நாலும்
கனிவாகக் கல்லுப்பு மூன்றுமாமே. 213

ரெண்டுமொன்றாய்ப் பொடியாக்கிப் பாணிவிட்டு
நிலையான உண்டைபண்ணித் தகடைநீயும்
பண்டுமுன்னம் புளிகரைத்த நீரில்தோய்த்து
பதியநடு உள்ளிட்டுப் புடமுமைந்தில்
கண்டுஅது உருகுமே கட்டிநன்றாய்க்
காசினியில் ரெண்டிவிசை கெட்டியாகும்
கொண்டுவிற்றுச் செலவுசெய்து செந்தூரத்தைக்
குணமாக வைத்துக்கொண் டிருந்திடாயே. 214

அயச்செம்பு பலம்நாலு குகையிலிட்டு
அதையுருக்கி நாலிலொன்று தங்கந்தன்னை
நயமாகக் கொடுத்துவிடு வாங்கிநன்றாய்
நாடியது உருகிவிடும் நாகந்தன்னை
பயனாகக் கொடுத்துவிடு வாங்கும்பின்பு
பதியஒன்று காரிகொடு உருகிநிற்கும்
செயமாக யெடுகல்வ மிட்டுநன்றாய்ச்
செல்வம்வரப் பொற்றலையா லாட்டிக்கொள்ளே. 215

## யாகோபு

ஆட்டியிடு சிவக்கமட்டும் புடங்களிட்டு
அருள்பெருக எடுத்துமே துருசுசெம்பில்
தாட்டிகமாய் நூற்றுக்கு ஒன்றுதாக்கு
தப்பாது காஞ்சனமாம் புடமிரங்கும்
போட்டியதாய்ச் சுறுக்குமெத்த செந்தூரங்கள்
புவியில்ரச வாதமா மிந்தப்போக்கு
மாட்டியிட்டுச் செய்தாலோ வாதநேர்மை
மயமாகும் வாதியற்கு வகையதாமே. 216

தேனிலிடு பணவிடைதான் மண்டலத்தில்
தேகசித்தி யாகும்நன்றாய்த் திறமைமெத்த
யோனிகுத்து வாய்வுகளும் சூலைபோகும்
உத்துநின்ற பித்தமுதல் வாதசூலை
வானுலகில் பறக்குமிந்தச் செந்தூரத்தை
வகைகண்டால் மேனியது தங்கம்போலாம்
ஞானமிக வந்திடுங்காண் யாகோப்சொன்னார்
நாடினால் சகலமுந்தான் சித்தியாமே. 217

## பொதுவிதி

சித்திக்க வேணுமென்றா லிரும்பைநன்றாய்ச்
சேர்த்தெடுத்து அயச்செம்பு செய்துகொள்ளு
முத்திக்கு மேமத்தைச் சேர்த்துநீயும்
முனிவாகப் புடம்போடு வாதமாகும்
பத்திக்கும் நாகத்தைக் கால்கட்டாக
பதமான பாகமாய்ச் செய்துகொள்ளு
நத்திரச வாதமாம் யோகம்ஞானம்
நானிலத்தில் வந்திடுங்காண் நாடிப்பாரே. 218

## பொய்வாதி

நாட்டிலே ரசவாதம் பொய்யென்பார்கள்
நன்மையுள்ள நூலறியார் நலமில்லாதார்
கூட்டிலே உயிரிருந்தும் பொருளைக்காணார்
கூட்டமிட்டுப் பேசுவார் குணங்கெட்டார்கள்
யேட்டிலே யெழுதிவைத்தார் சித்தரென்பார்
யிதமாக யெல்லாம்பொய் யென்றபேர்க்கு
போட்டிடுவா யவன்வாயில் மண்ணைத்தானும்
புலம்புவார் தெருவாசல் புலையர்தானே. 219

## சுண்ணம்

நன்மைசொன்னால் தின்மையென்பா ருலகத்தோர்கள்
நாட்டில்நின்ற வேரிலையைப் பிடுங்கிப்பார்த்து
தன்மையா யிம்மூலி சரக்கைகட்டுந்
தடமாக நீற்றிவிடு மென்பார்பாவி
வன்மையுள்ள புடம்போட ஓடிப்போகும்
வகையான முலிகைக்குச் சாபமென்பார்
கன்மமுள்ள கசடரவர் மூலிதன்னைக்
காணாமல் காடெங்கு மலைகுவாரே. 220

## சரக்குக் கட்டு

மாண்டுமே போகாமல் புகைநீர்தன்னை
வைத்தெடுத்துச் சுருக்கிடவே சரக்குக்கட்டும்
தாண்டுமே வெடியுப்புச் சுண்ணம்பண்ணி
சார்வாகச் செயநீரை வைத்துக்கொண்டு
ஆண்டுமே சரக்குகளைச் சுருக்குத்தாக்க
அன்புடனே கட்டியது மெழுகுமாகும்
கூண்டுமே ரவிதனிலே வேதையாகும்
குணமாக யாகோபு கூறினாரே. 221

கூறினார் நல்லோர்கள் பிழைக்கத்தானும்
குற்றமில்லார்க் கொன்றுமில்லை கூறினாலும்
தேறினால் ரசவாதம் வரமாட்டாதோ
தேசத்தி லிந்நூல்போ லொன்றுமில்லை
மாறினால் நூலவனுந் தெரியமாட்டான்
மயக்கமுற்று அலைவார்கள் மாயக்காரர்
மூறியே முரட்டுமன முடையோர்களெல்லாம்
முத்தியில்லை யென்றுசொன்னார் யாகோபுதானே. 222

## கெந்திகாரி செம்பு வேதை

கெந்தகமும் பலமொன்று கல்வத்திட்டுக்
கிளரியரை யிந்திடைசேர் சூதந்தன்னை
முந்தவரை சாமமொன்று பழச்சாற்றாலே
முன்புபெறக் குப்பியிட்டு மேரில்வைத்து
சிந்தனைகள் வாராது சாமம்நாலு
சிறக்கவெரி கரிபோலே மேலேயேறும்
பந்தமரக் குப்பியுடை கல்வமிட்டு
பதியவரைச் செங்கீரைச் சாற்றாலாட்டே. 223

## யாகோபு

ஆட்டியரை யிருசாமம் உண்டைபண்ணி
அதைக்கதிரிற் காயவைத்து ஆண்மைகேளு
மீட்டிகுகை தன்னிலிட்டுக் காரீயத்தை
மிகவுருக்கி யிடைக்கிடைதான் முனிந்தேயீந்து
தேட்டிலென்ன வயனமாங் கரியாய்ப்போகும்
திடமாக விக்கரிக்குச் செம்புசேர்த்து
நாட்டிகுகை தன்னிலிட்டு உருக்கியூத
நலமான யாகோபு நவின்றிட்டாரே. 224

செம்பதுவுஞ் சொகுசாப்போல் நிறமுமாகும்
சிறக்கயெடு யிடைக்கிடைதான் யேமமீய்ந்து
நம்பியதை உருக்கியிடு வெள்ளிதன்னில்
நாட்டியிடு யெட்டுக்கு ரெண்டுதானும்
பம்பரம்போ லுருக்கியதை யூதிப்போட
பரிவாக யெட்டாகு மாத்துத்தானும்
அம்புவியி லிதைவிற்றுச் சிலவுசெய்து
ஆண்மைபெற ஞானத்தை அறிந்திடாயே. 225

அறிந்துயிந்தச் செம்புதனை வைத்துநீயும்
அடைவாகச் சிலவுசெய்து பெரியவேலை
குறித்துயெடு செந்தூரம் பண்ணிநன்றாய்
குணமாக உண்டுவிடு காயசித்தி
அறிந்திடவே ஆயிபதம் பூசைபண்ணி
அன்பாகக் களங்குமுதல் மயமுங்கண்டு
செறிந்திடவே யிருந்திடுவீ ரென்றுஞான
தேசிகனார் யாகோபு சொன்னவாரே. 226

### அயச்சத்து

நல்லிரும்பு அரப்பொடியும் நேரேதானும்
நாட்டியிடு துருசதுவுங் கல்வத்திட்டு
சொல்லவரை பழச்சாற்றால் கதிரில்வைத்து
சுடுகுகையி லிட்டுருக்கு சத்துமாகும்
மெல்லவதை யெடுத்துயிடை துருசுச்செம்பை
மேன்மைபெறச் சேர்த்துருக்கு மணியதாகும்
சொல்லவதை யூதியெடு செம்புமாகும்
தொல்லுலகில் ரசவாதி பிழைக்கத்தானே. 227

## சுண்ணம்

ஆசுதுரு சுச்செம் புருக்கித்தங்கம்
அந்தயிடை தகடாக அடித்தபின்பு
வாசிபெறக் கெந்தகமும் பலமுமொன்று
வடிவாக வீரமது பலமுங்காலாம்
வீசியரை பழச்சாற்றால் சாமமாட்டி
விசையாக மெழுகுபதங் கதிரில்வைத்து
காசியென்ற குப்பிதனி லடைத்துமேரு
கணக்காக யெரித்திடவே களங்குமாமே. 228

எரித்திடவே மேலேறிக் கரியாய்நிற்கும்
யிதமாக வழித்துயெடு பழச்சாற்றாலே
விரித்துஅரை முன்தகட்டி லிடையேபூசி
விரிகதிரோ னிடம்வைத்துப் புடமுமிட்டு
சரித்துயெடு நொறுங்கமட்டும் புடைத்துப்போட்டு
சரியாக யெடுத்துமெள்ள சாற்றக்கேளு
குரித்துநீ பற்பம்வைக்க யாகோபுசொன்னார்
கொட்டினார் முன்னூற்றின் குணமிதாமே. 229

மதியெட்டில் ரெண்டுநீ குருவைத்தானும்
மயமாகக் காஞ்சனமா மெடுத்துக்கொள்ளு
விதியெட்டில் வாசியைத்தா னுருகிஞான
வீதிதனி லேறிச்சுற்றி விதமதாக
பதியவிற்றுச் சிலவுசெய்து பரங்கட்கப்பா
பண்புடனே யன்னமிடு பாலாற்போடு
கதியைநினை ஒருவருக்குந் தெரிந்திடாமல்
காட்சிபெற யிருந்திடுநின் கடனிதாமே. 230

இனமுடனே சேராத வாதிதன்னை
யிருக்குதென்று சொல்லாதே யின்பமாகத்
தனமுடைய லோகத்தா ருன்னைத்தானும்
தலைபோகப் பார்த்திடுவார் தடையேயில்லை
கனவிலும்நீ நினையாதே முகஞ்சோர்ந்தாப்போல்
கருத்தினிலே நினைத்திருக்கக் கருணையாகும்
குணமுடையோ ராயிருந்தால் மகிழ்ந்துசொல்லு
குற்றமுள்ள வாதியென்றால் முகம்பாராதே. 231

உலகுள்ளோ ருனையடுப்பா ருண்மைகேட்பார்
உருதிபெற உபகாரஞ் செய்யார்பொல்லார்
விலகிவிடு அவன்முகத்தைப் பார்த்திடாதே
விரும்பியுனை நிழல்போலே கார்த்திருந்தால்
தலமாக சரக்கினுட வைப்புச்சொல்லு
தாட்சிபெறப் பிச்சையெடுத் துண்டுவாழு
குலமதிலே தள்ளிடுவார் யிருக்கத்தக்குங்
குருவிதியாய் நாளினிற் சமாதிநில்லே. 232

நில்லென்றார் ரசவாதங் குபேரன்வாழ்வு
நிலைத்துதென்றால் சிவரூபம் நினைவிலெண்ணி
அல்லென்ற ஆண்டவன்றன் பொக்கிஷத்தை
அரிந்தாலு மனதடங்கி மிடியனாகி
சொல்லெனவே திரிந்துவிடு லோகத்தோர்க்கு
செயமான மயக்கமில்லை செரிதாய்வாழு
கல்லெடுத்து ஆகாச மெரிந்தாற்போல
கடுமைபெறத் திரிந்தாலே உயிரும்போமே. 233

வெள்ளிதங்கந் தனையெடுத்து ரசவாதத்தில்
வித்தகமாய்க் கைவிட்டு வெளியில்விட்டார்
துள்ளியதை மானிடர்க ளொருவர்தானும்
தூக்கியிந்தப் பொருள்கொண்டு போகத்தானும்
கள்ளனவன் பொருள்களைத்தான் கவரவேண்டி
கனிந்துஉயிர் போக்கியே கொண்டுபோவான்
உள்ளபடி ரசவாதம் கண்டோர்தன்னை
உயிர்வதைக்க நினையார்க ளுலகத்தாரே. 234

ஒருதரந்தான் கைபாகந் தப்பினாக்கால்
உடன்பிறகு செய்திடவே பாகமாகும்
இருதரமுந் தப்பினா லின்னமொன்று
யின்பமாய்ச் செய்துவிடு பாகமாகும்
கருவறியா ரொருபோது மறியமாட்டார்
கன்காட்டத் தெரியாது கனவில்லார்க்கு
பருவமுட னூலறிந்தால் பதியும்நெஞ்சில்
பகுத்தறிந்தால் வாதவித்தை பலிக்குந்தானே. 235

நாட்டிலுள்ள வாதியர்கள் சொல்லும்நேர்மை
நானறிவேன் ரசவாதமென்று சொல்லி
மூட்டியவர் பொருள்வாங்கித் தின்றுதானும்
முடியமட்டும் பொய்சொல்லு முரட்டுவாதி
ஏட்டிலில்லை யென்றுகுரு உபதேசித்தார்
எளிதாக யிருக்குதென்று சொல்வார்மட்டை
சாட்டியடித் தாலவர்க்குப் பாவமில்லை
சதிசொன்னார் நரகமதி லெய்துவாரே. 236

வனத்திலுள்ள மூலிகையைத் தேடித்தேடி
வதைத்துமே பிடுங்கிட்டுக் பாஷாணத்தில்
நினைத்தபடி சுருக்கிட்டுக் கவசங்கட்டி
நிலந்தனிலே புடமிடவே ஓடிப்போக
கனைத்திந்த நூல்பொய்யாய்ப் பாடினார்கள்
கருப்புநாய் குலைத்தாப்போற் சொல்லிச்சொல்லி
முனைத்துடனே வைத்திருந்தாற் சொத்துக்காகும்
முக்கியமாய்ச் சுட்டனென்பார் உண்மைதானே. 237

கண்டவர்கள் சொல்வாரோ கல்நெஞ்சோர்கள்
கருத்தரியார் சொல்வார்கள் கருத்தையெண்ணி
தொண்டர்களாஞ் சிலபேர்கள் நல்லோர்போல
தொல்லுலகி லிருப்பார்கள் சோதித்தேபார்
பண்டவர்முன் பக்கமது போலேபேசி
பார்த்துநீ யவனுன்முன் பகர்ந்தபேச்சை
தொண்டனாய் நினைவில்வைத்துத் தள்ளிப்போடு
தொல்லுலகி லிப்படிக்குச் சோதித்தறே. 238

## கெந்திரசச் சூரணம்

கெந்தியெடு பலம்ரெண்டு கல்வத்திட்டு
கிளரவரை சூதம்நேர் சேர்த்துநீயும்
முந்தியரை மையதாம் பொடியதாக்கி
முக்கியமா யரைத்தபின்பு சொல்லக்கேளு
தந்திவிரை தோல்போக்கி வருத்துநன்றாய்
தனைமூன்று சரக்கதனை யரைத்துக்கல்வம்
சிந்தனைகள் வாராமல் பழச்சாராட்டி
சிறந்துகதிர் காயவைத்துச் சொல்லக்கேளே. 239

—

காயவைத்து முக்கண்ணன் குடுக்கைதன்னில்
கனமாக அடைத்துவைத்துக் கேளுஞானம்
ஞாயமதாய்த் தேனிலிடு பணமவ்வீதம்
நாடியொரு மண்டலத்தில் நசையும்போகும்
மாயமாய்ப் புளியுப்புத் தள்ளிநீயும்
மகிமைபெற உண்டுவர் வியாதிதானும்
சேயவே கதிர்கண்ட பனிபோலாகும்
திடமாக யாகோபு செப்பினாரே. 240

குன்மவலி மகோதரங்கள் சூலைநன்றாய்க்
குணமான வாதமொடு பித்தம்போகும்
நன்மைதரு மூலத்தி லுள்ளவாய்வு
நாடாது பறங்கியென்ற புண்ணும்போகும்
சென்மவினை தீர்ந்துவிடும் செகத்திற்றானும்
சித்தியதாம் பெரும்பாடு தலைநோக்காடு
கன்மவினை யிவையெல்லாந் தீருமென்று
கருத்துணர்ந்து யாகோபு கருதினாரே. 241

எளியோராம் பண்டிதர்கள் பிழைக்கநன்றா
யினியிந்த வயித்தியத்தை யிரக்கமாக
கனிவாக யிம்மருந்தைக் கடைசிதன்னில்
கருத்துவைத்து உபதேசம் சொன்னேனப்பா
வளியாகச் செய்துமண் டலமேயுண்ண
வடிவளிக்குந் திமிர்குஷ்டம் ரெண்டும்போகும்
பளியாகச் சொல்லவில்லை பதியைப்பார்த்து
பகர்ந்துணர்ந்து பண்டிதத்தைப் பார்த்துக்கொள்ளே. 242

## அப்ரேகச்செந்தூரம்

அப்ரேகம் பலம்நாலு கல்வத்திட்டு
அரைக்கலாம் வீரமது பாணியாலே
தப்பவே அரைக்கவது வெண்ணெய்யாகும்
தனையெடுத்துப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளு
செப்பமுடன் தாளகமோ ஒட்டிரெட்டி
செயமாகக் கட்டியபின் கதிரில்வைத்து
துப்பறவே புடம்போடு அவன்கைக்கேறும்
துடியான யாகோபு சொன்னவாறே. 243

நாட்டிலே விராட்டிரெண்டு சுற்றிலுந்தான்
நலமாக முறித்தடுக்கிச் சாண்தாநீளம்
கூட்டிநடுக் கும்பம்போ லிட்டுக்கொள்ளு
குணமாகக் கிளிஞ்சிநீர் நிறையவிட்டு
மூட்டிநடு வுண்டைதனை நடுவிலிட்டு
முனையவதன் மேலிடுநீ கிளிஞ்சிநீற்றை
காட்டிவிட்டு அதின்மேல்வி ராட்டிரெண்டு
கனிவாக யிட்டுஅங்கி தன்னைப்போடே. 244

போட்டுநீ நெருப்பதுவும் பிடித்துவெந்து
புக்கிவரும் நடுச்சமயம் பொருந்திப்பார்த்து
தாட்டிகமா யணைத்துவிடு வுண்டைதன்னைத்
தானெடுத்துப் பிழிந்துவிடு தாரந்தானும்
மாட்டியது சிவந்துசெந் தூரமாகும்
மகிமைபெறக் கல்வத்தில் சாமமொன்று
ஆட்டியெடுத் தன்பாக வைத்துக்கொண்டால்
அதன்பின்பு செய்யும்வகை யறையக்கேளே. 245

ஒன்றாக வரைத்துத்தந்தி விரைதோல்போக்கி
ஒக்கவிடு தாரம்நேர் பழச்சாறாட்டி
நன்றாகச் சாமம்நா லரைத்துப்பின்பு
நகைநீரிற் காயவைத்துக் கல்வத்திட்டு
மன்றாகப் பொடித்துவைத்துக் குடுக்கைதன்னில்
மகிமைபெற வடைத்துப்பின் வகையைக்கேளு
நன்றாகப் பணவிடைதா னந்திசந்தி
நலமாகத் தின்றிடவே நகைகள்போமே. 246

காசம்நோ யெலிகடியும் யீளைநன்றாய்க்
கருதவே வாயுவெல்லாம் கடலேபுக்கும்
பாசவினை வாயுவெல்லாம் படிந்துநன்றாய்ப்
பதிவாகும் பீனிசத்தின் காசம்போகும்
நேசமா மந்தார காசம்போகும்
நிலைநின்ற பித்தமொடு காசம்நன்றாய்
வாசமனு தினமுண்டாம் யாகோபுசொன்னார்
வகையான கைபாக வரிசைதானே. 247

உப்புடனே புளிதள்ளி உண்டபேர்க்கு
உறுதியுள்ள யிவ்வகையாம் நசைகள்தீரும்
செப்பமுள்ள புகையிலையும் பெண்ணுந்தள்ளு
செயமான கடுகுதள்ளி யுண்டுதேரு
கைப்புள்ள பதார்த்தமெல்லாந் தள்ளியுண்ணு
கடல்புக்குஞ் சிலேற்பனங்கள் காணாதோடும்
செப்பினேன் முன்னூறிற் செயமதாகும்
செவ்வையா யாகோபு சொன்னார்தானே. 248

## கெந்திப் பதங்கம்

வீரங்கால் கெந்திமுக்கால் ரெண்டுஞ்சேர்த்து
விதமாகப் பழச்சார்விட் டரைத்துநீயும்
பாரமாய்க் கதிரில்வைத்து உலர்ந்தபின்பு
பதமாகக் கடமீது போட்டடைத்து
கோரமாய் மேல்மூடி யுளுந்துச்சீலை
குணமாகச் சீலைசெய்து கதிரில்வைத்து
சாரவே நிழல்போலே யெரிக்கயேறும்
சத்தியமா யெடுபிரித்துச் சாற்றக்கேளே. 249

சுத்தவரை பொடிபலமாந் துருசுபத்து
சுருதிபெற வைத்துடனே கூடச்சேர்த்து
பத்தியொடு முன்பதங்க மயம்நேரிட்டு
பதியவரை பழச்சாற்றால் சாமம்நாலு
வித்தகமா யரைத்துசிறு குகையிலிட்டு
விதமாக வெங்காரங் கொஞ்சம்போட்டு
சித்திபெற உருக்கிடவே மதிபோலாகும்
செயமாக யாகோபு சொன்னவாறே. 250

## துருசுச் செம்பு

உருக்கியெடு ஐந்துதரங் காரமிட்டு
ஒழுங்காகச் செம்பதுதான் கதிர்போலாகும்
பெருக்கியெடு கரியில்நன்றாய் வைத்துருக்கு
பிசகற்ற குகையிலிட்டு உருக்கும்போது
நருக்கெனவே தங்கமிடை சேர்த்துருக்கு
நலமாக யெடுத்துடைத்து நாடிக்கேளு
முருக்கெனவே உடையுமந்தச் செம்புதானும்
மூவுலகு மெச்சுமந்தச் செம்புதானே. 251

மதியருக்கு யெட்டுக்கு ரெண்டுசெம்பு
வகையாகச் சேர்த்துருக்க மாத்துயேழு
பதிவாகச் சிவவேடம் தரித்துநீயும்
பத்தியொடு வித்துடனே சிலவுசெய்து
நதிபலவுஞ் சுத்திவெகு முறையைக்கேளு
நாட்டிலுள்ள வாதிகளைக் கண்டுபேச
கெதிவேறு யில்லையென்று சொல்லிநீயும்
கிரகித்துப் பாகமதைக் கேட்டுக்கொள்ளே. 252

கேட்டுவெகு பாகத்தைக் கூட்டித்தள்ளிக்
கிடைத்தமட்டும் வாங்கியே கொண்டுநீயும்
தாட்டிகமாய்ப் போகாமல் மனதிலெண்ணிச்
சாஸ்திரங்கள் நூல்பலவுஞ் சம்பாதித்து
வாட்டிபல சரக்குகளை வைத்துப்பாரு
வடிவுபெறப் பெரியோராம் வேடங்கொண்டு
தேட்டிலென்ன சம்பாதி யென்றுயெண்ணித்
திடமாக யாகோபு சொன்னவாரே. 253

பெரியோரைக் கண்டுவெகு பேச்சுப்பேசி
பிணக்கருத்து விபரமதாய்ப் பேசிநீயும்
அரியாத பேர்களைப்போ லிருந்துபேசு
அடைவான கைபாகம் அறிந்துபேசு
சரியாக மனுஷனுட னேர்மைபார்த்து
சாஸ்திரங்கள் பலபலவா முறையுங்கேளு
பிரியாம லிருந்துவெகு நேரந்தானும்
பெரியோரைப் பாகமது விரும்பிக்கேளே. 254

சிவனுடைய விந்துதான் பலமும்நாலு
சித்தண்டத் தோட்டையுங் கல்லுப்போடு
கவனமுடன் செங்கல்மா வகைக்கிக்காலாய்க்
கல்வமிட்டுச் சாமமொன்று தானுமாட்டு
தவமாக யெடுத்துக்கட மீதிலிட்டுத்
தன்மைபெற யெரித்திடவே மேலேயேறும்
பலமாக மேற்றோண்டி பிரித்துநீயும்
பண்பாக ரசமெல்லாம் வழித்திடாயே. 255

## மனோசிலை ரசப்பதங்கம்

சிவந்திருக்கு மனோசிலைதான் பலமும்நாலு
சிறக்கவதைக் கல்வத்திற் பொடித்துநீயும்
கவனமாய் ரெண்டுகடந் தன்னைத்தானும்
கனத்திடவும் வாய்தேய்த்து அடுப்பிலேற்றி
நவமான காரீயம் உள்ளேயிட்டு
நலமுடனே உருக்குமுகந் தனிலேநீயும்
தவம்பெறவே மனோசிலையை யிட்டுமூடி
தனிவாக மண்சீலை வலுவாய்ச்செய்யே. 256

உளுந்துமண் சீலைசெய்து சாமந்தானும்
உறுதிபெற யெரியிடவே யுயரவேறி
குளுந்திருக்கு மனோசிலையாம் பதங்கந்தன்னைக்
கூட்டியெடு பலமொன்று சூதம்நாலு
தழுந்திடவே யிவைரெண்டும் புரம்பாய்வைத்துத்
தளுக்கில்லாக் கல்லுப்புப் படியும்நாலு
அமுந்தவதை யிடித்துசெங்கல் மாவுமொன்று
அடைவாகக் கட்டியிட்டு வறுத்துக்கொள்ளே. 257

வறுத்தெடுத்துப் புதுச்சட்டி தன்னிலிட்டு
வகைபெறவே நிறைபாக வுப்பமுழ்த்தி
நிறுத்தமுன்னே யிருக்கின்ற ரசமுந்தாரம்
நிலைக்கவே நடுவிலிட்ட பள்ளந்தன்னில்
ஒறுத்துவிடு மேலாகச் சட்டிமூடி
ஒக்கவிடு அடுப்பிலிடு உறுதியாகச்
சிறுத்துயெரி கமலம்போல் நூறுனாழி
சிறுகவது யேறியே பதங்கமாமே. 258

பதங்கத்தை வழித்துஒரு சிமிழிலிட்டு
பணவிடைதான் மதுவிலிட்டு ஆறுநாள்தான்
விதமான சயகாசம் பித்தகாசம்
விருப்பமுள்ள வாதமது வாங்காதோடும்
அதமான சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறும்
ஆண்மையுள்ள மந்தார காசத்தோடு
பதமாகும் பீனிசமுங் காசந்திரும்
பகர்ந்துரைத்தார் யாகோபு பரிவாய்தானே. 259

உண்டபின்பு பத்தியந்தா னுருதிகேளு
உண்மையுள்ள புளியாகா துப்பாகாது
கொண்டபெண்ணு மாகாது கூத்தியுள்ளி
கொடுமையுள்ள எருமையுட மோராகாது
பண்டுசெய்யும் பழையதாகா கஞ்சிகாய்ச்சிப்
பக்தியுடன் திரிநாளு முண்டுதேறு
கண்டதோர் பதார்த்தமெல்லாந் தள்ளிநீயும்
கருத்தாக உண்டிடவே கருதுவாயே. 260

## அயச்சத்துச்செந்தூரம்

இரும்பினரப் பொடிதனையுங் கல்வத்திட்டு
யிதினிடைக்குத் தாளகத்தை யியல்பாய்ச்சேர்த்து
அரும்படியா யரைபாணி யதனினாலே
அரைத்துப்பின் கதிர்முன்னே காயவைத்துத்
தரும்படியாய்ச் சுடுகுகையில் வைத்துருக்கத்
தனியான மணிபோலே யுருகிநிற்கும்
பெரும்படிக்குப் பதினாறி லொன்றுகாரம்
பிரிவாக விட்டரைத்துப் பின்புகேளே. 261

பின்புகுகை தன்னிலிட்டு உருக்கித்திரு
பிசகறவே உருகியொரு மணியாய்நிற்கும்
தென்புடனே பொற்றலையின் சாற்றாலாட்டித்
திடமாகக் கதிர்முன்னே காயவைத்து
நன்மைபெறப் புடமூன்று போட்டெடுத்து
நாட்டியிடு பாதிச்சவ் வீரந்தன்னை
இன்மையொடு முன்சாற்றா லரைத்துவில்லை
யெரிகதிர்முன் காயவைத்துப் புடத்தைப்போடே. 262

புடமூன்று போட்டெடுக்கப் பவளமாகும்
புகலரிதா யெடுத்ததைநீ புரம்பாய்வைத்து
திடமாகக் காரீயம் பலமும்நாலு
திரும்பவதைத் தகடடித்துப் பிச்சுப்போடு
படஅரைநீ அன்னத்தாற் சாமமாட்டிப்
பதியவதை வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நடமாகப் புடமூன்றில் மஞ்சளாகும்
நாடியிடு மென்றுசொன்னார் யாகோபுதானே. 263

எடுத்தரைத்து யிப்படிக்குப் புடமுமிட்டு
யிதமாகப் போட்டிடவே மஞ்சளாகும்
தொடுத்துஒரு நிறையாகும் அயச்செந்தூரம்
துணிவாக யிடைசேர்த்து அன்னத்தாலே
அடுத்துவரை புடமூன்று பேட்டெடுக்க
அதுமுருக்கம் பூப்போலே யாகும்மேனி
கொடுத்துரவி ரெண்டிடையாம் குருவுமொன்று
குலமாகச் சேர்த்துருக்கக் குணமதாமே. 264

உருக்கியுடை னொறுங்கிடுமாம் வெள்ளியேழில்
உருவாகக் குருசெம்பு மூன்றுசேர்த்து
நெருக்கியிதைக் கரியில்வைத்து உருக்கியூது
நிலையான தங்கமது யிடையேசேர்த்து
பெருக்கியிதை உருக்கிடுங்காண் ஊதிப்போடு
பெருமையுள்ள தகடடித்துப் பின்புநீயும்
கருக்கிடையாய்ப் புடமிடுநீ நாள்தப்பாது
கனிவாக மூன்றாகுங் கண்டுகொள்ளே. 265

கண்டந்தத் தகட்டைவைத்துப் புடமுமூன்று
கருதியிட அருகுகட்டுங் கணக்காய்நன்றாய்
தொண்டுபட ஆவரம்பூ நிறமதாகும்
தொக்கயெடு காஞ்சனமாம் வித்துநீயும்
பண்டுபடச் செலவுசெய்து தர்மம்பண்ணிப்
பதிவாக ஞானத்தி லடுத்துக்கூடு
முண்டுசெய்ய வேண்டாங்காண் யாகோபுசொன்னார்
முனிந்துஅவர் பேர்விளங்கு முறையிதாமே. 266

வழியோடு சுழிமுனையில் மருவியாடு
வையகத்தில் வயித்தியத்தை வலுமையாக
கழிவாகச் செய்யாதே கணக்கப்பண்ணு
கருத்துவைத்து சிவயோக வழியில்நில்லு
பழியாகச் சொல்லாதே நூலைப்பாரு
பதிவான பாகமது பகர்ந்தநேர்மை
விழிமடவார் தம்மைநம்பி யிருக்கவேண்டாம்
வேதமதை நம்பியே யிருந்திடாயே. 267

## சுண்ணம்

விரும்பியிந்த முன்னூற்றை மிகவும்பார்த்து
வேதமறை யடியதனைச் சோதித்தேறு
வரும்புகழை வன்மமதைக் கண்டுகொள்ளு
வாதாடித் திரியாதே வலுமைபேசி
இரும்புதனை ஊதிடவே வாதந்தேறும்
யெடுத்தகுறி தப்பாது யியல்புமெத்த
தரும்புகழா யிருந்துநல்ல யோகம்பாரு
தந்தையாம் யாகோபு சாற்றினாரே. 268

செந்தூரந் தேனிலுண்ண மண்டலத்தில்
சிறுவயதாம் நரைதிரைகள் தெரிகெட்டோடும்
விந்திருகும் பெலனுண்டாம் வியாதியெல்லாம்
விடுபடுங்காண் மேனியது அலரிப்பூவாம்
முந்தும்வினை தீர்ந்திடுங்காண் முத்தியுண்டாம்
முன்னூற்றின் ரசவாத மூர்க்கமெத்த
சிந்தைதனி லெந்நேரந் தென்புண்டாகும்
சித்திபெற யாகோபு சொன்னவாரே. 269

வாதம்வந்தா லவன்குடும்ப மெல்லாந்தானும்
வகையாகப் பிழைத்திடுங்காண் வலுமையாக
நீதம்வரும் ஞானங்சள் செல்வமுண்டாம்
நிலைத்திடுங்காண் தேகமது சொர்ணமாகும்
ஆதரவாய்க் கனலெழுந்த கதைபோலாகும்
அடுத்தவர்க்குப் புகழுண்டாம் ஆண்மைமெத்த
போதம்வரு மெஞ்ஞானம் புகழுண்டாகும்
போக்கறிந்து யாகோபு புலன்சொன்னாரே. 270

## வங்கச்செந்தூரம்

நயமாகக் கருவங்க முருக்கிநீயும்
நாடறிய அன்னமென்ற நீரிலேழு
பயமாகச் சாய்த்துமே குகையிலிட்டு
படவுருக்கி யிடைக்கிடைதான் கெவுரிசேர்த்து
மயமாக உருக்கிடவே வெட்டையாகும்
மதித்தெடுத்துக் கல்வமிட்டுப் பின்புநீயும்
வயமாகு மன்னமென்ற சாற்றாலாட்டி
வலுமைபெறப் பெரும்புடமாய்ப் போடுவாயே. 271

எடுத்தரைத்து யிப்படிக்குப் புடமுமிட்டு
யிதமாகப் போட்டிடவே மஞ்சளாகும்
தொடுத்துஒரு நிறையாகும் அயச்செந்தூரம்
துணிவாக யிடைசேர்த்து அன்னத்தாலே
அடுத்துவரை புடமூன்று பேட்டெடுக்க
அதுமுருக்கம் பூப்போலே யாகும்மேனி
கொடுத்துரவி ரெண்டிடையாம் குருவுமொன்று
குலமாகச் சேர்த்துருக்கக் குணமதாமே. 264

உருக்கியுடை னொறுங்கிடுமாம் வெள்ளியேழில்
உருவாகக் குருசெம்பு மூன்றுசேர்த்து
நெருக்கியிதைக் கரியில்வைத்து உருக்கியூது
நிலையான தங்கமது யிடையேசேர்த்து
பெருக்கியிதை உருக்கிடுங்காண் ஊதிப்போடு
பெருமையுள்ள தகடடித்துப் பின்புநீயும்
கருக்கிடையாய்ப் புடமிடுநீ நாள்தப்பாது
கனிவாக மூன்றாகுங் கண்டுகொள்ளே. 265

கண்டந்தத் தகட்டைவைத்துப் புடமுமூன்று
கருதியிட அருகுகட்டுங் கணக்காய்நன்றாய்
தொண்டுபட ஆவரம்பூ நிறமதாகும்
தொக்கயெடு காஞ்சனமாம் வித்துநீயும்
பண்டுபடச் செலவுசெய்து தர்மம்பண்ணிப்
பதிவாக ஞானத்தி லடுத்துக்கூடு
முண்டுசெய்ய வேண்டாங்காண் யாகோபுசொன்னார்
முனிந்துஅவர் பேர்விளங்கு முறையிதாமே. 266

வழியோடு சுழிமுனையில் மருவியாடு
வையகத்தில் வயித்தியத்தை வலுமையாக
கழிவாகச் செய்யாதே கணக்கப்பண்ணு
கருத்துவைத்து சிவயோக வழியில்நில்லு
பழியாகச் சொல்லாதே நூலைப்பாரு
பதிவான பாகமது பகர்ந்தநேர்மை
விழிமடவார் தம்மைநம்பி யிருக்கவேண்டாம்
வேதமதை நம்பியே யிருந்திடாயே. 267

## சுண்ணம்

விரும்பியிந்த முன்னூற்றை மிகவும்பார்த்து
வேதமறை யடியதனைச் சோதித்தேறு
வரும்புகழை வன்மமதைக் கண்டுகொள்ளு
வாதாடித் திரியாதே வலுமைபேசி
இரும்புதனை ஊதிடவே வாதந்தேறும்
யெடுத்தகுறி தப்பாது யியல்புமெத்த
தரும்புகழா யிருந்துநல்ல யோகம்பாரு
தந்தையாம் யாகோபு சாற்றினாரே. 268

செந்தூரந் தேனிலுண்ண மண்டலத்தில்
சிறுவயதாம் நரைதிரைகள் தெரிகெட்டோடும்
விந்திருகும் பெலனுண்டாம் வியாதியெல்லாம்
விடுபடுங்காண் மேனியது அலரிப்பூவாம்
முந்தும்வினை தீர்ந்திடுங்காண் முத்தியுண்டாம்
முன்னூற்றின் ரசவாத மூர்க்கமெத்த
சிந்தைதனி லெந்நேரந் தென்புண்டாகும்
சித்திபெற யாகோபு சொன்னவாரே. 269

வாதம்வந்தா லவன்குடும்ப மெல்லாந்தானும்
வகையாகப் பிழைத்திடுங்காண் வலுமையாக
நீதம்வரும் ஞானங்சள் செல்வமுண்டாம்
நிலைத்திடுங்காண் தேகமது சொர்ணமாகும்
ஆதரவாய்க் கனலெழுந்த கதைபோலாகும்
அடுத்தவர்க்குப் புகழுண்டாம் ஆண்மைமெத்த
போதம்வரு மெஞ்ஞானம் புகழுண்டாகும்
போக்கறிந்து யாகோபு புலன்சொன்னாரே. 270

## வங்கச்செந்தூரம்

நயமாகக் கருவங்க முருக்கிநீயும்
நாடறிய அன்னமென்ற நீரிலேழு
பயமாகச் சாய்த்துமே குகையிலிட்டு
படவுருக்கி யிடைக்கிடைதான் கெவுரிசேர்த்து
மயமாக உருக்கிடவே வெட்டையாகும்
மதித்தெடுத்துக் கல்வமிட்டுப் பின்புநீயும்
வயமாகு மன்னமென்ற சாற்றாலாட்டி
வலுமைபெறப் பெரும்புடமாய்ப் போடுவாயே. 271

போட்டுயெடு கல்வமிட்டு அன்னத்தாலே
பொருந்தவதை யரைத்தூவி காயவைத்து
காட்டுப்புட மிப்படிக்குச் சிவக்கமட்டும்
கதிர்பெறவே புடமிட்டு யெடுத்துவைத்து
நாட்டினிலே சொல்லாதே முறைகள்தன்னை
நாதாக்கள் சித்தரவர் சபிப்பார்சாபம்
பாட்டதனிற் றோய்ந்தாக்காற் பலனுண்டாகும்
பக்திதரும் யாகோபு பகர்ந்தவாரே. 272

கொள்ளுயிடு படிபாணி நாலுவிட்டுக்
குணமாக யெரித்துயெட்டி லொன்றாய்க்காய்ச்சி
மெள்ளயிடு காந்தமது பலந்தானாலு
மெதுவாகக் கல்வமிட்டுக் கிஷாயத்தாலே
துள்ளவதை யரைத்துவில்லை கதிரில்வைத்துத்
தூக்கியெடு புடமூன்று போட்டெடுக்க
கள்ளமறப் பண்ணுமது கல்வமிட்டுக்
கருணைபெற முன்னீரி லரைத்துக்கொள்ளே. 273

அரைத்துவில்லை ரவியில்வைத்துப் புடமுமிட்டு
அதையெடுக்கப் பவளநிற மாகுமாகும்
குறைத்ததிந்தப் படியாகப் புடமுமைந்து
கொள்கையிடப் பவளமுமாம் குணமுள்ளோர்க்கு
வரைத்துயெடு காந்தச்செந் தூரஞ்சேர்த்து
வலுவாகக் காரீயசெந் தூரஞ்சேர்த்து
உறைத்துஅரை வில்லைதட்டிக் கதிரில்வைத்து
ஒழுங்காகப் புடமிரண்டு போட்டுக்கொள்ளே. 274

போட்டுயெடு முன்னீரா லரைத்துநீயும்
போக்கோடே தாளகத்தின் மேலேஅங்கி
பூட்டிவிடு காயவைத்துப் புடமும்போட்டு
புகழாக யெடுத்துக்கல்வ மிட்டுநன்றாய்
காட்டிவிடு துருசுனுட செம்புனூற்றில்
கனிவாக ஒன்றிட்டு உருக்கிப்பாரு
தேட்டுரெம்பக் காஞ்சனமாம் நேர்மைகண்டு
தீரமுள்ள ரசவாதத் திறமைதானே. 275

செந்தூரம் பணவிடைதான் தேனிலுண்ணச்
சிறுகதிர்போல் மேனியாஞ் சாவோயில்லை
வந்தபிணி வாதமெல்லாம் மதித்துஓடும்
வகையான பித்தமொடு சிலேற்பனம்போம்
சந்ததமு மிளமையைப்போ லிருக்கலாகும்
சத்திவலி குன்மங்க ளெல்லாஞ்சாகும்
முந்தவினை தீர்ந்துவிடும் யாகோபுசொன்னார்
முத்திதரும் முன்னூற்றில் முறையைப்பாரே. 276

பெண்ணோடு புளிதள்ளி வாழைக்காயைப்
பொதுவாகத் தள்ளிவிடு மீனைத்தள்ளு
கண்ணுடனே செம்மறியுங் கருதித்தள்ளு
காய்ந்தவகை யிறைச்சிதள்ளு கருணைகூறு
மெண்ணுதிண்ணு மரிசியதின் மாவுதள்ளு
மேதினியில் மாங்காயை மிகவுந்தள்ளு
உண்ணுவிடச் செந்தூர முறுதிமெத்த
ஓதினார் யாகோபு உலகத்தோர்க்கே. 277

வாதம்வரும் வழியாகப் பார்த்துத்தேறி
வகைபெறவே களங்கினுடன் தங்கஞ்சேர்த்து
நீதமாய்ப் புடம்போடு புடமிறங்கும்
நிலைத்துநிற்கும் தங்கமது நிசமதாகும்
சேதம்வறா வேதையிது செயமதாகும்
சித்திமுத்தி யாகுமிது செணத்தில்நன்றாய்
வேதமதில் சொன்னதிந்த மார்க்கந்தன்னை
வெற்றிபெற யாகோபு விளம்பினாரே. 278

சிவசொத்தை வருமையறச் செய்துகொள்ளு
சித்தரோ டொப்பாக யிருந்துநன்றாய்
தவமாக யிருந்துவிடு ஞானந்தன்னை
தாக்கியதை நினைவாகப் பார்த்துநீயும்
கவனமுடன் ஆறுதலங் கண்டுநேசி
கருத்துறவே யோகநிலை காணுநன்றாய்
சவம்போலே திரியாதே யென்றுசொல்லி
தன்மையுள்ள யாகோபு சாற்றினாரே. 279

## யாகோபு

கருத்துணர்ந்த பெரியோரைக் கண்டுபேசிக்
கலந்துரச வாதவித்தை கனிந்துகேட்டு
வருத்தமில்லா வகையாகச் செய்துகொள்ளு
வளமையுள்ள ஞானத்தைக் கருத்திற்கூட்டி
விருத்தியிரு வாசியைநீ கும்பித்தேரு
யேற்றமுள்ள பொரிதோணும் அப்பாற்றானும்
பொருத்தமதாய்த் தொட்டதெல்லாம் சித்தியாகும்
புகலாதே யென்றுசொன்னார் யாகோபுதானே. 280

## உளிசெந்தூரம்

உளியதனைத் தகடாகத் தட்டிநய்ய
உறுதிபெற ராவியதூள் பலமும்நாலு
வெளியில்புளி மாதளையை யருத்துநீயும்
விரலாலே பிழிந்துவிரை தன்னைத்தள்ளி
களிவாக வொழுகரையில் நாள்மூன்றூற்றிக்
களிப்புடன்செந் தூரமாம் ஊறவைக்கக்
சுளிவாக அரைத்துமுன்சார் தன்னிலேதான்
சுருதிபெறப் புடமூன்று சுகமாய்ப்போடே. 281

போட்டுயெடு முருக்கம்பூப் போலேயாகும்
புகழாக வதையெடுத்துப் புறம்பாய்வைத்து
நாட்டியெடு தகடினிய காந்தம்நாலு
நலமாகக் காணத்தின் கிஷாயத்தாலே
பூட்டியரை புடமூன்றில் சிவப்பேயாகும்
போக்கோடே பலம்நாலு உளிச்செந்தூரம்
மாட்டியிடை சேர்த்துக்கா ணக்கிஷாயம்
வகையாகச் சேர்த்தரைத்து வில்லைதட்டே. 282

தட்டிகதிர் காயவைத்துப் புடமுமூன்று
தயவாகப் போட்டெடுத்துப் புறம்பாய்வைத்து
மூட்டியெடு கற்பூர சலாசத்துத்தான்
முனையவது பலம்நாலு கரியிலிட்டு
தட்டியதை யூதிவிடு கடுமையாகத்
தனையெடுத்துக் கல்மதத்தை யிடையேசேர்த்து
விட்டிடுநீ பழச்சாரு விட்டரைத்து
வில்லைதட்டிக் கதிர்முன்னே வைத்திடாயே. 283

முன்னேவைத்துப் பெரும்புடமாய்ப் போட்டெடுத்து
முனையவதைப் புறம்பாக வைத்துக்கொண்டு
சொன்னபடி கெந்தியது பலமிரண்டு
சொல்லவரி தானசிவன் விந்திரண்டு
நன்னயமாய்க் கல்வமிட்டு அரைகருப்பாம்
நாடியதிற் தந்திவிரை தோடுபோக்கி
கன்னமதாய் வறுத்துபலம் ரெண்டுமிட்டு
கனிவாகப் பொடித்துயின்னங் கருதக்கேளே. 284

அயக்கடுகு காந்தசெந் தூரம்நாலு
அவ்விடைக்குச் சலாசத்து கல்மதமும்நாலு
நயமாகக் கெந்திரசம் தந்திநாலு
நாடியிதை வறுத்துநன்றாய்க் கல்வத்திட்டு
இயல்பான வேர்க்கொம்பு மிளகுநாலு
யிதைநிறுத்து நெல்லியிடை கடுக்காய்தோலும்
செய்பாகம் வகைக்குரெண்டு பலமதாகச்
சேர்த்தரைக்கப் புகைநீரைச் செப்பக்கேளே. 285

## ஓமத்திராவகம்

கம்பியுப்பு பலம்ரெண்டு ஓமம்நூறு
கதிபெறவே பாணிரெட்டி கிடத்திலிட்டு
நம்பியதைத் திரிநாள்வை புளிக்கும்நன்றாய்
நாட்டியெடு வாலைதனை மூடிமண்ணை
தெம்பாகச் செய்துஅதை அடுப்பிலேற்றிச்
செயமாக யெரித்துப்புகை நீரைவாங்கி
சம்பமதாம் முன்செய்த மண்டூரத்தில்
தாக்கியரை சாமம்ரெண்டு தகமையாமே. 286

அரைத்துக்கதிர் காயவைத்துப் பொடித்துமுக்கன்
அன்பான குடுக்கைதனில் வைத்துநீயும்
சிரித்துஎடு மூவிரலாற் கொண்டதூளு
செம்மைபட நாளாறு கொடுத்துப்பாரு
குரித்திடுநீ புளிதள்ளி வெட்டைமேகம்
குணமாகுங் கல்லடைப்பன் நீறாங்கட்டி
பரித்துவிடு தந்திமே கங்கள்போகும்
பகலவனைக் கண்டபனி போலாம்பாரே. 287

## யாகோபு

கருத்துணர்ந்த பெரியோரைக் கண்டுபேசிக்
கலந்துரச வாதவித்தை கனிந்துகேட்டு
வருத்தமில்லா வகையாகச் செய்துகொள்ளு
வளமையுள்ள ஞானத்தைக் கருத்திற்கூட்டி
விருத்தியிரு வாசியைநீ கும்பித்தேரு
யேற்றமுள்ள பொரிதோணும் அப்பாற்றானும்
பொருத்தமதாய்த் தொட்டதெல்லாம் சித்தியாகும்
புகலாதே யென்றுசொன்னார் யாகோபுதானே. 280

## உளிசெந்தூரம்

உளியதனைத் தகடாகத் தட்டிநய்ய
உறுதிபெற ராவியதூள் பலமும்நாலு
வெளியில்புளி மாதளையை யருத்துநீயும்
விரலாலே பிழிந்துவிரை தன்னைத்தள்ளி
களிவாக வொழுகரையில் நாள்மூன்றூற்றிக்
களிப்புடன்செந் தூரமாம் ஊறவைக்கக்
சுளிவாக அரைத்துமுன்சார் தன்னிலேதான்
சுருதிபெறப் புடமூன்று சுகமாய்ப்போடே. 281

போட்டுயெடு முருக்கம்பூப் போலேயாகும்
புகழாக வதையெடுத்துப் புறம்பாய்வைத்து
நாட்டியெடு தகடினிய காந்தம்நாலு
நலமாகக் காணத்தின் கிஷாயத்தாலே
பூட்டியரை புடமூன்றில் சிவப்பேயாகும்
போக்கோடே பலம்நாலு உளிச்செந்தூரம்
மாட்டியிடை சேர்த்துக்கா ணக்கிஷாயம்
வகையாகச் சேர்த்தரைத்து வில்லைதட்டே. 282

தட்டிகதிர் காயவைத்துப் புடமுமூன்று
தயவாகப் போட்டெடுத்துப் புறம்பாய்வைத்து
மூட்டியெடு கற்பூர சலாசத்துத்தான்
முனையவது பலம்நாலு கரியிலிட்டு
தட்டியதை யூதிவிடு கடுமையாகத்
தனையெடுத்துக் கல்மதத்தை யிடையேசேர்த்து
விட்டிடுநீ பழச்சாரு விட்டரைத்து
வில்லைதட்டிக் கதிர்முன்னே வைத்திடாயே. 283

## சுண்ணம்

முன்னேவைத்துப் பெரும்புடமாய்ப் போட்டெடுத்து
முனையவதைப் புறம்பாக வைத்துக்கொண்டு
சொன்னபடி கெந்தியது பலமிரண்டு
சொல்லவரி தானசிவன் விந்திரண்டு
நன்னயமாய்க் கல்வமிட்டு அரைகருப்பாம்
நாடியதிற் தந்திவிரை தோடுபோக்கி
கன்னமதாய் வறுத்துபலம் ரெண்டுமிட்டு
கனிவாகப் பொடித்துயின்னங் கருதக்கேளே. 284

அயக்கடுகு காந்தசெந் தூரம்நாலு
அவ்விடைக்குச் சலாசத்து கல்மதமும்நாலு
நயமாகக் கெந்திரசம் தந்திநாலு
நாடியிதை வறுத்துநன்றாய்க் கல்வத்திட்டு
இயல்பான வேர்க்கொம்பு மிளகுநாலு
யிதைநிறுத்து நெல்லியிடை கடுக்காய்தோலும்
செய்பாகம் வகைக்குரெண்டு பலமதாகச்
சேர்த்தரைக்கப் புகைநீரைச் செப்பக்கேளே. 285

## ஓமத்திராவகம்

கம்பியுப்பு பலம்ரெண்டு ஓமம்நூறு
கதிபெறவே பாணிரெட்டி கிடத்திலிட்டு
நம்பியதைத் திரிநாள்வை புளிக்கும்நன்றாய்
நாட்டியெடு வாலைதனை மூடிமண்ணை
தெம்பாகச் செய்துஅதை அடுப்பிலேற்றிச்
செயமாக யெரித்துப்புகை நீரைவாங்கி
சம்பமதாம் முன்செய்த மண்டூரத்தில்
தாக்கியரை சாமம்ரெண்டு தகமையாமே. 286

அரைத்துக்கதிர் காயவைத்துப் பொடித்துமுக்கண்
அன்பான குடுக்கைதனில் வைத்துநீயும்
சிரித்துளடு மூவிரலாற் கொண்டதூளு
செம்மைபட நாளாறு கொடுத்துப்பாரு
குரித்திடுநீ புளிதள்ளி வெட்டைமேகம்
குணமாகுங் கல்லடைப்பன் நீறாங்கட்டி
பரித்துவிடு தந்திமே கங்கள்போகும்
பகலவனைக் கண்டபனி போலாம்பாரே. 287

பிரமியங்கள் பித்தவெட்டை சொட்டுசீதம்
பெலனளிக்கும் நீராம்பல் பிரிந்துபோகும்
குணமான புண்ணாறும் லிங்கந்தன்னில்
குளிரணமும் அரிப்பெல்லாங் குடிவிட்டோடும்
திரமாகுங் கிரிச்சினங்கள் சொல்லாதோடும்
தீர்த்துவிடு மண்டூரந் தின்றபேர்க்கு
சிரந்தன்னில் கங்கைவைத்த நாதன்சொன்னார்
திடமான அவிழ்தமது செய்துபாரே. 288

அக்கினியா மாந்தம்போம் செரியாமாந்தம்
அனல்பிறக்கும் அன்னம்ரெம்பத் தின்றுதேறு
திக்கினிய நரம்புகளு முறுக்குமேறும்
திறமான சன்னிதலை வலியுமேகும்
விக்கலது நாலுமது யேகும்நன்றாய்
விடுபடுங்காண் வாயுவெல்லா மீறிடாது
செக்கிலறை பட்டதுபோல் நசையுந்தீரும்
செப்பினார் யாகோபு திறமைதானே. 289

## நிமிளைச்சத்து

சத்தென்ற நிமிளைதனைச் சொல்லக்கேளு
சரியான பொன்னிமிளை பலந்தானொன்று
வித்தென்ற ரோமமது பலந்தானொன்று
மெய்யாகப் பழச்சாற்றில் மூன்றுநாள்தான்
மத்தபடி ஊறவைத்துக் கழுவிப்பின்பு
வகையாக அரிதாரம் வங்கம்ரெண்டும்
சித்தென்ற பழச்சாற்றை விட்டரைத்து
சீர்பெறவே நிமிளைமேற் பொதிந்துகொண்டே. 290

கொண்டவுடன் ரோமத்தைச் சுற்றியேதான்
குகைக்கள்ளே அரைப்பலம்பூ நாகம்வைத்து
கண்டதொரு மயூரம்அரைப் பலம்பரப்பி
கனிவான வெண்காரம் பலங்கால்வைத்து
விண்டதொரு பொன்னிமிளைக் கவசம்வைத்து
விதமாக அதன்மேற்கால் பலந்தான்காரம்
துண்டான அரைப்பல மயூரமிட்டுத்
துரிதமுடன் பூநீரு களஞ்சிபோடே. 291

போட்டேதான் பூநாக மரைப்பலத்தைப்
புகழ்பெறவே அதன்மேலே போட்டுவைத்து
தேட்டமுடன் குகைவாயி லோடுமூடித்
தெரியாமல் மண்சீலை ஐந்துசெய்து
போட்டவுட னுலையில்வைத்து ஊதுஊது
புகழான பொன்னிமிளைச் சத்தாகும்
நாட்டமுடன் யாகோபு சொன்னாரிந்த
நலமாக வெண்கலம்போற் றகர்ந்துபோமே. 292

போமென்ற நிமிளைச்சத்துச் சோதித்தேதான்
புகழாக பொன்னிறமா யீயமாகும்
தாமென்ற நிமிளைசத்தை வெளியாய்ச்சொன்னேன்
தயவான வயித்தியத்திற் குருவிதமாகும்
நேமென்ற நிமிளைச்சத்து முடித்துக்கொண்டால்
நிலையான வியாதியெல்லாம் நில்லாதோடும்
ஆமென்ற யாகோபு உறுதியாக
அரைந்திட்டா ருலகோர்கள் பிழைக்கத்தானே. 293

## நிமிளைச்செந்தூரம்

வாச்சுதென்ற நிமிளைச்சத்துப் பலந்தானொன்று
வகையாக மூசையிலே யுருகும்போது
ஆச்சுதென்ற கருநாகம் பலந்தானொன்று
அடைவான தங்கமது பலந்தானொன்று
பாச்சுகின்ற தங்கமொடு வங்கம்ரெண்டு
பரிவாகக் கல்வத்திற் பொடித்துத்தூளாய்
ஏச்சலென்ற வீரமது பலந்தானாலு
இதமான அமுர்தப்பால் விட்டுஆட்டே. 294

விட்டாட்டிக் கோழிமலம் வெள்ளைகேளு
விரைவாகக் கால்பலந்தா னதிலேபோட்டு
திட்டமுடன் வாலைரசம் சவ்வும்போலாம்
திறமான சூதம்ரெண்டு பலமேவாரு
சட்டமுடன் மூன்றுநாள் பனியிற்போட்டு
சபைநாறிக் கெந்தகந்தான் பலமீராறு
அட்டதிசை புகழும்பொற் றலையின்சாற்றால்
ஆட்டியே மனோசிலைகாற் பலமும்போடே. 295

## யாகோபு

ஆட்டியே வில்லைசெய்து ரவியிற்காய்ந்து
அப்பனே பொடிசெய்து பின்பெடுத்து
தாட்டிகமா யதைக்குப்பி தன்னிலிட்டுத்
தயவாக வாலுகையில் மூன்றுநாள்தான்
போட்டுமே முத்தீயும் நன்றாயிட்டு
புகழாக சலாகைகொண்டு சோதித்தேதான்
மூட்டிவிடு முனையிலே கரகரக்கும்
முன்சொன்னார் யாகோபு முறையாய்த்தானே. 296

தானென்ற பதமிதுதான் பார்த்துஇந்த
சதிரான குப்பிதனை யுடைத்துவாங்கு
தேனென்ற நிமிளைச்செந் தூரந்தானும்
திறமான சிவப்புநிற மாயிருக்கும்
வானென்ற குன்றியிடை ஆவின்பாலில்
வளமாக உண்டிடவே மெய்யுளைச்சல்
சானென்ற வயிற்றுக்குள் வந்ததோசம்
சதமான முகவாதச் சன்னிபோமே. 297

## அயச்செந்தூரம்

அயத்தகடு பலமொன்று அந்திடைக்கு
அறியவே சூதமது கல்வத்திட்டு
செயவீரம் நவச்சார மொருபலந்தான்
திறமாக மூன்றுநாள் கைவிடாமல்
தயவோடு தானறைக்கச் சிவந்துபோகும்
தாட்டிகமாய்ப் புதுச்சட்டி யடுப்பில்வைத்து
நயமாக வறுத்திடவே முருக்கம்பூப்போல்
நன்றாக வருகையிலே யெடுத்துக்கொள்ளே. 298

எடுத்ததனை குன்றியிடை பனைவெல்லத்தில்
இயல்பாகக் கொடுத்தாக்கால் சூலைபோகும்
கடுத்ததொரு நசவெல்லாஞ் சொல்லாதோடும்
கருவாகு மிதின்சுருக்கு எதுக்குமில்லை
பிடிக்கவந்த யெமனுமே பயந்துபோவான்
பெலமான வியாதியெல்லாங் கடலேபுக்கும்
விடுத்துமே சொல்லிவிட்டார் யாகோபுதானும்
வேணுமென்ற செந்தூர முடித்துக்கொள்ளே. 299

## சுண்ணம்

இந்தநூ லோடுமுன்னூர் பண்டிதங்கள்
இதமான கைபாக வயித்தியங்கள்
சுந்தரமாய்ச் சொல்லிவிட்டேன் தோய்ந்துபார்க்கச்
சுத்தரச வாதிகட்கு வெளியாய்த்தோன்றும்
எந்தவித நசைகளெல்லாம் கடலேபுக்கும்
எழுதினேன் ஏழைதான் பிழைக்கவேண்டி
முந்தவே சொன்னதொரு யெழுநூறுந்தான்
முற்றிலுமே கற்றறிந்தோன் வாதியாமே. 300

## புடபாகம்

புடபாகம் செய்பாகம் யெரிப்புத்திட்டம்
புகழாக நூற்றியைம் பதிலேசொன்னேன்
திடமாக வதைப்பார்த்தால் வெளியாய்த்தோணும்
செய்பாகம் புடபாகம் அறிந்துகொள்ளு
சடமான சுண்ணமுன் னூறும்பாரு
சமுசயங்க ளில்லையதில் வெளியாய்ச்சொன்னேன்
இடமான யென்னூலைக் கோர்வையாக
இயல்புடனே பார்க்கயாக் கோப்சொன்னாரே. 301

வாதமது செய்வதற்கு யெழுநூறுபாரு
வயித்தியங்கள் செய்வதற்கு முன்னூறுபாரு
நீதமாய்ச் சுண்ணமது செய்வதற்கு
நிலைத்தசுண்ணம் முன்னூறு நீதான்பாரு
சாதகமாய்ச் செந்தூரஞ் செய்வதற்குத்
தடையின்றி முன்னூறு செந்தூரம்பார்
வேதவாக் கியம்போல யாகோபுதானும்
விரித்துரைத்தார் செந்தூர முன்னூறுமுற்றே. 302

## யாகோபு லோகசெந்தூரம் 300

-முற்றிற்று-

## யாகோபு-லோகசெந்தூரம்-300

## அருஞ்சொற் பொருள் விளக்கம்

### எழுதியவர் R.கோவிந்தராஜன்

3. சுக்கான்-ஒருவிதக் கல். (இது மஞ்சள் நிறமாக இருக்கும்), பூநீறு-பூமியின் நாதம். புறம்பாக-அப்புறம், தள்ளி - நகற்றி.

4. பத்தைந்து-பதினைந்து.

5. மேஷத்தோல்-ஆட்டின் தோல். சவுக்கார நீர்-சவுக்கார செயநீர்.

6. வெண்கரு-முட்டையின் வெண்கரு. வழலை-சவுக்காரம். சேரிரண்டு-இரண்டு சேர். படிகாரம்-காரசாரத்தில் ஒன்று.

7. கிளிஞ்சிநீர்-ஓர்வகை நீர். பத்திரண்டு-இருபது சாமம். மெருக்கன்-எருக்கன்.

8. சீனம்-ஓர் வைப்பு சரக்கு. கதிர்-சூரியன். முன்னீரால்-கிளிஞ்சி நீரால்.

9. வழலைச்சுண்ணம்-சவுக்காரச்சுண்ணம்.

10. வீரம்-ஓர் வைப்பு சரக்கு (பாஷாணம்) அரிதாரம்-இயற்கையாக கிடைக்கும் ஓர் வகை பாஷாணம். லாட்டமுரி-ஆட்டின் சிறுநீர். சுருக்குதாக்கு-சுருக்கு போடு, சுத்திசெய். மேலே கட்டி- கவசம் கட்டி. காடை-ஓர் வகைப் புடம்.

11. துருசி-ஓர் வகை வைப்பு சரக்கு. நீலன்-துருசு. நடத்துவிடும்-கட்டும். சூதம்-பாதரசம்.

12. தாளகம்-இயற்கையில் கிடைக்கும் ஓர் வகை பாஷாணம்.

13. யேமம்-தங்கம். நாகம்-ஓர் வைப்பு உலோகம்.

14. கீயாமல்-ஈயாமல், கொடுக்காமல். வாதம்-பொன் செய்யும் தொழில்.

15. அருக்கன்-எருக்கன். வெட்டையாகும்-மடிந்து போகும்.

16. மூவேழு-இருபத்தோர் முறைகள்.

## சுண்ணம்

17. குன்மம்-ஓர் வகை நோய்.

18. காந்தம்-அயக்காந்தம், இரும்புக் காந்தம், மூவாறு-பதினெட்டு முறை.

21. அரண்பீஷம் - சூதம், ரசம், அரன்பீஜம், தாரம்-அரிதாரம்.

23. ரவி-தாமிரம், செம்பு, கடலேபுக்கும்-கடலில் சென்று மறையும், கடலைச் சென்றடையும்.

24. மகோதரம்-வயிற்றில் வரும் கட்டி.

26. சீசா-சாடி, குப்பி, குடுவை.

29. உளுந்துச் சீலை-உளுந்தை அரைத்து அந்த மாவினால் கவசம் செய்ய வேண்டும். மயிர்க்குச்சி-புருசு.

30. கடம்-பானை.

35. புளிப்புத்தள்ளி-புளிப்பை அகற்றி, நசை-துன்பம், நோய்.

41. அந்தி சந்தி-மாலையும், காலையும்.

44. கிராசம்-நிறுத்தலளவை.

46. யேமமாகும்-தங்கமாகும்.

49. திரிகடுகு-சுக்கு, மிளகு, திப்பிலி.

50. புகைநீர்-திராவகம்.

55. ஆவின்பால்-பசுவின் பால்.

57. கெந்தி-கெந்தகம். குக்குடம்-கோழி.

59. தில்லைப்பால்-தில்லைப் பூண்டு என்ற மூலிகையின் பால்.

63. பழச்சாறு-எலுமிச்சைப் பழச்சாறு.

64. சிங்கி-மிறுதார் சிங்கி.

66. முச்சாமம்-மூன்று சாமம்.

74. கொறட்டாலே-குறடாவால்.

78. அடியான மரம்-மூலாதாரம் நுனிமட்டும்-பிரம்மரந்திரம் வரை.

82. கமலவன்னி-கமலாக்னி (இது ஒரு எரிப்பு திட்டம்).

89. அயக்கரண்டி-இரும்பால் செய்யப்பட்ட கரண்டி. கசடகற்றி-மாசு நீக்கி, அழுக்கைப் போக்கி. கருநாகம்-வைப்பு லோகம்.

94. அரப்பொடி-அயப்பொடி. வங்கம்-ஈயம், யீயம்.

100. தோஷம்-குற்றம்.

128. வாசியோகம்-குண்டலினி யோகம். பொற்றலை-ஓர் வகை மூலிகை.

133. மண்டூரம்-இரும்பு சிட்டம்.

138. விடத்தலைவேர்-ஓர்வகை மூலிகையின் வேர்.

143. தள்ளிப்போடு-அகற்றிவை, விலக்கு, அகற்று.

150. அரிசித்திப்பிலி-ஓர் வகை திப்பிலி (இது ஒரு கடை சரக்கு).

156. கழற்சியிலை-ஓர் வகை மூலிகை.

160. அண்டோடு-முட்டையின் ஓடு.

164. யாட்டமுரி-ஆட்டின் சிறுநீர்.

165. வெள்ளைப் பாஷாணம்-ஓர் வகை பாஷாணம். (மலைகளில் கிடைக்கிறது). நவச்சாரம்-ஓர் வைப்பு சரக்கு.

167. ரவி-செம்பு

180. அன்னபேதி-உபரசங்களில் ஒன்று.

183. உமிழ்நீர்-ஓர் வகை நீர்.

186. பல்பக்கல்-ஓர் வகைக் கல், எழுத்தாணிக் கல்.

188. சூடன்-கற்பூரம்.

189. துத்தம்-உபரசங்களில் ஒன்று.

190. கவசமிட்டு-மேலே பூசி, சரக்கின் மேலே பூசி.

195. கெங்கை வைத்தநாதன்-சிவபெருமான்.

196. கெவுனம்-ஆகாயத்தில் பறக்கும் வித்தை.

207. சிவனுக்கொப்பாம்-சிவனுக்கு சரிசமமாகும்.

208. அயச்செம்பு-இரும்பிலிருந்து எடுக்கப்படும் செம்பு.

## சுண்ணம்

216. சுறுக்குமெத்த-மிகவும் எளிதானவை.

217. மேனி-காயம், சரீரம், உடம்பு.

243. அப்ரேகம்-ஒர் வகை பாஷாணம்.

249. உளுந்துசீலை-உளுத்தம்மாவினால் கவசம் செய்ய வேண்டும்.

255. மேற்றோண்டி-மேலே மூடியுள்ள தோண்டி. (குடம்).

269. பெலனுண்டாம்-பலன் உண்டு, பயன் உண்டு.

290. பொன்நிமிளை-உபரசத்தில் ஒன்று.

292. பூநாகம்-உபரசத்தில் ஒன்று.

296. முத்தீ-மூன்று வகையான தீ. கமலம், தீபம், கடாக்கினி.

299. நசல்-வியாதி, துன்பம், நோய்.

300. வாதிகட்கு-இரசவாதம் செய்பவர்களுக்கு.

301. கோர்வையாக-வரிசையாக.

உ

யாகோபு முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

வகாரக் களங்கு என்னும்

# வாத வைத்தியம் 300

சிறந்திருந்த முதற்பொருளை யழிவில்லாத
சித்திதரு மணியைநான் தெரிந்துமுக்கால்
துறந்தமனு தினமுமடி யிணையைப்போற்றித்
தொல்லுலகில் வைத்தியர்கள் பிழைக்கவேண்டி
பிறந்தபல வுயிர்கள் நசல்தீரவேண்டி
பிரியமுடன் கைபாகம் விபரமாகக்
கறந்தாவின் பால்போலக் கருணைகூர்ந்தேன்
கருத்தறிந்தோர் முந்நூற்றைக் கருதுவாரே. 1

கருதியே கர்த்தனைத்தான் துதியேசெய்து
கனமான ரசவாதங் கண்டுதேறி
உறுதியா யுலகத்தோர் சித்தராக
உண்மையா யெழுநூற்றையெடுத்துச் சொன்னேன்
வருதியாய்க் கைபாக வரிசைதன்னை
வழுத்தினேன் சொச்சமதை யிதிலேசொன்னேன்
பருதிமதி யுலகத்திற் புத்தியுள்ளோர்
பக்குவமாய்க் கண்டுகொள்வார் பாகந்தானே. 2

கண்டுமே மக்காவின் தேசம்விட்டுக்
கலிமாவுங் கண்டுநான் கீழ்தேசத்தில்
தொண்டுபட்ட லாயில்லா யில்லல்லாகூ
துணையாகப் பத்தியுடன் வழியேசென்று
பண்டுவரும் முன்கதைகள் பேசிற்றானும்
பதிவாக முகம்மதுவைப் பணிந்துபோற்றி
உண்டுமுனி யோர்கள்ரச வாதஞ்சொன்னார்
உற்றுணர்ந்து யாகோபு உரைசெய்தேனே. 3

உரைசெய்தேன் யானுமந்த வாதம்பார்த்தேன்
உறுதியதை யுலகத்திற் சொன்னேன்யானும்
கரைகண்டேன் எங்கள்குலந் தேவராச்சு
சுற்றுணர்ந்து முகம்மதுவின் மார்க்கத்தேகிக்
குறைவில்லா ரசவாதங் குணமதாகக்
கூர்மையாய்ப் படிகேச ரத்திற்புக்கிப்
புரையான வழிதனிலே யேறியானும்
புக்கினேன் பதவிதனிற் புகுந்திட்டேனே. 4

புகுந்திட்டேன் மக்காவின் தேசந்தன்னிற்
புகலரிய பெரியோர்கள் மெத்தவுண்டு
வகுந்திட்ட வாதங்கள் மிகவுஞ்சொன்னார்
வகையான குளிகைமுதற் கண்டுதேறி
உகுந்திட்ட பதினெட்டுப் படியில்யானும்
உற்றுமே யீராறு படிகளேறிப்
பகுந்திட்டேன் யிறசூலுங் கண்டாரப்போ
பக்குவமாய்க் கைகொடுத்தார் பதவியாமே. 5

பதவியாய் ஆதிமறை வேதம்நாலும்
பகுத்துணர்ந்து சாஸ்திரமுஞ் சொன்னாரப்போ
உதவியாய்ப் பொதிகைதனில் வாழுகின்ற
உறுதிபெற்ற கும்பமுனி யருளைச்சொன்னார்
சதமான தேவரிஷி சித்தர்தம்மைத்
தான்தேடி யவர்களையுங் கண்டுதேறி
முதலான பருதிமதி சுழியைநாடி
முடிவான சிவனுமையும் பாதிகண்டேன். 6

கண்டுமே சாஸ்திரங்க ளனந்தமுண்டு
கருவறியா மடையர்மெத்தக் கனிவில்லாதார்
தொண்டுபட்ட சாஸ்திரங்கள் பாடம்பண்ணித்
தொல்லுலகிற் சொல்லுவா ரறியாமூடர்
பண்டுபழங் கதைசொல்வார் மயங்கிவீழ்வார்
பதிவான நிலைதவறி மாயைபூண்டு
வண்டுபோற் கீதங்கள் பாடுவார்பார்
வகையான சாஸ்திரத்தைப் பாரார்பாரே. 7

## யாகோபு

சாத்திரமுஞ் சூத்திரமும் பார்த்துதேறு
சரியாகும் பொருளெல்லாம் வந்துகூடும்
பாத்திரமும் நூலிருந்தோர்க் கடுமைசெய்து
பதிவான அவர்பதத்தில் வீழ்ந்துவணங்கி
கோத்திரமும் நிதியதுவும் பெருகவேண்டிக்
குணமாகச் சித்தருக்குக் கூர்ந்துபாதம்
தோத்தரித்து மனதுதனில் தொழுதுபோற்றித்
தொல்லுலகில் முந்நூற்றைத் தோய்ந்துபாரே. 8

## அயச்செம்பு

தோய்ந்துரவி தானெடுத்து யிடைகருப்பி
தொக்கநிறு சத்தியது ரெண்டிலொன்று
ஆய்ந்துபழச் சாறுவிட்டு அரைநேர்சாமம்
அதைக்கதிரி லிட்டுமொரு புடமுமிட்டுப்
பாய்ந்துகொடி யோனிறுத்துப் பாதிசேர்த்துப்
பகரிலிரு புடமேதான் செம்புமாகும்
ஆய்ந்துயெடு குகையிலிட்டு உருக்கச்செம்பாம்
அதிககுயச் செம்பாம்நல் லிரும்புதானே. 9

## செந்தூரம்

நல்லிரும்பு செம்புதனை நீயெடுத்து
நாடியிடு யிதுநேரே யேமந்தானும்
சொல்லினிய நையவடி சத்திவீரம்
சுருக்கஅரைத் தகட்டிடையாம் பூசிப்பூசிக்
கொல்லவதைப் புடம்போடக் கருப்பதாகும்
கொடியோனைச் சேர்த்தரைத்துப் புடமுமிட்டால்
வல்லமையாய் முருக்கம்பூப் போலாஞ்செம்பு
வழியறிந்து மதிதங்க வழிசொன்னாரே. 10

தங்கச்செந் தூரமதை மதியிற்பத்துத்
தாக்கிடவே ஒன்றுகொடு மாறயேமம்
செங்கையினா லெடுத்துவித்து ஞானம்பாரு
செல்வம்வரும் யாவருக்குஞ் சொல்லிவிடாதே
கொங்கணவர் கைபாக மிதுதான்பார்த்துக்
கொண்டாக்கால் சித்தியாங் குணமுமாகும்
மங்கைமே லாசைகொண்டு மயங்காதென்று
மதிப்புறுசெந் தமிழாக வழுத்தினாரே. 11

## அயச்செம்பு

செந்தயினி யிடைசேரு சத்திதன்னைச்
சித்திபெற அரைத்துருக்கு சத்துமாகும்
முந்தயிடு கல்வத்தி லிட்டுடைத்து
முத்திபெறக் கொடியோனைப் பாதிசேர்த்துச்
சந்ததமுன் னீரதனா லரைத்துக்கட்டித்
தாட்டியாய் மூடுபுடம் போடச்செம்பாம்
பந்தவினை தீரும்யா கோபுசொன்ன
பதியரசர் போலிருக்க நாடுவாயே. 12

நாடுநபி அயச்செம்பு செய்துவித்து
நலமான சீவனங்கள் பண்ணித்தானும்
பாடுபெறத் தேசங்கள் மிகவுஞ்சுத்தி
பருதிமதி யுலகெல்லாங் குளிகையிட்டு
மேடுபெற மக்கத்திற் சென்றுபுக்கி
மேலான பெரியோர்கள் நீதிதன்னை
வீடுபெற ஆராய்ந்து பேருங்கேட்டேன்
மெய்தெரிந்து யாகோபு செப்பினேனே. 13

செப்பியதோர் சாஸ்திரங்க ளெல்லாமெய்யாம்
சித்தநூ லாராய்ந்து பாரார்க்கில்லை
ஒப்பினதோர் மனக்குரங்கோ ஏறொட்டாது
உறுதிவைத்து ஏறினால் தள்ளிப்போடும்
உப்பினதோர் சீவன்விட்ட மாடுபோலே
உற்றுமே சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்து
தப்பிதமாய்ச் செய்துமே தவித்துநொந்து
தாட்டிகமாய்ச் சொல்வார்கள் அழும்பர்தானே. 14

அழும்பாக உப்பைவிட்ட ஞானிதானும்
அவமானப் பட்டுமே அலுத்துச்செத்தார்
கழும்பான செம்பைத்தான் கொல்லாவாதி
கவிழ்ந்துமே வெகுபணங்கள் தோற்றுக்கெட்டார்
பழிபாவம் மனதுதனி லெண்ணாவாதி
பகைத்துமே உலகத்தில் மனிதர்பேச்சைத்
தழும்பாகச் சிரிக்காதே தான்கேட்டப்போ
தாட்டிகமாய்க் கேட்டுமவர் தவித்தார்தானே. 15

## யாகோபு

தானென்ற யாகோபு சொன்னவாதம்
தக்கதொரு பாகமதைக் கண்டுதேற
ஊனென்ற உலகத்தோர்க் கெதிரியாக
உண்மைரச வாதமது எளிதிற்காண
வானென்ற ஞானங்கள் மிகவுந்தோண
வழுத்தியே எப்பொருளும் விளங்கவென்று
கானென்ற குளிகைமுதற் செந்தூரங்கள்
கருதியே பார்த்தாக்கால் தோணும்பாரே. 16

தோணவே துருகுவிட்டால் சத்தேயில்லை
தொல்லுலகில் செம்பில்லை கருதிப்பாரு
வாணவே அயச்செம்பு மார்க்கமில்லை
வடிவான சுண்ணவகை வலுமையில்லை
ஈணவே தாயில்லாப் பிள்ளையில்லை
இதமாக இப்படிக்கே எல்லாம்பாரு
நாணவே நாடுதனில் வாதிமார்கள்
நலமிலாப் பாகமதைச் செப்புவாரே. 17

## வங்கச்செம்பு

செப்புவார் இன்னமொரு களங்குகேளு
செல்வம்வரும் இதைக்கருதிச் செம்பாய்ப்பாரு
அப்புடனே தனைக்குகையில் வைத்துருக்கி
ஆடிவரும் வேளைதனில் நாலுக்கொன்று
தப்புவார் சூதமது சேர்த்துருக்கி
தடையறவே கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
நப்புடனே நிறுத்துஎடு ஒட்டிரெட்டி
நலமாகக் கூத்தனைத்தா னிறுத்துக்கொள்ளே. 18

நிறுத்தெடையிற் பாதிதான் சத்திசேர்த்து
நேராக முன்சாறு தன்னாலாட்டிப்
பொருத்துகதிர் காயவைத்துப் புடமுமிட்டால்
பொங்கியது கரிபோலத் தானிருக்கும்
கருத்தகுகை தன்னிலிட்டு உருக்கிப்பாரு
கசடற்ற வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
பருத்துயெடு கல்வத்தி லிட்டுநீயும்
பதிவாக யாகோபு பயின்றவாறே. 19

வாறுடனே கொடியோனைப் பாதிசேர்த்து
 வண்மைபெற அரைத்துவில்லை காயவைத்து
தேறுபடப் புடம்போடச் சிவப்புமாகும்
 திட்டமாய்ப் போட்டெடுத்தே உருக்கச்செம்பாம்
கோறுபட மதியெட்டி லிரண்டுசேரு
 கொடியதொரு காஞ்சனந்தா னிரண்டுசேர்த்து
தாறுபட வுருக்கிப்பார் யேமமாகும்
 தாட்டிகவான் யாகோபு சொன்னவாறே. 20

சொன்னதொரு செம்பைமுந்திப் பண்ணிக்கொண்டு
 சுருதியுறச் சீவனங்க ளதிலேபண்ணி
நன்னயமாய்ச் செலவுக்கு வைத்துக்கொண்டு
 நாதாந்த ஞானத்தை மிகவேபார்த்து
வின்னமில்லா யோகமது தானேசெய்து
 வியப்பாகக் கைமுறைக ளதிலேபண்ணி
பன்னகமாய் வாழ்கயா கோபுசொன்ன
 பதிவான சுருதிதனைப் பார்த்துத்தேறே. 21

பார்த்திடவே ஒளிவாகும் ஒளிவுதன்னைப்
 பத்தியாய்க் கண்டுசுழி தன்னிலேறி
ஏத்திடவே குதிரைக்கோர் மையம்பூட்டி
 எத்திசையும் வாழ்ந்துமிக யோகம்பார்த்தால்
கோத்திடவே மேனியது யிருகிப்போகும்
 குணமாகும் மணமாகும் கூர்மையாகும்
நாற்றிசையு மெய்த்திடவே ராஜயோகம்
 நாடிவரும் யிந்நூலை நயந்துபாரே. 22

நயந்துமே நுலிருந்த இடமறிந்து
 நலமாக வாங்கிவந்து படித்துநீயும்
பயந்துமே அடிதலையும் ஒத்துப்பார்த்தால்
 பதிவான பாகமெல்லாம் அறிவில்தோணும்
உயர்ந்துமே தங்கமெல்லாம் எளிதிலாகும்
 உறுதியிது ஆகும்நபி உண்மைசொன்னார்
அயர்ந்துமே போகாமால் வாசியோகம்
 அடிதொட்டு நுனிமட்டும் பார்த்திடாயே. 23

பார்த்திடவே வாதசித்தி வந்துதானால்
பதிவான யோகசித்தி க்ஷணத்திலாகும்
ஏத்திடவே களங்குதனைச் செந்தூரித்தால்
இரும்பான செம்பெல்லாம் எளிதிலாகும்
போற்றிமன மகிழ்ந்திடுவார் பூலோகத்தில்
புகழ்பெரிய எல்லாரும் புதுமைசொல்வார்
ஏற்றினதோர் தீபத்தைக் கண்டபோது
எளிதான இருளகலும் இன்பம்பாரே. 24

இன்பமாய்ப் பெரியோர்கள் உண்ணும்உக்கா
இயல்பாக வாங்கியே குகையிலிட்டுத்
தென்புடனே உருக்கியபின் சாரம்போட்டுத்
தெளிவாக இலுப்பைநெய் தன்னில்தானும்
அன்பாக இருபத்தோர் தரமேசாய்க்க
அதிலிருக்குங் கண்ணதுவுஞ் சிறுகண்ணாகும்
முன்பாக யெடுத்துநிறு பலமும்நாலு
முத்திதருஞ் சிவவிந்து பலமுங்காலே. 25

காலாகத் தானிறுத்து உருக்கிக்கல்வம்
கருத்துவைத்து உடைத்தபின்பு கருதக்கேளு
நூலாக நீர்பூத்தன் ஒட்டிரெட்டி
நுணுக்கமாய் நிறைசேர்முன் பழச்சார்விட்டு
ஏலாக அரைத்துரவி காயவைத்து
இயல்பாகக் குக்குடத்தில் போட்டுக்கல்வம்
நாலாக யிட்டிடயாக் கோபுதானும்
நலமதனைச் சொல்லுகிறேன் நாடிக்கேளே. 26

நாடியே நிறுத்தயிடை பாதிதாரம்
நலமாகச் சேர்த்துஅரை முன்சார்தன்னில்
கூடியே வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
கொக்கினுட புடம்போட்டுக் கல்வமிட்டுப்
பாடியதோர் கொடியோனைப் பாதிசேர்த்துப்
பதிவாக அரைத்திடவே கையான்நீரால்
வாடியே வில்லைதட்டிக் கதிரில்வைக்க
வளம்பெறவே யாகோபு வழுத்தினாரே. 27

வழுத்தியே புடமிடவே சிவக்கும்வில்லை
வடிவாக யெடுத்துடனே காரங்கூட்டி
அழுத்தமா யுருக்கிடவே ரவியுமாகும்
ஆண்மையுள்ள செம்பதுவைத் தியானம்செய்து
பழுத்திடவே உருக்கியிடை தங்கஞ்சேரு
பதிவான யேமமாய்ப் பாரிலோர்க்கு
உழுதிட்டுப் பயிரிட்ட வாறதாகும்
உண்மையா யாகோபு ஓதினேனே. 28

ஓதியதோர் மக்காவின் தேசந்தன்னில்
உறுதிபெற்ற நபிமார்கள் மெத்தவுண்டு
வாதியவ ரெல்லோரும் ஏமஞ்செய்வார்
வாய்பேசார் கேட்டாலுஞ் சொல்லமாட்டார்
சாதிபல பேருடனே சொல்லுவார்பார்
தன்மையவர் கோபந்தான் மெத்தவுண்டு
கோதிலா மனதுவர நடந்துகொண்ட
குற்றமிலா யாகோபு கூறினாரே. 29

கூறிவிட்டார் யாகுநபி கேட்டுக்கொண்டு
குணமான என்பேரு விளங்கத்தானும்
பாரிட்ட உலகில்எழு நூறுதானும்
பாடியபின் முந்நூறு பாடிச்சென்று
கோலிட்ட களங்கோடு செந்தூரங்கள்
கொட்டினேன் குணமாகக் கூர்ந்துபார்த்து
நீறிட்ட திருமதில்போல் காட்டினேன்பார்
நீனிலத்தில் நிசமாகக் கறைகண்டேனே. 30

கறைகண்டன் பலமெடுத்துக் கரியிலிட்டுக்
கடுமைபெற ஊதிடவே சலவையாகும்
மறைகண்டன் நாலிலொன்று வன்னிகெற்பம்
மதிமயங்கிப் போகாமற் கல்வத்திட்டுச்
சிறைகொண்ட பாவனைபோ லரைக்கமுன்னீர்
சித்திரமா யரைத்துவில்லை கதிரிற்காய்ந்து
துறைகண்டு புடம்போட்டுக் குகையிலிட்டுத்
தூக்கிமெள்ள உருக்கிடவே சத்துமாமே. 31

சத்தான சத்தைத்தான் உடைத்துப்பார்க்கச்
சரிவரவே வெங்கலம்போற் றானுமாகும்
முத்தான தருபோலாங் கல்வத்திட்டு
முடிவாகக் கொடியோனை முழுக்கவிட்டு
பத்தான நாழிகைதா னரைத்துவில்லை
பதிவாகக் கதிரில்வைத்துப் புடத்தையிட்டு
செத்தானைப் பார்த்தாக்கால் சிவப்புமாகும்
செப்பினார் யாகோபு செல்வந்தானே. 32

செல்வமதாஞ் செந்தூரம் நாலுக்கொன்று
சேர்த்துருக்கக் காரத்தைச் செம்புபோலாம்
மல்கவே சோதிரவி. தன்னைத்தானும்
மார்க்கமா யெடுத்துஇதில் நாலிலொன்று
நல்கவே யேமமிட்டு உருக்கிப்பின்பு
நன்றாகத் தகடடித்து நாதவீரம்
மெல்கவே யரைத்துமே கவசங்கட்டி
மெதுவாகப் போடுமெனச் சொன்னேன்யானே. 33

சொன்னதிரி புடம்போடக் களங்கதாகும்
சுகமயமாங் கொடிச்சியைத்தான் பாதிசேர்த்து
நன்னயமாய் முச்சாமம் முன்னீராலே
நாடியரைத் தேவில்லை கதிரில்வைத்துப்
பின்னமில்லா மற்றானே புடமூன்றிட்டால்
பிலக்குமே செம்பாகும் பெருமைரெம்ப
கன்னல்போல் ருசியாகும் வாதப்போக்கு
காட்டினார் யாகோபு கருத்தாய்த்தானே. 34

கருத்திலுறை செந்தூரம் மதியிலிட்டுக்
கனமாக நிறுத்திரண்டு கொடுத்துருக்கு
வருத்தமில்லா மாத்தெட்டு ஆணிக்கொக்கும்
வடிவாகப் புடமிறங்கும் வண்மையோர்க்கு
திருத்தமிலா யிப்பொருளை வித்துத்தானும்
திட்டமா யுண்டுடுத்தி யோகம்பாரு
பொருத்தமுடன் ஞானவழி கூடுமென்று
பொருமையுள்ள யாகோபு சொன்னார்தானே. 35

சொன்னதிந்த முந்நூறிற் களங்கம்பண்ணு
சுருதியொடு செந்தூரஞ் செய்தாயானால்
கன்னல்பெறச் செம்பாகும் தங்கம்சேர்த்துக்
கருத்துறவே செந்தூரம் பண்ணிக்கொள்ள
இன்னிலத்தில் ராஜயோ கத்தைத்தானும்
இதமாகப் பெருவீர்க ளிதமாய்ச்சொன்னேன்
தன்னிகரிற் சித்திபெற்று வாழ்வீரென்று
சாற்றினார் யாகோபு தன்மைதானே. 36

தன்மையென்ன வுலகத்தில் வாதிதானும்
தாக்கிடவே களங்குசெய்து லோகத்துள்ளே
உண்மையாய்க் கொடுத்துருக்கி யூதும்போது
உதிரியாய்ச் சிதறிவிடும் வர்ணம்போகும்
வண்மையாய் வாதம்பொய் யென்றுசொன்ன
மார்க்கமதுக் கென்செய்வேன் தேங்காய்தன்னைப்
பெண்மையாய் நாயுருட்டும் வாறுபோலே
பேசினார் யாகோபு பெருமைதானே. 37

பெருமையாய் உப்பறிந்த வாதிதானும்
பேருலகிற் செம்பெடுத்து வேதைபார்ப்பார்
அருமையா யவர்சொல்ல மாட்டாரையா
அடைவாகக் காணாது வாதந்தானும்
உருமையாய்ச் சொல்லியே புலம்புவார்கள்
உற்றுணர்ந்து யாகோபு வுறுதிசொன்னார்
மருமையாய்ச் சொன்னாலுந் தெரியாமூடர்
மதியாகக் காணார்கள் மடையர்தானே. 38

மடையனாய்ப் போகாமற் செம்பைப்பாரு
மார்க்கமாய்ச் சீவனங்கள் பண்ணலாகும்
கடையராய்த் திரியாமல் வாசியோகம்
கற்றுணர்ந்து பதவிதனிற் கருத்தையுண்ணு
தடையாகச் சொல்லாதே வாதந்தன்னைத்
தாட்டிகமாய்க் கைபாக வரிசைபாரு
கொடையாக வேயானு மனேகம்போக்கு
கொட்டினேன் யாகோபு குறிப்புப்பாரே. 39

குறிப்பாகச் செய்துபார் பாகம்தப்பிற்
குணமாகச் செம்பெடுக்க வருகாதப்பா
தறிப்பாகப் போய்விடும் தன்மைசொன்னேன்
தாக்கறிந்து தங்கமில்லை தறிக்கமாட்டாய்
நெறிப்பாக உன்மனதைத் தேற்றிக்கொள்ளு
நிலையான வாதம்வரும் யோகம்பாரு
உறிப்பானை தயிரெடுத்தாப் போலேயாகும்
ஓதினேன் யாகோபு உண்மைதானே. 40

உண்மையுள்ள கல்லுப்புச் சுண்ணந்தன்னை
ஓதரிது ஓதுகிறே னுண்மையாக
தண்மைபடச் செய்துகொண்டா லெல்லாஞ்சுண்ணந்
தாக்கினால் மலையேம மாகும்பாரு
வண்மையுள்ள சரக்கெல்லாம் மாண்டுபோகும்
வடிவான வாதம்வரும் வகையுமாகும்
பண்மைபட யாகோபு பகர்ந்தவுப்பைப்
பதிவான நிலையறிந்தோர் பார்த்துய்வாரே. 41

## கல்லுப்புச் சுண்ணம் செயநீர்

பார்த்துமே கல்லுப்புப் படியுமொன்று
பதிவான நவச்சாரம் படியுமொன்று
ஏத்துமே கல்வத்தி லிதனைக்கொட்டி
இழுத்தரைப்பாய் நாயுருவிச் சாறுதன்னால்
காத்துமே வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
கனிவாகப் புடம்போட்டுக் கல்வத்திட்டு
நாற்றிசையு மெய்த்திடமுன் சாறுவிட்டு
நன்றாக வேயரைக்க நலஞ்சொன்னேனே. 42

நலமாக அரைத்துக்கதிர் காயவைத்து
நாடிமிகப் புடம்போடு சுண்ணமாகும்
பிலமாகச் சுண்ணத்துக் கிடைதான்சாரம்
பிசகாமற் சேர்த்தரைக்கச் சிவப்பதாகும்
வலமாக உமிநெருப்பில் வறுத்துப்பின்பு
வடிவாகக் கவசம்வைத்துப் புடமுமிட்டுக்
கலமாகப் பணியில்வைக்கச் செயநீராகும்
காட்டினார் யாகோபு கருத்தாய்த்தானே. 43

## சுண்ணம்

கருத்தாகச் செயநீரில் வீரம்பூரம்
கனிவாகப் போட்டிடவே சிவப்புமாகும்
வருத்தாத இன்னீரு சகலமெல்லாம்
வடிவாகக் கட்டியது வடிவுமாகும்
உருத்தாக உப்பைவிட்டோர்க்கு உறுதியில்லை
உலகத்தில் வாதமில்லை உற்றுப்பாரு
பெருத்ததொரு உப்பினுட சுண்ணம்போலப்
பெருமைகொண்டு யாகோபு பேசினேனே. 44

## கெந்தகச்செம்பு

பேசினேன் கெந்தகத்தின் செம்புகேளு
பெருமைதரும் நெல்லிக்காய்க் கெந்திதானும்
வீசியே பலம்பத்து நிறுத்துக்கல்வம்
விருதுபட விட்டுமே வீரங்காலாய்
வாசியே செயநீரா லரைமுச்சாமம்
வடிவாகக் குண்டுமணி போலேபண்ணி
பாசியே நிழலுலர்த்தி வைக்கவேதான்
பதிவாக யாகோபு பலன்சொன்னேனே. 45

## துருசுக்கெந்தி செம்பு

பலனாகக் கறைகண்டன் பலமும்பத்து
பாய்ச்சியரை பழச்சாறு தன்னாலாட்டிப்
பிலனாக உமிநெருப்பில் வறுத்துப்போட்டு
பிசகாம லோட்டிலிட்டுப் புடமுமிட்டு
அலனாக உருக்கிடவே ரவியுமாகும்
அயமதனிற் பாதியிட்டுக் குகையில்வைத்துக்
கலனாகத் தண்ணீர்போ லுருக்கியிட்டுக்
காதலுடன் யாகோபு காட்டினாரே. 46

காட்டிடவே முன்னுண்டை கிராசம்போடு
கதிபெருக இடைக்கிடைதான் கண்டுகொள்ளு
மூட்டிடவே சத்தாகும் எடுத்துப்பாரு
முடிவான வெங்காரம் நாலிலொன்று
தேட்டிடவே கொடுத்துருக்கக் கசடுநீங்கும்
திடமாக எடுத்துமே கல்வத்திட்டு
மாட்டிடவே பத்தலது பாதிசேரு
மகிழ்வாக யாகோபு பயின்றவாறே. 47

வாறேது முன்னீரா லரைத்துக்கொண்டு
வகையான வில்லைதட்டிக் கதிரில்வைத்து
காறமாய்ப் புடம்போடச் சிவக்கும்நல்லாய்க்
கனிவாகக் காரமதைக் கொஞ்சமிட்டு
பாரிலே உருக்கிடவே அலரிப்பூப்போல்
பதிவான அயச்செம்பாம் பாரிலோர்க்குக்
கூறிதுதான் வேதைரெம்ப வோடும்பாரு
கொட்டினார் யாகோபு குணமாய்த்தானே. 48

குணமாக அயச்செம்பை உருக்கும்போது
கொட்டிடுநீ நாலிலொன்று தங்கத்தாயை
மணமாக தங்கமிடை நாகம்போட்டு
மதியாக உருக்கையிலே சொல்லக்கேளு
உணவாக முன்னுண்டை கெந்திதன்னை
உறுதிபெற இடைக்கிடைதான் தாக்கச்சத்தாம்
பணமாகக் கல்வமிட்டே உடைக்கச்சொன்னார்
பத்தியுள்ள யாகோபு பயின்றவாறே. 49

பயின்றிட்ட பத்தலதைப் பாதிசேர்த்துப்
பதிவாக முன்னீரிற் பதியஆட்டி
நயின்றிட்ட வில்லைபண்ணிக் காயவைத்து
நலமாகப் புடம்போடச் செந்தூரிக்கும்
உயின்றிட்ட செந்தூர மகிமைசொல்ல
உறுதியுரை ஆண்டவரும் மயங்கிநிற்பார்
கயின்றிட்டு யான்கண்டேன் யாகோப்பென்பேர்
காட்டினேன் இதுபெருமை கணக்குப்பாரே. 50

கணக்காகச் செம்புநால் தானுருக்கிக்
காட்டிடவே ஒன்றுயிடை கனகமாகும்
பிணக்காகச் சொல்லவில்லை இந்தநூலில்
பெருமைமெத்தப் புத்தியுள்ளோர் அறிந்துகொள்வார்
ஷணப்போது நில்லாது சரீரந்தானும்
தான்சித்தி பெறவென்றால் அயத்தைப்பாரு
குணக்கில்லா யாகோபு சொன்னநீதி
கொட்டினேன் வாதமதைக் கொள்ளைதானே. 51

கொள்ளையென்ற யிரும்பான செந்தூரத்தைக்
கொண்டுமொரு மண்டலத்திற் கொடிதாய்நோய்கள்
பிள்ளைசிறு பாலரைப்போ லிருக்குமேனி
பெரியோர்க ளூரைப்பார்கள் புத்தியோடே
வெள்ளம்வரு முன்னேதான் அணைகள்போட்டால்
விருதாவாய்ச் சாக்காடு யில்லையில்லை
உள்ளபடி பார்த்துணர்யா கோபுசொன்ன
உறுதியிது ரசவாதி கண்டுதேறே. 52

## செம்புசத்து

கண்டுயெடு சூரியனைக் குகையிலிட்டுக்
கனிவாக யிவ்விடைநா ரும்பூதாக்கு
உண்டுவிடுஞ் சத்தாகுங் காரங்கூட்டி
உருக்கிநல்லாய்க் கனமாகக் கல்வத்திட்டு
பண்டுபடு கொடியோனைப் பாதிசேர்த்துப்
பருத்திச்சா ரதனாலே அரைத்துவில்லை
கொண்டுகதிர் காயவைக்கச் சொன்னேன்பாரு
குரம்பையுட புடம்போடக் குருவுமாமே. 53

குருவாக அதையெடுத்து வைத்துக்கொண்டு
குணமுள்ள கறைகண்டர் பலமும்பத்து
திருவாக ஆறுதரம் சாற்றாலாட்டித்
திறமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
உருவாகக் குகையில்வைத்து உருக்கச்செம்பாம்
உத்துயெடு பலமிரண்டு வைத்துருக்கக்
கருவாக முன்குருவை யிடையேயீயக்
கண்டுசொன்னார் யாகோபு கருணைதானே. 54

கருணைவைத்துச் செம்பதுவுங் கட்டியாகும்
கர்த்தாவைத் துதிசெய்து யெடுத்துமெள்ளத்
தருணமதில் யேழதுவில் மூன்றுசேரு
தக்கதொரு யேமமே பாதிசேரு
அருணைநகர் போலதுமே யேமமாகும்
அதையடித்துப் புடம்போட யிறங்கும்பாரு
திருவினா ருள்ளதனை யெடுக்கச்சொன்னார்
திறமான யாகோபு திண்ணந்தானே. 55

## யாகோபு

திண்ணமுட னிச்செம்பைக் கண்டுநீயும்
சீக்கிரமா யெடுத்தாக்காற் செல்வமாகும்
உண்ணுவுடு ஞானமுடன் யோகம்பாரு
உத்துமே நபிமாரை வணங்கநன்றாம்
எண்ணமுடன் சொல்லாதே யிறகூலாகி
இல்லல்லா வென்றுநீ யின்பமுற்றுப்
பெண்ணுறவு தன்னைவிட்டுப் பிரித்துநீயும்
பெற்றிடுவாய் சுழிமுனையிற் பிரியம்வைத்தே. 56

பிரியமுடன் பெரியோராய் நடக்கவென்றாற்
பேசாமல் அயச்செம்பைப் பேணிப்பாரு
குறியாகப் பொன்செய்ய வேணுமென்றாற்
குணமாகக் கெந்தியைத்தான் குறிப்பாய்ப்பார்த்து
வெறியாகத் திரியாதே யிந்நூல்தன்னை
விருப்பமா யடிதலையும் உற்றுப்பாரு
சிறியவனா யிருந்தாலும் புத்தியாலே
சீர்தூக்கிப் பாரென்றார் திறமாய்த்தானே. 57

### சாரக்கட்டு

பாரென்ற தேரதுவும் பலமும்நாலு
பாகமாய்ச் சீவியதை வைத்துக்கேளு
காரென்ற வளையமது பலமும்யெட்டு
கட்டியைநீ பொடித்துத்தேர் கீழ்மேலிட்டு
தாரென்ற வடமதுவும் பலமும்நாலு
வகையாகப் பொடித்துத்தேர் கீழ்மேலிட்டு
வாரென்ற அஞ்சுரு வாணிதன்னைத்
தாட்டிகமாய்ப் பலம்நாலு தன்மைதானே. 58

தண்மையாய்ப் பொடித்துமே கீழ்மேலிட்டுத்
தக்கபொடி கிடத்துக்குள் நடுவில்வைத்து
உண்மையா யதன்பேரில் மணலையிட்டு
உறுதியா யமுக்கியே அடுப்பில்வைத்துப்
பெண்மையா யிருசாம மெரித்துப்பாரு
பெருமைபெற வுருக்கியே கட்டிநிற்கும்
வண்மையா யெடுத்துமே வைத்துக்கொள்ளு
வகையாக யாகோபு வழுத்தினாரே. 59

வழுத்தியே சோரமது கரண்டியிட்டு
வகையாக உருக்கியே இலுப்பைநெய்யில்
அழுத்தமாய்ப் பதினேழு தரமேசாய்த்து
அதையெடுத்துக் கரண்டியிட்டு உருக்கிக்கொண்டு
முழுத்தமாய் முன்கட்டுத் தேரைப்போட்டு
முடிவாகக் கட்டியது மணியுமாகும்
இழுத்தபடி வாதிக்கும் வாதங்காணும்
இனம்பழுக்கும் யாகோபு எழுதினாரே. 60

எழுதியதோர் நாகமணி யுருகும்போது
ஏத்தமுள்ள யேமமரை யிடையேதாக்கு
பழுதில்லா திவ்விரண்டும் சேர்த்துத்தானும்
பாரமா யுருகிநிற்கும் வேளைதன்னிற்
குழுகுழுவே நாரும்பூ யிடையேதாக்கு
கொக்கரித்து வாங்கியது கரிபோற்றூளாம்
வழுதியே யாகோபு சொன்னாரித்தை
வையகத்தி லவர்பேரு விளங்கத்தானே. 61

விளங்கவே தானிந்தக் கரிக்குத்தானும்
வெற்றிபெருங் கொடியோனைப் பாதிசேர்த்து
உளங்குளிரப் பொற்றலையின் சாற்றாலாட்டி
உருவில்லை காயவைத்துப் புடமூன்றிட்டால்
பழமான ததுபோலே சிவந்துநிற்கும்
பாகமா யெடுத்துநீ வைத்துக்கொண்டு
தளம்பெறவே யாகோபு சொன்னநேர்மை
தக்கதோர் புதுமையதாந் தன்மைபாரே. 62

தண்மைபார் செம்புருக்கில் நூற்றுக்கொன்று
தான்கொடுக்க மாற்றதுவும் பத்துமாகும்
உண்மைபார் சாயமது நிறமதாகும்
உறுதியுள்ள நபிமார்க ளாடுமாட்டம்
எண்மைபார் உலகத்திற் சொல்லவேண்டாம்
இதுகண்டால் வெகுபேர்தான் செய்வாரென்று
வண்மையாய் சரக்கதுவும் பாஷையாக
வழுத்தினேன் யாகோபு வளஞ்சொன்னேனே. 63

## யாகோபு

வளமைபார் தங்கத்தில் நாகஞ்சேர்த்தால்
வையகத்தில் மண்ணோடு யெல்லாந்தங்கம்
கிழமைபார் செம்புமுதல் வேதையாகும்
கெட்டியுள்ள நவலோக மெல்லாந்தங்கம்
பழமைபார் வாதமது எளிதிலாகும்
பழங்கதைகள் சொன்னாலே பதிவுமில்லை
கழகசரி யாகோபு சோதித்தேதான்
கருத்துவைத்து முந்நூறிற் கருதினாரே. 64

கருதியே மக்கத்தில் நபிமாரெல்லாம்
கண்டுரச வாதமதைக் கருத்திற்பூண்டு
வருதியே யெத்தேச காலஞ்செய்து
வகையான சீவனத்திற் கிடமேபண்ணி
சுருதியே வேதங்கள் மிகவுமோதி
சூட்சமுள்ள ஆண்டவனைத் தோத்தரித்துப்
பருதியே ரொட்டியைத்தா னுண்டுதேறி
பத்தியுள்ள யாகோபு பயின்றவாறே. 65

## துருசுச்சுன்னம்

பயின்றிடவே துருசினுட நீறுகேளு
பதிவான பலமொன்று நிறுத்துக்கொண்டு
கயின்றிடவே சுக்கானை நீத்திநீயும்
கதிபெறவே துணியதனிற் பூசிநன்றாய்த்
தயின்றிடவே நீலன்மேற் கவசங்கட்டித்
தடையறவே ரவியில்வைத்துத் தண்மைகேளு
குயின்றிடவே அப்புதான் சேருநாலு
கொண்டுவா வென்றுசொன்னார் குணமாய்த்தானே. 66

கொண்டுவந்து சட்டியிட்டு உருக்கிக்கொண்டு
குணமாக முன்துருசு அதிலேபோட்டுப்
பண்டுபட அமுக்கியிடு சாமமொன்று
பதிவாக அப்புதா னிழுத்துக்கொள்ளும்
கண்டுபடக் களிம்புதான் வங்கமாகும்
கனிவாக லவணமது வெளுத்துநீறும்
முண்டுபட அதைப்பிரிக்க வெள்ளையாகும்
முத்திதரும் யாகோபு மொழிந்தவாறே. 67

முத்திதரக் கிளிஞ்சிநீர் பலமுமொன்று
முக்கியமாய்ச் சிகரமது நாலிலொன்று
பத்திதர அரையதுவு மஞ்சளாகும்
பதியவெடு முன்துருசு மேலேகட்டு
வெத்திபெறக் கவுதாரிப் புடமுமிட்டால்
விருக்கிட்ட துருசதுவும் நீறிப்போகும்
குத்தமத்து நீறிடுங்காண் துருசுச்சுண்ணம்
கோடிதரும் யாகோபு கூறினாரே. 68

கொடுமையுள்ள துருசுநீர் விராலிக்கிட்டு
கூட்டியரை நீராகும் அன்னீர்தன்னில்
அடுமையுள்ள யிரதமது பலமுமிட்டு
அயக்கரண்டி யிட்டுமே கொதிக்கவைத்துப்
படுமையது ரசமிறுகி மணியுமாகும்
பக்குவமா யெடுத்துமே பாகங்கேளு
தடுமாறா தெலுமிச்சம் பழத்துள்வைத்துத்
தாட்டிகமாய்ப் புடம்போட யிறுகும்பாரே. 69

இறுக்கியெடு யிரதமதைக் கரியில்வைத்து
இதமாக வுருக்கிடவே யுருகிநிற்கும்
பெருக்கமுடன் வாதமது யேவல்கேட்கும்
பேசாத உபரசங்கள் சத்துவூட்டும்
பருக்கவெடு துவாரமிட்டு யிடையிற்கட்டு
பதிவான விந்திருக்கும் மணியுமாகும்
உருக்கமுள்ள காயசித்தி யுடனேயாகும்
உற்றுணர்ந்து பார்த்தாக்கா லுறுதியாமே. 70

உறுதியாஞ் சூதமது கட்டினாக்கால்
உற்றரச வாதமது ஒழுங்கதாகும்
அறுதியாய் வெள்ளீயம் வெள்ளியாகும்
அடைவான பொன்னெல்லா மதிகமுண்டு
பருதிமதி பார்த்தவிடம் யேமமாகும்
பதிவான வசியமாம் பாரிலோர்க்குச்
சுருதிபட யாகோபு சொன்னநேர்மை
சூஸ்திரத்தை யாராய்ந்து தோய்ந்துபாரே. 71

தோய்ந்துபார் துருசினுட நீறினாலே
சுத்தமாம் முகம்மதுவின் மார்க்கத்தாரும்
ஆய்ந்துமே மக்காவின் தேசந்தன்னில்
அவரவர்கள் வீடுதனில் வாதஞ்செய்து
பாய்ந்துமே நபிமார்க ளென்றுசொல்லிப்
பத்தியாய் நால்வேத முடிந்ததேசம்
காய்ந்துமே அத்தேசஞ் சென்றுபுக்கிக்
காட்சியெல்லாங் கண்டறிந்த கணக்குமாமே. 72

கணக்காக நால்வேதங் கண்டார்பாதம்
கருத்திலுள்ள வாதமெல்லா முடனேயாகும்
பிணக்காகச் சொன்னவர்க்கு ஒன்றுமில்லை
பிரட்டுத்தான் சொன்னார்க்கு நரகமாகும்
தணக்காக முந்நூற்றைத் தோய்ந்துபாரு
தக்கநபி மார்களையே கண்டுபூசி
உனக்காக விண்டுசொன்னேன் யாகோபென்பேர்
உறுதிமெத்த யென்வசனம் பொய்போகாதே. 73

போகாதே யென்பேரு ராமதேவர்
புக்கினேன் மக்காவின் தேசந்தன்னிற்
சாகாதே நாலுயுக மிருந்துசாரம்
தனைத்தொட்டு வேதைகள்தான் செய்தேனப்பா
ஆகாதே அவிடத்தில் நபிகளெல்லாம்
அனைவோருஞ் சாரத்தைத் தள்ளிப்போட்டு
ஏகாதே சூதமது குளிகைகட்டி
யெனக்குத்தான் சொன்னார்கள் யெய்தினேனே. 74

எய்தியே மனந்தனையே நிறுத்திஞானம்
இருந்துரைத்தேன் மக்காவின் தேசந்தன்னில்
உய்துமே வெகுநாளா யங்கிருந்தேன்
ஒருவருக்குந் தெரியாம லறிந்துகொண்டேன்
பய்தியே சிறியோரும் பெரியோர்தானும்
பக்குவமா யெல்லோர்க்கும் ஞானமுண்டு
நய்தியே பெண்ணினுட வாடையாகா
நலமாக யிருப்பார்கள் பொய்சொல்லாரே. 75

பொய்சொல்லா ரவர்களுட தேகந்தானும்
பூரணமாய் ரத்தமது முத்திநிற்கும்
வைதிடுவார் உண்மையுள்ளார் வலுவுமுள்ளார்
வலுவாகத் தன்னுயிரை யெளிதிலேதான்
நைதிடவே நினைத்திடுவார் பிறவியில்லார்
நாட்டிலுள்ள நபிமார்கள் பிழைக்கும்நேர்மை
மெய்சொல்வார் புத்தியது மிகவுமுண்டு
மேதினியி லத்தேசம் வேதமாமே. 76

வேதமா மவர்களுக்குச் சிரசில்தொப்பி
வேதாந்த மார்க்கத்தார் வெள்ளிதன்னில்
பாதமாந் தொழுதிடுவோர் பத்திமெத்த
பகலுறக்க மில்லாத பிரிவுமெத்த
சேதமிலாத் தன்னுடைய மனதுதானும்
சித்திபெற்று வலுவாகப் பேசுவார்கள்
நீதமாய் மனதுதா னிருக்கும்பாரு
நித்தியரா மத்தேச வழக்கம்பாரே. 77

வழக்கமாய் மக்காவின் தேசந்தன்னில்
வாஞ்சையாய் தமிழனவன் போனாற்கேளு
பழக்கமாய் தன்னுடைய மார்க்கந்தன்னிற்
பதிவாகச் சேர்த்திடுவார் புத்திசொல்வார்
புழக்கமா யிசுலாத்துப் பண்ணுவார்கள்
புகழ்பெறவே இருங்களென்று சொல்லுவார்கள்
சழக்கில்லா நால்வேதம் மெய்யதாகும்
தரிகூடா மெய்யதுவைச் சொல்லக்கேளே. 78

சொல்லவே நால்வேதம் லெப்பைமார்கள்
சொற்பெரிய உலகத்தில் கர்மிதன்னை
மெல்லவே ஆண்டவனைக் காட்டுமென்பார்
மேதினியிற் பணம்பொன்னுக் காசைவைத்து
நல்லவே சொல்லியிட்டுப் பணம்பிடுங்கி
நலமாக உன்னையவ ரேய்ப்பாரப்பா
உல்லவே நால்வேதக் காரனுக்கு
உண்மையுள்ள ஆண்டவனும் மெய்யுமாமே. 79

ஆண்டவனும் ஆரென்றாற் சொல்லக்கேளு
அருமைபடப் பெற்றவனும் ஆண்டமார்கள்
பாண்டவர்க ளானதொரு ஆண்டமார்கள்
பதிவான நால்வேதம் ஆண்டமார்கள்
தூண்டநின்ற விளக்கதுவும் ஆண்டமார்கள்
தொல்லுலகில் ரசவாதி ஆண்டமார்கள்
மூண்டவனும் பிறந்தோர்கள் ஆண்டமார்கள்
முத்திபெற யாகோபு மொழிந்தவாறே. 80

## அயமணி

மொழிந்தஅயந் தானெடுத்து ராவிநீயும்
முக்கியமாய்ப் பலமிரண்டு தாசிரெண்டு
அழுத்தியெடு இரண்டுடனே வாழ்மடந்தை
அதுமூன்றுஞ் சேர்த்துமே கல்வத்திட்டு
வழித்துஅரை கன்னிச்சார் தன்னாலாட்டி
வாழ்குகையி லிட்டுநீ யுருக்கிப்பாரு
பழுத்துமணி போலிருக்கும் பார்த்துக்கொள்ளு
பத்தியெடு உத்தமமாம் பரிவதாமே. 81

பரிவாக உருகிநின்ற மணிக்குப்பாதி
பக்குவமாய் வண்டிலதைச் சேர்த்தரைத்துப்
பிரிவாக உருக்கிநல்லா யெடுத்துக்கொண்டு
பேசரிய கல்வமிட்டுப் பின்புதானும்
வரிவித்து விட்டாட்டிக் கொடியோன்பாதி
வைத்தரைத்து வில்லைதட்டிக் கதிரில்வைத்து
விரிவாகப் புடமதனைப் போட்டுப்பாரு
வித்தகருஞ் சிவப்பாகும் விளம்பினேனே. 82

விளம்பினோம் மதியேழில் மூன்றுதாக்கு
விதமாக உருக்கியபின் யேமம்மூன்று
தளம்பியே சேர்த்துருக்கிப் பார்க்கும்போது
தாட்டிகமாய் வயததுவும் யெட்டுமாகும்
குளம்பியே யிதைவித்துச் செலவுசெய்து
கூசாமல் உண்டபின்பு ஞானம்பாரு
வளம்பியே சுழிமுனையில் மனதைப்பூட்டு
வடிவாக யாகோபு வழுத்தினேனே. 83

## சுண்ணம்

வடிவான வாதங்கள் வந்தபோது
வகையாக மவுனத்தை மனதிலுன்னி
முடிவான தனைநினைத்து இருத்திக்கும்பி
முத்திக்கு வித்தாகும் முதன்மைபூண்டு
படிவாக யொருவருக்குச் சொன்னால்நீயும்
பத்திமுத்தி யில்லாம லழிந்துபோவாய்
குடிவான இவ்வசனம் நினைவிற்பூண்டு
குற்றமற்ற கண்டிதத்தைக் குணமாய்ப்பாரே. 84

## அயச்செம்பு

குணமாக அயச்செம்பு சொல்லக்கேளு
குற்றமற்ற கருப்பியைத்தான் ராவிக்கொண்டு
தனமாக யிதுக்குரெட்டி நீலநாத்தம்
சாதகமா யிதுக்குநிகர் சூதந்தூக்கு
பணமாக எலுமிச்சம் பழத்தாலாட்டிப்
பத்திசெய்து புடம்போட்டு உருக்கச்சத்தாம்
கனமாக வண்டிலிட்டுக் கொண்டுசேர்த்துக்
கணக்காக அரையாகுஞ் சொன்னவாறே. 85

சொன்னதொரு முன்சாற்றா லரைத்துருக்கச்
சொல்லவொண்ணா மணியாகுங் கல்வத்திட்டு
நன்னயமாய்க் கொடியோனைப் பாதிசேர்த்து
நல்லரைக்கப் பூத்துவிடும் வில்லைதட்டிக்
கன்னல்போல் புடமிட்டு யெடுத்துப்பாரு
கருணைபெறச் செந்தூரம் வண்டிலிட்டு
உன்னிதமா யுருக்கிடவே செம்புமாகும்
உறுதியிது யாகோபு உண்மைபாரே. 86

உண்மையுள்ள அயச்செம்பு பலமும்நாலு
உத்துயெடு உருக்குமுகம் நாலிலொன்று
தண்மைபெருந் தங்கமது சேராம்ஒன்று
தாக்கியிடு அப்புவொன்று உருக்கியாட்டி
பண்மைபடக் கல்வமிட்டு உடைத்துப்பின்பு
பதிவான சூதமொன்று நரும்பூஒன்று
வெண்மைபடப் பொற்றலையின் நீராலாட்டி
வெற்றிபெறப் புடமிடவே சொன்னேன்பாரே. 87

புடமிடவே கருப்பாகும் எடுத்துக்கல்வம்
பூட்டியரை முன்னீரால் கொடியோன்பாதி
தடமிடவே சேர்த்தரைத்து வில்லைதட்டித்
தாக்கிடவே கதிரில்வைத்துப் புடமூன்றிட்டு
குடமாக யெடுத்திடச்செந் தூரமாகும்
கொள்ளைபோல் வாதமது குருக்குவேதை
படமாக நூற்றுக்கு ஒன்றுதாக்கப்
பத்திதரும் யேமமாம் பரிந்துபாரே. 88

பரிந்துமே யிதைவித்துச் செலவுசெய்து
பார்த்திருநீ ஞானவழி மதியில்நில்லு
வரித்துசுழி முனையதிலே ஏறலாகும்
வண்மைபெறக் காயசித்தி யோகம்பாரு
தெரிந்துமே கைபாக வரிசையாகத்
திட்டமாய்ச் செய்திடவுந் தீர்க்கமாகும்
கரிந்துமே யாகோபு சொன்னாரித்தைக்
காதலுடன் ரசவாதி கண்டுபாரே. 89

கண்டுபார் பணவிடைதான் பாலிலுண்ணக்
காந்திகதிர் போலவுமே கனகமாகும்
பாண்டுபார் மண்டலத்திற் சரீரந்தானும்
பதிவான செவ்வல்லி மேனியாகும்
உண்டுபார் நோயெல்லாங் கடலேபுக்கும்
உத்திபுத்தி ஞானவழி அடுத்துநிற்கும்
தொண்டுபடு மென்வசனம் பொய்போகாது
தொல்லுலகில் ரசவாதம் ஏவலாமே.

ஏவலாம் மூடினதோர் களங்கைத்தானும் 90
எடுத்துமே செந்தூரஞ் செய்தால்வேதை
ஆவலாங் களங்குசெய்து வெள்ளிதன்னில்
அடைவாகக் கொடுத்தூதச் சிதறிப்போகும்
காவலாம் வாதம்பொய் யென்றுசொன்ன
கசடருக்கு யிந்நூலைக் காட்டவேண்டாம்
பாகமா யாகோபு சொன்னாரித்தைப்
பார்த்திடவே சகலமுந்தான் சித்தியாமே. 91

சித்தியாம் உபரசத்திற் சுருக்குவேதை
சிறப்பாகச் செய்யாமல் லோகந்தன்னிற்
புத்தியாய்ச் சவுக்காரம் முடிப்பேனென்று
புகலரிய பூநீற்றை யெடுத்துக்காய்ச்சி
சத்தியாய்ச் சிறுநீரை விட்டுக்காய்ச்சிச்
சஞ்சலமாய்த் திரிவார்கள் ராச்சியத்தில்
எத்திசையுஞ் செப்பரிய மூடர்தானும்
இன்பமில்லா தலைந்துமே மாளுவாரே. 92

மாளாம லிருக்கவொன்றாற் செம்பைமுந்தி
வடிவாகப் பார்த்திட்டாற் பலனுமாகும்
கேளாமற் சுடவேண்டாம் நூலைப்பார்த்துக்
கெட்டியா யடிதலையைக் கண்டுதேறு
பாழாகப் போகாமற் பலனுமாமே
பார்த்துணர்ந்து நபிமாரைப் பத்திக்கொள்ளு
தேளான பசியடக்குஞ் சொன்னேனப்பா
செகமெச்ச யாகோபு சொன்னவாறே. 93

சொன்னதொரு கருக்கிடையுந் தேர்ந்துபார்த்துச்
சொற்பெரிய கைபாக வரிசைகண்டு
நன்னயமாய்ச் சரக்கினுட நட்புகொண்டு
நாடோறுஞ் சாஸ்திரங்கள் மிகவும்பார்த்து
இன்னிலத்திற் பதறாமற் செய்துகொண்டால்
இன்பரச வாதம்வரும் யெல்லாம்மெய்யே
பின்னும்பின் யாகோபு சொன்னாரித்தைப்
பிரபலமாய்க் கற்றுணர்ந்தால் பெரியோர்தானே. 94

பெரியநபி யென்றசொல்தா னாருக்கென்றால்
பேசரிய ரசவாதம் வந்தபேராம்
வரியவனாய் மதியையக முற்றோர்க்கில்லை
வழியில்லை துகையில்லை வரவுமில்லை
பெரியவராய்த் திரிந்தாலு மொன்றுமில்லை
பிசகாமற் கைபாக வரிசைகாண்போர்
சரியவனா யாகோபு சொன்னநீதி
சஞ்சரித்து புத்தியவன் தன்மைதானே. 95

தன்மையாய் மனந்தனிலே சரக்கையெண்ணி
சத்திசிவ மென்றறிந்து சேர்த்துப்பார்த்தால்
உண்மையாய் வாதம்வரும் யோகமாகும்
உறுதிவரும் பொன்னாகும் வசியஞானம்
வண்மைவரும் பலகலைநூல் தேர்ந்துபார்த்து
வளமாகத் தனக்குமே பதியாம்நன்மை
வெண்மையா யாகோபு சொன்னாரித்தை
வெகுபேர்க்கு வாதம்வரும் குணமுமாமே. 96

### துருசுக்கெந்தி களங்கு

குணமாக இன்னமொரு களங்குகேளு
குற்றமறச் சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
பணமாகக் கறைகண்டன் பலமும்பத்து
பதிவாக நாறும்பூ பலமும்யேழு
மணமாக யெலுமிச்சம் பழச்சார்விட்டு
மாண்டபின்பு வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
கணமான கல்லுப்புச் சுண்ணம்வேறே
கசகாமற் கூட்டென்று கட்டினேனே. 97

கட்டியிடு புடம்பெரிதாய்ப் போட்டெடுக்கக்
கரியாகும் வண்டிலது காலுமிட்டு
தட்டியதை யுருக்கியே பார்க்கும்போது
தக்கசத்து வெள்ளையாய்த் தானேதோணும்
தொட்டிப்பாய் கல்வமிட்டுக் கொடியோன்பாதி
தொடர்ந்துபோட் டுக்கன்னி நீராலாட்டி
மட்டியபின் வில்லைதட்டிப் புடமூன்றிட்டு
மதியாகும் யாகோபு பரிவாய்த்தானே. 98

### அண்டச் சுண்ணம்

பரிவாகச் செந்தூர மாகுந்தன்னைப்
பத்தியொடு புறம்பாக வைத்துக்கொண்டு
பிரிவாக அண்டோடு பலமும்பத்து
பிசகாமற் சட்டியிட்டு உவர்மண்ணிட்டு
நெரிவாகக் கிழிஞ்சிநீ ரிடையுமிட்டு
நேர்த்தியாய்ப் பாணியிடு யெரிநேர்தானும்
குறியாக அண்டோடு யெண்ணெய்கக்கும்
கூறினார் யாகோபு குணமாய்த்தானே. 99

குணமாகச் சுத்தஅண்ட ஓட்டைக்கல்வம்
குருக்கிலிட்டு வெண்கருவா லரைத்துவூத
தணமாக நீறிடுங்காண் வளையஞ்சேரு
தாக்கிட்டு முன்னீரால் தருகஆட்டி
கணமாக ஊதிடவே கடுமையாகும்
கலந்தெடுத்துக் கல்வமிட்டு முன்னீர்தன்னால்
உணவாக அரைத்திடயா கோபுசொன்னார்
உறுதியிந்தப் படியரைக்க வொழுங்குமாமே. 100

அரைத்துயெடு குழவிக்குக் கண்டர்மேலே
அதையப்பிக் காயவே கதிரில்வைத்து
பரைத்துமே அதுமேலே சீலைசெய்து
பதிவாகப் பெரியபுடம் போட்டுத்தீரு
வரைத்துயெடு வண்டிலிட்டு உருக்கிப்பாரு
வண்மையாய் ரவியாகு மிந்தச்செம்பில்
தரைத்துமே யிச்செம்பில் முன்செந்தூரம்
தாக்கிட்டு இடைக்கியினந் தகமைபாரே. 101

தகமையாய்ச் செந்தூரந் தன்னைத்தாக்கத்
தாஷ்டிகமாய்ச் செம்பதுவுங் கட்டிப்போகும்
உகமைபார் மதியேழு முன்சேர்த்தூது
உறுதிதங்க மொன்றுசேர்த் துருக்கிப்பாரு
வகமையாய் மாத்தெட்டுக் காணும்நன்றாய்
வகையாகு மிவ்வேதை மருவுமில்லை
பகமையில்லை யாகோபு செய்துபார்த்துப்
பகுத்தறிந்து உலகமதிற் பாடினாரே. 102

பாடினதோர் செம்புதனிற் களிம்புபோகப்
பதிவான கெந்தியினாற் பத்திக்கொள்ளு
கூடினதோர் செம்புள்ளே மாளாவிட்டால்
குணமில்லை யூறல்வரும் கூர்ந்துதள்ளு
தேடினதோர் தேட்டேல்லாம் வீணாய்ப்போகும்
திடமான புடமிறங்கச் சித்தியில்லை
ஊடினதோர் யாகோபு உறுதிசொன்னார்
உற்றுணர்ந்தோர்க் கெல்லாமு மெய்துந்தானே. 103

எய்துமே சத்துக்குத் துருசுவேணும்
இதமான நீத்தினமுந் துருசுவேணும்
எய்துமே களங்குக்குத் துருசுவேணும்
எழிலான செந்தூர மினத்துக்கெல்லாம்
எய்துமே துருசதுவுஞ் சேரவேணும்
மேழைமதி போகாமல் உற்றுப்பாரு
எய்துமே நபிமார்கள் செய்தமார்க்கம்
யீதுணர்ந்த பண்புமிது பாகமாமே. 104

பாகமாய்ச் சாஸ்திரத்தைப் பாராமூடர்
பதிவாக வாதமென்ற சமுத்திரத்தை
வேகமாய் நீந்தியே போகாரப்பா
விதமாக நீந்திற்கை யசரும்பாரு
பாகமது வாராது பலிதமில்லை
பார்த்திடுவான் பணம்போகும் தெரியாதோர்க்குத்
தாகமாய்ச் சொல்லிவிட்டேன் யாகோபென்பேர்
சாதகமா யுபதேசஞ் சாற்றினோமே. 105

சாற்றினதோர் சரக்குவகை யறியாமூடர்
சரியான பேச்சதனாற் பசப்புவார்கள்
போற்றினதோர் பணமதுவைச் சம்பாதிக்கப்
பொழுதுறக்க மில்லாமற் றிரிவார்பாரு
ஏற்றினதோர் தீபவொளி யறியமாட்டார்
இன்பத்துக் காகவேபொய் சொல்வாரப்பா
தேற்றினதோர் பாணிதனை யறியாமற்றான்
திடமாகச் செப்பிடுவார் சிறியோர்தானே. 106

சிறியோர்க ளென்றமொழி யாருக்காச்சு
சித்திபெறச் சாஸ்திரங்கள் படிக்காததாலே
பெரியோர்க ளென்றபே ராருக்காச்சு
பேணியிந்தச் சாஸ்திரத்தைப் பார்த்ததாலே
அறிவோர்க ளென்றபே ராருக்காச்சு
அடங்கியே வுலகமதில் நடந்ததாலே
குறியோர்க ளென்றபே ராருக்காச்சு
குருவுக்குப் பிரியமுடன் பணிந்தபேர்க்கே. 107

பணிந்துமே ஒருகளங்கஞ் சொல்லக்கேளு
பதிவான விதியாளி கண்டுகொள்வான்
அணிந்துமே ஆண்டவனுஞ் சொன்னநீதி
அதையறிந்து பாகமாய்ச் செய்துகொண்டால்
துணிந்துமே யிந்நிலத்திற் பெரியோனென்று
தொல்லுலகிற் பேரும்பிர தாபமாகும்
பணிந்துமே கைபாக வரிசையாகப்
பாரதனிற் சொல்லிவிட்டார் பண்பாய்த்தானே. 108

## பொன்னிமிளைச் செந்தூரம்

சொல்லிவிட்ட பொன்னிமிளை பலந்தானொன்று
சுருதியெலு மிச்சம்பழச் சாற்றாலாட்டி
வெல்லிட்ட இருசாமஞ் சென்றரைத்து
விருப்பமாய்த் தங்கமென்ற தகட்டிலப்பு
சொல்லிட்டுத் தங்கமது கருத்துப்போகும்
குணமான ததையெடுத்துக் கல்வமிட்டு
மல்லிவிட்டுக் கொடியோனைச் சேர்த்துஆட்டி
மதித்துமே புடம்போடு வகையாய்த்தானே. 109

வகையாகச் செந்தூர மாகும்பாரு
வடிவாக மதியெட்டு செம்பிரண்டு
துகையாக ஒன்றிட்டு உருக்கிப்பாரு
தூங்கிடுங்காண் தங்கத்துக் கதிகவர்ணம்
நகையாகச் சித்தர்வகை யெளிதிற்செய்வார்
நாதாக்க ளாடினதோ ராட்டைத்தானும்
தகையாகச் சொல்லிவிட்டே னிம்முந்நூற்றிற்
றாக்கினேன் யாகோபு தன்மைதானே. 110

தண்மையாய் மக்காவின் தேசந்தன்னில்
தருகாவில் நபிமார்கள் மெத்தவுண்டு
உண்மையா யவரவர்க்கு வாதமுண்டு
உத்ததோர் பாஷாணம் மிகவுமுண்டு
வண்மையா யதையெடுப்பார் செய்துகொள்வார்
வகையறிவார் நவலோகம் பழுக்கச்செய்வார்
குண்மையா யிருந்தவிடந் தெரியாமற்றான்
குருவாக யிருப்பாராங் கொள்கைதானே. 111

தானென்ற காவேரித் தரவிலுள்ளோர்
தனியான மலையினுட பாஷாணத்தை
வானென்ற தறியாமற் பரங்கிவைக்கும்
வைப்பான பாஷாணந் தன்னைவாங்கி
ஊனென்ற துருசுடனே தானுருக்கு
உத்தமமாஞ் சத்துவகை தானுஞ்சேர்த்துக்
கானென்ற சத்தைத்தான் பிரிந்துசெம்பு
கருதியே யெடுத்துமே வேதைதானே. 112

வேதைதான் பார்த்துமே கடையில்விற்று
விருப்பமாய் ஞானவழி யடுப்பாரப்பா
பாதையாம் மிகவிரும்பி மக்காதேசம்
பதிவாகச் செய்கின்ற தங்கந்தானும்
நீதையாம் மாத்ததுவும் பனிரெண்டாகும்
நேராகுங் காவேரி நாட்டில்வாதம்
சாதையாய்ப் பொன்னதுவு மெட்டேகாலாம்
சாஸ்திரத்தைப் பார்த்துமே செய்குவாயே. 113

பார்த்துமே வைப்பான துருசினாலே
பதிவாக நீத்தியே சூதங்கட்டி
நாத்துமே வளர்ந்தாற்போல் செய்குவார்பார்
நலமாக மக்காவின் தேசந்தன்னிற்
காத்துமே மலைதனிலே விளையும்நல்ல
கனமான துருசதுவை நீற்றிச்செய்வார்
கோத்துமே அண்டரண்டத் தங்கவேண்டிக்
குற்றமற யிருப்பார்கள் கொள்ளைதானே. 114

கொள்ளையாம் மண்ணோடு மரங்களெல்லாம்
குணமாகத் தொட்டவுடன் பழுத்துப்போகும்
பிள்ளையாங் காவேரி தன்னில்வாதம்
பிரியமாய் வெள்ளிரவி தானுருக்கித்
துள்ளவே யதிற்கொடுத்துச் செட்டிகையில்
துணிகரமாய் விற்பனைகள் செய்வார்பாரு
வெள்ளையா யாகோபு சொன்னநீதி
வேதாந்தி கண்டுமிக விரும்புவாரே. 115

விரும்புவா ருலகத்திற் கருமிதானும்
விருப்பமாய்ச் செய்வார்கள் விட்டுப்போட்டு
திரும்புவார் ஏறுழுவார் பிரட்டுச்செய்வார்
திட்டமாய் வியாபாரம் மிகவுஞ்செய்வார்
அரும்புவார் வட்டிக்குக் கொடுத்துநாளை
அடைவாகப் போக்கியே திரிவாரப்பா
நரும்பூவுங் கண்டரவி சேர்த்துச்சத்து
நலமாகச் செம்பெடுக்க மாட்டார்தானே. 116

## தங்கச்செம்பு

மாட்டவே யின்னமொரு களங்குகேளு
மார்க்கத்தைக் கண்டறிந்த வாதிக்குத்தான்
மூட்டவே கண்டருடன் சத்திசேர்த்து
மூட்டியறை பாணியினாற் பின்புமூன்று
ஆட்டவே சாமமது வில்லைதட்டி
ஆத்திரம தாகவேநீ புடத்தைப்போடு
நாட்டவே கரியாகு மென்றுசொன்னார்
நலமாக யெடுத்தபின்பு நாட்டங்கேளே. 117

நாட்டமென்ன கொடியோனைப் பாதிசேர்த்து
நலமாகத் தானரைக்கப் பழச்சாற்றாலே
வாட்டமென்ன வில்லைகட்டிக் கதிரில்வைத்து
வடிவாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
பாட்டமென்ன கரியதுவுஞ் சிவந்துபோகும்
பதிவாகச் சிவப்பதுவை யெடுத்துக்கொண்டு
கூட்டமென்ன யேமமதை யுருக்கிநேரே
குணமாகச் செந்தூரங் கொடுத்திடாயே. 118

கொடுத்திடவே தங்கமது செம்புமாகும்
கூக்குரல்நீ போடாமற் கெந்திவீரம்
அடுத்திடவே மடத்தையுமே கூடச்சேர்த்து
அரைப்பங்கு பூசியே புடத்தைப்போடு
தடுத்திடவே நொறுங்குமது கரிபோலாகும்
தன்மையாய்க் கொடியோனைப் பாதிசேர்த்து
அடுத்திடவே பழச்சாற்றி லரைத்துவில்லை
அடைவாகச் செய்திடுவாய் அனந்தம்போக்கே. 119

அனந்தமென்ன செந்தூர மாகும்பாரு
    ஆதியாய் மதிதனிலே யெட்டுக்கொன்று
கனந்தமாய்க் கொடுத்துருக்கிப் பார்க்கும்போது
    காரணமா யெட்டரைதான் காணும்பாரு
தனந்துமே பணவிடைதான் பாலிலுண்டு
    சதாகோடி காலமெல்லா மிருப்பார்கண்டீர்
வனந்தனிலே சருகரித்துக் காலந்தள்ளு
    வடிவான யாகோபு வகைசொன்னாரே. 120

சொன்னயமா மிந்தமுந் நூறுதன்னிற்
    சொல்லரிய வாதம்வருங் கண்டுதேறு
நன்னயமா யிகபரந்தா னிரண்டுமூன்று
    நாதாந்த சாரமுடன் காயசித்தி
வின்னமில்லா மற்றானே வந்துகூடும்
    விருதாவாய்ச் சாஸ்திரத்தை யறியாமூடர்
இன்னிலத்தி லவன்பேச்சைக் கேட்டுச்சுட்டு
    யிதமாக மாயையதி லழுந்துவாரே. 121

## கல்லுப்பு வெங்காரக்கட்டு

அழுந்தாமல் வண்டிலது பலமும்பத்து
    அடைவாகக் கட்டியா யெடுத்துக்கொண்டு
தழுந்தாமற் கடல்நுரையை வூதநீறும்
    தாக்கியே அதின்பேரிற் பெரியதாய்க்கட்டி
வழுந்தவே உப்பதுவும் பலமும்பத்து
    வகையாக உருக்கியே அதினினுள்ளே
கழுந்தவே அழுத்தியே பிடிக்கவென்று
    கருணைவைத்து யாகோபு கருதினாரே. 122

கருதினா ருப்பதுவுங் கசிவுமத்து
    கரியில்நின்று ஆடுவது கனகமாக
உருதியாய்க் குகையிலிட்டு உருக்கும்போது
    உணவாக நாலுக்கு ஒன்றுதங்கம்
அறுதியாய்த் தங்கமிடை நாகம்போட்டு
    அன்பாகக் களங்காகும் நூற்றுக்கொன்று
பருதியாய் ரவிபழுக்கும் நேர்மையாகும்
    பகுத்தறிந்து யாகோபு சொன்னார்தானே. 123

சொன்னதோ ருப்பைமுந்திக் கட்டப்பாரு
சூட்சமாய் வாதமது யேவல்செய்யும்
நன்னயமா யுப்பைப்போ லொன்றுமில்லை
நாட்டிலே சொல்லாதே நலமதாகும்
இன்னிலத்திற் கல்லுப்பில் நிரம்பவேதை
இனிதான சிவசொத்து யெய்தும்பாரு
கண்ணல்போ லிருக்குமந்தக் கல்லுப்புத்தான்
காட்டினார் யாகோபு கண்டார்தானே. 124

கண்டார்கள் சாஸ்திரத்தின் முறைபாடெல்லாம்
கனிவாகக் காணாதார் முட்டாப்பேய்கள்
தொண்டாகப் படித்தவரைத் தொண்டுசெய்வார்
சுருதிதனை ஆராய்ந்தோர் சொல்லமாட்டார்
கண்டாலும் பேசார்க ளின்னங்கேளு
கனிவாக படியாதார் மிகவேசொல்வார்
பண்டுபழங் கதைசொல்வார் நம்பவேண்டாம்
பார்தனிலே செய்தாக்கால் பலனுமாமே. 125

பலனாகச் சொல்லுகிறேன் சாஸ்திரத்தைப்
பதிவாகப் படித்தாக்காற் பத்தியாகும்
பெலமான செம்பாகும் செம்புதன்னைப்
பேத்திட்டுத் தங்கமதைச் சேர்த்துநீயும்
வலமாக நாரும்பூ போட்டுக்கொள்ளு
வடிவாக யெழும்பிடவே வர்ணமெல்லாம்
கலனில்லாத் தங்கமாம் பெரியோர்சொன்னார்
காதலா யாகோபு கருதினாரே. 126

## வெடியுப்புத் திராவகம்

கருதியே யின்னமோ ருப்புச்சுண்ணம்
கனிவாக வேதையாங் கண்டுபாரு
வருதியே வடமதுவும் பலமும்பத்து
வகையான வளையமது இருபத்தஞ்சு
பருதியே கல்லுரலி லிடித்துப்போடு
பதிவான வாலையென்ற சட்டிமூடி
சுருதியே முன்னீரைத் தள்ளிப்போடு
சுத்தமாய்க் கடைநீரைப் பிடித்துக்கொள்ளே. 127

பிடித்துமே சேரிரண்டு அதிலேதானும்
பெலமான சூதமது பலமுங்காலாம்
வடித்துமே அதிலிட்டு ரவியில்வைக்க
வாகாகக் கரைந்துமே புகைநீரோடே
குடித்துமே நீராகும் நீரைத்தானும்
குணமாக வைத்துமே குருக்குவேதை
துடித்துமே யாகோபுச் சொன்னேன்பாரு
துணையான திந்நூலைத் தோய்ந்துதேறே. 128

தோய்ந்துபார் கருவேது வென்றாற்கேளு
தொல்லுலகிற் பாகமதைக் கண்டுகொள்ள
ஆய்ந்துபார் சரக்குஅறு பத்தினாலும்
அடைவாக வட்டிக்கு வைத்தாப்போலே
சாய்ந்துமே கட்டாகும் மெழுகுமாகும்
சரியான செந்தூர மிதிலேயாகும்
பாய்ந்துமே யாகோபு கண்டநீதி
பகுத்தறிந்து பார்த்தவர்க்குப்பதஞ் சொன்னேனே. 129

பதமாம்பா ஷாணமுப் பத்திரண்டு
பலமாகச் சுத்திசெய்து புகைநீர்தன்னை
அதமாகச் சுருக்கிடவே யெல்லாங்கட்டும்
ஆதியாஞ் சூதமுதல் வெள்ளைதானும்
விதமாகக் கட்டியே வேதையாகும்
வித்தகமாய்த் தொட்டதெல்லாஞ் சித்தியாகும்
சதமாக யாகோபு சொன்னநீதி
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் தாக்கிப்பாரே. 130

தாக்கிப்பார் லிங்கமுதல் வெள்ளைதானுந்
தடையறவே குதிரைப்பல் சூதந்தானும்
வாக்கிப்பார் செம்பினுட தொட்டியோடு
வகையான கரியோட்டில் ஊதிநல்லாய்ப்
பாக்கியமாய்ச் சுருக்கிடவே கட்டிப்போகும்
பதிவான கரியில்நின்று ஆடிநிற்கும்
தாக்கியே நவலோகந் தன்னில்வேதை
தப்பாமல் வாதிசெய்யுந் தொழிலுமாமே. 131

தொழிலாகத் திராவகத்தை வைத்துக்கொண்டு
துணையாகச் சரக்கையெல்லாந் துடியாய்க்கட்டும்
செழிப்பாக வுலகத்தி லிருந்துபாரு
சேதியெல்லாங் கேட்டுமே செவியில்வாங்கு
பழிப்பாக ஒருவகையும் பழிக்கவேண்டாம்
பழித்தாக்கா லுன்னையவன் கொல்வான்பாரு
துளிப்பாயும் வழியறிந்து நூலைச்சொன்னார்
சூட்டினவர் பதினெட்டுச் சித்தர்தாமே. 132

சித்தராய்ப் போகவென்றாற் புகைநீர்தன்னைச்
சீர்பெறவே தான்வைத்துத் துணையாய்க்கொள்ளு
பத்தரா யிருக்கவென்றாற் குருவின்பாதம்
பத்தியே யவர்பாதம் பத்திக்கொள்ளு
முத்தரா யிருக்கவென்றால் மூலம்பாரு
முத்திபெற கேசரியை முயன்றுபாரு
வித்தகராய்ப் போகவென்றாற் கயத்தைப்பாரு
விருதாவைப் பாராதே முத்திபாரே. 133

பாரேநீ கைபாகம் வந்துதென்றாற்
பதிவான ரசவாதம் பாரிலோர்க்கு
ஏரேநீ கட்டியதை யுமுதால்நன்மை
ஏரில்லா னருத்தடித்த கதைபோற்சொல்வார்
வாரேநீ குளிகைக்குப் போட்டிருக்கில்
வகையாக நடத்தைசெய்தால் வகையாம்பாரு
தாரேநீ யாகோபு சொன்னநீதி
சஞ்சலமாய்க் கேட்டாக்கால் சரிவாராதே. 134

சரிவாரா தொருபொருளை நம்பவேண்டாம்
சரியான வாதமது நம்பித்தேறு
பரிவாராப் படிப்பைத்தான் நம்பினாக்கால்
பதிநாலு லோகமெல்லாம் ஆளுவாய்நீ
கரிபோலே யிருந்திடுவீர் தேசந்தன்னிற்
கருத்ததுவைக் கைப்பிடித்து வாழலாகும்
பிரியமா யிருந்தாலே புத்திவேணும்
பிரட்டில்லை யாகோபு பேசினேனே. 135

பேசியே சிறிதுபேர் வாதஞ்செய்வார்
பிரட்டியே பணங்களைத்தான் வாங்கிக்கொண்டு
ஆசியே ஓடியே போவாரப்பா
அசடர்கள்தான் செய்திடுவா ரிந்தவித்தை
பாசிதனிற் பழங்கல்லு யெறிந்தார்போலப்
பதிவாக விலகியே வந்துகூடும்
ஏசியே திரிவார்கள் பாவிமார்கள்
இதமான யாகோபு யிதஞ்சொன்னேனே. 136

இதமான புத்திமன மாங்காரந்தான்
இன்பமா யிவ்விடத்திற் புத்திகெட்டு
அதமான படியில்லா மனிதர்சொல்லை
அழிம்பாகக் கேட்டுமே அநேகஞ்சுட்டு
விதமான கதைகார ணங்கள்பேசி
வெகுகோடி பணமெல்லாஞ் சுட்டுக்கெட்டார்
குதமாகச் சொல்லிடுவார் நம்பவேண்டாம்
குறியான யாகோபு குறிசொன்னேனே. 137

### சவுக்காரச் சுண்ணம்

சொன்னதொரு சவுக்காரச் சுண்ணங்கேளு
சொற்பெரிய குத்துக்கல் தன்னைவாங்கு
பன்னதொரு சேர்நாலு நிறுத்துக்கொண்டு
பக்குவமாய்க் கற்சட்டி தன்னிலிட்டு
தன்னயமாய்ப் பாணியது சேருயெட்டு
நலமாகச் சுக்காநீர் சேருநாலு
பின்னமில் லாமலேதான் கலக்குமூன்று
பிரபலமாய் வடிகட்டிக் காய்ச்சிடாயே. 138

காய்ச்சிடவே அடியில்நின்று உறைத்துஉப்பைக்
கணக்காக யிருந்திடுங்காண் அதைவழித்துப்
பாச்சிடவே குழிக்கல்வந் தன்னிலிட்டு
பக்குவமா யரைத்துவில்லை காயவைத்து
வாய்ச்சிடவே புடம்போட்டு யெடுத்துப்பாரு
வகையாகத் தந்தம்போ லுப்புமாகும்
நீச்சிடவே யிந்தஉப்புக் காரமாச்சு
நிலையான உப்பினுட பெருமைகேளே. 139

பெருமையா யுப்பதுவும் பலம்நிறுத்துப்
பீங்கானாங் கல்வத்தில் மிகவேவைத்து
அருமையா யரைத்துமுன் துருசுக்கிட்டு
அடைவாகக் காடையென்ற புடத்தில்நீறும்
கருமையாத் துருசுநீர் தன்னாற்கேளு
கடமான உபரசங்க ளெல்லாம்நீறும்
வருமையா யித்துருசு தன்னால்யார்க்கும்
வகையான குளிகைகட்டி வாழ்ந்தார்தாமே. 140

வாழ்ந்திடவே நீலனது நீறவேணும்
வாகான காயசித்தி வாதசித்தி
தாழ்ந்திடவே போகாமற் சுண்ணந்தன்னைத்
தாட்டிகமாய் வைத்துமே யிரதங்கூட்டி
வீழ்ந்திடவே உபரசங்கள் சத்தையூட்டி
விருப்பமாய் முனிசித்தர் வாதம்பார்த்தார்
ஆழ்ந்திடவே கெவுனத்தி லிருப்பாரப்பா
அடைவான யாகோபு அறைந்திட்டாரே. 141

அறைந்திட்ட சவுக்காரச் சுண்ணம்பொய்யோ
அன்பான குளிகைபொய்யோ அருளால்நோக்கி
பறைந்திட்ட துருசுனுட சுண்ணம்பொய்யோ
பாதையதில் நிரம்பவுண்டு பிரிவுமெத்த
உரைந்திட்ட செம்பதுவை யெடுத்தோர்பொய்யோ
உண்மையாய் நடவாதார்க் கெல்லாம்பொய்யோ
குறைந்திட்ட வாதங்கள் பார்த்துநானும்
கூறினேன் யாகோபு குணமாய்த்தானே. 142

குணமாக நபிமார்கள் பெருமைதன்னைக்
கூறினேன் முந்நூறிற் குணமதாக
மணமாக அவரவர்கள் செய்யுமார்க்கம்
வகைசொன்னேன் மயக்கமெல்லாந் தீரச்சொன்னேன்
தனமாக யெப்பொருளுந் தேர்ந்துபார்த்துத்
தாட்டிகமாய் ஒருவேளை செய்துகொண்டால்
கனமாகயெல்லாமே சித்தியாகும்
கருத்துணர்ந்து யாகோபு கருதினாரே. 143

## வங்கச் செந்தூரம்

கருதினேன் கருநாக வித்தைதன்னைக்
காட்டுகிறேன் யிதுலெகுவு முன்னேபாரு
வருதினேன் காரீயம் பலமும்பத்து
வகையாகக் குமரிச்சா ரதிலுருக்கி
உருதியா யிருபத்து ஒன்றுதானும்
உத்துமே சாய்த்தபின்பு சொல்லக்கேளு
கருதியா யாகோபு வங்கந்தன்னைத்
தாஷ்டிகமா யுலகதனிற் சொன்னவாறே. 144

சொன்னதொரு வடமதுவும் பலமும்பத்து
சொற்பெரிய வளையமது ஐயைந்தாகும்
நன்னயமா யிரண்டுமொன்றா யிடிக்கத்தூளாம்
நாடியே வாலையிட்டு அடுப்பிலேற்றி
கன்னல்போ லெரிக்கவே புகைநீர்வந்து
கணக்காக முன்னீரைக் கருதித்தள்ளி
இன்னிலத்திற் கடைநீரைப் பிடித்துக்கொள்ளு
இன்பமுற்று யாகோபு இதஞ்சொன்னாரே. 145

இதமாக முன்வங்கந் தன்னிலிட்டு
இன்பமா யிழுத்தரைத்து வில்லைதட்டி
அதமாகக் கதிரில்வைத்துப் புடமும்போட்டு
அன்பாக யெடுத்திடவே சிவந்துநிற்கும்
குதமாக மாண்டுதடா வங்கந்தானும்
குத்தமறும் யெடுத்துநீ கூறக்கேளு
விதமாக யாகோபு சொன்னநீதி
விருப்பமாய்க் கைபாக வரிசைபாரே. 146

வரிசையாய்த் தாளகமும் பலமும்பத்து
வைத்துயெரி சுண்ணத்தில் இருசாமந்தான்
புரிசையாய்ச் சிவந்துநிற்கும் யெடுத்துக்கொண்டு
போக்கோடே முன்வந்த செந்தூரத்தில்
பரிசையாய் நாலிலொன்று சேர்த்துக்கொண்டு
பதிவாகப் புகைநீரா லாட்டிக்கொண்டு
கரிசையாய் வில்லைகட்டி யாகோபுந்தான்
கனிந்துமே புடம்போடச் சொன்னவாறே. 147

புடம்போட்டு யெடுத்திடவே செந்தூரிக்கும்
புகலரிய செந்தூரம் நூற்றுக்கொன்று
தடம்போட்டு ரவியுருக்கி யதிலேதாக்கு
தாட்டிகமாய் ரவிபழுத்த தன்மைகேளு
கடம்போடு கைவரிசை யாகச்செய்து
கருத்தாலே பாகமெல்லாங் கண்டுகொள்ளு
விடம்போலப் புத்திவர வேணும்பாரு
வேதாந்த யாகோபு விளம்பினாரே. 148

விளம்பினார் குருமுனியும் மானிடர்க்கு
விருப்பமாய்ப் புத்திசொன்னார் வாதஞ்சொன்னார்
தளம்பினா ரிதையறிந்து பெரியோர்தானும்
தாட்டிகமாய்ச் செய்வார்கள் தடையோயில்லை
குளம்பியே எண்ணமுற்றுத் திரியவேண்டாம்
கூக்குரலாய்ச் செய்யாதே கோடிபாவம்
துளம்பியே சொல்வார்கள் புத்தியுள்ளோர்
துப்பறவா யறிந்த யாகோபுதானே. 149

தானென்ற செந்தூரம் பணம்வீதம்
தாட்டிகமாய் மண்டலந்தா னுண்டுதேறு
வானென்ற நரைதிரைக ளற்றுப்போகும்
வலுவாகும் வங்கத்துக் குறுதிமெத்த
கானென்ற கைப்போடு புளிப்புத்தள்ளு
காரியமாய்ப் பார்த்துநீ கருதிவைக்க
ஏனென்ற யாகோபு சொன்னாரித்தை
இதமான புத்தியுள்ளோ ரறிந்தவாரே. 150

## காரீயச்செம்பு

அறிந்திடவே காரீயச் செம்புகேளு
அடைவாகக் காரீயம் பலமும்நாலு
குறிந்திடவே ரவியதுவும் பலமும்நாலு
கூட்டியே உருக்கிமெள்ளக் குமரிப்பாலில்
பறிந்திடவே உருக்கிச்சாய் சுத்தியாகும்
பதிவாக யெடுத்துமே குகையிலிட்டு
வறிந்திடவே உருக்கென்று யாகோப்சொன்னார்
வண்மையிது நிசமாகும் வழுத்திடாயே. 151

வழுத்திடவே தேவியது பலமும்பத்து
வகையான அரசனது பலமும்பத்து
தழுத்திடவே யிரண்டுஞ்செங் கீரைச்சாறு
தன்னைவிட்டு அரைத்துமே குன்றிபோலே
உழுத்திடவே காயவைத்து முன்னேதானும்
உகந்துநின்று வங்கத்திற் கிராசம்போடக்
கழுத்தியே வாங்கியது கரியுமாகும்
காட்டினார் யாகோபு கணக்காய்த்தானே. 152

கணக்காக யெடுத்துமே கல்வத்திட்டு
கண்டுஅரை பாதிசேர் கொடியோன்றன்னை
பிணக்காக அரைத்துவில்லை கதிரில்வைத்து
பின்புதான் புடம்போடக் கக்குஞ்செம்பு
இணக்காக உருக்கிடவே ரவியுமாகும்
இன்பமாய் ரவியெடுத்து உருக்கிக்கொண்டு
வணக்காகத் தங்கமதை யிடையேசேரு
வளமைசொன்னார் யாகோபு பலமாய்த்தானே. 153

பலனாக யிதைவைத்துப் பிழைத்துக்கொள்ளு
பக்குவமாய்ப் பின்னேதான் பண்டிதத்தைப்
புலனாகப் பார்த்துக்கோ அறிந்துநன்றாய்
புகழாதி யுலகத்தி லிருந்துகொள்ளு
பெலனாகப் ஒருவருடன் பேசவேண்டாம்
பேசினாப் பிழைவருங்காண் மனமகற்றும்
வலனாகப் பாராதே மவுனம்பாரு
வழுத்தினார் யாகோபு வரிசைதானே. 154

வரிசையா யுருக்கியே தகடடித்து
வண்மைபெறச் சத்திசிவ மதிலேபூசு
உரிசையாய்ப் புடம்நாலு போட்டுத்தீரு
உத்துமே செந்தூரம் முருக்கம்பூப்போற்
கரிசையா யிருந்துவிடும் மதியிலிட்டுக்
கருவாக ஒன்றிட்டு உருக்கிப்பாரு
பரிசையா யேமமது பத்துமாகும்
பார்த்தறிந்து கருத்தோடு பலன்சொன்னாரே. 155

கருத்திலே மெய்யாக வாதந்தன்னைக்
கண்டுயெடு யெடுத்தபின்பு கருத்திற்கொள்ளு
உருத்தாக ஏழைபோ லிருந்துவாழு
உத்ததோ ருறவாகும் உறுதியாகும்
பெருத்தாக அலையாதே பின்புகேளு
பெரியோராய்ச் சமாதிதனிற் புக்கலாகும்
வருத்தாமற் றிரியலாம் வாழ்வுண்டாகும்
வையகத்தில் யாகோபு வகைசொன்னாரே. 156

வகையான ரசவாதம் எளிதோஅல்ல
வந்திட்டாற் குபேரனவன் வாராவிட்டால்
மிகையான மிடியனென்று சொல்லுவார்கள்
மென்மேலும் பழிப்பார்கள் தோசியப்பா
பகையாகப் பேசிடுவார் உலகமாடு
பார்க்கறியா நிர்மூடர் பழிகாரர்தான்
திகையாகத் திகைப்பார்கள் உலகவாதி
தேத்தினார் யாகோபு திறமைதானே. 157

திறமான பொருளறிய வேணுமென்றால்
திட்டமாக யிந்நூலோ டெந்நூலெல்லாம்
நிறமாகும் அடிதலையும் நுனியுமட்டும்
நீயாராய்ந்து யேறியே வழியைப்பாரு
குறமான குணமெல்லாம் கோடிவித்தை
குபேரனைப்போ லாவானவாங் குறித்தசிந்தை
துறவாகு மிந்தமுந்நூ றதனைப்பாரு
துப்பறவா யாகோபு துலங்கச்சொன்னார். 158

## வெள்ளிக்களங்கு

சொன்னதோர் களங்குவகை யின்னங்கேளு
சுத்தமுள்ள வெள்ளியது பத்துதன்னை
நன்னயமா யுருக்கிரண்டு செம்புசேர்த்து
நலமாக உருக்கினபின் நாட்டக்கேளு
கன்னலாய்த் தகடடித்துப் பின்புதானும்
காரணமாய்ச் சத்திரச பற்பஞ்சேர்த்து
இன்னிலத்திற் பழச்சாறு சாமமாட்ட
இதமாக யாகோபு சொன்னதாமே. 159

சொன்னதொரு பழச்சாறு விட்டரைத்துச்
செழுமைபெற நொறுங்குமட்டும் புடமுமிட்டு
நன்னயமாய்ப் பார்த்தவுடன் கரிபோற்காணும்
நயமான கரிக்குநிகர் கொடியோனைத்தான்
பன்னகமாய்ச் சேர்த்துஅரை முன்சாற்றாலே
பதியஅரை புடம்போடச் சிவப்புமாகும்
இன்னிலத்தில் யாகோபு சொன்னநேர்மை
இதமாகச் சொல்லிவிட்டே னின்னங்கேளே. 160

இதமாக வண்டிலது கொஞ்சமிட்டு
இன்பமுட னேயுருக்கப் பொன்னாய்நிற்கும்
பதமாக யேமமது ஒன்றுயிட்டுப்
பத்தியமா யுருக்கிடவே தங்கமாகும்
மதமான தங்கத்தை வித்துநீயும்
மானிலத்திற் செலவுமே செய்துகொண்டு
நிதமான ஞானத்தைப் பார்த்துத்தேறு
நிர்ணயமா யாகோபு செப்பினாரே. 161

செப்பினதோ ரப்புஉப்பும் நேராய்க்கூட்டிச்
செயலான தங்கமதாய் நிலைத்துநின்று
ஒப்பினதோர் பெண்ணாணுஞ் சேர்ந்துதானும்
ஓவியமா யுருவாச்சவ் வுண்மைபோலே
நப்பினதோர் ரசவாத மிதுவேயாகும்
நானிலத்தில் வாதமிதை நாட்டிப்பாரு
தப்பிதம்போ காதுயா கோபுசொன்னார்
தாஷ்டிகமாய் வரிசையுடன் தனித்துப்பாரே. 162

வரிசைபார் அயச்செம்பு கெந்திச்செம்பு
வலுவாக வைத்துமே பிழைத்துத்தேறு
உரிசைபார் ரசகுளிகை பின்னேபாரு
உத்துமே பொருளெல்லாம் வந்துகூடும்
பிரிசையா யிந்நூலை யுடைத்துப்பாரு
பிரபலமாய்க் காயசித்தி பண்ணிக்கொண்டு
வரிசைபார் மார்க்கத்தின் வழியேசெல்ல
வகையான தொழிலெல்லாம் மார்க்கமாமே. 163

மார்க்கமாய் மக்காவின் தேசந்தன்னில்
வழியோடே சென்றறிந்து வாதந்தன்னை
ஏர்க்கவே நானுணர்ந்து யித்தேசத்தில்
எளிதாக வைத்தியமும் தெளிவாய்ச்சொன்னேன்
காக்கவே கைபாக வரிசைகண்டு
காரியமாய்ச் செய்தாக்கா லுறுதியாகும்
ஊக்கமா யாகோபு சொன்னநீதி
உற்றுணர்ந்து பார்த்தாக்காற் சித்தியாமே. 164

சித்தியது வேணுமென்றாற் களங்குபாரு
சிறப்பாகப் பலனாகும் சிறியோர்க்கெல்லாம்
புத்தியா யிருக்கவென்றாற் கெந்திச்செம்பைப்
பிரியமுடன் பார்த்துமே புகழ்ந்துநீயும்
நத்தியே வித்துநீ செலவுசெய்து
நன்னயமாய்ப் பல்லோர்க்குச் சொரூபங்காட்டு
முத்தியாம் யாகோபு மொழிந்தாரித்தை
மூவுலகும் மெச்சுமிது முனிந்துகாணே. 165

முனிந்துபார் முக்கியமாய் நூலைப்பாரு
முற்றுணர்ந்த யோகசித்தர் மொழிதப்பாது
நனிந்துமே பொருளாகும் நீதியாகும்
சரியான பொருளறிந்தால் வாதியாகும்
கனிந்துமே முக்காலுங் கண்டுபாரே
கணக்காக ஒன்றுவரும் கருத்திற்றங்கம்
பினிந்துபார் ரசவாதம் யேவல்கேட்கும்
பிரபலமா யாகோபு பேசினாரே. 166

### அயக்களங்கு

பேசிடவே யின்னமொரு செம்புகேளு
பிரபலமாய்ச் சொல்லுகிறேன் பெருமையாக
வாசிடவே அரைபொடியோ பலமும்பத்து
வகையாகப் பழச்சாற்றி லூறவைத்து
மூசிடவே மூன்றுநா ளூறவைத்து
முக்கியமா யெடுத்துப்பின் மூர்க்கங்கேளு
ஆசியே அரைபொடிக்கு நீலன்பத்து
அடைவாக யாகோபு அறைந்ததாமே. 167

அறைத்திடவே கெந்தியது பலமும்பத்து
அடைவான வீரமது காலுமிட்டு
அரைத்திடவே எலுமிச்சம் பழச்சாற்றாலே
அரைத்துமே வண்மையாய் வில்லைகட்டி
கரைத்திடவே கதிரில்வைத்து வில்லைமேலே
கனிந்துமே சுண்ணாம்பு உப்புநேரே
உரைத்துமே அரைத்துமெள்ளக் கவசங்கட்ட
உற்றுணர்ந்து யாகோபு உரைத்தார்தானே. 168

உரைத்தமொழி நிசமாகும் உண்மைமெத்த
உறுதியா யெடுத்துநீ யுணர்வாய்த்தானும்
பரைத்திடவே புதுக்குகையி லிட்டுருக்கப்
பளிச்சென்று சத்தாகும் வெள்ளிபோலே
கரைத்திடவே சத்தில்நிற்கும் எண்ணெய்வாங்கக்
கனிவாக யெழுநூற்றிற் கருதிச்சொன்னேன்
வரைத்ததிந்த நூலிரண்டும் ஒத்துப்பார்த்து
வகையாக யாகோபு வழுத்தினாரே. 169

வழுத்திடவே சத்துநின்ற நிறைக்குப்பாதி
வகையான மாடனைத்தான் பாதிசேர்த்து
தழுத்திடவே அரைத்திட்டு முன்னீராலே
தாக்கிவில்லை கதிரில்வைத்துப் பின்புகேளு
உழுத்திடவே பெரியபுடம் போட்டெடுக்க
உறுதியாம் செகப்புமெத்தச் செம்புமாகும்
பழுத்திடுமே லோகமுதல் எல்லாம்நீறும்
பாதையிது யாகோபு பயின்றார்தானே. 170

தானென்ற செம்பெடுத்து உருக்கும்போது
தலமாக நாலிலொன்று தங்கஞ்சேரு
கானென்ற தங்கமிடை நாகஞ்சேரு
கருத்தாக நாகமிடை யீயஞ்சேரு
பானென்று உருக்கியே புட்டாய்ப்பண்ணி
பதிவாக உருக்கியதோ ரிடைக்குப்பாதி
நானென்ற நாத்தமது சேர்த்துநீயும்
நலமாக யாகோபு அரையென்றாரே. 171

அரைக்கையிலே சிவன்விந்து இடையேசேரு
அன்பாகப் பொற்றலையின் சாற்றினாலே
பரைக்கையிலே பெரியபுடம் போட்டுவாங்கு
பதிவாகக் கருத்ததுவும் பாரிற்றோனும்
உரைக்கையிலே கொடியோனைக் கூடச்சேர்த்து
உறுதியா யரைத்துவில்லை காயவைத்துக்
குறைக்கவே புடம்போடச் செம்புமாகும்
குற்றமில்லை யாகோபு சொன்னவாறே. 172

சொன்னதொரு செந்தூரம் நவலோகத்திற்
சுருதிமுறை நூற்றுக்கொன் றிட்டாயானால்
நன்னயமாய் மாத்தென்ன பத்துமாகும்
நான்கண்ட படிசொன்னேன் நயந்துபாரு
இன்னிலத்தில் ரசவாதி நூலில்லாது
இதமாக வாதத்தை மிகவேசுட்டு
உன்னிக்கெட் டேனென்று சொல்லுவார்கள்
உற்றுணர்ந்த யாகோபு மொழிகள்தானே. 173

மொழிகள்தான் செந்தூரம் பணமவ்வீதம்
முடிவான நோய்தனக்கு உடனேயீய
அழிவான நோய்களெல்லாம் அகன்றுபோகும்
ஆதியாம் உலகத்தோர் பிழைக்கவென்று
சுழிவாக யெல்லார்க்குஞ் சொன்னநீதி
தோய்ந்திடுவான் புத்தியுன்னிச் சொல்வேன்யானும்
கழிவான அழிம்புள்ளோர்க் கில்லையில்லை
கருதினார் யாகோபு கருணைதானே. 174

கருணையாய் மக்காவின் தேசந்தன்னிற்
காரியமாய் குளிகையிலிட்டு நகரிற்சென்றேன்
அருணையாய் நான்போகும் வேளைதன்னில்
அடைவாக வேதமது மூன்றுமாகும்
தருணையாஞ் சிறிதுநாள் சென்றபின்பு
தடையற்ற முகம்மதுவும் வந்துகூடிப்
பருணையாம் வேதங்கள் கூட்டச்சொன்னார்
பதிவாகக் கண்டுயா கோபுசொன்னேன். 175

சொன்னதொரு முந்நூறிற் போக்குமெத்தச்
சொல்லரிய எழுநூற்றில் வாதமெத்த
நன்னயமா யிவ்விரண்டும் ஒத்துப்பார்த்து
நல்லபஞ்ச மித்திரமும் முந்நூறோடு
இன்னதொரு கைபாக வரிசைபாரு
எடுத்துமே செய்திட்டால் பலனுமாகும்
கன்னல்போற் கற்றுணர்ந்த பெரியோர்தன்னைக்
கார்த்தாக்கால் எல்லாமுங் கருதிப்பாரே. 176

கருதியே வடமொழியைப் பார்த்துதேறு
கனிவாக நால்வேத மாறுசாஸ்த்திரம்
சுருதியெல்லாம் பார்த்துணர்ந்த யாகோப்பென்பேர்
சுகுணமுள்ள பெரியோர்க ளாடுமாட்டை
பருதிமதி யுலகத்திற் சொன்னேனப்பா
பார்த்துணர்ந்து அறிந்துமே பகுத்துப்பார்த்து
வருதியா யட்டவணை கொண்டுயானும்
வகையறிந்து யாகோபு வழுத்தினேனே. 177

வழுத்தினேன் களங்குமுதற் செந்தூரங்கள்
வகையான பற்பமுதல் லேகியங்கள்
தழுத்திடவே செம்பெடுக்கும் மார்க்கமோடு
தடையறவே உலகத்திற் சொன்னேனப்பா
இழுத்திடவே செய்பாக மீய்ந்திட்டாக்கால்
இணையில்லாப் பொய்யாகும் யிதமாம்பாரு
கொழுத்தநரி போலேநீ திரியாதென்றார்
கொட்டினார் யாகோபு குணமதாமே. 178

குணமாகக் காயசித்தி யோகசித்தி
கூறுமெழு நூறுமுந் நூறுதன்னிற்
பணமாகப் பொருளெல்லாம் பகுத்துச்சொன்னேன்
பாதையிதில் வெகுபோக்குப் பரிந்துபாரு
உணவாகச் செய்தாக்கா லெல்லாமாகும்
உற்றுணர்ந்தால் உறுதியாம் உலகத்தோர்க்கு
கணமாகப் பொருளெல்லாஞ் சோதித்தாக்கால்
கருமமது யில்லையப்பா கருதிப்பாரே. 179

கருதியே துருசினுட சுண்ணந்தன்னைக்
காட்டினேன் எழுநூற்றிற் கிருபைவைத்து
பருதியே முந்நூறிற் சொல்லிப்போட்டேன்
பலனாகு மென்வசனம் பொய்போகாது
உறுதியாய்ப் பார்த்துமே செய்துகொண்டால்
உண்மையா யெல்லாமுஞ் சித்தியாகும்
வருதியா யெல்லாமுஞ் சோதித்தேறி
வழுத்தினேன் எழுநூறு வகையாய்த்தானே. 180

வகையாக களங்கத்தை முன்னேபண்ணு
வண்மைபெறச் செந்தூரம் பின்னேபண்ணு
நகையாம லதன்பின்னே துருசுச்சுண்ணம்
நாட்டினால் ரசங்கட்டி நன்மையாகும்
பகையாகச் சொல்லவில்லை பாருள்ளோர்க்குப்
பகுத்துணர்ந்த பாலகர்க்கும் பரிவாய்மெத்தத்
தகையாக நூலெல்லாந் தன்மைபார்த்து
தாக்கிடவே யெல்லாமுஞ் சித்தியாமே, 181

சித்தியே யாகவென்றாற் கல்லுப்பைத்தான்
சித்திபெறப் பார்த்துமே உழைத்துக்கூடு
முத்தியா யழுக்கெடுத்த எண்ணெய்போலே
முழுதுமே பார்த்துணர்ந்து மொழிகள்கேட்டு
நத்தியே திரிந்தலைந்து போகாமற்றான்
நலமாக எந்தனுட நூலைப்பாரு
கத்தியே யிந்நூலைத் தேர்ந்துபார்த்துக்
கசடத்து யாகோபு கருதினாரே. 182

கருதியே மனந்தன்னை யொக்கப்பண்ணி
கற்றுணர்ந்த வல்லோரைக் கேட்டடுத்து
திருதியாம் உன்மனது திட்டமாகும்
திடமாகப் பாகமெல்லாங் கண்டுகொள்ளு
வருதியாம் வல்லமையாய்ப் பார்த்துத்தேறு
வடிவாக அழும்புள்ள புத்திவேண்டாம்
நிருதியா யுன்மூளை செலுத்திப்பாரு
நிச்சயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. 183

## யாகோபு

நிசமாக யின்னமொரு களங்குகேளு
 நித்தியமா முத்தரென்ற மேனிச்சாற்றில்
வசமாக அரைத்துவில்லை காயவைத்து
 வழியோடே புடம்போடச் சிவக்குமாம்பூ
தசமாக யெடுத்துமே கல்வத்திட்டு
 தடையறவே இடைக்கிடைதான் தங்கமிட்டு
பிசகாம லரைத்துமே வில்லைகட்டு
 பேசினார் யாகோபு பெருமைதானே. 184

### களங்கு செந்தூரிக்க

பெருமைதா னிடைக்கிடையே செம்பிலீயப்
 பிரியமாய் வெங்கலம்போல் தகர்ந்துநிற்கும்
அருமையாய் வண்டிலது காலுஞ்சேர்த்து
 அடைவாக வுருக்குநன்றாய் யுருக்கித்தீரு
கருமையாய் வெங்கலம்போற் சத்தாய்நிற்கும்
 காரணமாய்ச் சத்ததனைக் குகையிலிட்டு
வருமையா யுருக்கிடவே சொன்னேன்பாரு
 வையகத்தி லென்பேரு விளங்கத்தானே. 185

விளங்கவே சத்ததனைச் செம்புபண்ண
 விருப்பமாய்ச் சித்தர்களும் சொன்னாரில்லை
தளம்பெறவே யிந்நூலில் வெளியாய்ச்சொன்னேன்
 தாயகமாய்ச் சுடரதுவைத் தானேசேர்த்துப்
பழங்கதைபோ லரைத்துவில்லை கதிரில்வைத்துப்
 பரிவாக மூன்றுபுடம் போட்டாயானால்
களங்கமில்லாச் செந்தூர மாகும்பாரு
 கர்த்தன்யா கோபுநபி கருத்திதாமே. 186

கருச்சொன்னார் மதியெட்டி லொன்றுயீயக்
 காரணமா யேமமது பத்துமாகும்
வருச்சொன்னா ரிவ்வேதை பார்த்துநீயும்
 வழியோடே பிழைத்திருந்து கொண்டுவைப்பில்
தருச்சொன்ன போலதுபோல் மயங்கவேண்டாம்
 தாட்டிகமாய் நூல்களெல்லாந் தகமைபார்த்து
குருச்சொன்ன யாகோபு குறித்தநேர்மை
 குணமாகக் கண்டாக்கா லெல்லாமாமே. 187

ஆமேதா னெல்லோருக்கும் வாதந்தன்னை
அடைவாகச் சொன்னாக்காற் பலிதமில்லை
பூமேஅஞ் ஞானிக்குத் தெரியாதப்பா
போதுமென்ற பிச்சைதனை யெடுத்துண்பார்கள்
நாமேதான் வாதங்கள் மிகவுஞ்சொல்லி
நானிலத்தில் மவுனமா யிருந்துகொண்டு
காமேதா னுலகத்தோர் குடிகெடுக்கக்
கனமான யோசனைகள் கண்டார்தாமே. 188

கண்டுமே உலகத்திற் சிலதுபேர்கள்
கனிவாக வாதங்க ளெனக்குநன்றாய்
உண்டுமே தெரியுமென்று பொய்கள்சொல்லி
உறவாக நாகந்தான் கட்டுமென்பார்
தண்டுமே சொல்லியே ரவிபழுக்கும்
தக்கபுத்தி யோசனைகள் மிகவேசெய்து
பண்டுமே பழங்கதைகள் பேசுவார்பார்
பரிவாக அவர்களைநீ நம்பவேண்டாம். 189

நம்பாதே பொய்சொல்லும் வாதிதன்னை
நாட்டிலே சொல்லாதே நாடித்தள்ளு
வம்பாகப் பேசுவார்கள் வயித்தியத்தை
வடிவாக யோசனைகள் பண்ணிப்பார்த்துத்
தெம்பாகத் தள்ளிவிடு அவர்களுக்குத்
திடமாகச் சோறுமுதல் போடவேண்டாம்
தம்பமா யிப்படிக்குப் புலம்புகின்ற
சண்டாள வாதியைநீ தள்ளிப்போடே. 190

தள்ளிடவே சண்டாளக் கோபந்தன்னைத்
தடையறவே தள்ளியே சுழியிலேறி
உள்ளிடவே உள்ளவா தாரம்பத்தி
உத்துநின்ற நபிமாரைப் போற்றிசெய்து
கள்ளிடவே அடிவணங்கிக் கண்டுநின்றால்
கர்த்தான்வக் கண்டிடலாங் கருவாய்ப்பாரு
தெள்ளிட்டுத் திரியாதே நான்தான்சொன்ன
திட்டமதே தொல்லுலகில் தீர்க்கம்பாரே. 191

## அப்ரேகச்செந்தூரம்

தீர்க்கமாய் அப்ரேக்குச் செந்தூரத்தைத்
திடமாக எழுநூறிற் சொல்லவில்லை
ஆக்கமாய் முந்நூறி லதிகவேதை
ஆண்மையா யாகுதற்குக் கைபாகத்தை
மூர்க்கமாய்ச் சொல்லுகிறேன் முத்துப்போலே
முடிவாக வொருகயத்திற் கோர்த்தாப்போலே
பார்க்குள்ளோர் அறியயா கோபுசொன்ன
பத்திமுத்தி சித்தியெல்லாம் பார்த்திடாயே. 192

பார்த்திடவே அப்ரேக்கு பலமும்பத்து
பதிவான வீரமது பலமும்ரெண்டு
கோர்த்திடவே யீதிரெண்டுங் கொள்ளுச்சாற்றால்
குணமாக அரைத்துப்பார் வெண்ணெய்யாகும்
சாத்திடவே பெரியபுடம் போட்டெடுக்கச்
சரியாக நீறியே தவளம்போலாம்
வாத்திடவே யாகோபு சொன்னநீதி
வண்மையுட னுலகோர்க்கு வழுத்தினாரே. 193

வழுத்திடவே காரீயம் பலமும்பத்து
வடிவான அயக்கரண்டி தன்னிலிட்டு
கழுத்திடவே வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல்
காரியமாய்ப் போடச்செந் தூரமாகும்
உழுத்திடவே அப்ரேக மிடைக்குவங்கம்
உன்னிதமாஞ் செந்தூரஞ் சேர்த்துக்கொண்டு
தழுத்திடவே கன்னியாங் குமரிச்சாற்றால்
தன்மையா யரைத்துவில்லை தீட்டிக்கொள்ளே. 194

தீட்டியே சிவக்கமட்டும் புடத்தைப்போடு
சிவந்துவிடுங் காரணமாய்க் கருப்பில்லாமல்
மூட்டியே செந்தூரம் நாலுக்கொன்று
முடிவான தாளகமும் யிடைபதங்கம்
தாட்டியே சேர்த்தரைத்துக் கன்னிநீரால்
தாக்கியே புடம்போடச் சிவந்துநிற்கும்
பாட்டியே போகாதே யெடுத்துக்கொள்ளு
பகிவாக யாகோபு பலன்சொன்னாரே 195

பலனென்ன கண்டரைத்தான் செம்புபண்ணிப்
பதிவாக நூற்றுக்கு ஒன்றுதாக்கிப்
பெலமாகும் மாத்துயெட் டரையுமாகும்
பெரியோர்கள் சொன்னதொரு நீதிதானும்
அலமாகத் திரியாதே அடுத்துப்பாரு
ஆராய்ந்து பார்த்தாலே யெல்லாமாகும்
குலமாகக் கண்டாக்கால் சுருக்கிலாகும்
குத்தமத்த யாகோபு குறிப்பிதாமே. 196

குத்தமறச் செந்தூரந் தேனிலுண்ணக்
கொடிதான ரோகமெல்லாங் குணமதாகும்
பத்தறுமே காயமது அலரிபோலாம்
பார்த்துமே கைபாக வரிசைசெய்து
நித்தமதை யுண்டுமே நினைவுபூண்டு
நீனிலத்திற் காயசித்தி நினைவாய்ப்பாரு
முத்தரையா யாகோபு மொழிந்தவாறு
முத்திபெற்றுத் தானிருக்கச் செப்பினாரே. 197

செப்பிடவே வாதங்கள் கைபாகங்கள்
சிறப்பாக வைத்தாக்கால் மவுனமாக
நப்பிடவே யிருந்துகொண்டு தொழிலைப்பார்த்து
நாடியே சுயவசனம் பேசிநீயும்
உப்பிடவே குணமாக யிருந்துவாழ்ந்து
உறுதிபெற நபிமாரை யடுத்துக்கொள்ளு
தப்பிதமாய்த் திரியாதே தலைகள்போகும்
சரியாக நீநடக்கத் தன்மையாமே. 198

## ரசக்களங்குச் செந்தூரம்

தன்மையாய்க் கொடுக்குமுன்னே பழுப்பதற்குத்
தாட்டிகமா மின்னமொரு தகமைகேளு
உண்மையாய் வடமதுவும் பலமும்பத்து
உறுதியுற்ற வளையமது நாலாறாகும்
கண்மையாய் அன்னமென்ற பேதிதானும்
கருத்தாகப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
வன்மையா யுரலிலிட்டு யிடித்துவாலை
வகையாக அடைத்துமே சட்டிமூடே. 199

மூடியே முன்னீரைத் தள்ளிப்போட்டு
முடிவான கடைநீரை வடித்துக்கொண்டு
தேடியே குப்பிரெம்ப நிரப்புநீயும்
திடமாகச் சூதமது சேருவொன்று
காடியே அதிலூத்தப் புகைநீர்தன்னைக்
கணக்காகப் பொறிந்துவிடுங் காளான்போலே
கோடியே திரவியமாம் பார்த்துக்கொள்ளு
குணமாக யாகோபு கொட்டினாரே. 200

கொட்டியே பூத்தரசந் தன்னைவாங்கிக்
குணமாகக் குப்பியிட்டு யெரித்துக்கொள்ளு
பட்டியே சிவப்பாகுஞ் சிவப்புதன்னைப்
பதிவாகப் புறம்பாக வைத்துக்கொண்டு
துட்டியே கண்டரைத்தான் செம்பெடுத்துத்
துடியாகக் குகையில்வைத் துருக்கும்போது
கட்டியே சத்தியது இடையேதாக்கு
கனமாக நொறுங்கியது சத்துமாமே. 201

சத்தெடுத்து மாடனைத்தான் பாதிசேர்த்துச்
சரியாகப் புகைநீரா லரைத்துக்கொண்டு
வித்தெடுத்து வில்லைகட்டிக் கதிரில்வைத்து
விதமாகப் புடம்பெரிதாய்ப் போட்டுத்தீரு
கத்தெடுத்துப் பத்துப்புடம் போட்டெடுக்க
காரணமாய் முருக்கம்பூப் போலாஞ்செம்பு
சித்தெடுத்துப் புறம்பாக வைத்துக்கொள்ளச்
சித்திபெற யாகோபு திடஞ்சொன்னாரே. 202

திடமாகச் சொல்லுகிறேன் நத்திக்கேளு
திட்டமாய்ச் சூதச்செந் தூரம்பத்து
நடமான சத்துச்செந் தூரம்பத்து
நாட்டியே யீதிரண்டுங் கல்வமிட்டுப்
படமான புகைநீரை முங்கவிட்டுப்
பார்த்தரைநீ இருசாமம் மைபோலாகும்
தடமாக உமிநெருப்பில் வறுத்துப்போடத்
தன்மைபெற யாகோபு தாக்கினாரே. 203

தாக்கியே காசியென்ற மேருக்கிட்டுத்
தாட்டிகமாய்ப் பன்னிரெண்டு சாமந்தீதான்
நோக்கியே யெரித்துயெடு முருக்கம்பூப்போல்
நுட்பமாய்ச் சிகப்பென்ன கண்கொள்ளாது
பாக்கியம்வந் துற்றதுபோ லெடுத்துக்கொண்டு
பக்குவமா யிதைவெளியிற் பகர்ந்திடாதே
வாக்கினாற் சொன்னதொரு நீதிமார்க்கம்
வகைகண்டால் துகைகாணும் வடிவம்பாரே. 204

வடிவான நவலோகம் நூற்றுக்கொன்று
வணக்கமாய்க் கொடுத்திடவே தங்கமாகும்
முடிவான வாதமிது முத்தியாகும்
மூர்க்கமா யெல்லோருஞ் செய்யப்போகா
துடியானோன் செய்தாக்கா லிடியும்வீழும்
குணமாகப் பெரியோர்கள் செய்வார்பாரு
துடியான வாதியார் செய்யாமூடர்
துப்பறவாய்ப் படபடப்பாய்த் தோய்ந்துய்வாரே. 205

தோய்ந்துமே பாராத வாதிதானும்
தொல்லுலகில் வாதம்வரு மென்றுசொல்லிப்
பாய்ந்துமே சரக்கைத்தான் கடையில்வாங்கிப்
பதிவாகச் சுட்டுமே பணம்போச்சென்று
சாய்ந்துமே சொல்லியே அலைகுவார்கள்
சாடையாய்ப் பின்னையுந்தான் பார்த்துக்கேட்டு
ஆய்ந்துமே யிந்நூலைப் பொய்யென்பார்கள்
அடைவிலா வாதிதா னாடுவாரே. 206

ஆடுவார் வாய்ப்பேச்சால் பேசுவார்கள்
ஆதியாஞ் சரக்கைத்தான் கட்டவென்று
நீடுவார் மூலிகையைப் பிழிந்துகொண்டு
நிலையாகச் சுருக்கிட்டு நிகடம்வைத்துப்
போடுவார் ரவிபழுக்கு மென்றுசொல்லிப்
பூப்புடமுஞ் செய்வனென்று புலம்புவார்கள்
காடுவார் வீடதனி லிருக்குதென்று
கருத்தொட்டுப் பார்த்துமே அலைகுவாரே. 207

அலையாமற் செந்தூரம் வைத்துக்கொண்டு
அன்பான ரவிதனிலே கொடுக்கயேமம்
உலையாம விதைவித்துச் செலவுசெய்து
உண்டுடுத்திப் பின்தானும் செந்தூரத்தைத்
தலையாமல் பணவிடைதான் உண்டுதேறு
தாக்கிடவே காயமது கற்றூணாகும்
அலையாமல் யாகோபு சொன்னநீதி
அவனிதனில் வணங்கியே வாழ்வீர்தானே. 208

## வெடியுப்புச் சுன்னம்

தானென்ற யின்னமொரு செம்புமார்க்கம்
தாட்டிகமாய்ச் சொல்லுகிறேன் தகமைகேளு
வானென்ற வடமதுவும் பத்துப்பின்னும்
வகையான வளையமது பலமும்பத்து
கானென்ற புளியுமொரு பலமும்பத்து
கடிதாகக் கல்லுரலி லிடித்துப்பின்பு
பானென்ற புதுச்சட்டி அடுப்பிலிட்டுப்
பக்குவமா யாகோபு பாகங்கேளே. 209

பாகமா யெரியிடவே சாமமாகப்
பயின்றபின்பு தானெடுக்கப் பதிவாஞ்சுண்ணம்
பாகமா யெடுத்துமே பனியில்வைக்கப்
பாங்காகப் பளபளெனச் செயநீராகும்
தாகமாய்ப் புகைநீரி லிடையேவிட்டுத்
தாட்டிகமாய் வீரமொடு பூரமிட்டு
யோகமாய் வைத்துமே சொல்லக்கேளு
உத்துணர்ந்து யாகோபு ஓதினாரே. 210

ஓதினா ரின்னூறிற் சரக்கெல்லாந்தான்
உணவாகத் தோய்த்துமே வாட்டக்கட்டும்
கோதினார் லவணமுத லிருபத்தைந்தும்
குணமாகக் கட்டாகும் மெழுகுமாகும்
வாதிகள்தான் வைக்காமல் மூலிதன்னை
வகையாகப் பிடுங்கியே சரக்கிலூத்தி
மேதினியிற் கட்டியே சரக்குதன்னை
மிதமாகச் செம்புதனிற் கொடுப்பார்பாரே. 211

## நாகக்கட்டு

கொடுப்பார்கள் நாகமொரு கட்டுச்சொல்வேன்
குணமாகுங் குற்றமறக் கூர்ந்துபாரு
வடுப்பார்கள் இலுப்பெண்ணெய் தன்னிலேதான்
வகையாக இருபத்தேழ் திரமும்சாய்த்து
தடுப்பாகச் செயநீரி லுருக்கிச்சாய்க்கத்
தாட்டிகமாய்ப் புகையடங்குந் தன்மையாகும்
படுப்பாகத் தகடடித்துக் கல்லுப்பைத்தான்
பதிவாக மேற்கவசங் கட்டத்தானே. 212

கட்டியே புடமிட்டு யெடுத்துப்பாரு
கருணைபெறக் கரிபோலத் தூளுமாகும்
பட்டியே தூளினிடை சாரஞ்சேர்த்துப்
பதிவாக அரைத்துருக்க மணியுமாகும்
தெட்டியே மணிதன்னை உடைத்துப்பாரு
திடமாக வெள்ளிபோ லிருக்குமப்பா
குட்டிபோ லின்நாக மணிகள்தானும்
கூறினார் யாகோபு குணமாய்த்தானே. 213

## நாகச்செந்தூரம்

குணமாக நாகமணி தன்னைத்தானும்
கூட்டியே கரியில்வைத்து உருக்கும்போது
மணமான தங்கத்தை யிடையேதாக்க
மடிந்துமே யிரண்டுமொன்றாய்ச் சேர்ந்துநிற்கும்
பணமாகத் தகடடித்துக் கெந்திவீரம்
பாய்ச்சியரை தகட்டின்மேற் பூசிப்பூசி
உணவாகப் புடம்போடக் கருப்புமாகும்
உரைசெய்தார் யாகோபு ஒழுங்கிதாமே. 214

ஒழுங்காக யெடுத்துமே செம்புநூறு
உத்துமே உருக்கியபின் சொல்லக்கேளு
தழுங்காக ஒன்றுயிடத் தரணியோர்க்குத்
தாட்டிகமா யிருபதின்மே லஞ்சுமாத்து
வழுங்காகப் பெரியோர்கள் செய்வாரப்பா
வாதிக்கும் பத்தாகும் மகிழ்ந்துதேறு
கழுங்காம லிவ்வேதை உறுதியாகும்
கற்றுணர்ந்த யாகோப காங்கினாரே. 215

கருதியே உலகத்திற் சிலதுவாதி
காரணமாய் நாகத்தைக் கொண்டுவந்தால்
பருதியுள்ள மட்டுக்குந் தங்கஞ்செய்வேன்
பாரென்று நாகத்தை உருக்கிச்சாய்த்து
அறுதியா யதையெடுத்து வைத்துக்கொண்டு
அறிந்தவர்போல் மறைவாகக் கையில்வைத்து
உறுதியாய்ப் பொன்னாச்சு தென்றுசொல்லி
உலுத்தரவர் திரிவார்கள் உற்றுப்பாரே. 216

உத்துமே சிலதுபேர் சாலக்காரர்
உண்மையாய் நான்கண்டே னென்றுசொல்லி
அத்துமே சொல்லியே புலம்புவார்கள்
அவர்களுக்குப் பொன்னில்லை அலைவாரப்பா
கத்தியே செய்திட்டுத் திரிவானப்பா
கண்டிடுமே செம்புநீ கருத்திலேதான்
சித்திமதி லுலகத்து மானிடர்க்குச்
சித்தமாய்ச் சொல்லிவிட்டேன் பண்பாய்த்தானே. 217

பண்பாக எழுநூறு முன்னேபாரு
பகர்ந்தொரு முந்நூற்றைப் பத்திப்பாரு
நண்பாய்செந் தூரமுந் நூறும்பின்பார்
நானிலத்திற் பார்த்தறிந்து வாதம்பார்த்தால்
உண்மையா யுருத்தோடே ஞானந்தன்னை
உலகத்தில் நீதியா யுற்றுப்பாரு
கண்பார்வை செய்திட்டுக் களங்குசெய்யக்
காரியமா யாகோபு கருதினாரே. 218

கருத்தாக எந்நூலைக் கண்டுபார்க்கக்
கருத்துணர்ந்து செம்பெல்லா மெடுத்துப்பாரு
பொருத்தாகக் கைபாக வரிசையாலே
புக்கியே சாஸ்திரத்தைப் பொருந்தப்பார்த்துத்
திருத்தியே செந்தூரஞ் செய்துவுண்ணச்
சித்தியாஞ் சகலமுந்தான் சித்தியாகும்
வருத்தியே நூலில்லா வாதம்பார்த்து
வழிதெரியா திருந்ததினால் மார்க்கமேதோ. 219

மார்க்கமா யெழுநூறு முன்னேசொன்னேன்
வகாரநூல் முந்நூறு பின்னேசொன்னேன்
தீர்க்கமா யிதிலிருந்து களங்குசொன்னேன்
திகழ்பஞ்ச மித்திரமுந் நூறுசொன்னேன்
ஏர்க்கவே மூன்றுநூல் தன்னைப்பார்த்து
எய்தியதோர் சரக்கினுட பொருளறிந்து
பார்க்குள்ளே செய்தாக்காற் பலனுமாகும்
பகுத்தறிந்து செம்பெல்லாம் பரிவாய்ப்பாரே. 220

பரிவாகப் பகுத்துணர்ந்த பெரியோர்பாதம்
பக்குவமாய்க் கண்டுமே பாதந்தன்னைத்
தெரிவாகப் பிடித்துமே தோய்ந்துகேளு
செப்புவார் களங்குமுதற் செந்தூரங்கள்
விரிவாகக் கேட்டுமே காத்துக்கொள்ளு
மேன்மையாங் கண்டுணர்ந்து யிருந்துபாரு
சரியாகக் கைபாக வரிசையெல்லாம்
சாதித்தால் லோகத்திற் சார்ந்துகொள்ளே. 221

சார்ந்துமே கெந்தியைத்தான் நித்தம்பூசிச்
சரியான களங்குமுதற் செந்தூரங்கள்
வார்ந்துமே பாகமாய்ச் செய்துகொண்டு
வகையாகச் செம்பெடுத்து மதியில்தாக்கு
கூர்ந்துமே சுடரொளியைக் கண்டுதேறு
குணமாகும் வாதமெல்லாம் நொடிக்குள்ளாகும்
பார்ந்துமே பகலிரவாய்த் தோய்ந்துபார்த்துப்
பதிகண்டு பக்குவமாம் பாரிலோர்க்கே. 222

பாரிலே யிருப்பதற்கு வாதம்வேணும்
பக்குவமாய்ப் பொருள்வேணும் பண்புகேளு
ஊரிலே நீசெய்யும் வாதமார்க்கம்
ஒருவருக்குந் தெரியாம லிருக்கவேணும்
வேரிலே ஜலம்விட்டாற் றுளுக்கும்பாரு
வேதாந்தி யாயிருந்து காலந்தள்ளு
காரிலே கண்டபே ருடனேசொல்லிக்
கண்கெட்டுத் திரியாதே கருத்தாய்ப்பாரே. 223

## கெந்தக பற்பம்

கருத்தாகச் சத்திபற்பந் தன்னைக்கேளு
கனிமாங்காய்ப் பாற்சோறு தானெடுத்து
வருத்தாகக் கல்வத்தி லிட்டுநன்றாய்
வடிவாக நெல்லிசத்தி தன்னைவிட்டு
உருத்தாக அரைத்துமே சாமம்நாலு
உண்மையா யரைத்துவில்லை கதிரில்வைத்துத்
திருத்தமாய் மேற்கவசஞ் சொல்லக்கேளு
திடமாக யாகோபு சொன்னவாறே. 224

சொன்னதொரு கல்லுப்புச் சேருநாலு
சுகமாகக் கல்வமிட்டு மேனிச்சாறு
நன்னயமா யரைத்துகடல் நுரையைச்சேரு
நலமாக இரண்டுமொன்றாய் நேகவாட்டி
கன்னலாய் வில்லைகட்டி உலையிலூதக்
கடுஞ்சுண்ணங் கல்லுப்புச் சுண்ணமாகும்
பின்னமில்லா மற்றானே மேனிச்சாறு
பிலக்கவிட்டுத் தானரைத்துப் பின்புகேளே. 225

பின்பாக முன்வில்லை மேலேதானும்
பிரியமுடன் கவசமது வலுவாய்ச்செய்து
அன்பாகக் காயவைத்துப் புடத்தைப்போடு
ஆறியே யெடுத்துநீ பார்க்கும்போது
நன்பாகத் தும்பைப்பூப் போலாம்பற்பம்
நாடியே யெடுத்தபின்பு நாட்டக்கேளு
தின்பாக ரவியுருக்கி யதிலேதாக்கு
திடமாகப் பொன்னாகும் செல்வமாமே. 226

செல்கவே செம்பதுவும் பழுத்துப்போகும்
செப்பரிது வித்துமே செலவுசெய்து
மல்கவே ஞானவழி யடுத்துப்பாரு
மனதோடு வாசியோ கத்தைப்பாரு
நல்கவே ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
நாட்டிலே உண்டுடுத்தி நலமதாகச்
சொல்கவே பார்த்துணர்ந்து அறிவிற்கூடு
சுகமுணர்ந்த யாகோபு சொல்லிவிட்டாரே. 227

சொல்லிடவே செம்புமுத லெல்லாம்பார்த்துச்
சுருதியுடன் கைபாக வரிசைகண்டு
கல்லிடவே குளிகைமுதல் செந்தூரங்கள்
கனமான பொருளறிந்து கண்டுதேறி
வல்லிடவே மக்காவின் நாட்டைவிட்டு
வழியோடே கீழ்தேசம் வந்துதானும்
புல்லிடவே யெளியோர்க்காய் வாதஞ்சொன்னேன்
புவியிலுள்ளோர் இதையறிந்தாற் பெலனுண்டாமே. 228

பெலமாகப் பாஷாண மெல்லாந்தானும்
பிரித்துமே கசடகற்றிச் சத்துப்பண்ணி
வலமாக சத்தையெடு செம்புபண்ணு
வழியோடே மதிதனிலே பாய்ச்சிப்பாரு
அலனாக யேமமாம் அடுத்தடுத்து
அடைவாக வித்துமே செலவுசெய்து
கலனில்லா ஞானங்கள் பார்த்துத்தேறு
கர்த்தாவைத் துதியென்ற சொன்னார்பாரே. 229

சொன்னதொரு முந்நூறி லெல்லாஞ்சித்தி
சுருதிமுறை யறியாட்டா லெல்லாம்பாழாம்
கன்னலுற நீதிதனை அறிந்தால்ஞானி
கருத்தறியா ஞானிதான் கழுதைமேக்கி
இன்னிலத்திற் சரக்கதனை யறியாவாதி
யிடும்பான புத்தியிலார்க் கின்பமில்லை
நன்னூலை யறியாதார் நலமிலாதார்
நாட்டியே யாகோபு நவின்றவாறே. 230

## அயக்களங்கு

நவின்றிடவே இன்னமொரு இரும்பின்மார்க்கம்
நலமான ஒழுகரைதான் பலமும்பத்து
கவின்றிடவே துருசியது பலமும்பத்து
கலமாக ராவியிதைக் கல்வத்திட்டுத்
தவின்றிடவே சத்தியது பலமுமுக்கால்
தன்மையா யிட்டுபழந் தன்னாலாட்டி
உவின்றிடவே புதுக்குகையி லிட்டுருக்கு
உண்மையா யாகோபு உரைசெய்தாரே. 231

செய்திடவே சத்தாகும் வண்டில்கூட்டிச்
செழுமைபெற உருக்கிடவே மணிபோலாடும்
பைதிடவே இச்சத்தின் மகிமைதன்னைப்
பரனாலும் முடியாது மற்றோர்காணார்
வெய்திடவே சகலமுந்தா னிதுக்குள்ளாகும்
வேதாந்த மார்க்கத்துக் கிதுவேயாதி
நைதிடவே செம்பில்நின்ற சத்தெடுக்க
நாட்டினார் யாகோபு நலமதாமே. 232

நலமாகச் சத்ததுவும் பலமும்பத்து
நாட்டியெடு சுடர்காளை பாதியிட்டுப்
பெலமாக அரைத்துவில்லை கதிரில்வைத்துப்
பின்பதற்கு மேற்கவசஞ் சொல்லக்கேளு
வலமாகக் கடல்நுரையும் கல்லுப்புந்தான்
வடிவாக இடைசமனாய்ச் சேர்த்துக்கொண்டு
கலமாக மேனியிலைச் சாற்றாலாட்டிக்
கணக்காகப் புடம்போடச் சுண்ணமாமே. 233

சுண்ணமா முன்வில்லை மேலேகட்டிச்
சுருக்காகக் காயவைத்துப் புடமுமிட்டு
நன்னயமா யெடுத்துமே கல்வத்திட்டு
நாடியே முன்னீரா லரைத்துகட்டிப்
பின்னமாய்ச் செய்யாமற் புடமுமிட்டு
பேசாம லெடுத்துப்பார் செந்தூரிக்கும்
சொன்னபடி மாத்தாகுஞ் சொன்னேன்சொன்னேன்
சுருதிபெற யாகோபு சொன்னவாறே. 234

சொன்னதொரு செந்தூரஞ் செம்பிலிட்டால்
தொல்லுலகில் ரசவாதந் துடியுமாகும்
நன்னயமாய்ப் பேசார்கள் பெரியோர்தானும்
நாட்டிலே சொல்லார்கள் நல்லோருக்குப்
பன்னவே சொல்லுவா ரிந்தவித்தை
பார்ப்பார்க ளனைவோரும் படிப்புள்ளோர்கள்
வன்னமாய்த் தொழிலாகும் வாதவித்தை
வையகத்தில் யாகோபு வகைசொன்னாரே. 235

வகைசொன்ன உலகத்தில் வாதிதானும்
வடிவாக மாத்துகள்தான் நிரம்பவேணும்
பகையென்ன பேராசைப் பட்டுப்பட்டுப்
பாரிலே திரிந்தலைந்து பட்டுப்போவார்
நகைசெய்து திரிவார்கள் நானிலத்தில்
நாடிமிகப் பேசிபல கோடிகோடி
துகையாக வைப்பமென்று பேசுவார்கள்
துடியான யாகோபு சொன்னவாரே. 236

வாரேது யென்றாக்கால் சொல்லக்கேளு
வடிவான ஒருமாத்து நபிமாராகும்
தாரேது மாத்துத்தா னிரண்டானாக்கால்
தக்கதொரு இறைவனாந் தரணியோர்க்குக்
கூரேது ஞானவான் பேருக்குத்தான்
குணங்கண்டு பொன்னோடே பொன்னைச்சேர்த்து
வாரேது லாபம்வரச் சொன்னாரிந்நூல்
வடிவான பொருளதுவாம் வண்மைபாரே. 237

வண்மையாய்ப் பொய்சொல்லார் நிலைத்தவாதி
வடிவான பொருளறியார் பொய்கள்சொல்வார்
உண்மையாய்ப் பொருளைத்தான் கேட்பாரப்பா
உறுதிபெற்ற பெரியோர்கள் கேட்கமாட்டார்
தண்மையாய்ச் சொல்லிடுவார் சவுங்கவாதி
தாக்கிமிகப் பேசிடுவார் ஒன்றுமில்லார்
பண்மையாய்க் குணங்களுடை யோருக்கெல்லாம்
பாரிலே பதவியில்லை பண்புமாமே. 238

பண்பாக ஆண்டவனைத் துதியேசெய்து
பத்திமுத்தி வைராக்யம் பண்ணிக்கொண்டு
பெண்பார்வை யில்லாமல் வாதந்தன்னைப்
பெரியவரா யெண்ணியே பின்புநீயும்
உன்பார்வை செய்துமே செம்புதன்னை
உறுதிபெற யெடுத்துமே ஒழுங்கதாக
நண்பாகச் செய்திடுவா யென்றுசொன்னார்
நலமான யாகோபு நவின்றிட்டாரே. 239

நவின்றிட்ட மொழிகேட்டு நபிமாரெல்லாம்
நாடியே வாதமிகச் செய்துகாட்டக்
கவின்றிட்ட அடியேனுங் கற்றுக்கொண்டு
கானகத்தி லேகியே கணக்கைப்பார்த்துத்
தவின்றிட்ட சாத்திரத்தி னட்டவணைகொண்டு
தடையறசாஸ் திரமுஞ்சூஸ் திரமும்பாடி
துவின்றிட்ட தொல்லுலகில் சொன்னேனப்பா
துடியான யாகோபு தோய்ந்திட்டேனே. 240

தோய்ந்திட்டேன் ஆதியிலே ராமதேவன்
துடியான மக்காவின் தேசம்புக்கி
ஆய்ந்திட்டேன் அவ்வேதந் தன்னிற்புக்கி
ஆராய்ந்து யிறசூலைக் கண்டுபோற்றிப்
பாய்ந்திட்டேன் குளிகையிட்டுப் பறந்துபோனேன்
பாகமாய்ச் சொன்னதொரு செம்புதன்னை
வாய்ந்திட்ட மாயெடுத்து வாதம்பார்த்தேன்
வடிவாயா கோபென்றே வாழ்த்தினாரே. 241

வாழ்த்தினார் சொர்னமய மாகவென்று
வளமான வாதமெல்லாம் கேட்டுக்கொண்டு
பாத்தியே பதிவான சத்துச்சொன்னேன்
பாருலகில் நபிமாரைப் பத்தித்தேறி
காத்தியே குளிகைகட்டி விந்துருக்கிக்
கனமான பொருளெல்லாங் கண்டுதேறி
தாழ்த்தியே யிகபரத்துக் கொப்பாய்ச்சொன்னேன்
தாட்டிகமா யாகோபு தன்மைதானே. 242

## தாம்பூரக் களங்கு

தண்மையாம் ஊரலென்ற பயிரின்செம்பு
தாட்டிகமாய் வாதிக்குப் பார்க்ககேளு
உண்மையாய் ஊறலென்ற பரிதான்பத்து
உத்துமே குகையிலிட்டு உருகும்போது
கண்மையாய்ச் சத்தியுடன் சிகரஞ்சேர்த்துக்
கனிவாக அரைத்தவுண்டை யிடைதான்தாக்க
வண்மையாய் மடிந்துஇது சத்துமாகும்
வளமாக யாகோபு வகைசொன்னாரே. 243

வகையாக வண்டிலிடு பாதிதானும்
வைத்துரைப்பார் கல்வமிட்டுப் பாணியாலே
துகையாக அரைத்துவில்லை கட்டும்போது
துடியாகக் குகைதன்னி விட்டுப்போடு
பகையாக உருகியது மணிபோலாகும்
பாலித்துக் கசடகற்றிப் பதிவைக்கேளு
நகையாகக் கல்வமிடு வென்றுசொன்னார்
நானிலத்தில் யாகோபு நடக்கைதானே. 244

நடக்கையாஞ் சுடர்க்கொடியோன் பாதிசேர்த்து
நல்லதண்ணீர் தன்னாலே அரைத்துவில்லை
படர்க்கையாய்க் கட்டியே கதிரில்வைத்துப்
பரிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
வடக்கையாய்க் கருப்பாக யிருந்துதானால்
வடிவாக இன்னமொரு புடமுமிட்டுத்
துடக்கைத்தான் நீக்கிடச்செந் தூரமாகும்
துடியாக யாகோபு சொன்னவாறே. 245

வாறேது வென்றாக்கால் சொல்லக்கேளு
வகையுள்ள நவலோகந் தன்னிலீய்ந்து
காறேது பொன்னாகும் பொன்னைத்தானும்
கண்டுகொள்ள மாத்ததுவும் பத்துமாகும்
தூரேது கேணிபோ லிறைக்கும்பாரு
துடியாக சொர்னத்தை வித்தேயுண்டு
சாறேது ஞானங்கள் மிகவும்பார்த்துத்
தாட்டிகமா யாகோபு தாக்கினாரே. 246

தாக்கிப்பார் பெரியோர்கள் சொல்லமாட்டார்
தருதுரும்பன் சொல்லிடுவான் குடும்பவாதி
தூக்கிப்பார் பாகத்தை யறியாமூடர்
துடியாகப் பொய்சொல்வார் மார்க்கமில்லார்
நோக்கிப்பார் கொடுமைசெய்வார் காதலாக
நொடிக்குமுன்னே பிரட்டுகளைக் கொண்டுசெய்வார்
ஊக்கிப்பார் உருட்டுகளைச் சொல்லிச்சொல்லி
உறுதிமிக வாராமற் றிவார்தானே. 247

திரியாமற் பித்தளையைச் செம்புபண்ணித்
திட்டமா யுண்டுடுத்தித் திரிந்துநீயும்
பிரியமாய் ஞானங்கள் மிகவும்பார்த்துப்
பேசாமல் வாய்மூடு இந்நிலத்தில்
துரிதமாய்த் திரிந்தாக்கால் தோயாதப்பா
துப்பறவா யடுத்துமே பழகவேணும்
சரியாகப் பார்த்திடவே தடையுமில்லை
சல்தியா யாகோபு சொன்னவாறே. 248

சொன்னதுதா னாதியிலே கருவும்பாடித்
தோயவில்லை யென்றுமே மறுவேதத்தில்
இன்னிலத்தில் றிரிந்துமெழு நூறும்பாடி
இரண்டுவகை முந்நூறும் பாடித்தீர்ந்து
நன்னயமாய்ச் சத்துவகை செம்பும்பாடி
நயமாகக் குளிகையுட திறமும்பாடித்
தன்னிலே பார்க்கும்வகை தன்னைப்பாடித்
தடையறவே மலைக்குகையி லிருந்திட்டேனே. 249

இருந்திட்டேன் மலைகளெல்லாந் திரிந்துசுற்றி
இதமாக அந்தந்த நிலையுங்கண்டு
கருந்திட்ட பெரியோரைக் கண்டுபேசிக்
கலக்கமத்து வினையங்க ளெல்லாம்பார்த்து
அருந்திட்ட ஆதரவாய்ப் பாகஞ்சொன்னேன்
அடியான ஆதிமுதல் செந்தூரிக்க
வருந்திட்ட மலரவரின் வினையம்பாரு
வடிவான யாகோபு சொன்னவாறே. 250

சொன்னபடி வடமொழியைப் பார்த்துத்தேறி
தோய்ந்துமே கைபாக மாகப்பாடி
இன்னபடி யென்றெழுதி இதமாய்ச்சொன்னேன்
இதமான புத்தியுள்ளோர் அறிந்துகொள்ளார்
கன்னல்போ லென்னூலைக் கண்டுதேறி
கணக்காகச் செய்தாக்காற் பலனுமாகும்
நன்னயமாய்ப் பாடிவைத்த நூல்களெல்லாம்
நயமாக மிந்நூலும் நட்புதானே. 251

நட்பாக பொருளறியச் சுட்டுவாதி
நாடியே நான்செய்வே னென்றுசொல்லி
மெட்பாகப் பொய்யுரைத்துத் திரிவாரப்பா
மேதினியி லவர்பேச்சை நம்பவேண்டாம்
உட்பாக உரைத்தஉப்பு விழிபோலாகும்
உண்மையில்லார்க் கொன்றுமில்லை உலுத்தமாடு
புட்பாகந் தெரியாது பொல்லாவாதி
புரட்டுகளைச் சொல்வார்கள் பிரட்டாய்த்தானே. 252

பிரட்டாகச் சொன்னதினார் பலன்தானேது
பெரியநபி யென்றபிர தாபமேது
திரட்டாகப். பாடியதாற் பலன்தானேது
திட்டிவைத்துத் திறந்தாலே ஞானமேது
விரட்டியே திரிந்தலைந்தால் யோகமேது
விதமான பொருளில்லா விடுபட்டோடும்
கரட்டாகச் சொன்னதினாற் பலன்தானேது
காடுறைந்த கருவாளி காண்பான்பாரே. 253

காணவே பொருளில்லா வாதமேது
கைக்கடங்காப் பிள்ளைக்குக் கருத்தங்கேது
பூணவே பூணாரம் பூணார்க்கேது
பொல்லாதார்க் கொன்றுமில்லை பிரியமுண்டோ
வாணவே வடிவில்லான் ஆசையேது
வகையறியார் துகையறியார் வழக்கமேது
தோணவே நடப்பதற்குப் பாதமேது
துடியாதார்க் கொன்றுமில்லை தீர்க்கந்தானே. 254

தீர்க்கவான் யாகோபு சொன்னநீதி
செகந்தனிலே ரிஷிகள்சித்தர் யோகிக்குத்தான்
மார்க்கமாய்த் தெரியாது தெரிந்துதானால்
மயமாகச் சொல்வார்கள் வாதமார்க்கம்
ஏர்க்கவே பேசிடுவா ரினிமையாக
இடும்பாகப் பேசியதால் வாதம்பொய்யாம்
பார்க்குள்ளே விருக்குமட்டும் பலமதாகும்
பத்திதரும் யாகோபு பலன்சொன்னாரே. 255

## வெள்ளிக்களங்கு

சொன்னதொரு களங்கதெல்லாம் மெய்யதாகும்
சுருக்கான வெள்ளியதிற் களங்குகேளு
நன்னயமாய்ச் சொல்லுகிறேன் உலகத்தோர்க்கு
நாட்டினால் ரசவாத முண்டுகாணும்
இன்னிலத்தி லிருக்குமட்டும் வைத்துப்பாரு
இன்பமாய் நிற்பதற்கு நொறுக்குவெள்ளி
கன்னல்போற் கடைசிதனிற் சொல்வேன்யானும்
கற்றுணர்ந்து யாகோபு கருவாய்ச்சொன்னேன். 256

கருவாகக் கருக்கன்வெள்ளி பலமுஞ்சேரு
கனிவாக உருக்கியே கட்டியாக்கி
வருவாக ஆட்டெலும்பு பலமும்பத்து
வகையாகக் கட்டுமே மாறக்கேளு
தருவாகச் சுக்கானும் பாதிசேர்த்துத்
தனையரைத்து நிகடையது பண்ணிக்கொண்டு
உருவாக அதில்வைத்து உருக்குவெள்ளி
உண்மையா யிடைக்கிடைதான் வங்கஞ்சேரே. 257

வங்கமென்ற நல்லீயம் கருக்கன்வெள்ளி
வகையாக உருக்கையிலே முகத்திற்றாக்கி
சிங்கமாய்ச் செம்புதனைத் தள்ளிப்போடும்
சிறக்கவே வுள்ளேதான் புகுந்துகொள்ளும்
தங்கமது செம்புதன்னைச் சுத்திவாங்கி
தருகாது ஊதினபின் னூத்தினாலே
பங்கயமாய்ப் பண்ணியே செம்பையிட்டுப்
பதிவாக மதிதரையில் பசுமைபாரே. 258

பசுமையாம் வெள்ளிதனைத் தகடுதட்டிப்
பத்தலது சிகரமதுஇடையே சேர்த்து
வசுமையாய்க் கைத்தபழம் பாலைவிட்டு
வடிவாக இருசாம மரைத்துக்கொண்டு
தசுமையாய் முந்நூறும் வெள்ளிதன்னில்
தாக்கியிடு மேற்கவசங் கட்டிப்போடு
உசுமையாய் அட்டைபோற் சுருங்கிப்போகும்
ஓதினார் யாகோபு ஒழுங்கிதாமே. 259

ஒழுங்காக இப்படிக்குத் தடவிமூன்று
உறுதியாய்ப் புடம்போட்டு உடைத்துப்பாரு
நழுங்காக வெட்டையாங் கரிபோற்றோணும்
நாடறிய அதைக்கல்வந்தனிலரைத்து
வழுங்காமல் வழித்துவில்லை காயவைத்து
வழியோடே புடமிடவே கருப்பதாகும்
தழுங்காமல் யாகோபு சொன்னநீதி
தாட்டீக மாகவே திடஞ்சொன்னாரே. 260

திடமென்ன கரியாகும் வெள்ளிக்குத்தான்
திறமான ஆலாத்தி பாதிசேர்த்து
படமென்ன வாய்நீர்விட் டரைத்துவில்லை
பதிவாக இப்படிக்கு மூன்றுபோட்டு
கடமென்ன கரியில்வைத்து வண்டில்கூட்டிக்
காரியமாய் நசிக்கிபொடி யாக்கிப்பின்பு
விடமாக உருக்கிடவே வெள்ளியாகும்
விருதாவாய்க் குறையாது விருப்பமாமே. 261

விருப்பமா யிந்தவெள்ளி முத்துப்போலே
வீரியமா யுருக்கியே தகடுதட்டித்
திருப்பாகக் கரியோட்டிற் புளிகரைத்துத்
திறமாகக் கெந்தியது பாகமாகத்
தருப்பாகச் சேர்த்துமே பழுக்கச்சுட்டால்
தாட்டிகமாய்த் தங்கம்போற் பழுக்கும்நன்றாய்
குருக்கிடையுங் கருக்கிடையும் பார்த்தால்வாதம்
குணமாகும் மணமாகுங் கூர்ந்துபாரே. 262

கூர்ந்துபா ரிப்படிக்குப் பரிசோதித்தாற்
குணமான சத்ததனிற் செம்பெடுத்து
தேர்ந்துமே எட்டுரெண்டு கொடுத்துருக்கி
திடமான மட்டத்தைச் சிவக்கக்காய்ச்சில்
வார்ந்துமே பழத்தினாற் பாகமாகும்
வகையாகப் பழுத்தாக்கால் தங்கந்தன்னைச்
சோர்ந்துமே சேர்க்காதே யாகோபுத்தான்
சுகமான வித்தையிதைச் சொன்னார்பாரே. 263

சொன்னதொரு அடையாள மாய்ப்பழுத்த
சுகமான மட்டத்திற் றங்கஞ்சேர்க்க
நன்னயமாய்ச் செட்டிகையி லேறும்பாரு
நலமாகப் புடத்திலே யிறங்கும்பாரு
பின்னங்க ளில்லாமற் சொல்லிப்போட்டேன்
பேசரிது பேசரிது பெருமைமெத்த
வன்னங்கள் சிலைக்குவந்த வாறுபோலே
வகையாகும் யாகோபு வரிசைதானே. 264

வரிசையாய்க் கைபாக வரிசையோடே
வகையாகச் செய்தாக்கால் வாதமாகும்
பரிசையாய்க் கைபாகந் தப்பிப்போனால்
பதிவாக யெல்லாமுந் தப்பும்பாரு
புரிசையாய்ப் பிரியமாய்ச் செய்துகொண்டு
பொருந்திடவே நொறுக்குவெள்ளி போட்டுப்பாரு
உரிசையாய் நாக்குருசி போலேபாரு
உற்றுணர்ந்து யாகோபு ஓதினாரே. 265

ஓதினார் முன்வேதந் தன்னிற்றானும்
உறுதியாய்ப் பாண்டங்கள் மிகவுஞ்சொன்னேன்
வாதிதான் பார்த்துமிகச் சுட்டுக்கெட்டு
வகையறியா ரதனாலே பொய்யென்பார்கள்
கோதியதோர் கிளிபோலே சொல்லிப்போட்டேன்
குவிந்தபடி சொன்னாக்கா லென்னசெய்வேன்
போதித்தேன் கைபாக வரிசைதானும்
புகழாக யெல்லோர்க்கும் பெருமைதானே. 266

பெருமையாய் வாதங்கள் மிகவும்பார்த்துப்
பேசரிய யாகோபு யென்பேராச்சு
அருமையா யுலகத்தில் வாதிதானும்
அடைவாக ஒன்றைவிட்டு ஒன்றைச்செய்து
ஒருமையா யுலகத்தி லிருந்துகொண்டு
ஒன்றிருக்க வொன்றுசொல்வா ருலகவாதி
கருமையாய்ச் செய்வார்கள் தெரியாமற்றான்
காட்டினார் யாகோபு கருச்சொன்னாரே. 267

சொன்னதொரு சாஸ்திரங்கள் பதினேழாகும்
சுருக்கமாய்ச் சொல்லிவிட்டேன் குறிப்பதாக
நன்னயமா யென்பாடல் பார்த்தபேர்க்கு
நானிலத்தில் ரசவாதம் யேவல்செய்யும்
கன்னல்போ லாகுமிது வசனம்பொய்யா
கற்றுணர்ந்தால் எல்லாமுஞ் சித்தியாகும்
பின்னமில்லா மற்சொல்லிப் போட்டேனென்று
பிரட்டில்லா யாகோபு பேசினேனே. 268

பேசியதோர் மக்காவின் தேசந்தன்னிற்
பிரபலமாம் பெரியோர்கள் மிகவுமுண்டு
வாசினதோர் எளியோர்க ளில்லையில்லை
வகையான நபிமார்கள் மெத்தவுண்டு
மாசில்லா நபிமார்கள் பள்ளிதன்னில்
வழியோடே யிருப்பார்கள் நிறத்தைக்கேளு
காசியே செவ்வலரி போலாந்தேகம்
கற்றுணர்ந்த யாகோபு கருச்சொன்னாரே. 269

சொன்னதொரு நூலில்லா வாதம்பார்த்தால்
தோசியவன் பொன்மாத்துக் காணமாட்டான்
நன்னயமாய்ச் சொல்லுவான் பசப்புவான்பார்
நானிலத்தில் மூலிகைக ளிருக்குதென்பான்
பின்னமில்லா மற்றானே சொல்லிப்போட்டுப்
பிரட்டாக ஒருபொருளை யறியானப்பா
கன்னல்போல் மக்காவின் தேசந்தன்னிற்
கற்றுணர்ந்தேன் யாகோபு கருவிட்டேனே. 270

### அயத்தாம்பூரக்களங்கு

விட்டதொரு களங்கதனைச் சொல்லக்கேளு
விருப்பமாய் நபிமார்கள் ஆடும்நேர்மை
தொட்டதொரு சகலமுந்தான் சித்தியாகும்
சொல்லுகிறேன் கைபாக வரிசையாகப்
பட்டமுடன் சேர்க்குமந்த வாருதன்னைப்
பயமாகச் சொல்லுகிறேன் மார்க்கப்போக்கைத்
துட்டருடன் சொல்லாதே நரகமெய்தும்
தொல்லுலகில் யாகோபு தோய்ந்திட்டாரே. 271

தோய்ந்திட்ட நபிமாரைப் போற்றிசெய்து
தொல்லுலகில் செம்பதுவுஞ் சுருக்கமாக
வாய்ந்திட்ட கண்டரது செம்பிரண்டும்
வகையான அயம்நேராம் சத்திநேராம்
ஒய்ந்திட்டுக் கல்வமதி லரையன்னத்தால்
உறுதியாய் வில்லைகட்டிக் கதிரில்வைத்துச்
சாய்ந்திட்டுப் போகாமற் புடமுமிட்டுச்
சரியாக வண்டிலதைச் சேர்த்துப்பாரே. 272

சேர்த்துமே அரைத்துஅன்ன நீரினாலே
செழுமைபெறக் குகையிலிட்டு ருக்கிப்பார்நீ
பார்த்துயெடு சத்தாகும் சத்தின்போக்கைப்
பதியநபி மார்கள்தான் ஆடும்ஆட்டு
சாத்துவீர் வெள்ளிபோ லாகும்பாரு
சத்தியமாய்ச் சத்துநின்ற யிடையேபாதி
கோத்திடுநீ சித்தருட ரூபிதன்னைக்
குணமாய்ச்சே ரென்றார்யா கோபுதானே. 273

தானென்று சேர்த்துமே கல்வந்தன்னில்
தாட்டிகமாய்ப் பொற்றலையின் சாற்றாலாட்டி
வானென்று வில்லைக்கட்டிக் கதிரில்வைத்து
வடிவாக ஓட்டிலிட்டுப் புடமூன்றிட்டால்
ஊனென்ற செந்தூரம் உறுதியாகும்
உற்றுணர்ந்து யெடுத்துமே உண்மையாகப்
பானென்று மதியெட்டி விரண்டுசேரு
பரிந்துமே யாகோபு சொன்னவாறே. 274

பரிந்துமே மதிதனிலே சேர்த்துருக்கப்
பகரரிது பொன்னாகும் பொன்னினோடே
வரிந்துமே யேமமது காலுங்கூட்டி
வகையாக உருக்கிப்பார் எட்டுமாத்து
விரிந்துமே உப்புக்குங் காவிக்குந்தான்
மேலாக யிருந்திடுங்காண் உண்மையாகக்
குரிந்துமே பாகமிது குறிப்பைபார்த்துக்
கூத்தாடும் யாகோபு குறித்தவாறே. 275

வாரேது யென்றாக்கால் சொல்லக்கேளு
வண்மைதரும் அயந்தன்னை யுழைத்துப்பாரு
ஊரேது பலன்கொடுக்கும் உறுதியாகும்
உலகத்தில் நபியாக யிருந்துபாரு
கூரேது கந்திரிகள் மிகவுஞ்செய்து
குணமாகக் கொடுத்துமே தருமம்பண்ணிப்
பாரேது பூமிதனி லிருந்துவாழும்
பாக்கியவான் யாகோபு பரிந்தவாறே. 276

பரிந்திட்ட வுலகத்தோர் பிழைக்கும்நீதி
பதிவாகச் சொல்லிவிட்டேன் பலனும்பார்த்து
தெரிந்திட்ட வுங்களுக்குத் திறமைசொன்னேன்
சித்தர்நபி யாகிடவே முற்றும்பார்த்து
அறிந்திட்டாற் பொருளுண்டு வாதம்உண்டு
அலக்கழித்தாற் பலனென்ன அடுத்துப்பாரு
தெரிந்திட்ட ரசவாதி காண்பான்பாரு
திட்டமா யாகோபு சொன்னதாமே. 277

சொன்னதொரு நூல்வர்மங் கண்டுபாரு
தொல்லுலகி லிச்செம்பைச் சேருசேரு
நன்னயமாய் ஒருவேளை தெரிந்துதானால்
நாட்டிலே நபிமாராய் நல்கிவாழ்வீர்
சின்னவோர் பிள்ளைக்குந் தெரியும்நன்றாய்
சித்திரமாய்ப் பேசாதீர் சித்திபெற்றுக்
கன்னல்போ லிருக்குமுத்தி சொன்னாரையா
கடிதான யாகோபு கருணைதானே. 278

தானென்ற சித்தருட நூலுக்குள்ளே
தாட்டிகமாய் வழலையென்றும் முப்பூவென்றும்
ஊனென்ற புளியென்றும் மறைத்துச்சொன்னார்
ஓதினார் கருக்கடைக ளதிகமுண்டும்
பானென்ற பலபேருங் காணமாட்டார்
பத்திசெய்யும் முந்நூறிற் பகுத்துப்பார்த்தால்
நானென்ற கண்ணாடி போலேதோன்றும்
நாதாந்த யாகோபு சொன்னவாறே. 279

சொன்னதொரு வடமொழியைப் பார்த்துதேறி
தொல்லுலகில் வாதிக்குச் சொன்னமார்க்கம்
கன்னலைப்போற் கழறியதோர் செம்புதன்னைக்
காதலா யெடுத்துமே வெள்ளிதன்னில்
இன்னிலத்திற் கொடுத்தறிந்து நபிமாராகி
யிருந்துநீ வாழ்ந்திடவே சொன்னநீதி
தன்னிகரி லலையாதே பொய்பேசாதே
சவுங்கலாய்த் திரியாதே நூலைப்பாரே. 280

பாரென்ற நபிமார்க ளென்போர்தானும்
பதிவாக இடங்கொடுத்து வாதமார்க்கம்
காரென்று சொல்லியே கைகொடுத்துக்
கருணைவைத்திவ் வுலகதனிற் சொன்னார்பாரு
வாரென்று கடுவான வாதமார்க்கம்
வகையறியான் துகைபாரான் மாடுமேய்க்கி
ஊரென்று உண்டுடுக்கச் சொன்னமார்க்கம்
உறுதியிது சத்தியமாம் உண்மைபாரே. 281

உண்மையாக் கைபாக வரிசைகண்டால்
உறுதிவரும் நோக்கந்தான் வாதம்சேரும்
தண்மையாய்க் கைபாக வரிசைவந்தால்
தாக்கிடவே லோகமெல்லாம் பழுக்கும்பாரு
வண்மையுாய் வாதம்பொய் யென்றுசொன்னால்
வங்கிஷங்கள் பாழாகும் பெரியோர்வாக்கு
எண்மையா யெண்ணியே நினைவிற்பூண்டால்
இன்பமா யாகோபு எழுதினாரே. 282

எழுதினார் யாகோபு நபிமார்சொல்ல
ஏழைமதி போகாதே யிருந்துபாரு
வழுதியே பரபரப்பாய்ப் பார்க்கவென்றால்
வகையாகக் கைபாக வரிசைகண்டு
உழுதநிலம் பயிரிடுதல் போலேபண்ணு
ஒழுங்காகச் செய்தாக்கா லுறுதியாகும்
அழுதிடவும் வேண்டாங்காண் செம்புதன்னை
அடைவாகச் செய்தாக்காற் பலனுமாமே. 283

## துருசுஅயக் கெளரிக்களங்கு

பலனாக இன்னமொரு களங்குமார்க்கம்
பாகமாய்ச் சொல்லுகிறேன் பாருள்ளோர்க்குப்
பெலனாக அரைபொடியும் பலமும்பத்து
பேசரிய துருசதுவும் பலமும்பத்து
கலனாகக் கெவுரியது பலமும்பத்து
கனிவாகக் கல்வத்தி லிட்டுப்பின்பு
தலமாக யெலுமிச்சம் பழச்சார்தன்னில்
தாட்டிகமா யிருசாமம் அரைத்திடாயே. 284

அரைத்துமே வில்லைகட்டிக் காயப்போடு
அடைவாகப் பெரியபுடம் வைத்தெடுத்துத்
தரைத்துமே புதுக்குகையில் வைத்துருக்கத்
தாட்டிகமாய் வண்டிலது கூடச்சேர்த்து
புரைத்துமே உருக்கிடவே சத்துமாகும்
பொருந்துமச் சத்தெடுத்துக் கல்வத்திட்டு
வரைத்துமே கொடியோனைப் பாதிசேர்த்து
வடிவாக அரைத்துகதிர் காயவையே. 285

காயவைத்துப் புடமூன்றிற் செந்தூரிக்கும்
கனகமென்ற செந்தூர மெடுத்துநீயும்
நாயன்மார் சொற்படிக்கு வெள்ளிதன்னில்
நாட்டிடவே யெட்டிரண்டு தான்தெரிந்து
மாயவே உருக்குமுகந் தன்னைப்பாரு
மதிபழுந்த வாறதனை யென்னசொல்வேன்
சாயைபோல் வெகுசாயம் யிந்தவித்தை
சரியான பாகமிது தண்மைபாரே. 286

தண்மையாய்க் களங்கமதைச் செந்தூரித்துத்
தாட்டிகமா யுண்டிடவே மேனிதங்கம்
உண்மையிது சத்தியமா முற்றும்பாரு
ஒருவருடன் சொல்லாதே உண்மைசொன்னேன்
வண்மையிது பேசவில்லை மகத்தாஞ்சித்தர்
வாய்திறக்கா வசனத்தைத் சொல்லினேன்யான்
கண்மையாய்ப் பார்த்துணர்யா கோபுசொன்ன
கருத்தையா னுங்களுக்குக் கருதினேனே. 287

கருதியே கற்றுணர்ந்த பெரியோர்பாதம்
கவலையற்றுப் பாதமதில் விழுந்துதேறு
வருதியே பழுதுமது வரமாட்டாது
வாழ்த்தியே விடைகொடுப்பார் வணக்கமுள்ளார்
உறுதியா யுலுத்தவரும் சொல்லுவார்பார்
ஓகோகோ உண்மையிது உற்றுப்பாரு
பருதிகண்ட பனியதுபோ லாகும்பாரு
பரம்பொருளாம் யாகோபு பயின்றவாறே. 288

பயின்றிட்டே னின்னமொரு களங்குகேளு
பதிவான நபிமார்க ளாடுமாட்டு
உயின்றிட்டே னுலகத்தோர் தனக்குத்தானும்
உறுதியாய்ச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
வயின்றிட்ட பாகத்தை யறியாமூடர்
வடிவாகச் சாஸ்திரத்தைப் பொய்யென்பார்கள்
நயின்றிட்ட நபிமார்கள் ஆடும்நேர்மை
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாரே. 289

## பஞ்சமுகக் களங்கு

நலஞ்சொன்னார் ரஞ்சுமுகக் களங்குதானும்
நாடியே பொருளைத்தான் நாடிச்சொல்வேன்
பலமாகத் தகடடித்து வையகத்திற்
பதியபழச் சாருங்கற் காவியிட்டுப்
பிலமாக அரைத்துமே தங்கத்தப்பிப்
பிசகாமல் ஏழுதரங் காய்ச்சிப்போடு
அலமாகச் செம்புதனைத் தகடுதட்டி
ஆதியாம் வடந்தன்னைச் சேர்த்திடாயே. 290

சேர்த்திடவே வெடியுப்புச் சீனம்நேராய்த்
திறமாகச் சேர்த்துமே கத்தம்நீரில்
பார்த்திடவே அரைத்துநீ குழம்புபண்ணி
பதிவாகச் செம்புதனைக் கரியோடிட்டு
நார்த்துமே யேழுதரம் பழுக்கக்காய்ச்சி
நலமாக ஏழுதரங் காய்ச்சித்தோய்ப்பாய்
கார்த்துமே கரியுப்புக் குகையிலிட்டுக்
காரியமா யுருக்கியே சொல்லக்கேளே. 291

சொல்லவே கன்னியாங் குமரிச்சாற்றிற்
றோன்றவிரு பத்தியொரு தரந்தான்சாய்த்து
நல்லவே யெடுத்ததனைப் புறம்பாய்வைத்து
நாடியே யதன்பின்னே நடப்புக்கேளு
கல்லவே நாகமது குகையிலிட்டுக்
கரமாக வுருக்கிமெள்ள இலுப்பைநெய்யில்
தள்ளவே இருபத்தோர் தரந்தான்சாய்த்துத்
தண்மையா யாகோபு சாற்றினாரே. 292

தண்மையா யெல்லாமுஞ் சுத்திபண்ணித்
தாட்டிகமாய் ஒவ்வொன்றும் யிடைநிறுத்து
உண்மையாய் ஒன்றாக உருக்கிக்கொண்டு
உறுதிபெறத் தகடடித்து அதன்பின்கேளு
வெண்மையாய்ச் சத்தியுடன் சூதஞ்சேர்த்து
விரைவாகக் கல்வமிட்டு யெருக்கம்பாலால்
வண்மையா யரைத்துமே கவசங்கட்ட
மகிழ்வாயா கோபுசொன்ன வரிசைதானே. 293

வரிசையாய்க் கட்டிகதிர் காயவைத்து
வடிவாகப் புடம்போடு கரியதாகும்
கரிகையாய்க் கல்வத்தி லிட்டுக்கேளு
கணக்காகக் கொடியோனைப் பாதிசேர்த்துப்
பரிசையாய்ப் பொற்றலையின் சாற்றிலாட்டிப்
பரிவாகக் கரியில்வைத்துக் காய்ந்தபின்பு
உரிசையாய்ப் புடம்போடு கருத்துதானால்
உற்றுமே பின்பொருக்கால் மருந்துசேரே. 294

மருந்துமே சேர்த்துநீ முன்னீர்தன்னில்
மதிபெருக அரைத்துமே வில்லைதட்டி
விருந்துகதிர் காயவைத்துப் புடமூன்றிட்டால்
விதமான செந்தூரம் முருக்கம்பூவாம்
வருந்துவிடும் நவலோகம் நூற்றுக்கொன்று
வடிவாக இட்டிடவே தங்கமாகும்
அருந்திந்தத் தங்கந்தா னருமைமெத்த
ஆதியாய்ச் சொன்னதிந்த அடைவுதானே. 295

## யாகோபு

அடைவாகப் பணவிடைதான் மண்டலத்தில்
ஆண்மையுட னுண்டிடவே மேனிகள்தான்
நடவான கைப்போடு புளிப்புந்தள்ள
நாடியே உண்டிடவே நயக்குந்தேகம்
படபடத்துத் திரியாதே பதனமாகப்
பார்த்திட்டால் சித்தியாம் பரிவுமெத்தத்
திடமாகப் பார்த்துணர்யா கோபுதானும்
தேசமெய்க்கச் சொன்னதிந்தத் தெளிவுதானே. 296

தெளிவாகப் பஞ்சமுகந் தன்னைப்பார்த்துத்
தேறினால் வாதமது கோடாகோடி
அழிவான புத்தியினாற் பெண்ணைச்சேர்ந்து
ஆடியே திரிந்தாக்கால் லாபமென்ன
சுழிவான நாகம்வருங் கண்டுகொள்ளு
சூட்சத்தா லாய்ந்துயா கோபுசொன்னார்
விழியானைக் கண்டவுடன் கெர்ச்சிக்காதே
வேதாந்த முடியவரும் வாதந்தானே. 297

வாதமென்ன கொஞ்சத்திற் கிடைக்குமோதான்
வடிவான சடமெடுத்த நேர்மையாலே
சூதமென்ன யெளிதாகக் கட்டுமோசொல்
சுருதிதனை ஆராய்ந்து துருசுச்சுண்ணம்
பாதமது பட்டாக்கால் கெவுனமோடும்
பழுவாதஞ் செய்தாக்காற் கட்டமாட்டா
வேதத்திற் சொன்னபடி கண்டுசொன்னேன்
வித்தகரே பார்த்துணர்ந்தால் எண்மையாமே. 298

எண்மையாய்க் களங்குசெய்து களங்குதன்னை
எளிதாகக் கொடுத்தாக்கால் பாயமாட்டா
வண்மையாய்ச் சிதறிவிடும் உருப்படாது
வகையென்ன வாதங்கள் பொய்யென்பார்கள்
உண்மையா யிரும்புசெம்பு சுத்திசெய்து
உருப்படுத்தும் தங்கமா யென்னசொல்வேன்
தண்மையுற்ற சிற்சிலபேர் புத்தியில்லார்
தாழ்ச்சிமிகச் சொல்லுவார்க ளுலகத்தோரே. 299

உலகத்தில் வாதமொடு குளிகைபொய்யோ
உழைத்தாக்கால் ரசவாதம் சித்தியாகும்
பலகற்றுப் பலமாக நீதிநூலைப்
பகுத்துணர்ந்து பார்த்துமே வேலைசெய்து
நிலமுழுதால் பயிராகும் வித்தைபோல
நீசெய்தால் லாபம்வரும் நிசமதாகும்
சலமிட்டால் நோயேகும் பேய்கள்போகும்
தாக்கினால் மருந்ததுவின் தன்மையாமே. 300

தன்மையாய்ச் சுடர்க்கொடியோன் தன்னைத்தானும்
தாக்கிடவே சித்தியாந் தன்மைமெத்த
உண்மையாய்ச் செம்பாகுஞ் செம்புதன்னை
உத்துயெடு மதிதனிலே வேதையாகும்
வண்மையா யுண்டுடுத்த லாகும்பாரு
வழிபெருகும் நபிமார்கள் சொன்னநீதி
கெண்மையா யொன்றுவிட்டு ஒன்றுசெய்தால்
கெட்டுவிடுஞ் சொற்பேசாற் குறையுந்தானே. 301

குறையாமல் மக்காவின் தேசந்தன்னில்
குருநபிமார் மெத்தவுண்டு கோபம்மெத்த
வறையாக வாதமுண்டு அடியேன்போனேன்
வழியறிந்து அடித்தார்கள் அடியும்பட்டேன்
நறையாக வாதங்கள் மிகவுஞ்சொன்னார்
நான்கற்று நாட்டில்முந் நூறுதானும்
துறையாகச் சொல்லிவிட்டேன் யாகோபென்பேர்
சுருக்கமெழு நூறுஞ்சோ தித்துப்பாரே. 302

சோதித்தேன் தம்பிரான் செயலினாலே
சுருதிபெற இறகூலின் துணையைப்பற்றி
வாதித்தார் இறகூலின் வண்மையாக
வகையான முகம்மதுவைக் கண்டுபோற்றி
சாதிபல தன்மைவிட்டு நபிமாரைத்தான்
சரித்திரத்தை விளங்கியே முக்காற்சென்று
ஓதித்தேன் முக்காலுந் தொழுதுபோற்றி
ஓதரிய முந்நூறும் முற்றுமாமே. 303

**யாகோபு வாதவைத்தியம் 300 முற்றிற்று**

## யாகோபு-வாத வைத்தியம்-300

## அருஞ்சொற் பொருள் விளக்கம்

### எழுதியவர் R.கோவிந்தராஜன்

1. நசல்-துன்பம், நோய். கைபாகம்-செய்யும்முறை, சேர்க்கும் அளவுமுறை.

2. ரசவாதம்-பொன்னாக்கும் வித்தை, ரசத்தைக் கொண்டு உலோகங்களை பொன்னாக்குதல்.

3. கேசரம்-தலைஉச்சி, பிரமாந்திரம்.

4. பதவி-யோகசித்தி அடைந்து சித்தன் என்ற பதவி.

5. பதினெட்டுபடி-கைலயங்கரி என்னும் கைலாச மலையில் உள்ள அறைகள். இங்குள்ள ஒவ்வொரு அறையில் ஒவ்வொரு தேவதைகளுடன் சேர்ந்த சித்தர்கள் வீற்றிருப்பர்கள்.

6. நூலிருந்தோர்க் கடுமை-இந்த நூல் உள்ளோரிடம் தொண்டு செய்தல் வேண்டும் என்றுபொருள். நூலிருந்தோர்க்கடுமை என்பதற்குபதில் கடிமை என்று படிக்கவும்.

9. ரவி-செம்பு. கருப்பி-அயம், எவச்சாரத்திற்கும் கருப்பி என்ற பெயர் உண்டு. ஆனால் இந்த இடத்தில் அயத்தைத்தான் குறிக்கும். சத்தி - சத்திசாரம், கதிரிலிட்டு - சூரிய ஒளியில் வைத்து, கொடியோன்-வீரம்.

10. யேமம்-பொன், தங்கம், மதி-வெள்ளி.

11. கொங்கணவர்-ஒரு சித்தர்.

12. செந்தயினீ- ஒரு சரக்கு, கல்வத்தில் இட்டு, குழி அம்மியில் போட்டு முன்னீரதனால், முன்சொன்ன செயநீரால்.

13. அயச்செம்பு-இரும்பிலிருந்து எடுத்த செம்பு, இரும்பை செம்பாக மாற்றினால் அதற்கு அயச்செம்பு என்று பெயர்.

14. ஏறொட்டாது-முன்னேறவிடாது, யோகத்தில் முன்னேறவிடாது, தாட்டிகமாய்-மிகவும் அழகாக, மற்றவரைக் கவரும் விதத்தில், மற்றவர் நம்பத்தக்க விதத்தில் அழும்பர்-கெட்ட சுபாவம் கொண்டவர்.

15. கொல்லாவாதி-மாரணம் செய்யாதவர், அடக்கிவைக்கும் முறையை அறியாதவர். (உலோகங்களை, கட்டி அடக்குதல் ஒரு முறையாகும்.)

17. துருசு-இது ஒரு வைப்புச் சரக்கு, வாதிமார்கள்-இரசவாதம் செய்பவர்கள்,

18. களங்கு-உலோகங்களுடன் பாஷாணம், உப்பு போன்றவற்றைச் சேர்த்து செய்யும் ஒரு மருந்து. கூத்தன்-பித்தளைக்கு கூத்தன் என்று பெயர்.

19. கதிர்-சூரியன், குகை-உலோகங்களை உருக்க பயன்படும் ஒருவித அடுப்பு.

20. காஞ்சனன்-பொன்.

21. வின்னமில்லா-தவறு இல்லாமல்.

22. குதிரை-வாசி.

25. இலுப்பைநெய்-இலுப்ப எண்ணை, சிறுகண்ணாகம்-இது ஒரு உலோகம்.

26. கல்வம்-குழிஅம்மி, நீர்பூத்தான்-இவ்விடத்தில் இந்தச் சொல் வெடிஉப்பை குறிக்கிறதா அல்லது பூனீரை குறிக்கிறதா என்று சரியாக விளங்கவில்லை.

27. தாரம்-அரிதாரம். முன்சார்-முன்சொன்ன சாற்றில். வில்லைதட்டி சிறு சிறு காசுகள் அளவு அரைத்த சரக்குகளைத் தட்டிவைக்கும் முறைக்கு வில்லை தட்டுதல் என்று பெயர். கொக்கினு புடம்-புடம்போடும் வகைகளில் இது ஒரு வகையாகும், கையான்-கரிப்பான்.

28. காரம்-வெண்காரம்

31. கண்டன்-துருசு.

33. சோதிரவி-பிரகாசிக்கும் செம்பு.

34. கொடிச்சி-சூடன், முன்னீராலே-முன்சொன்ன நீராலே அரைத்தேவில்லை கதிரில் வைத்து-அரைத்துவில்லை செய்து சூரிய ஒளியில் காயவைத்து. பிலக்கும்-பலக்கும், உறுதியுள்ள.

35. மாத்தெட்டு ஆணிக்கொக்கும்-ஆணிப்பொன் மாற்று எட்டாகும். எட்டு மாற்று உள்ள பொன் கிடைக்கும்.

37. தேங்காய் தன்னை-தேங்காயை, நாயுருட்டும் வாறுபோலே-நாய் உருட்டுவது போலே, நாயினிடம் அகப்பட்ட தேங்காயைப் போல் என்ற பொருள்.

38. வேதை பார் பார்-ரசவாதம் செய்து பார்பார்.

40. தங்கமில்லை தறிக்கமாட்டாய் - தங்கம் செய்ய முடியாமல் போய்விடும். உறிப்பானை - உறியில் இருக்கும் பானை, உறியில் தொங்கும் பானை.

41. சரக்கெல்லாம் மாண்டு போகும்-எல்லா விதமான சரக்கும் மாண்டுபோகும், சரக்குகள் மாரணமாகும், மடிந்து போகும்.

42. நவச்சாரம்-இது ஒரு வைப்புச் சரக்கு, நாயுருவி. இது ஒரு வித மூலிகை.

43. வீரம், பூரம்-இவை இரண்டும் வைப்பு சரக்குகளாகும்.

45. வீரம் காலாய்- வீரல் கால் பங்கு.

46. கறைகண்டன்-துருசு, அனலாக-நெருப்பில், ரவி-செம்பு, அயம்-இரும்பு.

47. கிராசம்-இது ஒரு நிறுத்தளள்வையாகும். 2 கோலம் கொண்டது 1 கிராசம், வெங்காரம்-இது ஒரு வைப்புச் சரக்கு.

48. வேதை ரொம்ப-அதிகமாற்று உள்ள.

49. தங்கமிடைநாகம்-தங்கத்தின் எடைக்குச் சரியாக நாகம். முன்னுண்டை கெந்தி-முன் செய்து வைத்துள்ள கெந்தி உண்டை.

50. செந்தூரிக்கும்-செந்தூரமாகும்.

53. சூரியன்-செம்பு, நாரும்பூ-இரு ஒரு சரக்கு, குரம்பை புடம்-இது ஒருவகையான புடம், குருவுமாகு-குரு மருந்தாகும்.

54. ஆறுதரம் சாற்றாலாட்டி-ஆறுமுறை சாற்றால் அரைத்து. யீய-கொடுக்க, போட, இட.

55. யேழதுவில்-ஏழு பங்கில், யேமம்-தங்கம், அருணை நகர்-சூரிய மண்டலம் போல்.

56. சுழிமுனை-இது ஒரு நாடி.

57. கெந்தி-இது ஒரு வைப்புச்சரக்கு, இயற்கையிலும் கிடைக்கிறது.

58. தேர், வளையம், வடம், அஞ்சுருவாணி, இவை எல்லாம் முற்றிலும் புரியாத பரிபாஷைச் சொற்கள், யாகோபு இங்கே பரிபாஷைச் சொற்களை தன்னுடைய முறையில் கூறுகிறார்.

59. கிடத்துக்குள்-பானைக்குள், யிருசாம-இரண்டு சாமம்.

60. இனம்பழுக்க-நவலோகமும் பழுக்கும்.

62. பொற்றலை-ஒரு விதமான மூலிகை.

63. சரக்கதுவும் பாஷையாக-சரக்கை பரிபாஷையில்.

64. நாகம்-நாகம் என்பது ஒரு வகை வைப்பு உலோகம், வேதை-தங்கம்.

65. ரொட்டி-சப்பாத்தி, கோதுமை மாவில் செய்யும் உணவு.

66. சுக்கான்-ஒரு விதமான கல், நீலன்-துருசு, அப்பு-காரீயம்.

67. லவணம்-உப்பு, (துருசு)

68. கிளிஞ்சி நீர்-ஒரு வகை நீர். இதைப் பற்றி எமது வெளியீடான கோரக்கர் நூலில் காண்க. கவுதாரி - ஒரு வகையான புடம் போடும் முறை.

69. யிரதம்-இரசம்.

70. யேவல்கேட்கும்-சொன்னபடி கேட்கும்.

72. பத்தியாய்-பக்தி கொண்டு, பக்தியால்.

76. ரத்தம்-உதிரம்.

79. கர்மி-பொருள் மேல் ஆசைகொண்டவன்.

81. கன்னிச்சார்-இதைப் பற்றி கோரக்கர் நூலில் காண்க.

83. மதியேழில்-வெள்ளியேழில், யேமம்-தங்கம், வயததுவும் யெட்டுமாகும்-எட்டுமாற்று கிட்டும்.

85. கருப்பி-அயம், இரும்பு, நீலநாத்தம்-துருசு, சூதம்-இரசம், பாதரசம்.

87. உருக்குமுகம்-உருகும்பொழுது, சோரம் ஒருவித பாஷாணம்.

89. ஞானவழி மதியில்-ஞானத்தை உண்டாக்கும் அறிவு.

90. பணவிடை-பணஎடை, ஒரு நிறுத்தளஎவை, காந்திகதிர்-சூரியன்போல் ஒளி.

92. சுருக்குவேதை-சுலபமான ரசவாதம், சவுக்காரம் - ஒரு வைப்புச் சரக்கு, பூநீறு-இயற்கையில் கிடைக்கும் சரக்கு.

93. தேளான பசியடங்கு-கொடிய பசியை அடக்கு.

94. கருக்கிடை-இவரால் எழுதப்பட்ட மற்றொரு நூல்.

96. சரக்கையெண்ணி-மூலப்பொருளை எண்ணி மூலப்பொருளாகக் கருதி, பதியாம் நன்மை-மிகவும் நல்லது.

98. கன்னிநீராலாட்டி-இந்த கன்னி நீரைப் பற்றி கோரக்கர் நூலில் காண்க.

99. பத்தியொடு-பக்தி கொண்டு, பக்தியோடு, அண்டோடு-முட்டையின் ஓடு, கிழிஞ்சி நீர் -கிளிஞ்சல் நீர், பாணி-சாதாரண நீர், அண்டோடுயெண்ணெய்கக்கும்-முட்டையின் ஓடு எண்ணெய் கக்கும்.

100. வெண்கருவால்-முட்டையின் வெண்கருவால்.

103. யூறல்-அரிப்பு, கெட்ட தன்மை, மாசு, அழுக்கு, தேட்டெல்லாம்-செய்ததெல்லாம், செய்முறையெல்லாம்.

109. பொன்னிமிளை-உபரசத்தில் ஒன்று, தகட்டிலப்பு-தகட்டில் பூசு.

110. மதி-வெள்ளி, நாதாக்களாடினதோ ராட்டைதானும்-குருவான சித்தர்கள் செய்யும் முறையை.

111. உத்ததோர் பாஷாணம்-இயற்கையில் விளையும் பாஷாணம், நவலோகம், ஒன்பது வகையான உலோகங்கள். அவையாவன: தங்கம், வெள்ளி, செம்பு, காரீயம், வெள்ளீயம், நாகம், பித்தளை, வெண்கலம், இரும்பு.

113. பொன்னதுவும் மெட்டே காலாம்-எட்டேகால் மாற்றுடைய பொன்.

115. வெள்ளிரவி-வெள்ளி, செம்பு, செட்டிகையில்-செட்டியாரிடம், வினாடியில் என்று இரு பொருள்களும் இந்தச் சொல்லிற்கு உண்டு.

117. முட்டியறை-சேர்த்து அரைத்து.

119. கெந்திவீரம்-கெந்தகம், வீரம்.

120. அனந்தமென்ன-சொல்ல முடியாத அளவிற்கு-மதிதனிலேயெட்டுக்கொன்று-வெள்ளியில் எட்டு பங்குக்கு ஒன்று. (வெள்ளி எட்டில் ஒரு பங்கு செந்தூரம்).

123. ரவிபழுக்கும்-செம்பு தங்கமாகும்.

127. யின்னமோருப்பு-மற்றொரு உப்பு, வாலை-சட்டி. முன்னீரை-முதலில் வரும் நீரை. கடை நீரை-கடைசியில் வரும் நீரை, பின்பு வரும் நீரை.

128. சேரிரண்டு-இரண்டு சேர், சேர் என்பது கொள்ளளவையாகும், ரவியில் வைக்க-சூரியனில் வைக்க.

129. கருவேது-பயன் என்னவென்றால், சரக்கு அறுபத்தினாலும்-அறுபத்து நாலு வகையான சரக்குகளும்.

130. பாஷாண முப்பத்திரண்டு - முப்பத்திரண்டு வகையான பாஷாணங்கள். சூதம்-ரசம், வெள்ளை - வெள்ளை பாஷாணம்.

131. லிங்கம்-இயற்கையில் கிடைக்கும் பாஷாணம், வைப்புச் சரக்கிலும் இதைச் செய்து கொள்ளலாம். குதிரைப்பல்-ஒரு வகையான பாஷாணம்.

132. துடியாக்கட்டும்-கெட்டியாகக் கட்டும், உறுதியாகக் கட்டும்.

133. புகைநீர்-வெடிஉப்புத் திராவகம், கேசரி-ஒரு வகையான யோக முறை, உடலில் உள்ள ஒரு குறிப்பிட்ட இடத்தையும் குறிக்கும்.

138. பாணி-சாதாரண நீர், சுக்காநீர்-சுக்கான் நீர், ஒருவகை நீர்.

139. தந்தம்போலுப்பு-தந்தத்தைப் போல் வெளுப்பாகக் கட்டும்.

140. காடை-புட வகைகளில் ஒன்று.

141. நீலன்-துருசு, நீறவேணும்-சுண்ணமாகவேணும், கெவுனத்தில்-ஆகாயத்தில் பறக்கும் சித்தி.

144. கருநாகம்-ஒரு வகையான உலோகம், குமரிச்சார்-கற்றாழைச் சார்.

145. முன்னீரை-முதன்மையான நீரை.

146. வங்கம்-ஈயம்.

147. தாளகம்-ஒரு வகை பாஷாணம், நாலிலொன்று-நாலுக்கு ஒன்று.

148. ரவியுருக்கி-செம்பை உருக்கி, ரவிபழுக்கும்-செம்பு தங்கமாகும்.

149. குளம்பியே எண்ணமுற்று-குழம்பிய எண்ணம் கொண்டு.

150. பணம்வீதம்-பண எடை வீதம், கைப்போடு புளிப்பு-கசப்பு, புளிப்பு.

151. குமரிப்பால்-கற்றாழைச்சார்.

152. தேவி அரசன்-இவை இரண்டும் பரிபாஷை சொற்களாகும். இதே பெயர்களை கொண்ட பல சரக்குகள் உள்ளன.

155. சத்திசிவம்-இவை இரண்டும் மேலே கூறியது போலவேயாகும்.

159. சாமமாட்ட-சாமம் அரைக்க.

165. கெந்திச் செம்பை-கெந்தகத்தில் இருந்து எடுக்கப்படும் செம்பு.

167. அரைபொடி-அயப்பொடி

170. மாடன்-ஒருவகைச் சரக்கு. நீறும்-சுண்ணமாகும்.

172. சிவன்விந்து-ரசம்.

175. குளிகையிட்டு-குளிகையை வாயில் இட்டுக்கொண்டு.

176. பஞ்ச மித்திரம்-இம்முனிவரால் எழுதப்பட்ட மற்றொரு நூல்.

178. பொய்யாகும்-பலியாமல் போகும்.

181. ரசங்கட்டி-ரசத்தைக் கட்டி மணியாக்குதல்,

184. மேனிசாற்றல்-இது ஒரு வகையான மூலிகைசார் (குப்பை மேனி).

189. ரிவ்வேதை-இந்த வேதை,

191. சுழியிலேறி-சுழிமுனை வழியாக ஏறி.

192. அப்ரேக்கு-இயற்கையில் கிடைக்கும் ஒருவிதசரக்கு.

## சுண்ணம்

193 தவளம் போலாம்-துவண்டு போகும். மாவுபோல்

195. தாளகமும் யிடைபதங்கம்-தாளகமும் அந்த எடைக்குப் பதங்கமும்.

197. அலரி போலாம்-அலரியைப் போல் சிவப்பாக.

199. அன்னமென்றபேதி-அன்னபேதி இது உபரசத்தில் ஒன்றாகும்.

204. வாசி யென்றமேருக்கு-காசி என்ற குடுவை.

211. வாட்டக்கட்டும்-வாட்டினால் சுட்டும் லவணமுதலிருபத்தைந்து-இருபத்தைந்து வகையான லவணங்கள் லவணம் என்றால் உப்பு என்று பொருள்.

212. திரமும்-முறை, செயநீர்-சித்தர்கள் சரக்கைக் கட்டவும் சுண்ணமாக்கவும் பயன்படுத்தும் ஒரு வகை நீர்.

215. யிருபதின்மேலஞ்சுமாத்து-இருபத்தைந்துமாற்று.

222. சுடரொளியைக் கண்டுதேறு-இருதய கமலத்தில் உள்ள சோதியைக் கண்டு போற்றி யோகத்தில் முன்னேறுக.

224. சத்தி-கெந்தகம், நேகவாட்டி-மெழுகுபோல் அரைத்து.

230. கழுதைமேக்கி-கழுதை மேய்க்கின்றவன்

231. ஏழுகரை-அயம், இரும்பு,

243. பரி-பொன்.

253. கருவாளி-வித்தை புரிபவன், மேதை

255. இடும்பாகப் பேசியதால்-கர்வம் கொண்டு பேசினால் வாதம் பலியாது.

259. கைத்தபழம்-எலுமிச்சம்பழம்.

261. ஆலாத்தி-கற்பூரம், வாய்நீர்-கோரக்கர் நூலில்காண்க.

264. செட்டிகையில்- வினாடியில்.

265. கைபாகந்தப்பிப்போனால் - செய்முறை தவறிற்றானால்,

266. சுட்டுக்கெட்டு-சரக்குகளை உருக்கியும் புடம் போட்டும்.

274. ஒட்டிலிட்டு-அகலில் இட்டு.

278. நூல்வர்மம்-நூலின் மர்மம்.

279. வழலையென்று முப்பூ-இந்த சரக்கு குரு சரக்கு எனப்படும். இது இல்லாவிட்டால் ரசவாதமும் வயித்தியமும் பலிக்காது. இது ஒரு வைப்புச் சரக்கு.

290. ரஞ்சுமுகம்-பஞ்சமுகம், பழச்சாறு-எலுமிச்சம் பழச்சாறு.

291. வெடிஉப்பு, சீனம்-இவைஇரண்டும் வைப்புச் சரக்குகளாகும்.

293. கவசம்-சரக்குகளை அகலில் வைத்து அகல்மூடி மண்ணால் அகலுக்கு கவசம் கட்டுதல் ஒரு வகை கவசம், ஆனால் இவ்விடத்தில் சரக்குக்கு மூலிகையை அரைத்து மேலே பூசும் முறைக்கு கவசம் என்று பெயர்.

294. பொற்றலையின் சாற்றில் - ஒரு வகை மூலிகைச்சாற்றில்

தாமரை
நூலகம்